# கொலையுதிர் காலம்

‘‘**வா**ங்க மிஸ்டர் கணேஷ்’’

அறைக்குள் நுழைந்தவனை உற்சாகமாக வரவேற்றவரின் கைக் குலுக்கல் அழுத்தமாக இருந்தது.

“இது வசந்த்!’’ என்றான்.

“ஹௌ டு யூ டூ மிஸ்டர் வசந்த்?’’

‘‘வெரி வெல் தாங்க் யூ,’’ என்று வசந்த் சுற்றிலும் வேடிக்கை பார்த்தான். கணேஷ் அவரைப் பார்த்தான். குமாரவியாசன். என்ன பெயர் இது! தோற்றத்தில் நாற்பத்தெட்டு வயதை ஒப்புக் கொள்வதில் தயக்கம் இருந்தது, தலைமயிரின் அத்தனை கன்னங் கரேலில் நிச்சய சாயம்.

பின்பக்கமாகத் தள்ளி வாரினதால் அகன்ற நெற்றி. பிரதான மூக்கின் கீழ் செப்பனிடப்பட்ட மீசை, தாடி, மார்புக்குக் குறுக்கே I love my computer என்றது டிஷர்ட். லம்பாடிப் பாவாடை போல ஏராளமாகப் பாண்ட், மணிக்கட்டில் செப்பு வளையம், செருப்பில் ராஜஸ்தானம். சிரிப்பில் மஞ்சள் தந்தம்.

‘‘உங்க நிஜப் பேரே குமார வியாசன்தானா ஸார்?’’ என்றான் வசந்த்.

‘‘ஆமாம், ஏன்?’’

‘‘காளிதாசன் நாடகம் ஞாபகம் வரது. உங்கப்பா பேர் என்னவா இருக்கும், மிருத்யுஞ்சயன்?’’

அவர் கவனியாமல், ‘நீங்க வரப் போறதா லீனா சொன்னா. எல்லாம் எப்படித் தெரியும் உங்களுக்கு?’’

‘‘தெரியாது. இன்னும் சந்திக்கலை. தீபக்னு ஒருத்தர்தான் எங்களை கேட்டுக்கிட்டார், சொத்து, வாரிசு விஷயமா இங்கே ஏதோ தகராறு இருக்கிறதாகவும்...’’

அவர் முகம் சற்று மாறியது.

‘‘தகறார் எதுவும் இல்லை மிஸ்டர் கணேஷ். பூரா சொத்துமே அவளுடையதுதான். எல்லாத்தையும் அவளிடத்தில் ஒப்படைக்க எப்படா அவளுக்குப் பதினெட்டு வயசு வரும்னு காத்திட்டிருக்கேன்.’’

‘‘சரியா, ஒரு மாசம் இருக்கிறதா தீபக் சொன்னார்.’’

tamilpdffree.wordpress.com

“தெரியும். டிசம்பர் 22. நீங்க வந்ததில் எனக்கு சந்தோஷம். பெரிய ரிலீஃப். பவர் ஆஃப் அட்டர்னி வாங்கியிருக்கீங்களா?”

“தேவையில்லை, அவங்களே இருக்காங்களே!”

“அவளுக்கு ஒண்ணுமே தெரியாது, அவ ஒரு...

அவர் அந்த வாக்கியத்தை முடிக்கவில்லை. “லீனா! என்று கூப்பிட்டார்.

“என்ன சித்தப்பா.” என்றது அந்தப் பக்கம்.

“பார், மிஸ்டர் கணேஷ் வந்திருக்கார்.”

“அஞ்சு நிமிஷத்தில் வரேன்னு சொல்லுங்க. குளிச்சுக்கிட்டு இருக்கேன்.”

“பேசறாங்களா, பாடறாங்களா?” என்றான் வசந்த். நிஜமாகவே அந்தக் குரல் இனிமையாக, பத்துப் பன்னிரண்டு வயதுப் பெண்ணினுடையது போல இருந்தது.

குமார வியாசன் தனது பைப்பை எடுத்து அதை அக்கக்காகக் கழற்றிக் கம்பியால் குத்தி ஒரு திரிச்சரடு நுழைத்து அதன் அந்தரங்கத்து நிக்கொட்டின் காவிகளைச் சுத்தம் செய்து மீண்டும் பொருத்தி, புகையிலை கெடித்து ‘பப் பப்’ என்று பற்ற வைத்து நீல மேகப் புகை எழுப்பி உட்கார்ந்தார். காத்திருந்தார்கள். திடீரென, “மிஸ்டர் கணேஷ், உங்களுக்குப் பிசாசில நம்பிக்கை உண்டா?” என்றார்.

கணேஷ் சற்றுத் தயங்கி, “இந்தக் காலத்தில் அரசியல்வாதிகளைத் தவிர மற்ற எதையும் நம்பலாம் ஸார்.”

“ஒண்ணுக்குப் போய்ட்டு வர்றதுக்குள்ளே கட்சி மாறிடறாங்க ஸார்.” என்றான் வசந்த்.

“ஏய்!’ என்று கணேஷ் அதட்ட அவர், “உங்க ஜூனியர் இப்படித்தான் எப்பவும் அறுவை ஜோக்கா அடிச்சுக்கிட்டிருப்பாரா?” என்றார்.

“ஞாயிற்றுக்கிழமைகள், தேசிய விடுமுறை தினங்களைத் தவிர! ஸார், நீங்க நம்பறீங்களா?”

“சேச்சே! பேயாவது! பிசாசாவது. சில சமயம் மனுஷங்கதான் பேய், பிசாசு!”

“வெரி குட்! நீங்க என் கட்சி”

வசந்த் அந்த அறைச் சுவரில் மாட்டியிருந்த வர்ணச் சித்திரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். தாட்டியான பெண்கள் உடம்பில் வஸ்திரமில்லாமல் படுத்திருக்க, சுற்றிலும் கொழுக்மொழுக் குழந்தைகள் விண்ணில் இறக்கை கட்டிப்பறந்து வில்லடித்துக் கொண்டிருந்தன.

“ரூபென்ஸா ஸார்?” என்றான் வசந்த். அவர் கவனிக்காமல் கணேஷைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். வசந்த் குனிந்து பூச்செண்டு பூவொன்றை மூக்கால் தொட்டுப் பார்த்தான். அலமாரிப் புத்தகங்களை ஆராய்ந்தான்.

“எனக்கு அந்த கார்டியன்ஷிப் ரொம்ப நியூசென்ஸாப் போச்சு! என் பிஸினஸைக் கவனிக்கவே நேரமில்லை. இருந்தும் இந்தப் பண்ணையைப் புறக்கணிக்கலை. பார்த்தீங்க இல்லே?”

tamilpdffree.wordpress.com

“இன்னும் இல்லை”

“டயமிருந்தா பூரா சுற்றிப் பாருங்க. நிறையச் செஞ்சிருக்கேன். இன்வெஸ்ட்மெண்ட் எல்லாம் ஸாலிடா செஞ்சிருக்கேன். மஃபட்லால், டாட்டா...”

“எஸ்டேட் ட்யூட்டி ஏதாவது பாக்கியிருக்கா?”

“எல்லாம் எங்க அண்ணன் இறந்த போதே கட்டித் தீர்ந்தாச்சு, ஒரு பைசா கிடையாது, புக்ஸ் எல்லாம் சுத்தம்.”

“ரொம்ப நல்லதுங்க!”

“பாருங்க என்னைப் பொறுத்தவரையிலும் இந்த ப்ராப்பர்ட்டியில் நான் கார்டியன் என்கிறதுக்காக மாசம் ஒரு ரூபா சம்பளம் போட்டுக்கிட்டேன்! எதுக்கு? எனக்கே நிறையப் பணம் இருக்கு!”

“வாஸ்தவம்! அந்த உயில் காப்பி இருக்குதா?”

“மெட்றாஸ்ல இருக்கு. ஏன், பார்க்கணுமா?”

“இல்லை, வேற யாராவது க்ளெய்மெண்ட்ன் உண்டான்னு தெரியணும்.”

“சேச்சே! எல்லாம் லீனாவுடையதுதான். அது பிரிக்க முடியாத, அழிக்கமுடியாத சொத்து. 1806லிருந்து ரிக்கார்ட்ஸ் எல்லாம் இருக்கு. பொழுது போகலைன்னா எல்லாத்தையும் பாருங்க! லீனாதான் ராணி. அதைப் பற்றிக் கருத்து வேறுபாடு கிடையாது. ஆனா...”

“ஆனா?”

அவர் யோசித்தார். “மிஸ்டர் கணேஷ் உங்ககிட்ட இதையெல்லாம் சொல்லணுமா கூடாதான்னுதான் நான் தயங்கிக்கிட்டிருக்கேன். நீங்க அவளுடைய லாயர். சொல்லலாம்னுதான் தோணுது. இதைப் பத்தி லீனா கிட்ட கேட்காம இருக்கறதா இருந்தால் சொல்றேன்...”

“சொல்லுங்க.”

அவர் சொல்லத் துவங்குமுன் இடது பக்கம் கதவு திறந்து ஒரு மிக அழகான பெண் வெளிப்பட்டாள்.

“வணக்கம்...! நீங்கதானே கணேஷ்!”

கணேஷ் தாக்கப்பட்டான். அவன் நிறைய அழகிய பெண்களைப் பார்த்திருக்கிறான். எல்லோரிடமும் ஏதாவது ஒரு குறை இருக்கும். மூக்கில், உதட்டோரத்தில், பற்களில், குரலில், உடலமைப்பில், சுற்றுப் பருமனில், ஒல்லியில், வாசனையில், தலைமயிரில், எங்கேயோ ஒரு சின்ன தப்பு இருக்கும்.

இவளிடம் இல்லை. லீனா என்கிற நனினமான பெயரே அவளுக்கு வலிக்கும்போல பூப்போல் இருந்தாள். உவமைகள் அவளை வர்ணிக்க ஓவர்டைம் வாங்க வேண்டும். ‘மான் போலக் கண்கள்,’ ‘பவளச் செவ்வாய்,’ இந்த பிஸினஸ் எல்லாம் உதவாது. புதுச்சட்டை அணிந்த உவமைகளைத் தேடியாக வேண்டும். நெற்றியின் அளவு எப்படி இருக்க வேண்டும். தலைமயிர் எப்படி இருக்கவேண்டும், மூக்கு, உதடு, தாடை, கழுத்து, மார்பகம், வயிறு எல்லாம் எப்படி இருக்கவேண்டும் என்று. கணேஷின் பிரம்மச்சாரி நினைவுகளில்

tamilpdffree.wordpress.com

இங்கே கொஞ்சம் ஜீனத், அங்கே கொஞ்சம் ஹேமமாலினி, அதோ ஒரு ரேகா, ஓரத்தில் ஒரு ஜெயலட்சுமி, ஜெயப்ரதா, என்றைக்கோ பார்த்த சரஸ்வதி, பார்த்தே இராத கிளியோபாட்ரா, ஒரு தடவை நாகர்கோவில் பஸ்ஸில் பார்த்த எவளோ...என்று ஒரு காம்போஸிட் பிம்பம் வைத்திருந்தான். இனி அதற்குத் தேவையின்றி ஒரே ஒரு லீனா!

குழந்தை முகமா அது? என்னைக் காப்பாற்றி, எனக்காகச் சமுத்திரங்கள் தாண்டிப் பனி மலைகளில் ஏறு என்று சொல்கிற முகம். அதே சமயம் ஓரத்தில் ஒரு சின்ன ஜரிகையாக, ஆணவமா அலட்சியமா ஏளனமா குறும்பா?

வசந்த் அப்படியே நின்று கொண்டிருக்க, கணேஷ் அவனை ஒருதடவை உலுக்கினான். ''இது வசந்த்!''

''வணக்கம்''

''ஹாய்!'' என்று வசந்த் சொல்ல நினைத்து அதற்குப் பதில் '...' என்று காற்றுத்தான் வந்தது.

''நீங்க சித்தப்பா கிட்ட பேசிட்டீங்களா?''

''பேச ஆரம்பிச்சிட்டம்''

''தீபக் உங்களைப் பத்தி நிறையச் சொன்னார்''

''எங்க ரேண்டு பேரைப் பத்தியுமா...நான் உண்டா?'' என்றான் வசந்த்.

குமார வியாசன் குறுக்கிட்டு. ''லீனா, இவங்க எதுக்காக உனக்குத் தேவைப்படறாங்கன்னு எனக்குப் புரியலை.'' என்றார்.

''தீபக்தான் அட்வைஸ் பண்ணார்.''

''வாழ்க தீபக்!'' என்றான் வசந்த்.

''ஏன்!''

''உங்களைச் சந்திக்கறதுக்குச் சந்தர்ப்பம் கிடைச்சதுக்கு. உங்களை ஒரு கலை விழாவில் பார்த்திருக்கேன்!''

''ஏய்! ஆரம்பிக்காதே,'' என்றான் கணேஷ்.

''என்ன சாப்பிடறீங்க காப்பி?'' என்று அவள் எழுந்திருக்க வசந்த், ''நீங்க போகாதீங்க! இப்பதானே உள்ளே வந்தீங்க? காப்பியா முக்கியம்? உக்காருங்க! உக்காருங்கன்னா...'' லீனா காலர் வைத்த சட்டை அணிந்து அதை இடுப்பில் முடித்திருந்தாள். டெனிம் ஜீன்ஸ் அணிந்திருந்தாள். உட்கார்ந்தாள். கழுத்தில் ஒரே ஒரு பட்டர்ஃப்ளை சங்கிலி போட்டிருந்தாள்.

''ரூமே நீங்க வந்தப்புறம் பிரகாசமாயிருக்கு.''

அவள் குழந்தை மாதிரிப் புன்னகைத்தாள். அப்பட்டமான முகம் அவளை பாதிக்கும் என்று தோன்றவில்லை. தான் அழகாக இருக்கிறோம், என்கிற பிரக்ஞை அவளுக்கு இருக்குமா இல்லையா என்பது பற்றிச் சந்தேகமாக இருந்தது.

''ஜஸ்ட் இமாஜின்! இந்த ஒரு மாசத்தில இது அத்தனை சொத்தும் உன்னுது லீனா''

tamilpdffree.wordpress.com

மறுபடி அந்தப் புன்னகை.

“உனக்கு இந்தச் சொத்தோட மதிப்பு தெரியுமா?”

“தெரியாது.”

“எழுபது லட்சம்! கேட்டுக்குங்க கணேஷ்’

“சித்தப்பா! தோட்டத்தில் தேன் கலர்லே ஒரு பூனை குட்டி பார்த்தேன். மிய்யாவ்னுது. ஹௌவ் ஸ்வீட்!’

“லீனா? பீ ஸீரியஸ்”

“என்ன செய்யணும்?”

“அவங்க ரெண்டு பேரும் எதுக்கு வந்திருக்காங்க?”

“எதுக்கு?” அவள் கேள்வியில் எந்தவிதப் பாசாங்கு இல்லாதது ஆச்சரியமாக இருந்தது கணே**ஷு**க்கு. அசடா வெகுளியா? மறதியுள்ளவளா?

“நிஜமா நாங்க எதுக்கு வந்திருக்கம்னு உங்களுக்கு தெரியாதா? இல்லை விளையாடறீங்களா?

“விளையாடல! எனக்கு இந்தச் சொத்தெல்லாம் தெரியாது. சின்னவதானே!”

“பின்ன ஏன் சொல்லி அனுப்பிச்சே?” என்றார் குமார் அதட்டலுடன், அவள் கண்களில் சற்று பயமும் லேசான கண்ணீர்த் திரையோடு ஆயத்தமும் தெரிய “தீபக்தான் ஏற்பாடு செஞ்சார், ” என்றாள்.

“தீபக்? உங்களுக்கு என்ன, என்ன...?”

“ஃப்ரெண்டு’

“அப்பாடா!”

“இவர் என்ன என்னை இப்படி முழிச்சுப் பார்த்துகிட்டே இருக்கார்?”

“வசந்த், அப்படி முழிச்சுப் பார்க்காதே!”

“கணேஷ்! நீங்களே எல்லாத்தையும் பார்த்துச் சொல்லிடுங்க! பிறந்த நாளுக்குள் சித்தப்பாகிட்ட இருந்து கணக்கு பார்த்து முடிச்சுடுங்க. என்ன?”

கணேஷ் சற்று அதிர்ந்து, “சரி, ” என்றான். எல்லாமே நாடகமா என்ன? “ப்ளீஸ்!’ என்றாள் பின் குறிப்பாக. அதனுடன் புன்னகை ஒரு போனஸ். ‘மிஸ்டர் வசந்த், நீங்க ஏன் கோபமாய்ட்டிங்க? நான் இப்ப கேட்டது தப்பா மன்னிச்சுடுங்க.”

“சேச்சே! உங்ககிட்ட கோவிச்சுக்கறா? முடியற காரியமா? மூணு நிமிஷத்தில ஒரு சைன்யத்தையே சாப்ட்டுடுமே உங்க சிரிப்பு.”

“போங்க. கேலி பண்ணாதீங்க!”

tamilpdffree.wordpress.com

‘‘ஹாய் ஹாய்!’’

‘‘லீனா! கொஞ்சம் தோட்டத்துப் பக்கம் போய்ட்டு வரியா? நான் கணேஷ் கூடப் பேசணும்’’

‘‘ஏன்? நான் இருந்தா என்னவாம்?’’

‘‘ஒண்ணுமில்லை உனக்குத்தான் போர் அடிக்கும்’’

‘‘நான் வேணா அந்தத் தேன் கலர் பூனைக்குட்டியைப் பிடிச்சுத் தரவா?’’

‘‘நிஜமா? அப்ப வாங்க…’’

‘‘உங்களுக்காகத் தேன் கலரில் புலிக்குட்டி அம்மாகிட்ட பால் சாப்பிட்டுக்கிட்டு இருந்தாக்கூடப் பிடுங்கிட்டுக்கொண்டு வந்துறலாமே!’’

‘‘மிஸ்டர் வசந்த், நீங்க இருங்க. லீனா! நீ போம்மா. அவுங்க ரெண்டு பேரும் பதினைஞ்சு நிமிஷத்திலே தோட்டத்துக்கு வருவாங்க!’’

‘‘சரி சித்தப்பா! வரீங்களா மிஸ்டர் கணேஷ்… வசந்த்!’’

‘‘நிச்சயம் அதை விட இந்த ஜென்மத்தில்…’’ முடிப்பதற்குள் அவள் சென்றுவிட்டாள்.

அவள் போனதும் கவனமாகக் கதவைச் சாத்திவிட்டு வந்தார் குமார். அனாவசிய அலங்காரங்கள் நிறைந்த தேக்குமர மேஜையின் விளிம்பில் உட்கார்ந்தார்.

‘‘மிஸ்டர் கணேஷ்! லீனாவைப் பார்த்தீங்க! அவளை ஒரு வார்த்தையில் உங்களால் வர்ணிக்க முடியுமா?’’

‘‘ஏஞ்சல்’’ என்றான் கணேஷ்.

‘‘நீங்க மிஸ்டர் வசந்த்?’’

‘‘டிட்டோ! கனவுகளை நாலிழையாக்கித் தங்கத்தில நகலெடுத்தச் செஞ்ச தேவதை!’’

‘‘பிரமாதம்!’’ அவர் சிரித்தார். ‘‘ரெண்டு பேரும் என்ன சுலபமா ஏமாந்து போறீங்க?’’ நின்று போயிருந்த தன் பைப்பை மறுபடி கிளப்பிக் கொண்டு புகை இழுத்துத் தன் மார்பு முழுவதும் நிரப்பிக் கொண்டு தொடர்ந்தார்!’’ மிஸ்டர் கணேஷ் இப்ப என்ன தமிழ் மாசம்?’

‘‘தமிழ் மாசம் தானே? ம்…ம்… வசந்த்?’’

‘‘நான் என்ன பாஸ். பஞ்சாங்கத்தையா முழுங்கியிருக்கிறேன்? கார்த்திகைன்னு நினைக்கிறேன்.”

‘‘கார்த்திகை மாசம் ஆறாம் தேதி’’

‘‘நீங்க முழுங்கியிருக்கீங்க!’’

‘‘இரண்டு வருஷத்துக்கு முன்னால் இதே கார்த்திகை மாசம் திரிதியைன்னு நினைக்கிறேன். சித்தயோகம் கூடிய சுப தினத்தில் இந்த லீனா……..’’

‘‘கல்யாணமா? சரிதா கேஸா? கார்த்திகை மாசத்திலே பண்ணமாட்டாங்களே?’’

tamilpdffree.wordpress.com

‘‘கவனமாக கேளுங்க மிஸ்டர் கணேஷ், மிஸ்டர் வசந்த்! என் அண்ணா பெண் லீனா, நீங்க சொல்ற ஏஞ்சல் மிஸ்டர் வசந்த் சொல்ற தங்க நகல் தேவதை என்ன செய்தா தெரியுமா?’’

கணேஷும் வசந்தும் அவர் சொல்லைப் போவதை எதிர்பார்த்திருக்க அவர் வேண்டுமென்றே புன்னகையுடன் தன் பைப்பின் பேரில் அதிகக் கவனம் செலுத்தி அதன் வாயைப் பொத்தி அதனின் நெருப்பை இழுத்து இழுத்து அதற்கு உஜ்வலம் கொடுத்து மற்றொரு புகை மேகத்தைத் தனக்குள் இழுத்து வெளியிட்டு, ‘‘பின்னால் பல சிக்கல்களை தவிர்க்கும் என்கிறதினாலே உங்கிட்ட சொல்லித்தான் ஆகணும்....லீனா ஒரு கொலை செஞ்சா!’’ என்றார்.

‘பட்’ பெரிதாச் சப்தம் கேட்டுக் கண்ணாடி ஜன்னல் சிதறியது. கணேஷ் திடுக்கிட்டு ஜன்னலுக்கு வெளியே எட்டிப் பார்த்தான்.

கீழே மரத்தடியில் லீனா கையை உதறிக் கொண்டு நகத்தைக் கடித்துக் கொண்டு கலவரத்துடன் நின்று கொண்டிருந்தாள், ‘‘ஸாரி! ஸாரி! மாங்காய் அடிச்சேன்! கல்லு குறி தவறிடுச்சு! பயந்துட்டீங்களா!’’

‘‘ஆமாம்!’’

‘‘மன்னிச்சுக்கங்க!’’

அவள் உற்சாகத்துடன் ஒரு ஸ்கிப்பிங் கயிறு கொண்டு குதித்துக் குதித்து ஓடினாள்.

முப்பத்தாறு, முப்பத்தஞ்சு, முப்பத்துநாலு, முப்பத்து மூணு’

மெலிதான செம்பட்டைத் தலை போல அவள் கூந்தல் சற்றுத் தாமதித்து அவளுடன் சிரிக்க சூரிய ஒளியின் விளையாட்டின் அங்கே ஒரு கவிதை நிழல் கூட ஓட அவள் தேவதை போல்தான் இருந்தாள்.

## 2

‘‘அபத்தம்,’’ என்றான் வசந்த். ‘‘ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி கொலை செஞ்சுட்டு மரத்தடியில் ஸ்கிப்பிங் ஆடிக்கிட்டு இருக்க முடியுமா...இது வெறும் ரீல் இல்லை. கேபிள் டிரம்!’’

‘‘மிஸ்டர் வசந்த்! அவ கொலை செஞ்சிருக்காங்கிறதைத் தெரிஞ்ச ஒரே ஒரு ஆத்மா அடியேன்தான்!’’

‘‘ஏன், அவளுக்குத் தெரியாதா?’’

‘‘தெரியாது’’

‘‘நீங்க பேசறது டில்லி அரசியல் மாதிரி இருக்கு. பாய் இருக்கா? பிறாண்டலாம் போல வர்றது!

‘‘மிஸ்டர் கணேஷ், நீங்க என்ன சொல்றீங்க?’’



tamilpdffree.wordpress.com

கணேஷ் ஜன்னலுக்கு வெளியே மறுபடி பார்த்தான். ஐம்பது ஸ்கிப்பிங் எடுத்து முடித்தவள் அந்த தேன் கலர் பூனைக்குட்டியைப் பிடித்து எடுத்துக் கன்னத்தில் தேய்த்துக் கொண்டிருந்தாள்.

''நம்ப முடியல'' மேலே பார்த்து, ''கணேஷ்!'' என்று கூப்பிட்டு அங்கிருந்து புன்னகைத்து கையை ஆட்டினாள். இவளா!

''எங்கிட்ட எதுக்கு இதைச் சொல்றீங்கன்னு எனக்கு முதல்லே புரியலே?''

''இப்ப நீங்கதான் அவளைக் காப்பத்தணும்!''

''எப்படி?''

''அதை இப்ப சொன்னா புரியாது, உங்களுக்கு நடந்ததை முதலிலிருந்து சொல்றேன். சரியா இரண்டு வருஷம்...கார்த்திகை மாசம்...'

''திரிதியை சித்தயோகம் சொல்லிட்டிங்க.''

குமார் தொடர்ந்தார் ''அதோ தெரியுது பாருங்க ஒற்றையடிப் பாதை. அதில ஒன்றரை பர்லாங்கு போனிங்கன்னு ஒரு அழகான சுனை வரும். நாலுகால் மண்டபம். பூவரசுமரத்து நிழல். அழகான அமைதியான இடம். இயற்கைக்கு ரொம்ப அருகே இருக்கக் கூடிய இடம் செயற்கைச் சாதனங்கள் ஏதும் கிடையாது; பரிமிவல்! அந்த இடத்தில் அது நடந்தது. அன்னிக்கு வெள்ளிக்கிழமை. லேசா மழை பெய்து ஓய்ந்திருந்தது, லீனா ஹாஸ்டலில் இருந்து வந்திருந்தா. காலேஜ்லே அப்பத்தான் சேர்ந்திருந்தாலும் இன்னும் ஸ்கூல் கேர்ள் மாதிரித்தான் இருந்தா. பாவாடை சொக்கா இரட்டைப் பின்னல்...நீங்க சொன்ன மாதிரி ஏஞ்சல்தான். பண்ணை பூரா ஓடுவா. டிராக்டர்ல போவா. மரத்திலே ஏறுவா. தொழுவத்திலே புதுசா போட்ட கன்னுக்குட்டியை அவிழ்த்துவிட்டு அதைத் துரத்தி விட்டு ஓடுவா. அன்னிக்கு மட்டும் மொரோஸா உம்முனு இருந்தா. சாயங்காலம் தோட்டத்துப் பக்கம் போய் வரேன்னு சொல்லிட்டுப் போனா. நான் ஜாம்நகர்ல இருந்து முதல்நாள்தான் வந்திருந்தேன், பண்ணைக் கணக்குகளை பார்த்துகிட்டு இருந்தேன். ஆறரை ஆயிடுச்சு. இவளைக் காணவில்லை. லேசா இருட்ட ஆரம்பிச்சுருச்சு. தோட்டத்துக்குப் போனேன். அவளைக் காணலை, எங்க போயிருப்பாள்னு யோசிச்சேன். அரச மரத்தடி அவளுக்குப் பிடிச்ச இடம். ஒரு வேளை அங்கதான் போயிருப்பாள்னு தேடிட்டுப் போனேன். அப்ப என் கிட்டே ரூபின்னு ஒரு அல்சேஷன் இருந்தது. அது முன்னாலே ஓடுது நான் பின்னாலே போனேன். இருட்டிருச்சு...

அந்த மாலையை மறக்கவே முடியாது மிஸ்டர் கணேஷ். இப்பக் கூட ராத்திரி சொப்பனங்களில் அந்தக் காட்சி வேற வேற ரூபத்திலே திரும்பத் திரும்ப வர்றது. தூக்கம் உதறிப் போய் உடம்பெல்லாம் வியர்வை நனைஞ்சு எழுந்து உட்காந்துருவேன். ரெண்டு ஸெரினஸ் சாப்பிட்டாத்தான் மறுபடி படுக்க முடியும்.''

பைப்பை மறுபடி பற்ற வைத்த அவர் விரல்களின் இடையில் தீக்குச்சி நடுங்குவதை கணேஷ் கவனித்தான்.

''மரத்தடியில், மண் பாதையில் லீனா தரையில் உட்கார்ந்துகிட்டு விசிச்சு விசிச்சு அழுதுகிட்டிருக்கா. நான் போய் 'ஏம்மா கண்ணு! என்ன ஆச்சு உனக்குன்னு அவ தலையை திருப்பினேன். திக்குனு ஆயிருச்சி. அவ முகம் பூரா வீங்கிப் போய் ஒரு மாதிரி மஞ்சளா மூக்கிலே இருந்து திரவம் ஒழுகுது. அப்புறம் சட்டை பாவாடையெல்லாம் இரத்தம்.

tamilpdffree.wordpress.com

‘‘உனக்கு என்னம்மா ஆச்சு’’ன்னு கேட்டா, பதில் சொல்லத் தெரியலை. இன்னி வரைக்கும் அவ அதுக்கு பதில் சொல்லலை. நான் முதல்ல யாராவது இவளைப் பிடிச்சுப் பலாத்காரம் பண்ணியிருக்காங்கன்னு முடிவு கட்டினேன். இருந்தும் அத்தனை பெரிய ரத்தத்திட்டு உடைகளிலே எப்படி வந்திருக்கும்னு தெரியலை. இதற்கிடையில் ரூபி குலைச்சுக்கிட்டுக் காலைத் தேய்ச்சு தேய்ச்சு மோந்து பார்த்துக்கிட்டு என்னை பிடிச்சு இழுக்கிறது, மெள்ள அவளை ஆசுவாசப்படுத்தி உட்கார வைச்சுட்டு ரூபியைத் தொடர்ந்து போறேன். அங்கே இருந்து நூறு நூற்றைம்பது அடி தூரத்தில் புதரில் ஒரு பிரேதம் கிடந்தது.

‘‘மிஸ்டர் கணேஷ்! அந்த மாதிரி ரத்தமிழந்த உடலை நீங்க பார்த்திருக்க மாட்டீங்க. சாக்பீஸ் மாதிரி. சப்பிப்போட்ட மாங்கொட்டை மாதிரி. ஈஜி ஷியன் மம்மி மாதிரி திடுதிப்புன்னு உடம்பில் இருக்கிற அத்தனை திரவங்களையும் ஒரு ராட்சச சைஃபன் வைச்சு உறிஞ்சு எடுத்திட்ட மாதிரி செத்துக் கிடந்த உடல். உடலில் இருந்த அத்தனை ரத்தமும் என்ன ஆச்சுன்னு ஆச்சரியப்பட்டுக்கிட்டு இருக்கிறபோது எனக்கு சட்டுன்னு லீனாவினுடைய உடையிலே இருந்த ரத்தக் திட்டுத்தான் ஞாபகம் வந்தது. அவன் மேல் பங்ச்சர் போட்டு எல்லா ரத்தத்தை உறிஞ்சுக் குடிச்சது போக பாக்கி இருக்கிற ரத்தம் அவ சட்டை மேலே வழிஞ்சிருக்கு!’’

‘கக்’ என்று எச்சிலை விழுங்கினான் வசந்த் ‘‘என்ன சார் காட்டேரி விடறீங்க’’

அந்த உடலை அடையாளம் கண்டுகொள்ளக் கொஞ்ச நேரமாச்சு! அப்புறம் தெரிஞ்சுது, அது ஒரு பதினேழு வயசுப் பையன். பண்ணையிலே எடுபிடி வேலை செய்யற ரத்தினசாமியின் பையன். ரொம்பச் சாதுவான கழிவிரக்கமான பையன். அவன் லீனாவைப் பலாத்காரம் எதுவும் செய்ய முற்பட்டிருப்பான்னு நம்ப முடியவில்லை. அந்த உடலை என்ன பண்றதுன்னு தெரியலை. முதல்லே லீனாவைக் கவனிக்கலாம்னு அவளை வீட்டுக்கு அழைச்சுட்டுப் போயி அலம்பி உடைகளைக் களைந்து காப்பி கொடுத்து ஸெடெடிவ்ஸ் கொடுத்துப் படுக்க வைச்சேன். அவ உடனே தூங்கிட்டா. யோசிச்சேன். அபத்தமா இருந்தது. அவள் என்ன செஞ்சிருப்பா? என்னதான் நடந்திருக்கும்... தூங்கிட்டிருந்தவ கைகளைப் பார்த்தேன். கையெல்லாம் கீறல். நகத்தில் அந்தப் பையன் காக்கிச் சட்டையுடைய நூல் ஒட்டிக்கிட்டு இருக்கு. ஒரு கை மூடிக்கிட்டு இருக்கு. விரல் இடுக்கில் ரத்தம். விரலைப் பிரிச்சுப் பார்த்தா கொத்தா அவன் தலைமயிரு!’’

வசந்த் தன் நெஞ்சைப் பிடித்துக்கொண்டு, ‘‘நல்லவேளை,’’ என்றேன்.

‘‘அவதான் அவனைக் கிழிச்சு உறிஞ்சுப் போட்டிருக்கா என்கிறதுக்கு உண்டான அடையாளங்கள் நிறையவே இருந்தது. எனக்கு ஆச்சரியம்! எப்படி நடந்தது? எங்கேயிருந்து அவளுக்கு அத்தனை பலம் வந்தது. என்னதான் நடந்தது?

‘‘தெரியலை! தெரியவே இல்லை...எனக்குப் போலீஸ்கிட்டே சொல்றதா, பாடியை என்ன செய்யறது....ஒண்ணுமே புரியலை. கிராமத்திலே இருந்து ரத்தினசாமியைத் தேடிட்டு வந்தாங்க ரெண்டு மூணு பேர். இல்லை இங்கே வரலைன்னு சொல்லிட்டேன்.

‘‘ஆறு மணி நேரம் தூங்கிட்டு ராத்திரி ஒரு மணிக்கு எழுந்தா முகம் பழையபடி தெளிஞ்சிருந்தது. ‘என்னம்மா ஆச்சு?’’ன்னு கேட்டேன். ‘என்ன ஆச்சு?’ன்னு அவ திருப்பிக் கேட்டா! அவளுக்கு ஒரு அட்சரம் ஞாபகம் இல்லை. ப்ளாங்க்! அதிலே பாசாங்கு ஏதுமில்லை. ‘தோட்டத்துக்குப் போனேன். தூங்கி எழுந்தேன்.’’ அவ்வளவுதான் ஞாபகம் இருக்குது. ஏதாவது கேட்டா சிரிக்கிறா! நான் என்ன செய்வேன்? எனக்கு அந்தச் சமயத்திலே உசிதம்னு பட்டதைச் செய்தேன். நேரே போனேன். ராவோட ராவா அந்த உடலை அந்த மண்டபத்துக்குப் பக்கத்திலேயே குழி தோண்டிப் புதைச்சு

tamilpdffree.wordpress.com

மண்ணைப்போட்டு மூடிட்டு அதன் மேலே ரெண்டு பாறாங்கல்லையும் நகர்த்தி வெச்சுட்டு வந்துட்டேன். ரூபி அந்த இடத்தை விட்டு வர மறுத்தது. மறுபடி தரையைப் தடி பிராண்டியது... அந்த ராத்திரியே அதைக் சுட்டுட்டேன்! அந்தப் பையன் பாடி அப்படியே இருந்தது...'

''ஸில்லி! அபாயகரமான காரியம்!'' என்றான் கணேஷ்.

''அந்தச் சந்தர்ப்பத்தில் எனக்கு அதுதான் பட்டுது. அவ ஏன் அப்படிச் செஞ்சான்னு காரணம் கண்டுபிடிக்கிறவரையிலும் உடல் மறைஞ்சு இருக்கறது நல்லதுன்னு மேலாகத்தான் புதைச்சு வச்சேன்!''

''காரணம் எப்பக் கண்டுபிடிச்சீங்க?''

''இன்னும் கண்டுபிடிக்கலை!''

''பாடி இன்னும் அங்கேயே புதைஞ்சு இருக்குதா?''

''ஆமாம்!'

''சரியாப் போச்சு!''

''மிஸ்டர் கணேஷ் நீங்க கெட்டிக்காரர்னு கேள்விபட்டிருக்கேன். நீங்கதான் கண்டுபிடியுங்களேன்''

''நான் வந்தது சொத்து வாரிசு விஷயமா, டிரான்ஸ்ஃபரை மேற்பார்வை பார்க்கிறதுக்கு!''

''அதிலே எந்த ஒரு சிக்கலும் கிடையாது. எல்லாம் நான் தயாரா வைச்சிருக்கேன். அவகிட்டே எல்லாச் சொத்தையும் ஒப்படைக்கிறபோது இந்த சுமை மட்டும் என்கூட இருந்துகிட்டே இருக்கும். இதையும் ஒரு வழியா இறக்கி வைச்சுறணும்னு விரும்பறேன்!''

''அவதான் செஞ்சாளான்னு கண்டுபிடிக்கணுமா? அவ ஏன் அப்படி செஞ்சான்னு கண்டுபிடிக்கணுமா?''

''இரண்டுமே! அவதான் செஞ்சாங்கறதுக்கு அடையாளங்கள் இருக்குது. ஏன்ங்கறது புரியவே இல்லை. இன்னவரைக்கும் அது ஒரு பெரிய கேள்விக்குறி! பாருங்க அவளை! இவளா! இவகிட்டயா அத்தனை மூர்க்கம்!''

''அந்தப் பொண்ணு எப்பவாவது பச்சையா வாந்தி எடுப்பாளா?'' என்றான் வசந்த்.

''இல்லை. ஏன்?'

''ஏன்னா கொஞ்சம் கொஞ்சம் எக்ஸார்ஸிஸ்ட் பார்த்துட்டு நீங்களே ஸ்பெஷல் ஜர்வு அடிக்கறீங்களோன்னு, லா காலேஜ்லே அதுக்கு ஜம்புன்னு பேரு! சொம்புன்னு வேற ஜம்பு!.....!''

குமார் கோபத்துடன், ''மிஸ்டர் வசந்த்! நான் சொன்னதுடைய சீரியஸ்னஸ்ஸை நீங்க உணரவே இல்லை" என்றார்.

''ஈஸி! வசந்த், சும்மாரு!'' என்று அதட்டினான் கணேஷ்.

tamilpdffree.wordpress.com

“ஸார் நீங்க, அதுவரைக்கும் இரண்டு வருஷமா அதன்மேலே ஒரு ஆக்ஷனும் எடுக்கலைன்னு தெரியுது!”

“ஆமாம், ஆனா நிறைய விசாரிச்சேன்!”

“என்ன தெரிஞ்சுக்கிட்டீங்க?’

“இந்த மாதிரி முன்னே ஒரு தடவை நடந்திருக்கு... இதே அரச மரத்தடியிலே...”

“எப்படி?’

“எப்படின்னு தெரியலை. நாற்பது வருஷம்கூட இருக்கலாம்னு தெரியுது. ஆனால் அடிக்கடி இந்த ஏரியாவிலே ஆட்கள் காணாமப் போறதும் பசுமாடுகள் மறைஞ்சு போறதும் நடந்திருக்குன்னு சொன்னாங்க. அப்புறம் இன்னொன்னு சொன்னாங்க!”

“யாரு?”

“பக்கத்துக் கிராமத்திலே”

“என்ன சொன்னாங்க?”

“ரெண்டு வருஷத்துக்கு ஒருமுறை கார்த்திகை மாசத்திலே தவறாம அது வருதாம்!”

“அதுன்னா அது?”

“ஒவ்வொருத்தனும் ஒவ்வொரு பேர் சொல்றாங்க! கிருத்திகாங்கறாங்க. சங்கரிங்கறாங்க, இன்னும் ராஜேஸ்வரி, புவனேஸ்வரி...எங்க ஃபேமிலியைச் சேர்ந்த பெண்களைத்தான் தேடுமாம்!” சிரித்தார். எனக்கு இதிலேயெல்லாம் நம்பிக்கை ஏதும் இல்லை. நான் கம்ப்யூட்டர் ஆசாமி! ராஷனலிஸ்ட். எனக்கு உறுத்தறது ஒரு விஷயம். அன்னிக்கு நடந்தது என்ன? அதுக்கு என்ன எக்ஸ்பிளனேஷன்? அது கிடைக்கிற வரைக்கும் அந்த உடல் அங்கேயே இருந்தாகணும்.”

“இதை நீங்க எங்கிட்டே சொன்னதிலே எங்களையும் உங்க கான்ஸ்பிரஸிக்கு உடன்படுத்தினாப்பல ஆயிருது!”

“அதுக்கான தண்டனையை நான் ஏத்துக்கத் தயாரா இருக்கேன்!”

“ஆனா நாங்க ஏத்துக்கத் தயாராயில்லையே! ஏழு வருஷம்வரை விழும் சும்மாவா?” என்றான் வசந்த்.

“இல்லை மிஸ்டர் வசந்த்! நான் இத்தனை நாள் போலீஸ்கிட்டே சொல்லாததற்கு மற்றொரு காரணம் இருக்கு. அவுங்க சொல்ற அந்த ரெண்டு வருஷம் ஆகட்டும்னு காத்திருக்கேன். பரம்பரை பரம்பரையா இந்த நம்பிக்கை இருக்குது...”

“ஐ ஸீ! மறுபடி அந்த ராஜேஸ்வரியோ, காமேஸ்வரியோ வருதான்னு பார்க்கப் போறீங்களா?”

“ஏறக்குறைய அப்படித்தான்... ஆனா பார்க்கப் போறது நானில்லை! நீங்க! உங்களைத்தான் கேட்டுக்கறேன்! அதுக்காகத்தான். உங்கிட்ட இதையெல்லாம் சொன்னேன் கார்த்திகை மாசம் வந்திருச்சு. லீனாவும் வந்துட்டா!”

tamilpdffree.wordpress.com

"என்ன சொல்றீங்க? ராத்திரி தோட்டத்தில் உலாத்தி ஏதாவது பிசாசு, காத்தவராயன்னு வந்தா புடிச்சுப் பாட்டில்ல போட்டு...ஏன் ஸார் அடுத்த பஸ் எப்ப?"

"பயப்படறீங்களா?"

"பயமா, ஹே! இருந்தாலும் உள்ளூர கன்னுக்குட்டி உதைக்கும். நாங்க ஏதோ ஹைகோர்ட்டிலே வாதாடற ஜனங்க..."

"நீங்களே இருந்து விசாரிச்சு வாரும்." என்றான் கணேஷ்.

"எனக்கு பிஸினஸ் துரத்துது. பம்பாய் போயாகணும். திரும்பி இருபது தேதிக்குள்ளாற வந்துடுவேன்...அதுக்குள்ளே ஏதும் நடந்துவிடாது. நடந்துவிடமா நீங்க பார்த்துக்கிட்டா. யூ ஸீ மிஸ்டர் கணேஷ், எனக்கு ஒருவிதத்திலே லீனாவைப் பத்தியும் கவலையா இருக்கு! என்னதான் எல்லாம் நான்சென்ஸ்னாலும் சின்னதா எனக்குக் கொஞ்சம் சந்தேகம் வர ஆரம்பிச்சுடுச்சு லீனா, அவ எல்லாரையும் போலவா? இல்லையா? சில வேளையிலே அவ செய்யற காரியங்கள் வினோதமா இருக்கும். கட்டெறும்பைப் பிடிச்சான்னு வைச்சுங்கங்க. அதை தனித்தனியா மூணு பாகமாக்கி காலெல்லாம் பிச்சுருவா, வண்ணத்துப் பூச்சியுடைய இறக்கைகளை பிச்சுட்டு, பாக்கி இருக்கிற புழுவை நெளிய நெளிய ஊசியால் குத்துவா...நத்தையை எடுத்து வென்னீர்ல போட்டுவா, மிதிப்பா..."

"சரி...சரி...எல்லாத்தையுமே சொல்லியாகணுமா? காலைல நான் சாப்பிட்ட பஜ்ஜியெல்லாத்தையும் வெளியில் கொண்டு வந்துட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பீங்க போல!"

"உள்ளூர சின்னச் சின்ன வயலன்ஸ் அவகிட்டே இருக்கு. அதுக்காகத்தான்'

"நீங்க எப்ப பம்பாய் போகப் போறீங்க?"

"இரண்டு நாளில்."

"பார்க்கலாம். இரண்டு நாள் இருக்கோம். அதுக்குள்ளே விசாரிச்சுப் பார்க்கிறோம். உங்க சந்தேகங்களில் ஏதாவது ஆதாரம் இருக்கான்னு தெரிஞ்சுக்க முயற்சி செய்யறோம்.

"நீங்க பயந்தது இல்லைன்னு தீர்ந்து போச்சுன்னா எனக்கு நிம்மதி. அப்புறம் நீங்க சொல்றபடி நான் நடக்கறேன். போலீஸுக்குப் போகணும்னாக் கூடச் செய்யறேன். நீங்க சொல்லுங்க..."

"பார்க்கலாம் " என்றான் கணேஷ்.

அறையை விட்டு வெளியே வந்தார்கள். மாடிப்படி இறங்கி வாசலுக்கு வர, லீனா ஒரு பெரிய ரப்பர் பந்து வைத்து அதை தட்டித் தட்டி விளையாடிக் கொண்டிருந்தாள்!

"என்ன எல்லாம் பேசியாச்சா?' என்று கேட்டு இரண்டு கண்களையும் வசீகரமாக இமைத்துச் சிரித்தாள்.

"லீனா, இங்கே ஒரு அரச மரத்தடி மண்டபம் இருக்குதாமே?"

"ஆமாம் நான் காட்டறேன் வாங்க"

tamilpdffree.wordpress.com

அவள் உற்சாகமாக நடக்க, பாத்தி வெட்டிக் கொண்டிருந்த தோட்டக்காரனைப் பார்த்தான் கணேஷ்.

‘‘வசந்த்! அந்த ஆள்கிட்ட ஒரு கடப்பாரை இருந்தா வாங்கிட்டு வா!’

## 3

**வ**சந்த் தயங்கினான். ‘‘கடப்பாரையா! எதுக்கு பாஸ்?’’

‘‘காது குடையறதுக்கு! முட்டாள்தனமா கேள்வி கேட்காதே. தோட்டக்காரன்கிட்ட இருக்கா கேட்டு வாங்கிட்டு வா’’

‘‘அதுக்குள்ளே தோண்ட ஆரம்பிக்கணுமா? எனக்கென்னவோ ஆரம்பமே சகுனமா இல்லை?’’ என்று முணுமுணுத்துக்கொண்டே தோட்டக்காரனிடம் சென்றான். லீனா நின்று கொண்டிருந்தாள். சும்மா அவ்வளவு அழகாக நிற்க முடியுமா என்று கணேஷ் ஆச்சரியப் பட்டான்.

சாக்பீஸ் போல! சப்பிப் போட்ட மாங்கொட்டை போல!

இல்லை, நிச்சயம் இவளாக இருக்க முடியாது. தோட்டக்காரன் குரல் கேட்டது. ‘‘கடப்பாரை ஷெட்டுக்குள்ளே இருக்குதுங்க. ஷெட் சாவி பெரியய்யாகிட்டே இருக்குது’’

‘‘பெரியய்யா வீட்டுக்குள்ள இருக்காரு...வீடு தோட்டத்துக்குள்ள...தோட்டம்’

‘‘போதும் வா வசந்த்! கடப்பாரை வேண்டாம்’’

‘‘லீனா, போகலாமா?’’

‘‘என் பின்னாடியே வாங்க வசந்த் அங்கிள்!’’

‘‘இந்த அங்கிள் பிஸினஸ் வேண்டாம். இன்னிக்கெல்லாம் இருந்தா எனக்கு என்ன வயசுங்கறே?’

லீனா குதித்துக் கொண்டே வழிகாட்ட அவள் பின் சென்றார்கள். அந்த இடத்தின் அழகான சூழ்நிலை புரிந்தது, வண்டலூர் தாண்டி பத்து கிலோ மீட்டர் தூரத்தில் கான்க்ரீட் பாதையைப் புறக்கணித்து இரண்டு கி.மீ. உள்ளே செல்ல நகர நாராசங்களிலிருந்து வேண்டுமென்று ஒளித்து வைக்கப்பட்ட சமாச்சாரம் போல நடு வீட்டைச் சோலை மறைக்கிறது. தீர்மானித்து அமைக்கப்பட்ட பாதையில் சென்டினல்கள் போல கூந்தல் பனை மரங்கள் யாவும் ஒரே தினத்தில் பிறந்தது போல முப்பதடி உயரம், அங்கிருந்து சற்று கவிதை கலந்த கரடு முரடு; மா.கொன்றை, முள்முருங்கை, காட்டுத்தீ மற்றும் கணே**ஷு**க்கு பெயர் தெரியாத மரஞ்செடி கொடிகள் கடந்து மண்டபத்தை வந்தடைந்தார்கள். சற்றே உயரமான பகுதியில் மண்டபத்தின் தூண்கள், மேலே கல்பாளங்கள். சற்றுப் பழமையான மண்டபம்தான். அரச மரத்தின் கயிறு போன்ற வேர்கள் மண்டபத்தின் அடிவாரத்தில் பரவி சுவர் பிளவுகளில் பீறிட்டு இன்னும் சில வருஷங்களில் மண்டபத்தை சாப்பிட்டு விடும் போல இருந்தது பிரம்மாண்டமான மரம். வழவழப்பான

tamilpdffree.wordpress.com

இலைகளும், கிளைகளும், இலைக்காம்பிற்கும் கிளைகளுக்கும் இடையில் கருஞ் சிவப்பு ஜோடி ஜோடியாகக் காய்களுமாக–

இலைகளின் சலசலப்பில் தாலாட்டு. இருவரும் மண்டபத்தில் உட்கார்ந்தார்கள். சற்றுத் தூரத்தில் பொய்கை போலத் தெரிந்தது. அதில் அரசிலைகள் மிதந்தன. இயற்கையின் சப்தங்கள் மட்டுமே பாக்கியிருக்க கணேஷ் சுற்றிலும் பார்த்து ''ப்யூட்ஃபுல்,''என்றான்.

''இப்ப 1879ன்னு சொன்னா நம்பலாம், லீனா ஓடிப்பிடிச்சு விளையாடலாமா?''

''சரி!' என்றாள் ஆர்வமாக.

''ஒளிஞ்சிக்கோ!''

''ஓ!'' என்றாள் மிகுந்த ஆர்வமாக.

வசந்த் கணேஷைப் பார்த்து, 'இவளா?'' என்று சிரித்தான். கணேஷ், ''லீனா, நீ என்ன பண்றே, இங்கே இருந்து நூறு தப்படி எண்ணி மெல்ல நடந்து போய் நிக்கறே. என்ன? என்றான்.

''சரி.'' என்று நிதானமாக அவள் அடியெடுத்து வைக்க, வசந்த் ''எதுக்கு பாஸ்?'' என்றான்.

''பாரு நடக்கறது எவ்வளவு அழகா இருக்கு ஓஹென்றி ஒரு பெண்ணைப் பத்திச் சொன்னான். 'அவளோட வேலை சும்மா உயிர் வாழ்ந்துக்கிட்டு அதே சமயம் அதனால் உலகத்தையே இன்னும் கொஞ்சம் அழகுபடுத்தறதுன்னு!...'' அந்த ஆள் குமார வியாசன் சொன்னது எவ்வளவு...''

''உண்மைங்கறதை வெரிஃபை பண்ணிடலாம் பாஸ், ஆனா ஒரு சந்தேகம்! நாம் வந்தது உயில் பார்க்கத்தானே?'

''ஆமாம், ஆனா?'

''கணேஷ், போதுமா நூறு ஆயிடுச்சி?'

''சரி. அங்கேயே நில்லு...திரும்பி...மெல்ல வா...'' லீனா மெதுவாக அவர்களை நோக்கி நடந்தாள்.

''வசந்தகாலம் வழங்கிய நன்கொடை!'' என்றான் வசந்த்.

''அந்த ஆள் நம்மகிட்ட சொன்னது பொய்யா நிஜமா என்கிறதைவிட அவன் ஏன் நம்மகிட்ட அதைச் சொன்னான்கிறதுதான் உறுத்தது!''

''அந்த ஆள் ஒரு ஃபோனின்னு தோணுது. ஏன் பாஸ் சிரிக்கறீங்க?''

''நான் சிரிக்கலியே?''

''பின்னே சிரிப்புச் சத்தம் கேட்டுதே?'

''உளறாதே! கம் லீனா! நீ எங்க கூட எப்ப மெட்றாஸுக்கு வர முடியும்?''

''எதுக்கு வரணும்? இனிமே நான் இங்கதானே இருக்கணும், இதெல்லாம் எனக்கு வரப்போறதில்லை?''

tamilpdffree.wordpress.com

"தீபக் வரப்போறரா?"

"வர்றதா சொன்னார்...எனக்கு ஒண்ணும் தெரியாது... தீபக்தான் நிர்வாகம் பற்றி எல்லாம் சொல்லித் தர்றதாக இருக்கார். தீபக் எம்.பி.ஏ.! தெரியுமா வசந்த்?"

"அப்படியா? எம்.பி.ஏ. படிக்கிறதுக்குள்ளே தலையெல்லாம் வழுக்கை ஆயிருக்குமே?"

"இல்லையே! அவருக்கு நிறையத் தலைமயிர்?'

"போச்சுடா!"

கணேஷ், "லீனா! இந்த மண்டபத்துக்கு நீ அடிக்கடி வருவியாமே?" என்றான்.

"ஆமாம். எப்ப வர்றபோதும் இங்கதான் வந்து உக்காருவேன். படிப்பேன்!"

"என்ன படிப்பே? 'அம்புலிமாமா' வா?"

"இங்க ஏதாவது விபத்து நிகழ்ந்ததா? உனக்கு ஞாபகம் இருக்கா?"

"விபத்தா? ம்... ஒரு தடவை இங்க நான் மயக்கமா விழுந்துட்டேனாம்...இரண்டுவருஷம் முன்னாடி. அடிபட்டு மேலெல்லாம் ரத்தமாயிருச்சாம்...எனக்கு ஞாபகமில்லை..."

"லீனா, உனக்கு வண்ணாத்திப் பூச்சி பிடிச்சித் தந்தா அது இறக்கையைப் பிச்சிப் போடுவியா?" என்றான் வசந்த்.

அவள் புரியாமல், "ஏன் அப்படிச் சொல்றே?" என்றாள்.

"சித்தப்பா! வசந்த் என்ன கேட்டுகிறார் பாரு! வண்ணாத்திப் பூச்சியை நான் பிச்சுப் போடுவேனாம்!"

குமாரவியாசன் அதற்குள் உடை மாற்றியிருந்தார். மிக மெலிய நீல நிறத்தில் சட்டையும் கருநீல பாண்ட்டும் அணிந்து ஷூக்கள் பளபளக்கக் கையில் நாய்த்தலைத் தடியை மஹோகனி பளபளப்புடன் சுற்றிக்கொண்டே, "என்ன மிஸ்டர் கணேஷ்! கடப்பாரை கேட்டிங்களாமே? எதுக்கு?"

கணேஷ் பதில் சொல்வதற்கு முன்பே அவர் தொடர்ந்தார். "நீங்க நான் சொல்றதை இன்னும் நம்பலைன்னு தெரியுது... மிஸ்டர் வசந்த், நீங்க லீனாவை அழைச்சுட்டுப் போறீங்களா?

"தாராளமா," என்றான் வசந்த்.

"நோ ட்ரிக்ஸ் வசந்த்." என்றான் கணேஷ்.

"பயப்படாதீங்க பாஸ். வா லீனா! நானும் நீயும் வண்ணாத்தி பூச்சி பிடிக்கலாம்!'

அவர்கள் செல்ல கணேஷ், 'உங்க கேள்விக்குப்பதில்...நான் நம்பலை!" என்றான்.

"தோண்டிப் பார்க்கணுமா உங்களுக்கு?' அவர் மெதுவாக மண்டபத்தைச் சுற்றி வந்து அதன் மேற்கு மூலையிலிருந்து சுனையை நோக்கிப் பதினைந்து அடி நடந்து தன் வாக்கிங் ஸ்டிக்கால் தரையில் தட்டி "இந்த இடத்தில்தான் புதைத்தேன். பார்க்கணுமா உங்களுக்கு?" என்றான்.

tamilpdffree.wordpress.com

“வேண்டாம். ஆனா... நீங்க செஞ்சது ஒரு பெரிய தப்பு. மஹா தப்பு... போலீஸ்கிட்டே சொல்லாம ஒரு கொலைக்குரிய முக்கிய சாட்சியத்தை இப்படி மறைச்சு வெச்சது... நீங்க அதுக்காக ஜெயிலுக்குப் போவீங்க”

“நான்தான் தயார்னு சொன்னேனே! நானே சொல்லப்போறேனே!”

“இரண்டு வருஷம் தாமதிச்சதுக்கு என்ன காரணம் சொல்லப்போறீங்க?”

அவர் உணர்ச்சிவசமாகப் பேசினார். “கணேஷ்! அவ இந்தக் குற்றம் செய்யலைன்னுதான் இன்னும் நான் நம்பறேன். அவளுக்குள்ளே ஒரு அமானுஷ்யமான சக்தி புகுந்துண்டதுன்னும் நம்பறதுக்குக் கஷ்டமா இருக்கு.. அவதான் குற்றம் செய்திருக்கான்னு சந்தர்ப்பச் சூழ்நிலை தெளிவாகக் காட்டுது. செய்தது அவளா இல்லை, அவளுக்குத் தற்காலிமாகப் பிரமை பிடிச்சு, பித்துப்பிடிச்சு, ஒருவித வெறி வந்து...அல்லது...நிஜமாவே பிசாசுங்கறது இருக்கா? கிராமத்திலே அவங்க சொல்றது போல...”

“எப்படி எப்படி இருந்தாலும் சட்டப்படி நீங்க மறைச்சது மகா தப்பு. நீங்க சொன்ன மாதிரி அந்தச் சந்தர்ப்பத்திலே அவளுக்கு ஒருவிதப் பிரமை பிடிச்சுருச்சுன்னு வெச்சுக்கிட்டாக்கூட அதைக் கோர்ட்டிலே, நிரூபிச்சா அதுக்கு ஐ.பி.ஸி. செக்ஷன் 84 மூலமா ரெமடி இருக்கு. அப்படித்தான் நீங்க அந்தச் சம்பவத்தை அணுகியிருக்கணுமே தவிர மறைச்சு வைச்சுக்கிட்டு...

“ஏதோ நடந்தது நடந்துருச்சு! எனக்கு என்னன்னா, நான் இந்தப் பெண்ணைத் தனியா இந்த வீட்டில் விட்டுட்டுப்போக வேண்டியிருக்குது. என் பிஸினஸ் அழைக்கிறது. இவ்வளவு வருஷம் சொத்துக்கு மட்டுமில்லை. இவளுக்கும் கார்டியனாகத்தான் இருந்திருக்கிறேன். சட்டப்படி அதை முடிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. ஆனால் இந்தப் பெண்ணைப்பற்றி எனக்குக் கவலை தீரலை. நெஞ்சுக்குள்ளே அந்தக் குற்ற உணர்ச்சி. மண்டபத்துக்குப் பக்கத்தில் அந்தப் புயல்! மிஸ்டர் கணேஷ், இரண்டு நாள். இருங்க, இரண்டு மாசம் இருங்க! தீர்மானமா ஏதாவது செய்துட்டுப் புறப்படுங்க!’

“எனக்கு இரண்டு நாள் இருக்கறதே கஷ்டம். உங்களுக்கு பிஸினஸ் அழைக்கிற மாதிரி எனக்கு என்னை ஹைகோர்ட்... மிஸ்டர் குமார், நான் இப்ப இங்க வந்தது அகஸ்மாத்தான்னுதான் சொல்லணும். என் கொலிக் ஒருத்தர் ஸன் தீபக். அவரை ஒரு பார்ட்டியில் சந்திச்சேன். அவர்தான் சொன்னார். நான் இந்த இடத்தை வந்து பார்க்கணும் லீனாவுடைய வாரிசு சம்பந்தமா எல்லா விவகாரங்களையும் கவனிக்கணும்னிட்டு. அதுக்கு முன்னாலே ஒரு நாள் இரண்டு நாள் எஸ்டேட்டை வந்து பார்க்கலாம்னுட்டு வந்தோம். இன்னும் நாங்க எதுவும் இந்த விவகாரத்தில் ஏற்றுக்கலை. நீங்க ஏற்கனவே ஒரு குண்டைப் போட்டுட்டீங்க. அதையே முழுங்க முடியாமத் தவிச்சுக்கிட்டு இருக்கேன்...”

‘அப்போ சென்னை திரும்பினதும் போலீஸ் கிட்ட சொல்லப்போறீங்களா?”

“அதைப்பற்றி நான் இன்னும் யோசிக்கலை”

அவர் புறப்படக் கிளம்பினார், “ராத்திரி இருப்பீங்க இல்லை?”

“ஏன்?’

“உங்க ரெண்டு பேருக்கும் சேர்த்துச் சமைக்கிறதுக்கு”

“இருப்போம்.”

“அப்ப நான் வரட்டுமா?” என்று வாக்கிங் ஸ்டிக்கைச் சுழற்றிக் கொண்டு புறப்பட்டார். காய்ந்த இலைகளில் அவர் நடக்கும் சப்தம் சற்று நேரம் கேட்டது.

கணேஷ் தனியாக இருந்தான். மெதுவாக அந்த மனிதர் தட்டிக் காட்டிய இடத்திற்குச் சென்றான். தரையில் காலால் தேய்த்துப் பார்த்தான். இரண்டு மூன்று ஆசாமிகள் தோண்டுவதற்கு ஐந்து மணிநேரம் ஆகும். தரை நன்றாக இறுகித்தான் இருந்தது. எதற்குத் தோண்ட வேண்டும். பேசாமல் சென்னை திரும்பிவிடலாம். அந்தப் பெண்ணைப் பற்றித்தானே கவலை. அவளையும் அழைத்துக் கொண்டு சென்றுவிடலாம். அவளுக்கு ஞாபகமில்லை என்கிறாள். அதைக் கண்டுபிடித்து விடலாம். கணேஷுக்குப் பளிச்சென்று ஞாபகம் வந்தது. டாக்டர் பாலகோபால்! அந்தத் தரையில் தோண்டுவதற்கு பதில் அவள் மனத்தில் தோண்டலாம். அந்தப் பெண்ணை ஹிப்னாடிஸத் தூக்கத்தில் ஆழ்த்தி அன்றைய தினத்திற்குக் கொண்டு சென்றுவிடலாம்...திட்டவட்டமாக இரண்டு வருஷத்திற்கு முன் என்னதான் நடந்தது என்று தெரிந்து கொண்டு விடலாம். ஆக என்ன சொன்னார்...கார்த்திகை மாசம் த்ரிதியை சித்தயோகம்!... தெரிந்து கொண்டு அப்புறம் போலீசுக்குத் தெரிவிக்கலாம். மறுபடி மண்டபத்திற்கு வந்து உட்கார்ந்து சுற்று முற்றும் பார்த்தான். மாலைப் பறவைகளின் கதம்பமான சப்தங்கள். டிக்ரி டிக்ரி சிர்சிர் க்ய்க் என்று எத்தனையோ இறக்கை முளைத்த சப்தங்கள். நடுவே குயிலின் குரல், அக்காக் குருவியின் கொஞ்சல் எல்லாமும் இயற்கையாகவே...

இருந்தும் கணேஷின் மனத்தில் ஒன்று உறுத்தியது, வசந்த் ஏன் அந்த மாதிரி திடீர் என்று கேள்வி கேட்டான்.

ஏன் பாஸ் சிரிக்கிறீங்க?

நான் சிரிக்கலியே?

பின்னே சிரிப்புச் சத்தம் கேட்டதே!

உளறாதே...

வசந்த் ஏன் அப்படிக் கேட்டான். அப்படிக் கற்பனை செய்து கொண்டானா? மாட்டானே? எதனால்? பயத்தாலா?

கணேஷ் சற்று நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தவன் சட்டென்று அந்தச் சிரிப்புச் சத்தத்தைத் தெளிவாகக் கேட்டான்.

தூரத்திலா கிட்டத்திலா என்று சொல்ல முடியாதபடி ஆண் சிரிப்பு. பத்து செகண்டுதான் கேட்டிருக்கும். அலட்சியமும் ஏளனமும் தெரியும் நக்கல் சிரிப்பு.

கணேஷ் சுற்றுமுற்றும் கவனமாகப் பார்த்தான். அவன் சருமத்தின் அடித்தளத்தில் சட்டென்று ஒரு சில். ஒரு சின்ன ஐஸ் ஒத்தடம். இதயம் ஒரு தடவை நொண்டியது. மறுபடி அந்தச் சிரிப்புச் சப்தம் கேட்க காத்திருந்தான். பத்து பதினைந்து நிமிஷமாகியும் கேட்கவில்லை.

எழுந்து நடந்தான். அவன் காலடி ஓசை இப்போது சற்றுக் கலவரப்படுத்தியது. யாராவது பின் தொடர்கிறார்களா என்ன? சே! அனாவசிய பிரமை. பட்டப்பகலடா முட்டாளே!...... பகலில் கூட சாயந்திரம். சூரியன் வேளை. இது இருபதாம் நூற்றாண்டு சயன்ஸ் யுகம். எல்லாவற்றின் காரண காரியங்களும் அலசப்பட்டுத் தீர்வையாகிவிட்ட காலம்!... நட வேகமாய் நட!

tamilpdffree.wordpress.com

பின்னால் ஒரு தடவை திரும்பிப் பார்த்துவிட்டு நடந்தான். அறைக்குத் திரும்பியபோது வசந்திடம் சொன்னான்.

‘‘உங்களுக்கும் கேட்டுதா பாஸ்!’’

‘‘ம்!’’

‘‘நான் சொன்னேனா இல்லையா? தூரத்தில? ஆண்பிள்ளைச் சிரிப்பு?’’

‘‘ஆமாம், தூரத்திலன்னு சொல்ல முடியலை. கிட்டத்திலேயும். காதோட ரகசியமாச் சிரிச்சாப்பலேயும் இருந்தது!’’

‘‘கரெக்ட். அதே உணர்ச்சி எனக்கும் ஏற்பட்டுது. பாஸ்! வாங்க போயிறலாம்! இந்த இடத்தில் ராத்திரி தங்க முடியாது!’’

‘‘பயப்படறியா?’’

‘‘அவரு என்னமோ ரத்தக் காட்டேரி அது இதுன்னு டிராகுலா மாதிரி உறிஞ்சற கதையெல்லாம் சொல்லி வைச்சிருக்கார். ஏற்கனவே எனக்கு உடம்பில ரத்த சக்தி குறைச்சல்னு டோனாஸ் சாப்பிட்டுட்டிருக்கிறேன்...’’

‘‘வசந்த், நிஜமாகவே நீ பயப்படறியா?’

‘‘பயம் இல்லை பாஸ். எதுக்கு வம்பு?’

‘‘இது என்ன விஷயம்னு தெரிஞ்சுக்க உனக்கு ஆர்வமில்லையா?’’

‘‘இருக்கு. இருந்தாலும்...ஒண்ணு செய்யலாம் பாஸ்! இன்னி ராத்திரி ரெண்டு பேரும் ஒரே அறையில் படுத்துக்கலாம்! எனக்குன்னு தனியா ரூம் கொடுத்திருக்காங்க! எதுக்கு, வேண்டாம். பேசாம இங்கே வந்து படுத்துக்கறேன். தரையில் ஒரு ஓரத்தில் ஆறடி போதும் எனக்கு என்ன!’

‘‘நீ இங்க வந்து படுத்துக்கறது பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. அதோட, இன்னொரு காரியமும் செய்யணும் நீ.’’

‘‘என்ன?’’ என்றான் வசந்த். குரல் நடுங்கியது.

‘‘ராத்திரி அரசமர மண்டபத்துக்கு என்னோட வரணும்!’

## 4

ஜன்னலுக்கு வெளியே இருட்டில் தூரத்தில் வெகு தூரத்தில் பேச்சுக் குரல் கேட்டது கணேஷுக்கு ‘‘சேகர் நான் உங்களை வெறுக்கிறேன்’’ என்றது டெண்ட் சினிமா. அறையில் சுவரில் மாடர்ன் ஆர்ட் சித்தரத்தில் பழுப்பாக ஏதோ ஒரு திட்டின் நடுவே கரு ரத்தக் கட்டிகள் எக்டோ பிளாஸம் போல மிதந்து கொண்டிருந்தன. வசந்த் அதை வெறுப்புடன் பார்த்து’’ ஆர்ட் வித் எ காபிட்டல் எஃப்,’’ என்றான்.’

tamilpdfree.wordpress.com

‘‘சீரியஸாவே ராத்திரி அங்க போகணும்கறீங்களா?’’

‘‘ஏன் பயமா?’’

‘‘பயமா! ஹை! எனக்கா? கொஞ்சம் யோசிச்சுப் பார்த்தா...பயம்தான்!’

‘அறியாமைதான் பயம்!’’

‘‘ராத்திரி ஒம்பதரை மணிக்கு பிலாசபியா? பாஸ்! நாம இங்கே வந்தது பேய் பிசாசு ஆராய்ச்சிக்கு இல்லைன்னு நினைக்கிறேன். ஒரு வாரிசுப் பத்திரத்தை விசாரிக்கணும்னு தானே வந்தோம்!’’

கணேஷ் கவனமின்றி ‘‘வசந்த், உனக்கும் கேட்டதில்லை?’’

‘‘என்ன’’?

‘‘சிரிப்புக் குரல்! எனக்கு சாயங்காலம் மரத்தடியில் கேட்டது’’

‘‘அட! அப்ப நிஜமாகவே பேய் இருக்கா? மரத்தடியில் சிரிச்சுக்கிட்டு குடியும் குட்டிச்சாத்தானுமா?’’

‘‘வசந்த், நீ டவுன்ல விசாரிச்சியா சாயங்காலம்?’’

‘‘டவுன் என்ன டவுன்! நெப்பூர் ஏறக்குறைய வில்லேஜ் மாதிரித்தான்!’’

‘‘இருக்கட்டும், என்ன விசாரிச்சே? என்ன சொல்றாங்க?”

‘‘இந்த ஆள் வியாசன் சொன்ன மாதிரித்தான்! பண்ணையிலே ஒரு பயலை ரெண்டு வருஷம் முன்னாடி திடீர்னு காணோமாம்!’’

கணேஷ் மௌனமாக இருக்க வசந்த் தொடர்ந்து ‘‘அந்த அரசமரத்தில ஒரு பிசாசு ரெண்டு வருஷத்துக்கு ஒருமுறை வருமாம். கண்ணால் பார்த்திருக்கேன்னு பத்துப் பதினைந்து ஜனங்கள் சத்தியம் பண்றாங்க! பெண் பிசாசாம்...! எல்லாம் புருடா!’’

‘‘அப்ப பார்த்துறலாமே?’’

‘‘எதுக்குப் பார்த்துக்கணும். வேறே வேலையில்லை?’’

‘‘அந்தப் பொண்ணு செஞ்சிருக்கும்னுநீ நம்பறீயா?’’

‘‘எந்தப் பொண்ணு மிஸ்டர் கணேஷ்?’’ என்று கணேஷின் காதருகில் மிகச் சமீபத்தில் கேட்கத் தூக்கி வாரிப்போட்டது. லீனா நடுநிசி நிறத்தில் அங்கங்கே ஜரிகை போட்ட ஸாரி அணிந்திருந்தாள். சின்னப்பொட்டு.

‘‘ஹலோ லீனா! நீங்களா?’’ என்றான் வசந்த். ‘‘என்ன விரலில்?’’ மார்பின் குறுக்கே ஸாரியின் ஸன்னம்.

‘‘வெட்டிக்கிட்டேன்! பென்சில் சீவுற போது. பேண்ட்எய்ட் இருக்குமா?’

அவள் நீட்டிய விரலிலிருந்து ஒரு ரத்த முத்து புதிதாக பிறந்து வழிந்து இன்னும் கொஞ்சம் ரத்தம் சேரக் காத்திருந்து ‘‘சொட்’ என்று தரையில் விழுந்தது.

tamilpdffree.wordpress.com

“ச்ச்ச்” வசந்த் தன் கைக்குட்டையை எடுத்து அவள் விரலில் சுற்றினான். அடங்காமல் கைக்குட்டையும் நிறம் மாற ‘இறுக்கக் கட்டு” என்றான் கணேஷ்.

அதற்குள் ஒன்று இரண்டு மூன்று என்று பல சொட்டுக்கள் சிந்தி விட லீனா அது தன்னுடல் எதுவும் சம்பந்தப்படாத விஷயம் போலப் பார்த்துக் கொண்டிருந்தாள். வசந்த் கைக்குட்டையை இறுக்கக் கட்ட படுக்கையில் உட்கார்ந்தாள்.

“ரத்தம் என்ன அழகான நிறம் பார்த்தீங்களா? சிவப்பு கூட இல்லை; சிவப்புல கொஞ்சம் கறுப்பு. லேசா நீலம் கலந்து...

வசந்த் கட்டுவதை முடித்து “தேர்! சரியாய் போயிடும்,” என்றான். அவள் கீழே சிந்தியிருந்த ரத்தச் சொட்டை தன் இடது கை விரலால் தொட்டு வசந்த்தின் மேல் சுண்ட அவன் சட்டையில் சின்ன ஊசிகள் பட்டன. “சாப்ட்டாச்சா” என்றாள்.

“சாப்ட்டாச்சு.”

“நான் கூட சாப்டாச்சு!” என்று அவர்களைக் கடந்து பால்கனிப் பக்கம் சென்றாள் “குட் நைட்! நல்லாத் தூங்குங்க” என்று அறைக்கு வெளியே சென்றாள்.

வசந்த் தன் சட்டையைப் பார்த்துக்கொண்டு “சே!” என்றான் “விளையாட்டுப் புத்தி! நல்ல ஷர்ட் கெட்டுப் போச்சு!’

கணேஷ் கீழே சிந்தியிருந்த அந்தத் துளிகளைப் பார்த்து கொண்டே “இந்தப் பெண் பேசற, செய்யற விஷயங்களில் இருந்து என்ன தெரியுது உனக்கு?”

“ஒண்ணு பாசாங்கு செய்யறது. இல்லை, இது அரைக்கிராக்கு!’

“எனக்கு இந்தப் பெண்ணைப்பற்றி ஒரு விதத்தில கவலையா இருக்கு ஏன்னு சொல்லத் தெரியலை.’

கணேஷ் அறை வாசலுக்கு வந்தான்.

அவர்கள் அறை முதல் மாடியில் இருந்தது. அங்கிருந்து திறந்திருந்த கதவு வழியாக இரண்டாவது மாடிக்குச் செல்லும் மரப்படிகள் தெரிந்தன. மரப்படியின் முடிவில் மாடி அறையும் தெரிந்தது. சட்டென்று அந்த அறை விளக்கு எரிந்தது. மாடியில் யார் இருக்கிறார்கள்? இந்தப் பெண்தான் அங்கே சென்றிருக்க வேண்டும்.

மாடியில் பேச்சுக் குரல் கேட்டது.

“வசந்த்!” என்று கூப்பிட்டான்.

அவன் வந்து “என்ன?” என்றான். “ஷ்!. கேளு!”

பேச்சுக் குரல் மட்டும் இல்லை. குரல்கள், நாற்பது பேர்கள் இருக்கிறார்களா என்ன? மகாநாட்டில் இடைவேளை விட்டாற்போல பலபல, கசகசவென்று மெலிதான அடித்தளத்தில் கேட்டன குரல்கள்.

“பார்ட்டி நடக்கிறாப்போல இருக்கிறது!” என்றான் வசந்த்.

“ஒரே ஒரு விளக்கிலா! வெளிச்சம் இல்லையே?’

tamilpdffree.wordpress.com

“கேன்டில் லைட் பார்ட்டியா?”

“வா பார்க்கலாம்!”

“நீங்க முன்னாடி போங்க. நான் பின்னால வர்றேன்!”

கணேஷ் மெதுவாக மாடிப்படிகளில் ஏறிச் செல்ல அவன் பின் வசந்த் தயங்கி வர. பேச்சுக் குரல் அருகே அருகே கேட்டாலும் என்ன பேசுகிறார்கள் என்று தெளிவாக தெரியவில்லை. எத்தனை பேர் பேசுகிறார்கள் என்பதும் தெரியாமல் பொதுவாக ஒரு கசமுச கதவு சற்றுத் திறந்து சட்டென்று உள்ளே நுழைந்து “ஹலோ நான்...” என்று ஆரம்பித்தவன் திடுக்கிட்டு நின்றான்.

அறையில் ஒருவரும் இல்லை. காலி!

மௌனம். அந்தப் பேச்சுக் குரல் சட்டென்று நின்று போயிருந்தது.

வசத்தும் ஆச்சரியத்தில் நின்றுவிட்டான். தட்டுமுட்டுச் சாமான்கள் அங்குமிங்கும் சிதறியிருக்க, சமீபத்தில் எவரும் இங்கு வந்திருந்ததாகத் தெரியவில்லை. எங்கும் தூசி! எப்பொழுதோ மகத்தான அறையாக இருந்திருக்க வேண்டும். சுவரில் பெரிய படங்கள் மாட்டியிருக்க நிலைக்கண்ணாடியில் ரசம் போன கணேஷ்!

“வாங்க பாஸ் போயிறலாம்!’

“பேச்சுக் குரல் கேட்டுதில்ல வசந்த்?”

“ஆமாம்!”

“எங்க அவுங்கள்ளாம்?”

“போயிறலாம் வாங்க! ரூமுக்குப் போய் யோசிக்கலாம்”

“இரு வசந்த்!’ கணேஷ் மெதுவாக அந்த அறையில் நடந்தான். ஒரு பல்பு இருபத்தைந்து வாட் சோகையுடன் எரிந்து கொண்டிருக்க “ம்**ஹூ**ம்! சான்ஸே இல்லை. இங்க ஒருத்தரும் வந்திருக்க முடியாது.”

“பின்ன அந்த சப்தம்? டெண்டு கொட்டகையா?”

“இல்லை வசந்த். வேற ஏதோ!”

“வேற ஏதோன்னா?”

எனக்கு சொல்லத் தெரியலை!’

‘என்ன இது! திடீர்னு இருட்டு?” என்று பதைத்தான் வசந்த்.

சட்டென்று அறையில் இருந்த பல்பு அணைந்தது. மெலிதாக மிக மெலிதாக மிக மிக தூரத்தில் மத்யானம் கேட்ட அந்த சிரிப்பொலி மறுபடி கேட்டது.

“என்னடாது எழவாப் போச்சு?”

tamilpdfree.wordpress.com

கணேஷ், ‘‘வசந்த்! வா போகலாம். இனிமே இந்த அறையில் இருக்க வேண்டாம். ஒண்ணுமேப் புரியல! வா போயிறலாம்.’’

குத்துமதிப்பாகக் கதவு இருந்த பக்கம் நடந்து முட்டிமோதிக் கொண்டு மாடிப்படியிறங்கி முதல் மாடியில் அவர்களுடைய அறைக்கு ஓடியே வந்துவிட்டார்கள்.

வசந்த் கதவை இறுக்கிச் சாத்தினான். ஜன்னல்களை மூடிக் கொக்கி போட்டான்.

‘‘அப்பா! நமக்குத் தாங்காது பாஸ்! அதிகாலையிலே கிளம்பிப் போயிறலாம். இப்பவே கூட...’’

‘‘இரு! யோசி! வசந்த், இவ்வளவு சீக்கிரத்தில் விட்டுர்றதா?’

‘‘பாஸ், இந்த வீட்டில் ஏதோ தப்பா இருக்குது. இந்த இடத்தை விட்டுப் போயிடறதுதான் உத்தமம்னு எனக்குப் படுது. நாற்பது பேர் பெரிசா பார்ட்டி நடத்தறாங்கன்னு மேலே போனா ஒரு ஈ இல்லை? என்னது இது? எப்படி சாத்தியம்?’’

‘‘இரு வசந்த்! லெட் மி திங்க்!’’

கணேஷ் கட்டிலில் உட்கார்ந்து மண்டையைப் பிடித்துக் கொண்டு யோசித்தான்.

வசந்த் மௌனமாக உலவினான். ‘‘நானும் எத்தனையோ பேய் பிசாசெல்லாம் பத்திப் படிச்சிருக்கேன்! பார்த்ததில்லை. நிச்சயம் இந்த வீட்டில ஏதோ ஜின்க்ஸ் இருக்குது. சாயங்காலம் குமார வியாசன் சொன்ன போதே அவர் கொஞ்சம் நக்கலா அலட்சியமா சிரிச்சுகிட்டே சொன்ன மாதிரி எனக்கு தோணிச்சு. அந்த ஆளையே சரியா கவனிச்சீங்களா பாஸ்! எனக்கு என்னவோ அந்த ஆளுக்குக் கால் தரையிலே பாவலைன்னு சந்தேகம்’’

‘‘ஸில்லி! எனக்கு அந்த ஆசாமிதான் ஒருவிதத்தில் எல்லாத்துக்கும் காரணம்னு சந்தேகம் வர்றது’’

‘‘என்ன உளர்றீங்க! மாடியிலே நாற்பது பேர்பேச்சுக் குரல் கேட்குது. பட்டுனு திடீர்னு விளக்கு அணையறது...தூரத்தில் சிரிக்கிற மாதிரி சப்தம் கேட்குது...!’’

‘இதெல்லாம் அமானுஷ்யமான பேய் பிசாசு விவகாரம்னு சொல்றியா?’’

‘‘பின்ன?’’

‘‘யோசிச்சுப் பாரு! இதெல்லாம் சாதாரணமா நவீன விஞ்ஞான சாதனங்களை வெச்சுகிட்டு செய்ய முடியாதா?’

‘‘எதுக்கு? அப்படி நம்மை பயங்காட்டறதில என்ன லாபம் அவருக்கு?’’

‘‘இதெல்லாம் அந்தப் பெண்ணைப் பைத்தியமா அடிக்கிறதுக்கு உத்திகளா இருக்கலாமில்லையா?’’

‘‘அது எதுக்கு?’

‘‘அந்த வில்லைப் பத்தி என்ன சொன்னார்? பிரிக்க முடியாத சொத்துன்னு. ஒரு வேளை இந்தப் பொண்ணு நேர் வாரிசில்லாம கல்யாணம் செய்துக்காம இறந்து போய்ட்டா அந்த சொத்து அவர் குடும்பத்துக்கு வந்து சேருமோ என்னவோ?’’

tamilpdffree.wordpress.com

“உயிலைப் பார்த்தா தெரிஞ்சுடும், ஆனா அப்படி அவருக்கு உசிதமிருந்தா இரண்டு வருஷத்துக்கு முந்தி இந்தப் பொண்ணு யாரையோ கழுத்தை நெரிச்சு கொன்றபோது உடனே காட்டிக் கொடுத்திருக்கலாமே? எதுக்காக மூடிமறைச்சாராம்?

கணேஷ் சிரித்து “அவர் சொன்னதையெல்லாம் நீ நம்பிட்டியா?’

“கிராமத்திலே கூடப் பேசிக்கிறாங்களே!”

“கிராமத்தில வதந்தியை இவரே கிளப்பியிருக்கலாம்”

“ரொம்ப சுற்றி வளைச்சு என்னத்தைச் சாதிக்க விரும்பறார்?”

“படிப்படியா அவளை...ம்**ஹூ**ம்! உதைக்குது. வசந்த், நீ என்ன பண்றே. நேரா அந்த மாடி ரூமுக்குப் போய் மறைச்சு வைச்ச ஏதாவது ஒயர் ஸ்பீக்கர் இருக்கானு பாரு”

“இப்பவா?” என்றான் வசந்த்.

“காலைல பாரு”

“காலைலே நாம ஊருக்குப் போறோம்”

“இல்லை. இன்னும் இரண்டு நாள் இருந்துட்டு இது என்னன்னு தெரிஞ்சுக்காம கிளம்பப் போறதில்லை!”

“பாஸ். சென்னையில ஏகப்பட்ட வேலை இருக்கு?”

“வசந்த், எனக்குள்ளே ஒரு உணர்வு உறுத்தறது. இந்தப் பெண்ணுக்கு ஆபத்து இருக்குன்னு! அம்பது வயசுக்கு சாயம் அடிச்சுக்கிட்டு தொள தொளன்னு காப்பு போட்டுக்கற ஆசாமி...அதான் குமாரவியாசன்...”

“கண்ல கொஞ்சூண்டு மை! கவனிச்சீங்களா?”

“ஒரு மாதிரி ஆசாமிதான்! அதைவிட எனக்கு ஒரு ஆர்வம் ஏற்பட்டிருச்சு. இதுவரைக்கும் எனக்கு இந்த மாதிரி அமானுஷ்யமா நடக்கிற சமாச்சாரங்கள், பேய் பிசாசு இதெல்லாம் நாம கேட்ட அந்த சிரிப்பில் எனக்குள்ளே ஒரு கலக்கம் ஏற்பட்டு முதல் தடவையா தானே பயம்! என்னன்னு தெரிஞ்சுக்கிட்டம்னு விடிஞ்சதும் உடனே அந்த மாடி அறையைப் பார்த்துட்டு வந்துரு. என்ன? குட்நைட். உன் அறைக்குப் போய் படுத்துரு!”

வசந்த், “வேண்டாம் பாஸ். இங்கேயே ஒரு பெட்ஷீட் விரிச்சு தரையில படுத்துங்கறேன்!”

“எனக்கு துணை வேண்டாம் வசந்த்”

“எனக்கு வேணுமே!’

கணேஷ் ஜன்னலுக்கு வெளியே பார்த்தான். தூரத்தில் கருநீல ஈரத்தில் பொய்கையில் பொய் நிலா மிதந்தது. அந்த அரசமரத்தில் பற்பல கிளைகள் தலை விரித்திருந்தன.. விளிம்புகளில் சின்னச் சின்னதாக வெள்ளி தெரிந்தது. டெண்ட் சினிமா இப்போது டூயட் பாடிக் கொண்டிருந்தது.

யாரோ விளையாடுகிறார்கள்! ஆம்! எல்லாம் விளையாட்டுத்தான். எனக்கு எப்பவுமே இதில் நம்பிக்கை கிடையாது விஞ்ஞான ரீதியில் ஏதோ ஒரு காரணம் இருக்க வேண்டும். அந்தச்

tamilpdffree.wordpress.com

சிரிப்புக்கு, மாடியில் கேட்ட அந்தப் பேச்சுக் குரலுக்கு...மனப்பிரமை அல்ல, சத்தியமாக...வசந்தும் கேட்டிருக்கிறான்.

வசந்த் படுக்கையை விரித்தான். "பாஸ், உங்கிட்டே காம்போஸ் இருக்குமா? இல்லை கார்டினால் மாதிரி ஸ்ட்ராங்கா ஏதாவது? தூக்கம் வராது போல இருக்கு! படுக்கையை என் ரூம்ல இருந்து எடுத்துக்கிட்டு வர்றபோது மறுபடி அந்தச் சிரிப்புச் சத்தம் கேட்டுது!"

"சரிதான்!"

"நிச்சயம் அது ஒரு மாதிரி சப்தம் பாஸ்! சில சமயம் வீட்டுக்கு வெளியே இருந்து வர்ற மாதிரியும் இருக்குது. சில சமயம் நம்ம பாக்கெட்டுக்குள்ளே இருந்தே கேக்கற மாதிரி இருக்குது!"

"காலையில பார்த்துறலாம்!"

"ராத்திரி மரம் பக்கம் போற ஐடியாவை விட்டுட்டீங்களா?"

"ஆமாம்."

"பயந்துட்டீங்களா? நீங்க கூடவா?"

"குழம்பிட்டேன். பயம் இல்லை!"

"ஏதோ நான் ஒருத்தன்தான் பயந்துகிட்டேன்னு நினைச்சுட்டிருந்தேன், கூட நீங்களும்..."

"ஏய்! பயம் இல்லைடான்னா! இப்ப எங்கிட்ட பெட் கட்டு, தனியா அந்த மரம் வரைக்கும் நடந்து போறேன்! நூறு ரூபா பெட்டு!"

"வேண்டாம் பாஸ்! காலைல பார்த்துக்கலாம்!"

போனால்தான் என்ன என்று தோன்றியது கணேஷுக்கு. சுத்தமாக இதில் எதுவும் நம்பிக்கையில்லாதவன்...எதற்காக இருட்டுக்குப் பயப்பட வேண்டும்?

"பாஸ்! என்னது?" என்று கலவரத்துடன் வசந்த் கேட்க கணேஷ் தன் பெட்டியிலிருந்து ஒரு ஸ்வெட்டரை எடுத்து அணிந்து கொண்டான். டார்ச் லைட்டை எடுத்துக் கொண்டான். அறையைச் சுற்றிலும் பார்த்துத் தேடி கடைசியில் சுவரில் தொங்கின டென்னிஸ் பாட் ஒன்றை எடுத்துக் கொண்டான்.

"நீ வரியோ வரலையோ நான் போய்ப் பார்க்கப்போறேன்!"

"ஐயய்யோ! என்னது பாஸ்! விபரீதம் வேண்டாம் விஷப்பரீட்சை?"

"சே! நான் போறேன்!"

"என்னை இங்கே தனியா பங்களாவுக்குள்ளே விட்டுட்டுப் போறீங்களே!"

"என் பின்னாடி வா"

"என்னடாது இருதலைக் கொள்ளியாயிடுச்சு! பேசாம மெட்றாஸ்ல இருந்திருக்கலாம்... இன்னேரத்துக்கு ரிடர்ன் ஆப் தி டிராகன் மூணாந்தடவை பார்த்துகிட்டு இருந்திருக்கலாம்... இருங்க இருங்க. நானும் வர்றேன்! என்னால தனியாப் படுக்க

tamilpdffree.wordpress.com

முடியாது. ஏற்கனவே ப்ளட் பிரஷர் இருநூற்றி சொச்சத்துக்கு எகிறியிருக்குது...தாயே! பகவதி! கருமாரி, சம்பகலட்சுமி ஜோதிலட்சுமி! காப்பாத்து...''

இருவரும் மெல்ல நடந்து மறுபடி அந்த அரச மரத்தை நெருங்கினார்கள். நிலா துல்லியமாக இருந்தது. மரத்தின் கிளைகளுக்கு இடையில் விளையாடித் தரையில் புலித்தோல் விரித்திருந்தது. அந்த இருட்டுப் பொந்துகள் சிறிய பெரிய வாய்கள் போலத் தோன்றின கணே**ஷு**க்கு.

அத்தனையும் அவனை 'வா', என்று கூப்பிட்டன.

## 5

"கொஞ்சம் இருங்க."

கணேஷ் நடக்க ஆரம்பிக்க 'கொஞ்சம் இருங்க' என்று குரல் கேட்க திரும்பிப் பார்த்தான். வசந்த் கழுத்தில் மப்ளரைச் சுற்றிக்கொண்டு டார்ச் விளக்கை ஏற்றி. அணைத்துக் கொண்டு மூக்கை உறிஞ்கிக் கொண்டு. ''எதுக்காக இந்த விஷப் பரீட்சை? உங்களைத் தனியாகப் போக விடறதுக்குக் கவலையாக இருக்கு, ஒரு விசுவாசத்துக்குத்தான் நான் வர்றேன்.'' என்றான்.

''நீ வரலைன்னா நான் தனியாகப் போவேன்'' என்றான் கணேஷ்.

''சரிதான் 'உனக்கு பயமா, உனக்கு பயமா'ன்னு இதுவரை நீங்க எட்டு தபா கேட்டாச்சு. இதிலிருந்தே தெரியுதே பயம் உங்களுக்குத்தான்னு!'

''பயம்னா நடுராத்திரியிலே தனியாக் கிளம்புவனா வசந்த்?''

''கிளம்பியாச்சு! பூண்டு இருக்கா? பூண்டு ஒரு பருப்பு பைக்குள்ளே வைச்சுக்கிட்டா மோகினிப்பிசாசு அண்டாதுன்னு ஒரு நாயர் சொன்னான்.''

''அண்டட்டுமே பார்த்துறலாமே!''

இருவரும் தோட்டத்தில் நடந்து செல்ல டார்ச் வெளிச்ச வட்டம் ஒரு விசுவாச நாய் போல் முன்னால் சென்றது.

''பாஸ், ஒண்ணு கவனிச்சீங்களா?''

''என்ன?''

''நாம நடக்கிறமில்ல? நடந்து மூணு நாலு செகண்டுக்கு அப்புறம்தான் காலடி ஓசை கேட்குது!

''கற்பனையைப் பறக்க விடாதே வசந்த்! பேசாம வா''

''பின்னால் வேறு யாராவது வர்றாங்களா பார்த்துருங்களேன்''

''ஏன், நீ பாரேன்!

tamilpdffree.wordpress.com

வசந்த் பார்க்கவில்லை, தயங்கினான். என்னமோ அந்தச் சூழ்நிலையின் அடி நாதத்தில் தப்பு இருந்தது. அரச மரம் இருட்டில் வேறு மாதிரி இருக்க, மெலிதான காற்று இலைகளின் ஊடே விளையாட மரம் சற்றுச் சலித்துக் கொண்டது. ஏதோ ஐந்து 'கொர்க்கி' என்று. அத்தனை பெரிய மரத்துக்கு ஒரு சின்ன மூச்சுப் போல, பிராணன் போல, உயிர்பபுப் போல காற்று சஞ்சலித்தது. இலைகளும் நிலாவும் தரையில் எழுதியிருந்த கோலங்களில் சில வடிவங்கள் கணேஷைப் படுத்தின.

''சே! நினைப்பதை நிறுத்து...''

வசந்த்தின் டார்ச் சற்று மக்கர் செய்ய, அதை அடித்து அடித்துத் திருகினான். அணைந்தே போயிற்று. இருப்பினும் அதிக இருட்டில்லை. எதிரே மேடு பள்ளங்கள் தூரத்து வானம் வரை நிலவின் நனைந்திருதன.

''பேசாம ரூம்ல போய்ப் படுத்திருக்கலாம்.''

''ஷ்! கவனி!''

இருவரும் காதைத் தீட்ட அந்த மௌனத்தின் மௌனத்தில் சற்றே உயிர்க்கும் சலனங்களில் எங்கே ஒரு தவளைக் குரல், பிறிதோரிடத்தில் ஆந்தைக் குரல் என்று பொதுவான ராத்திரி சப்தங்கள் அத்தனையும் ரத்து செய்துவிட்ட ஒரு சின்ன மௌனக்கிணற்றின் உள்ளேயிருந்து மறுபடி அந்தச் சிரிப்பொலி கேட்டது.

டெண்ட் சினிமா எப்போதோ முடிந்து விட்டிருக்க வேண்டும். இது வேறுவிதமான சப்தம். ஆண் சிரிப்பு. பழக்கமில்லாத அமானுஷ்யமான சிரிப்பு. ஓரத்தில், 'அடேய் பைத்தியங்களா! முட்டாள்களா!' என்று கொஞ்சம் ஏளனத்தைத் தொட்டுக் கொண்டச் சிரிப்பு. எங்கிருந்து வருகிறது? தூரத்துப் பாறைக் குன்றின் பின்னாலிருந்தா அல்லது கணேஷின் காதுக்குள்ளேயாவா?

சிரிப்பு முடிந்ததும் குரல்கள்.

''வாங்க.'' என்று வயதான குரல். சன்னமான குரல்.

''யாரை? என்னையா?'' என்றான் வசந்த் தீனமாக.

''ஐயா வாங்க!''

''எங்க வர்றது...?' என்று நடுங்கினான் வசந்த்.

அதற்குப் பதில் சொல்வது போலில்லாமல் வேறு எங்கே நிகழும் உரையாடலின் பகுதி தான் இருந்தது . அந்த 'வாங்க!' 'ஐயா, வாங்க' என்பதெல்லாம்.

''உமது தாய் புத்திரவதி. அவள் புத்திரவதியல்ல என்று மறுத்துவிடும், பார்க்கலாம்?''

''யாரு? யார்து! யார் நீ?''

''பாஸ், வாங்க பிச்சுக்கலாம். பிசாசு உளர்றது.''

''இரு வசந்த். என்ன ஆறது பார்க்கலாம்.''

''புத்திரவதி! த்வஜன கோலாகலன்!''

tamilpdffree.wordpress.com

இப்போது மற்றொரு குரல் கேட்டது. பத்துப் பண்னிரண்டு வயசுப் பெண் பிள்ளைக் குரல் போல.

‘‘தாத்தாவும் பேத்தியுமா?’’ என்றான் வசந்த். அந்த விசித்திர சம்பாஷணை இவர்கள் இருப்பதைப் பற்றிச் சற்றும் கவலையே படாமல் தன்னிச்சையாக நிகழ்வது போல தோன்றியது. வார்த்தைகள் தமிழ் வார்த்தைகளாயிருப்பினும் எதைப்பற்றி யார் எங்கே பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பது குழப்பமாக இருந்தது.

‘‘காலில்லாத முடவன் கடலைத் தாண்டுவானோ? மண் பூனையும் எலியை பிடிக்குமோ?’’

‘‘எந்தப் பூனை எந்த எலியைப் பிடிச்சாலும் இனிமேல் தாங்காது . வாங்க போயிறலாம்!’’

கணேஷ் பதட்டத்துடன். “அங்கே பார்றா டேய்” என்றான். அந்தக் காட்சி இரண்டு பேரையும் நிச்சயம் ஸ்தம்பித்து ரிவெட் அடித்தது போல் நிறுத்திவிட்டது. அவர்கள் நின்று கொண்டிருந்தது அரச மரத்துக்குச் சற்றுத் தூரத்தில். மரத்தின் மடியில் இருந்த மண்டபம் இருட்டில் இருந்ததால் அதன் வெளிவடிவங்கள் தெரிந்தன. மண்டபத்தின் வயிற்றில் இருந்த வெல்வெட் இருட்டு, பந்தில் வெளிச்சம் ஏற்பட்டது போல் தெரிய சாம்பல் நிறத்தில் ஒரு மெலிய வடிவம் பிசிறாகத் தெரிந்தது. அதன் ஒளி கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்க அது என்ன என்பது சற்று நேரத்தில் புரிந்தது. ஒரு பெண். முகம் உடம்பு உடை எல்லாம் சாம்பல் கரிய நீல உதடுகள். புடவை அணிந்து இடுப்பில் கொடி போல் ஏதோ சுற்றியிருந்தாள். மூக்கில் அணிந்திருந்த பெரிய நகை நெற்றிப் பொட்டு எல்லாமே சாம்பல் நிறத்தின் பலவித வேறுபாடுகளில்தான் இருந்தன. மண்டபத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு மௌனமாக அவள் குலுங்கி குலுங்கி அழுதாள்.

வசந்த், கணே**ஷு**டன் ஒட்டிக் கொண்டான். கணே**ஷு**க்கு ஒன்றும் புரியவில்லை. தான் பார்க்கிறது கனவா என்ற சந்தேகத்தில் கிள்ளிப் பார்த்துக் கொண்டான். வலிக்கவில்லை.

‘‘ஆ! கிள்றது கிள்றது! என்றான் வசந்த். ‘‘ஏய் நான்தாண்டா கிள்ளினேன்,’’ என்றான் கணேஷ். இந்த சப்தங்கள் எல்லாம் அந்த ‘அதற்கு’ கேட்டதாகத் தெரியவில்லை. சற்று நேரம் அழுதுவிட்டு எழுந்தது. அவர்களை நோக்கி நடந்தது.

கணேஷ் பின் வாங்கினான். ‘‘பா ஆ ஆ ஆ ஸ்! நம்மை நோக்கி வர்றது. ரத்தம் செத்துக் கிடக்குது. நம்மை உறிஞ்சறதுக்குத்தான் வர்றது...ஓ ஓ ஓ ஓடலாம்!’’ ஓடலாம் என்று தீர்மானித்து விட்டாலும் ஓட முடியாமல் அந்தக் காட்சியில் ஒரு வசீகரமும் இருந்தது. அது அவர்கள் அருகே வர வர அந்தப் பெண்ணின் முகம் சற்றுத் தெளிவானது போல் இருந்தது.

‘‘பார்த்த மூஞ்சி! ’’ என்றான் வசந்த்.

‘‘லீனா!’

அந்தப் பெண் லீனாவைப் போல்தான் இருந்தாள். இப்போது அவர்களை நேருக்கு நேராகப் பார்த்து கொண்டிருந்தாள். அவள் வாய் மட்டும் அப் அப் அப் என்று அசைய...ஏதோ சொல்ல விரும்பினாள்.

கண்களில் சாம்பல் நிறக் கண்ணீர்!

அந்தப் பெண் மெல்ல உயர்ந்தாள். தரைமட்டத்திலிருந்து மெதுவாக எழ ஆரம்பித்தாள். உயர்ந்து மிதந்து அந்த மரத்தின் கிளைகளின் ஊடே தெரியும் நிலா வெளிச்சத்துடன் சேர்ந்து கொள்வதற்கு முன்.

tamilpdfree.wordpress.com

‘‘உய்ய்ய்ய்...’’ என்று ஆயிரம் ஸ்லேட்டுகளில் ஆயிரம் ஆணிகள் கிழிப்பதுபோல அலறல்.

அரச மரத்தில் ராத்திரி உறங்க வந்திருந்த அத்தனை பறவைகளும் ஒரே சமயத்தில் ஆயிரம் பயக்குரல்கள் கீச்சுக் கீச்சென்று ரகளை ஒலியால் எழுப்பி அத்தனையும் ஒரே சமயம் சிறகடித்துப் பறக்க–

கணேஷும் வசந்தும் பங்களாவை நோக்கி ஓடினார்கள்.

‘‘குட்மார்னிங்!’’ இனிமையான குரல் எழுப்ப கணேஷ் எழுந்தான். தன் கைக்கடியாரத்தைப் பார்த்தான் 7.30. நிமிர்ந்தான். லீனா, புன்னகையுடன் புதுசாகக் குளித்து விட்டு வாசனையாக, கையில் ட்ரேயில் காப்பிக் கோப்பைகள் ஜாடி.

‘‘என்ன! இவ்வளவு நேரம் தூங்கிட்டீங்க,’’ அந்த வட்ட முகம் நேற்றுப் பார்த்த இரவில் பார்த்த அதே முகம்தான் மை காட்! எப்படி சாத்தியம் இது.

‘‘ராத்திரி ரொம்ப நேரம் கண் முழிச்சிட்டிருந்தேன் லேட்டாத்தான் தூங்கப்போனேன்!’’

‘‘படிச்சீங்களா?’’

‘‘இல்லை.’’

‘‘இந்தாங்க காப்பி.’’ அவள் அருகில் வர... இவள்தான். ஆனால் அந்த வடிவம் சற்று உயரக்குறைவாக இருந்ததோ?

‘‘என்னது! வசந்த் தரைல படுத்திருக்காரு! வசந்த்! வசந்த்! எழுந்திருங்க!’’ என்று லீனா அவனைக் குலுக்கினாள்.

திடுக்கிட்டு எழுந்தவன், ‘‘ஆ! என்னை வுட்டுறு என்னை வுட்டுறு.’’ என்று லீனாவைச் சேவித்தான்.

‘‘ஓ‘‘ அவள் சிரித்தாள்.

‘‘வசந்த் முழிச்சிக்கடா!’’

வசந்த் எழுந்து சுதாரித்து அசடு வழிய. ‘‘நீயா’’ என்றான்.‘‘

“கெட்ட கனா ஏதாவது கண்டீங்களா?’’

‘‘லீனா, நீ நேத்து ராத்திரி எங்க படுத்திருந்தே?’’

‘‘என் ரூம்லதான். ஏன்?’’

‘‘அதெல்லாம் அப்புறம் விசாரிக்கலாம்’’ என்றான் கணேஷ். ‘‘நீ எழுந்து முகம் கழுவிக்க முதல்லே’’

‘‘என்ன வசந்த்! என்னை ஒரு மாதிரியா பார்க்கறீங்க?’’

‘‘உனக்கு ரெட்டை யாராவது இருக்காங்களா? இருந்தாங்களா?’’

‘‘புரியலை.’’

tamilpdffree.wordpress.com

''ட்வின்! ரெட்டை சகோதரி!''

''கிடையாது. நான் அப்பாவுக்கு ஒரே பெண். நோ பிரதர், சிஸ்டர். அதான் எனக்கே சொத்துப் பூரா வந்திருச்சு!''

''பின்ன எப்படி...''

''என்ன எப்படி?''

அவர்கள் இருவரும் பார்த்துக் கொண்டது புரியாமல் லீனா, ''சித்தப்பா உங்களைப் பார்க்கணுமின்னார், ஊருக்குப் போறாரில்லை?''

''நீ போ லீனா. நாங்க வர்ரோம்.''

''பை கணேஷ், பை வசந்த்! பாட்ல காப்பி இருக்குது. சீக்கிரமாகச் சாப்பிடுங்க, ஆறிப்போயிடும்!''

''லீனா!'' என்றான் வசந்த்.

''என்ன?'' என்று திரும்பினாள்.

''புத்திரவதி! வித்வ ஜனகோலாகலன்!''

அவள் வியப்பில், ''என்ன சொல்றீங்க!'' என்றாள்.

''ஒண்ணுமில்லே நீ போம்மா, '' என்றான் கணேஷ்.

வசந்த் மெல்ல சிகரெட் பற்ற வைத்தான். ''காப்பியைத் திறந்து பாருங்க. ரத்தமா இருக்கப் போறது!'' கணேஷ் எழுந்து ஜன்னலுக்கு வெளியே பார்த்தான். அரச மரம் அங்கேதான் இருந்தது. சூரிய வெளிச்சத்தில் பளீர் என்று, நேற்று ராத்திரியின் அத்தனை ரகசியங்களும் இறந்து போய், வானத்தின் அபார கோபால்ட் நீலப் பின்னணியில். ''பிசாசாவது ஒன்றாவது! எல்லாம் நான்சென்ஸ்.'' என்றது காலை.

''வசந்த். இங்கே வா! உட்கார். நேத்திக்கி நீ என்ன பார்த்தே சொல்லு''

''நீங்களும்தானே பாஸ் பார்த்தீங்க!''

''எதுக்கும் ஒப்பிட்டுப் பார்த்துறலாம். நேத்திக்குப் பார்த்ததுமே அதை நீ என்னன்னு வர்ணிப்பே?''

''ஒரே ஒரு கச்சிதமான வார்த்தை. பிசாசு!'

''அப்படின்னா பிசாசுகளில் நம்பிக்கை இருக்கா உனக்கு?''

''முன்பு இல்லை. இப்ப இருக்கு. உங்களுக்கு?''

''தற்காலிகமா! வேறு இதுக்கு அறிவு பூர்வமா காரணம் ஏதும் தெரியறவரைக்கும்! வசந்த். அந்தப் பெண் எப்படி லீனா மாதிரி இருக்க முடியும்? முதல் ஆச்சரியம், எப்படி அதிசயமாக புகை மாதிரி மேலே ஏறி மறைய முடியம்? இரண்டாவது ஆச்சரியம்.''

''பாஸ் ஒண்ணு கவனிச்சீங்களா? கொஞ்சம் சின்னதா இருந்தது அது!''

tamilpdfree.wordpress.com

“ஆமாம், மனித சைஸில இல்லை!”

“குட்டிச் சாத்தானா? ஆனா ‘கிக்கிப் பிக்கின்னு’ சிரிக்கலையே! பேச்சே வரலையே!”

“ஆனா அந்தச் சத்தம்!”

“சுத்தமாப் பாண்ட்லயே ஒண்ணுக்குப் போய்ட்டேன்!”

“புரியலை வசந்த்! ஒரு கன் கிடைக்குமா? துப்பாக்கி?”

“இந்தக் கிராமத்திலயா? எதுக்கு?”

“குமார வியாசன்கிட்டே இருக்கான்னு கேக்கலாம் அதை இன்னி ராத்திரி சுட்டுப் பார்க்கணும்!”

“கம் அகெய்ன்? இன்னி ராத்திரியா? இன்னி ராத்திரியும் போறதா உத்தேசமா? பாஸ், ஹேவ் எ ஹார்ட் ஏற்கெனவே தளர்ந்து போயிருக்கேன். முழங்காலுக்குக் கீழ் பஞ்சு! பட்டப் பகல்லேயே பயமாயிடுச்சு...பாத்ரூம் போகணும் துணைக்கு வர்றீங்களா?”

“அது என்னன்னு தெரியற வரைக்கும் நான் இந்த வீட்டை விட்டுப் போகப் போறதில்லை!”

“நான் போகப் போறேன்! எனக்கு ஒண்ணும் அதுங்கிட்டே ஆட்டோகிராஃப் வேண்டாம். ஏன் பாஸ் பேய் பிசாசெல்லாம் புளிய மரத்திலதானே ஒட்டிக்கிட்டிருக்கும் இது எப்படி அரச மரத்திலே?”

“அது என்ன வசந்த்?”

“கிராமத்திலே சொன்னாங்களே! அதுக்கு என்ன வருத்தமோ குறையோ? அல்பாயுசா பிராணனை விட்ட கேஸோ? ஆமா...எப்படி அது லீனா மாதிரி இருக்க முடியும்? அதான் உதைக்குது! உடைகளைப் பார்த்தீங்க இல்லை? 1937 மாதிரி இருந்ததில்லை! எது எப்படியோ, நான் அம்பேல், அதான் ஒரு தடவை பார்த்தாச்சே! திருப்பித் திருப்பி என்ன?...வாங்க சார்! இனிமே வர்றப்போ கொஞ்சம் சத்தம் பண்ணிக்கிட்டு வாங்க! என்னவோ ஏதோன்னு பயந்துக்குறம்.”

குமாரவியாசன்!

“என்ன ஆச்சு மிஸ்டர் கணேஷ்!

“விவரமாச் சொல்றேன்!’

குமாரவியாசன் குளித்திருந்தார். மெலிதாக அவர் நெற்றியில் திருநீறு தெரிந்தது. காதருகில் ஒரு பூவும் தென்பட்டது. சமீபத்தில் பூஜை செய்தவர் போலும்.

“கணேஷ், உங்களை என் ரூமுக்கு கூட்டிப் போகத்தான் வந்தேன்... ப்ராப்பர்ட்டியை ஹாண்ட் ஓவர் பண்றதுக்கு உண்டான எல்லாக் காகிதங்களையும் தயார் செய்து வைச்சிருக்கேன். ஒரு முறை...”

வசந்த், “சார்! குமார்! நீங்க சொன்ன மாதிரி இந்த வீட்டைச் சுற்றி ஏதோ இருக்குதுங்க. அதுவும் அரச மரத்தடியிலே!”

“என்ன ஆச்சு மிஸ்டர் கணேஷ்?” என்றார்.

tamilpdffree.wordpress.com

கணேஷ் அவரை கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தான்.

“நேற்று ராத்திரி மரத்தடியிலே ஒரு விதமான அப்பாரிஷன் மாதிரி தெரிஞ்சுது!”

“அந்த சப்தம் கேட்டுதோ உங்களுக்கு?”

“இல்லையே! என்ன மாதிரி அப்பாரீஷன்!”

“ஒரு பெண்!”

“லீனா மாதிரி இருந்தது!”

“புகை வடிவம்!”

“சரிதான் மறுபடி! வந்தாச்சா?”

“யாரு?”

“அவதான்!”

“அவதான்னா யாரு?”

“நிஜமா பாத்திங்களா?”

“ஆமாம் பார்த்தேன்!”

“அப்ப கிராமத்திலே சொன்னதெல்லாம் நிஜமா?”

“அப்படித்தான் தோணுது!”

“லீனா எங்கே? லீனாவைக் கூப்பிடுங்க! லீனாவை உடனே இந்த வீட்டைவிட்டு அப்புறப்படுத்தணும். லீனா லீனா!”

“ஏன்? ஏன்?” என்று வசந்த் உறக்குறைய கீச்சுக்குரலில் கேட்க–

குமாரவியாசன் “அது லீனாவை தேடிகிட்டு வந்திருக்கு” என்றார்.

tamilpdffree.wordpress.com

## 6

குமாரவியாசனின் குரலிலும் தோற்றத்திலும் கலப்படமில்லாத பீதி இருந்தது. வேலைக்காரனை விளித்து, “சின்னம்மா எங்கய்யா?’ என்றார்.

“உங்க ரூம் பக்கம்தான் போச்சுங்க”.

“கணேஷ்! என் ரூமுக்கு வர்றீங்களா? டிரான்ஸ்ஃபர் டாக்குமெண்ட்ஸ்ஸையும் பார்த்துறலாம். இந்தப் பொண்ணைப்பத்திக் கவலையா இருக்குது. அந்தப் பிசாசு உங்களுக்கு வரலை. லீனாவுக்கு!”

"உங்க ரூம் எங்கே இருக்குது மாடியா!" என்றான் கணேஷ்.

"இல்லை, வீட்டுக்கு வெளியே அவுட் அவுஸில்!"

"ஏன்?"

"அது வந்து... இந்த வீட்டில ராத்திரி தங்க எனக்கு..."

"புரியுது. அதுக்கு முன்னாடி மாடியில கொஞ்சம் பார்க்கணும்."

"மாடியிலா! அங்க ஒண்ணும் கிடையாதே"

"அதில யாரு இருக்காங்க?"

"ஒருத்தரும் கிடையாதே. ஏன்?"

வசந்த், "நேத்திக்கு அதில் நாற்பது பேர் இருந்தாங்க! ராத்திரி ஒரே கும்மாளம்!"

"உளறாதீங்க!"

"அத பாருங்க! நான் அப்ப உளறினேன்...பேச்சுச் சத்தத்தைக் கேட்டுட்டு. இப்ப உளறலை! இந்த வீட்டில், ஏதோ ஒரு ஜீனி வேலை இருக்குது. கொஞ்சம் காலைத் தரையில தேயுங்க! உங்களுக்கே பாவறதான்னு பார்க்கணும்."

"மாடி அறை பூட்டின்னா இருக்குது?"

"சாவி?" என்றான் கணேஷ்.

"சாவி ஆபீஸ் ரூம்ல கீ போர்ட்டில கொத்தில இருக்கு. எடுத்து ரொம்ப நாளாச்சு. வேணுமா?"

"என்ன சொல்றிங்க! நேத்து ரூம் திறந்து கிடந்தது?"

"இருக்க முடியாது"

"என்ன பாஸ் இது, பிசாசு காத்ரெஜ் கம்பெனியில் இருந்து வர்றதா?"

"மிஸ்டர் வியாசன்! கொஞ்சம் அந்தச் சாவியை எடுத்துட்டு வர்றிங்களா?"

"இதோ தருவிக்கிறேன். பெரிய கண்ணு, ஆபீஸ் ரூம்ல போயி ஒன்பதாம் நம்பர் சாவி அய்யர் கிட்ட கேட்டு வாங்கி வா!"

"உத்தரவுங்க!"

கணேஷ் மெதுவாக மாடிப்படி ஏறினான், நேற்று ராத்திரிப் படிகள்தான் இப்போது நிலா வெளிச்சத்தில் சற்றுக் கூட அச்சப்படுத்தாத படிகள். ட்ரெல்லிஸ் அமைத்த ஜன்னலுக்கு வெளியே பட்டை பட்டையாக நீலவானம் தெரிந்தது. மூவரும் அறைவாசலுக்கு வந்தார்கள். பூட்டித்தான் இருந்தது. புழுதி படித்த சற்றே துருவடைந்த பூட்டு, கணேஷ் அதைத் தொட்டுப் பார்த்தான். இந்த அறைதானா?...சாவிக் கொத்து கொண்டு வரப்பட்டது. அதில் குமார வியாசன் ஒவ்வொன்றாக முயன்று தேடி ஒன்றே ஒன்று பற்றிக் கொள்ள அறை திறக்கப்பட்டது. அறை ஏறக்குறைய காலியாக இருந்தது. எங்கே அந்தக் தட்டு

tamilpdffree.wordpress.com

முட்டுச் சாமான்கள்? சுவரில் படங்கள் எங்கே? அத்தனை பெரிய பெரிய படங்களைப் பார்த்தேனே நேற்று. ரசம் போன கண்ணாடி எங்கே?

''வேற ரூமிருக்கா?' என்றான் வசந்த், ''பாஸ் நாம நேற்று வந்தது இங்கே இல்லை''

''இரண்டாவது மாடியில அறை இது ஒண்ணுதான். இப்படியே போனா பால்கனி வரது...' என்றார் குமாரவியாசன்.

அறைக்கு வெளிய வந்தார்கள். அதே மாடிப்படிதான். சந்தேகமில்லை. எப்படி அத்தனை கண்டா முண்டா சாமான்களை ஓவர் நைட் காலி பண்ண முடியும்? முடிந்தாலும் எதற்கு காலி பண்ண வேண்டும்? மற்றொரு கேள்விக்குறி.

''லீனாவைப்பத்தித்தான் கவலையா இருக்கு. தோட்டத்துக்குப் போனாளோ கிராமத்துக்குப் போனாளோ.''

''சின்னம்மா ஆபீஸ்ல இருங்குதுங்க'' என்றான் பெரிய கண்ணன். ''வாங்க போயிறலாம். திடீர்னு அந்தப் பொண்ணு வில்லெஜ் பக்கம் போயிருவா!' என்றார் வியாசன். இரண்டு மாடிகளையும் கணேஷ் யோசனையுடன் இறங்கினான். வீட்டுக்கு வெளியே வந்தார்கள். நடுவில் சாலையில் நின்று வீட்டைத் திரும்பிப் பார்த்தான், கணேஷ், ''இந்த வீடு புதுசா பழசா?''

''பழைய வீடுதான். முகப்புல கொஞ்சம் இடிச்சுப் புதுசு பண்ணிக் கட்டியிருக்கோம்''

''கையைச் சொடுக்கினா எப்பவாவது காணாம போயிருக்கா?'' என்று கேட்டான் வசந்த்.

''என்னது?'

''இந்த வீடுதான்.''

''நீங்க சொல்றது புரியலை''

''புரியலைன்னா மறங்க!'

அவுட் ஹவுஸ் தனியாக இருந்தது. வாசலில் படத்தில் பூசணிக்காய் நாமம் போட்டு மீசை போட்டு நாக்கை நீட்டியது. கயிற்றுப் பாய் விரித்த வராண்டா. மூங்கில் நாற்காலிகள். குமாரவியாசன், எம்.டெக்., என்று போர்டு.

அறைக்குள் நுழைந்ததும் சுவரெல்லாம் முருகன் படங்கள். பழைய பழனியிலிருந்து துவங்கி கீழ் மின்னல் பாலமுருகன் வரை அத்தனை முருகர்களும். சீரடி சாயிபாபாவின் நானிருக்க பயமேன், 'ஓம்' என்று போட்டு ஒரு தாமிரத் தகட்டில் நட்சத்திரம் அறைந்து பிரேம் போட்டு மாட்டியிருந்தது ஏர் கண்டிஷனரைச் சுற்றிலும்...

''இது என்ன வேப்பிலை?'' என்றான் வசந்த்.

''இது வந்து ஒரு மாதிரியா அடைப்புங்க!''

''எதுக்கு?'' என்றான் வசந்த்.

''காற்றுக்கு–ஆவிக்கு!'' கணேஷ் சுற்றிலும் பார்த்தான். காஞ்சிபுரம் குமாரவிகடன் காலண்டர். மேஜையின் விசிறி டெலிபோன் எக்ஸ்டன்ஷன் எல்லாவற்றிற்கும் குங்குமம் பொட்டு. அவற்றின் மேல் ஓரங்களில் யூ வடிவ ஆணியடித்துச் சின்ன சின்ன மஞ்சள் துணி

tamilpdffree.wordpress.com

மூட்டைகளில் தானியங்கள். ஓரத்தில் கொசுபத்தி போல் மெலிய புகைச்சல்....குமாரவியாசனும் பயந்து தனி அறையில் சகலத் தடுப்புச் சாதனங்களுடன் வாழ்கிறார் என்பது தெரிந்தது.

லீனா புத்தக அலமாரியின் அருகில் ஸ்டூல் போட்டு மேல் தட்டில் புத்தகங்களுக்குப் பின்னாலிருந்து எதையோ மிக மிக ஜாக்கிரதையாக கண்ணாடி போல் வெளியே எடுத்தாள். துணியால் அதை மூடி மறைத்து மெதுவாக வசந்த் அருகில் வந்தாள்.

என்னது

என்னது

“என்னது?” என்றான் வசந்த் நடுக்கத்துடன்.

குபுக்கென்று ஓர் அணில் பாய்ந்து ஓடியது.

“ஏம்மா குழந்தை, ஏற்கனவே என் நரம்புகள் எல்லாம் சிட்டிபாபு மூணு மணி நேரம் வாசிச்சு ஓஞ்ச மாதிரி இருக்கு.... இதுவேறயா?

லீனா, “குமரா குமரா” என்று தேடினாள்.

“குமரன் யாரு?”

“அணிலுக்குப் பேரு! என் ஃப்ரெண்டு!”

கணேஷ் மேஜை அடியில் தீவிரமாக அணிலைத் தேடிக்கொண்டிருந்த அந்தப் பெண்ணைப் பார்த்தான். “லீனா, மிஸ்டர் குமாரவியாசன், ரெண்டு பேரும் வர்றீங்களா? கொஞ்சம் நான் சொல்றதைக் கேக்கறீங்களா?”

இருவரும் கணேஷின் அருகில் வர, லீனா, “அதோ அந்த அலமாரிக்குப் பின்னால்தான் போயிருக்கு” என்றாள்.

“இதபாருங்க? நானும் வசந்தும் நேற்று ராத்திரி தோட்டத்தில் ஒரு காட்சியைப் பார்த்தோம். இது என்னன்னு புரியல எங்களுக்கு. அந்தக் காட்சிக்குச் சரியான காரணமோ விளக்கமோ இல்லை. இது பிசாசுன்னு சொன்னா அதை நம்பலாம் போலத்தான் தோணுது. இருந்தாலும் அதைப் பூரணமா நம்பறதுக்கு முந்தி எனக்கு உங்க ரெண்டு பேரையும் கொஞ்சம் கேட்கணும். லீனா, நீ எப்பவாவது தோட்டத்தில் ஒரு பெண்ணைப் பார்த்திருக்கியா? ஒரு பெண் உருவத்தை?”

“இல்லை! எங்கே இந்தக் குமார்!! ச் ச் ச்...”

“நீங்க மிஸ்டர் வியாசன்?”

“பார்த்ததில்லை. ஒரு தடவை கேட்டிருக்கேன்”

“எப்ப!”

“சொன்னேனே! ரெண்டு வருஷம் முந்தி, கிராமத்தில பார்த்திருங்க்காங்க! அன்னிக்கு ராத்திரிதான் அந்த சம்பவம் நடந்தது”

“உங்ககிட்ட துப்பாக்கி இருக்கா?”

tamilpdfree.wordpress.com

‘‘இருக்கு!’’

‘‘அப்புறம் ஒரு காமிரா?’’

‘‘ம் இருக்கு. எதுக்கு.’’

‘‘இன்னி ராத்திரி சுட்டுப் பார்க்கணும் அதை.’’

‘‘பாஸ்! என்றான் வசந்த்.

‘‘இன்னிக்கு ராத்திரி நாம நாலு பேரும் அங்க போகலாம் வரீங்களா?’’

‘‘எங்க!’’ என்றாள் லீனா.

‘‘அரசமரத்துக்கு’’

‘‘லீனா எதுக்கு?’’ என்றார் குமாரவியாசன்.

‘‘லீனா வந்துதான் ஆகவேண்டும். நேத்திக்கு நாங்க பார்த்த அந்தப் பெண்ணுருவம் அசல் லீனா மாதிரியே இருந்தது. இன்னிக்கும் அது வர்றதா பார்க்கலாம். வரும்னுதான் தோணுது. வந்தா முதலில் அது ரூபமா, அரூபமான்னு தெரியணும். அதைத் துப்பாக்கியால் சுட்டுப் பார்க்கப் போறேன். அப்புறம் போட்டோ புடிச்சுப் பார்க்கணும்’’

‘‘என்னை மாதிரியா?’’ என்று இரண்டு கைகளையும் மார்பில் தொட்டுக் கேட்டாள் லீனா.

‘‘ஆமா!’’

‘‘அப்ப நிச்சயம் பார்க்கணும் சித்தப்பா’

‘‘சே! உளறாதே! லீனா, நீ வரக்கூடாது. உனக்குத் தெரியாது!’

‘‘என்ன சொல்றீங்க!’’ என்றான் கணேஷ்.

‘‘அவ வரது எனக்குச் சரியாப் படலை. எனக்கு ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி நடந்ததை நினைச்சு திகீர்ங்கிறது!’’

‘‘அப்ப அவ தனியா இருந்தா. இப்ப கூட மூணுபேர் இருக்கப் போறோம்’’

‘‘ரெண்டு பேர்,’’ என்றான் வசந்த்.

‘‘டோண்ட் பி ஸில்லி வசந்த். நீயும் வரணும்!’’

‘‘நான் பார்த்தாச்சு.’’

‘‘மறுபடி பாரு’’

‘‘எதுக்காக பாஸ் என்னைப் போட்டு இப்படி உபத்திரவப்படுத்தறீங்க?’’

இவர்கள் பேசிக் கொண்டிருக்கையில் லீனா அந்த அணிலைத் தேடும் ஆர்வத்தில்தான் இருந்தாள். அவர்கள் பேசியதைக் கவனிப்பவளாகவே தெரியவில்லை.

‘மிஸ்டர் வியாசர், நீங்க பயப்படாதீங்க, அவளுடைய பத்திரத்துக்கு நான் உத்திரவாதம்!’’

tamilpdffree.wordpress.com

“எனக்கென்னவோ விஷப்பரீட்சையாகத் தெரியறது.. லீனா, நீ வரியம்மா?”

“நிச்சயம். எங்கே?”

“ராத்திரி! அசரமரத்துக்கு”

“சரி! இங்கருக்கிறியா நீ. குமரு!” அணிலை லபக் என்று பிடித்து விட்டாள். தன் கைக் குட்டையை எடுத்து அதை ஒரு சின்னப் பொட்டலமாகக் கட்டினாள்.

“லீனா! ப்ளீஸ். அதை விட்டுரு! கொன்னுடாதே!” என்றார் குமாரவியாசன்.

அவள் போன திக்கைப் பார்த்துக் கொண்டிருந்தவர். “சித்திரவதை பண்ணிடுவா அதை... இடுக்கியை எடுத்து நகத்தை ஒவ்வொண்ணாப் பிடுங்குவா! அப்புறம் கண்ணை...”

“சொல்லாதீங்க! ஏற்கெனவே நான் ஜெல்லி.”

குமாரவியாசன் ஒரு ஃபைலை எடுத்து கணேஷிடம் கொடுத்தது. “இதில் எல்லா டாக்குமெண்ட்**ஸு**ம் இருக்கு. சாவகாசமா பார்த்துக் கொடுத்துடுங்க என்ன?” என்றார்.

“சரி.”

“நான் வரட்டுமா? நீங்க உங்க அறைக்குப் போறீங்களா? பத்து பத்தரைக்குச் சமையலாயிடும்!”

“இந்த வீட்டில மொத்தம் எத்தனை பேர் வேலை பார்க்கிறாங்க?”

“எட்டுப் பேர்.”

“அந்த மாடி ரூம் சாவியை மறுபடி தரீங்களா?”

“தாராளமா!” என்று ஒற்றைச் சாவியைப் பிரித்து எடுத்துக் கொடுத்தார்.

“சரி! நான் வரட்டுமா!”

“பத்தரைக்குச் சந்திக்கலாம்”

கணேஷ் அறைக்குள்ளே யோசித்தவாறு உட்கார்ந்திருக்க வசந்த் அந்தப் பத்திரங்கள், பவர் ஆஃப் அட்டார்னி, எஸ்டேட் ட்யூட்டி காகிதங்கள், இன்கம்டாக்ஸ் சர்ட்டிபிகேட்டுகள். முனிசிபாலிட்டி கடிதங்கள், தஸ்தாவேஜீகள், கலெக்டர் ஆபீஸ் கடிதங்கள் என்று ஒவ்வொன்றாகப் பார்த்தான்.

“பர்ஃபெக்ட் பாஸ்! சொத்து இவளுக்கு வந்து சேர்ந்தே ஆகணும்”

“அப்ப இந்த ஆசாமிக்குச் சொத்து வேண்டாம்.”

“அப்படித்தான் தோணுது!”

“பின் எதுக்காக...

“எதுக்காக என்ன?”

tamilpdffree.wordpress.com

கணேஷ் மௌனமாக யோசித்தான்.

‘‘இல்லை பாஸ் இவர் இல்லை....’’

‘‘லீனாவை ஏன் இன்னிக்கு ராத்திரி வரக்கூடாதுன்னு பிடிவாதமாச் சொன்னார்?’’

‘‘நிஜமாவே இரண்டு வருஷத்துக்கு முந்தி நடந்தது திரும்ப நடந்துறப் போறதோன்னு பயமாக இருக்கலாமே!”

‘‘ரெண்டு வருஷம் முன்னாடி அது நிஜமாவே நடந்தது என்கிற பட்சத்தில்...’

‘‘நீங்க ஏன் ஃபண்டமெண்ட்டலைக் குடாய்றீங்க! உங்களுக்கு வியாசர் மேல சந்தேகமா சொல்லுங்க’’

‘‘ஆமாம்.’’

‘‘அந்த ஆள்தான் வேஷம் கட்டிக்கிட்டு காத்தில ஜிவ்வுனு பறக்கறாரா? ச்! அது எப்படி சாத்தியம். கண்ணால பாத்திங்க இல்லை. நிஜமா ஃபுல்சைஸ் பிசாசை?’’

‘‘எனக்கு மறுபடி பார்க்கணும்னு ஆசையா இருக்கு. அதுக்கு முந்தி அறை”

மாடி அறையில் மறுபடி தனியே சோதனை செய்தபோது அங்கே எதுவும் ஒளிந்திருப்பதாகச் தெரியவில்லை. காலி அறை ‘‘நீங்க என்ன தேடறீங்க மறைமுகமா லவுட்ஸ்பீக்கர் மைக் இப்படியா?’’

‘‘ஆமாம்’’

‘‘சுத்தமா கிடையாது. இப்ப என்ன செய்யலாம்?’’

‘‘டவுனுக்குப் போய்ட்டு வரலாம். அது என்ன பேர் சொன்ன?’’

**நெ**ப்பூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களை வரவேற்றது. எலக்ஷனுக்கு உரிய அறிகுறிகள் அருகில் இருந்த ‘‘அஞ்சு பைசா கோலி, அரசியல் தலைவர் காலி, என்று கரிக்கட்டி வாக்கியத்தில் தெரிய டெண்ட் கொட்டகை ராத்திரி ஷோவின் அலுப்பில் தூங்கிக் கொண்டிருக்க உடனே கரும்பு வயல்கள். நெப்பூர் கூட்டுறவு கரும்பாலைக்காக மந்திரி நாட்டிய அடிக்கல்லின் நிழலில் ஒரு நாய் உறங்கிக் கொண்டிருந்தது. உள்ளே சென்றதும் பஞ்சாய்த்து அலுவலகத்தின் அருகே வேளாண்மை அலுவலகத்துக்கு அருகே ஒரு மாட்டை வீழ்த்தி மரத்தடியில் லாடம் அடித்துக் கொண்டிருந்தார்கள். ஆணி சற்று ஆழமாகப் பதிந்து மாடு புரண்டு லாட சாதனங்களையெல்லாம் தூக்கியடித்தது. கார் நின்றது. கிராமத்துச் சிறுவர்கள் நாற்பது ஐம்பது பேர் ஆரவாரத்துடன் அவர்களைச் சூழ்ந்து கொள்ள லீனா, ‘‘நான் காருக்குள்ளேயே இருக்கேன். நீங்க போய் விசாரிச்சுட்டு வாங்க கணேஷ், ’ என்றாள்.

கணே**ஷு**ம் வசந்த்தும் இறங்கினார்கள். தாழ்ந்த பெட்ரோமாக்ஸ். இரண்டரை வருஷத்துப் புகை படர்ந்த கூரை. கறுப்பு ஒட்டடை. கடையில் நின்று ‘‘யோவ், ரெண்டு டீ கொடு,’’ என்றான் வசந்த்.

பாய்லரில் தொங்கிய பையை வென்னீரில் நனைத்து ஓரிரண்டு ஸ்பூன் பால்விட்டுப் பளபள என்று மிதக்க டீ வந்தது.

tamilpdffree.wordpress.com

‘‘உங்க பேரு?’’

‘‘கருணாகரனுங்க!’’

‘‘கருணாகரன், அதோ பாரு தூரத்தில... அந்தப் பங்களா? தெரியுமா உங்களுக்கு?’

‘‘தெரியுங்களே? பெரிய மனுசங்க வீடு?’’

‘‘ரெண்டு வருஷத்துக்கு முந்தி அங்க...’’

‘‘சௌந்தரபாண்டியங்கிற பையன் காணாமப் போயிட்டான். பேய் அடிச்சுடுச்சு!’

‘‘அப்படின்னு சொல்லிக்கிறாங்க இல்லை?’’

‘‘இல்லிங்க. நானே பேயைப் பார்த்தனுங்க!’’

கணேஷ் அதைக் கவனிக்கவில்லை. வேறு திசையில் ‘‘வசந்த், அங்கே பார்’ என்று காரின் திசையில் காட்ட வசந்த்...

‘‘மை காட்!’’ என்று அலறினான்.

tamilpdffree.wordpress.com

7

**வ**சந்த் பாசாங்குதான் செய்வான் என்பது கணே**ஷு**க்குத் தெரியும். உள்ளுக்குள் அவனுக்குத் தைரியம் இருப்பதும் எந்தச் சந்தர்ப்பத்திலும் தன்னை விட்டுக் கொடுக்க மாட்டான் என்பதும் தெரியும். ஆனால் வசந்த்தின் குரலில் இப்போது நிஜ பயம் இருந்தது.

கணேஷ் அந்தக் கடையருகில் ஆசாமியை விசாரித்துக் கொண்டிருந்தான். கடைக்காரன் தான் சந்தித்த முனீஸ்வரர்களை பற்றியெல்லாம் விவரித்துக் கொண்டிருந்தான். “தார் ரோடு போடக் கோவில் இடிச்சாங்க. தப்பாயிருச்சு! முனீஸ்வரன் ராத்திரி உலாத்த ஆரம்பிச்சிருச்சு. டெண்ட்டுல சினிமாப் பார்த்துட்டு...” வசந்த் அந்த வினோதினி லீனாவின் அருகில் சென்றான். “திரும்பி வந்துட்டிருந்தேன். ரவைக்குப் பன்னிரண்டு மணியிருக்கும். சைக்கிள்ள வர்றேன். எதிர்த்தாப்பல பத்தடி உயரத்துக்கு வந்திட்டாரு! முனீஸ்வரன்! அப்படியே பொத்துன்னு சைக்கிளைப் போட்டுட்டு உளுந்தவன்தான். ஒருவாரம் **ஜு**ரம். கண் முழிக்கலை...”

லீனா தன்னிடமிருந்த அணிற்பிள்ளையை விடுவித்திருக்க வேண்டும். கிராமத்து நாய் அதை பிடித்துவிட்டது. அந்த மென்மையான அணிலின் உடலில் பல் பதித்துக் கவ்வி அந்த நாய் தன் வாயை உதறி உதறி குதற, அணில் ரத்தம் சிதற– லீனா எவ்விதப் பதட்டமும் காட்டாமல் அதை கவனித்துக் கொண்டிருந்தாள். வசந்த் அருகே சென்று, “என்னது லீனா! என்ன செஞ்சே!” என்றான்.

லீனா அவனைத் தனது பெரிய விழிகளால் நிமிர்ந்து பார்த்து “அணில் தப்பிடுச்சு, ஆனா ஓடமுடியல, நாய் கவ்விடுச்சு. செத்துப் போயிருக்கும் இல்லே? நான் காலை ஒடைச்சுட்டேன் போல இருக்கு. அதனால்தான் அதால ஓடமுடியலை சின்ன எலும்பு மளுக்குன்னு ஒடையறபோது சத்தம் கேட்டுது.”

வசந்த் எச்சிலை விழுங்கி, “சரிதான்; அணிப்பிள்ளை கால ஒடிச்சியா? பாவம் இல்லையா? உனக்கு வருத்தம் இல்லையா?”

“ஒடைச்சுட்டு அப்புறம் ரொம்ப ஃபீல் பண்ணினேன். வலிக்கும் இல்லே?”

“இந்நேரம் அது பஜ்ஜி’ என்றான். “ச்ச்ச்ச்!’ என்றாள். நாய் அந்த அணிற்பிள்ளையை தின்னுவதற்கு உகந்ததல்ல என்று தீர்மானித்துக் கீழே போட்டுவிட்டது. செத்துப்போய் சொத்தென்று வீழ்ந்தது அணில். நாயின் வாயோரம் வெற்றிலை பாக்கு போட்டாற்போல ரத்தம். நேராக லீனாவிடம் வந்து சொந்தம் போல் சந்தோஷமாக ஒரு நிமிடம் வால் வீசியது. வசந்த் ஒரு கல்லை எடுத்தான். நாய் சிர்ர்ர் என்றது. அதேசமயம் கிராமத்துல சிலர் காரை சுற்றிக் கொண்டுவிட்டனர். கணேஷ் அருகே வந்தான். சுற்றிலும் கூடியவர்கள் ஆரம்பத்தில் வேடிக்கை பார்க்கிறவர்கள் போலத்தான் தோன்றினர். பெரும்பாலும் ஆண்கள். ஒருசில ரவிக்கையணியாத பெண்கள், பாட்டிமார்கள், குழந்தைகள். எப்போது அந்தக் கூட்டம் சற்று மாறியது. எப்போது அந்த கூட்டத்திற்கு அந்தக் கோபம் வந்தது என்பது திட்டவட்டமாக சொல்லமுடியவில்லை.

குரல்கள். முதலில் “இந்தப் பொம்பளையை எங்கேயோ பார்த்திருக்கேன் அண்ணாச்சி”

“அட இவதாண்டா!”

“யாரு?”

“ராத்திரி உலாத்துதே! தோட்டத்தாண்டே பார்த்தமே! அந்தச் சின்னப் பிள்ளையை காவு வாங்கிச்சே!”

“சேச்சே! அது இல்லிங்க! இது ஏதோ பொண்ணு!”

“டேய் முகத்தை பாருடா! நான் பார்த்திருக்கேண்டா! அதே முகம்டா! எங்கப்பனை அவதாண்டா”

“ஏய்கோவாலு ஒதுங்கிவந்துரு. ராக்காயி ஓடியா!”

“கிட்டக்கப் போவதரா! அடிச்சுப் போட்டுரும்!”

“இதான்டா இதே தாண்டா?”

கணேஷ் அவர்களை விலக்கிக்கொண்டு காரின் கதவைத் திறந்து டிரைவர் ஸிட்டில் தன்னை செருகிக்கொள்ள–

காரைச் சுற்றிலும் அரைவட்டமாக அவர்கள் நின்றார்கள்! எல்லோருடைய ஈட்டிகளும் லீனாவின்மேல் குத்தியிருந்தன.

“இவதாண்டா மாப்பிள! இதே முகம்! இதே ஜாடை இவதாண்டா! இவளேதான்!

“இவங்கள்ளாம் என்ன சொல்றாங்க?” என்றாள் லீனா.

கணேஷ் கார் கதவைச் சாத்திவிட்டு கிளம்பினான். அதன் இன்ஜினை சீறவிட்டான்.

இப்போது வெளியே ஒருத்தன் நெற்றி நரம்பு புடைக்க சோழி சோழியா பற்கள் தெரிய. “அடிடா டேய்!” என்று உரக்கக் கத்த பறந்து வந்தது கல்.

tamilpdffree.wordpress.com

கணேஷின் விண்ட் ஷீட்டில் பட்டு அத்தனை கண்ணாடித் துண்டுகளும் சிதறாமல் முன்னே அப்படியே ஒட்டிக்கொண்டு–

“பாஸ் போயிருங்க! போயிருங்க!”

“லீனா குனிஞ்சுக்க.” என்றான் கணேஷ். ஹாரன்மேல் பதிந்து அலறி கிரீச்சிட்டு அந்தக் கூட்டத்தை இரண்டாகப்பிளந்து தப்பித்து வெளியே வருவதற்குள் எட்டு பத்து கற்கள் விழுந்துவிட்டன. பானட் பக்கவாட்டுக் கண்ணாடி, காரின் மண்டை, ஹெட்லைட், பின்பக்கத்து விளக்குகள் அத்தனையும் அடிபட்டன. சாலையில் கார் விரைந்தது.

“எதுக்காக அப்படி கல்அடிக்கிறாங்க?” என்றாள் லீனா.

“நாசமாய் போச்சு, எல்லாம் உன்னால்தான்! லீனா...”

“வசந்த், சும்மா இரு இவளை ஒன்னும் கேட்காதே! நாம கண்டு பிடிக்கலாம்”

“நீங்க என்ன பேசறீங்க? அவுங்க ஏன் கல்லடிக்கிறாங்க? ஒன்னுமே அர்த்தமாகலை கணேஷ், ஹானஸ்ட்! என்னை நம்புங்க!”

“அழறா பாஸ்!” என்றான்.

“அழட்டும்”

சற்றுநேரம் சின்னதாக அழுதாள்.

கணேஷின் நினைவுகள் பறந்தன. தட் வாஸ் க்ளோஸ். கடவுள் புண்ணியத்தில் அடிஇல்லை. அருகே லீனா இன்னும் விசித்து அழுதுக் கொண்டிருக்கிறாள். கிராமத்தில அந்த ஆள் அவளைப் பார்த்தபார்வையில் வெறுப்பு பயம் முன்பே பார்த்த முகம் என்பது நிச்சயம்... இந்தப் பெண் யார்? இவளுடைய வினோதமான நடவடிக்கைகளுக்கு எவ்வளவு வரை சரியான காரணம் சொல்ல முடியும்? ரத்தத்தை காண்பதில் இவளுக்கு ஓர் ஆர்வம். அணில் ரத்தம் தன் ரத்தம்...

**வீ**ட்டுக்குச் சென்றபோது வாசலில் மரத்தடி நாற்காலியில் பைப் பிடித்துக் கொண்டு எழுதிக் கொண்டிருந்தார் குமாரவியாசன்.

இவர்களைப் பார்த்ததும் எழுதியதை சற்று அவசரமாகவே மடக்கி ஒரு புத்தகத்துக்குள் செருகிவிட்டு, “என்ன ஆச்சு சார்?”

“கிராமத்திலே சில்லைப் பேர்த்துட்டாங்க! கல்லடி!”

“எதுக்கு?”

“உங்க பெண்ணால!”

“என்ன லீனா. ஏம்மா அழறே? என்னதான் ஆச்சு?”

கணேஷ் அவர் முகபாவ மாறுதல்களைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

“திடீர்னு எல்லாரும் கல் எறிய ஆரம்பிச்சுட்டாங்க சித்தப்பா”

tamilpdffree.wordpress.com

“அடாடா! நான்தான் போகாதேன்னு சொன்னேனே. என்ன மிஸ்டர் வசந்த், இந்த மாதிரி அவளை அபாயத்துக்கு உட்படுத்திட்டீங்க? கிராமத்திலே சண்டை போட்டீங்களா?”

“அதெல்லாம் இல்லை, சார். சொன்னேனே, உங்கப் பெண்ணை பார்த்ததும்... அவுங்க ஏதோ தெரிஞ்ச முகமா இருக்கேன்னு கல்லைத் தூக்கிட்டாங்க!”

“அதுக்குத்தான் சொன்னேன். அவளைக் கூட்டிப் போகாதீங்கன்னு!”

“அப்படி நீங்க சொல்லலை” என்றான் வசந்த்,

“வாம்மா லீனா,” என்று அவளை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றார் குமாரவியாசன். வாயிற்படியில் நின்று, “மிஸ்டர் கணேஷ். நீங்க டாக்குமெண்ட்ஸ் எல்லாத்தையும் பார்த்துட்டீங்களா?”

“பார்த்துட்டேன்.”

“நான் நாளை மறுநாள் பம்பாய் போறதா தீர்மானிச்சிருக்கேன்”

“நாங்க இன்னிக்கு ராத்திரி மறுபடி அரச மரத்தடிக்குப் போறதாத் தீர்மானிச்சிருக்கோம்,” என்றான் கணேஷ்.

“நானும் வரணுமா?”

“நீங்க இல்லாமலா?”

“லீனா?”

“நானும் வரேனே!” என்றாள் அவளாக,

அவர்கள் உள்ளே சென்றதும் வசந்த், “பாஸ் நீங்க குமாரவியாசனைச் சந்தேகிக்கிறீங்களா?” என்றான்.

“ஆமாம்.”

“எந்த விதத்தில்?”

“இன்னும் க்ளியரா இல்லை. ஆனா அந்த ஆள் பம்பாய் போறதுக்குள்ள என்னவோ தீவிரமா நடக்கப் போகுதுன்னு எனக்கு உள்ளுணர்வு சொல்லுது நீ என்ன நினைக்கிறே?”

“இந்த பொண்ணு விளையாடுதா? நிஜமாவே இன்னொஸென்ட்டானவளா? பாசாங்கு செய்யறாளா?”

“இன்னும் புரியலை?”

“அந்தக் கிராமத்திலே கல்லெறிஞ்சவங்க மூஞ்சியிலே கோபத்தைப் பார்க்கலே பீதியைப் பார்த்தேன்!”

“நாம பார்த்த உருவத்தை அவங்கள்ள சிலரும் பார்த்திருக்காங்க. அதான் லீனாவைப் பார்த்ததும் அடையாளம் கண்டு பிடிச்சிட்டாங்க!”

tamilpdffree.wordpress.com

“அந்த உருவம் இந்தத் தோட்டத்தை மட்டுமில்லாமே கிராமத்திலேயும் சுத்துதுன்னு தெரியுது!”

“அந்த உருவம் என்ன வசந்த்?”

“என்ன சந்தேகம்? பிசாசுதான்! வேற எது ஜிவ்வுனு ஆகாயத்தில பறந்து காற்றா மறைய முடியும்.”

“ஆமாம் வேறு எது?” என்றான் கணேஷ்.

சாப்பிட்டு விட்டுச் சற்று நேரம் தூங்கினான். இரவு தூக்கமில்லாததால் சற்று ஆழமாகவே தூங்கி விட்டான். கண் விழிக்கும் நேரம் அந்தக் கனவு கண்டான். அதைக் கனவு என்று சொல்வதா... நிஜமா ஒருவிதமான இரண்டுக்கெட்டான் வேளை மாலை. இரண்டுங் கெட்டான் மனநிலை, தூக்கம்–விழிப்பு இரண்டிற்கும் இடையே ஓர் அவஸ்தை நிலை. அமுக்குவான் வந்து கையை காலை அசைக்க வேண்டும் போலிருந்தாலும் அசைக்க முடியவில்லை. ஜன்னல் திரைச் சிலைகள் காற்றில் ஆடுகின்றன. முன் தினம் பார்த்த அந்தப் பெண்ணுருவம் மெதுவாக மிதந்து மடங்கி ஜன்னலைத் தாண்டி நேராக அவனை நோக்கி மெல்ல வருகிறது. சாம்பல் நீல நிறம், கண்களில் லேசாகச் சிரிப்பு. நேராக கணே**ஷு**க்குத்தான் வருகிறது. வந்து அவன் மேல் படர்ந்து பரவி உதடு தோடு முகம் வைத்து... மூச்சு திணறுகிறது. உதட்டோடு உதடு வைத்து அழுத்தி முத்தமிடுகிறது. அந்த முகத்தில் பஞ்சாமிர்தம், யூகலிப்ட்டஸ், செண்பகப்பூ, வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் என்று ஏதேதோ வாசனைகள் தெரிகின்றன. முத்தமிட்டு விட்டுச் சும்மா இல்லாமல் அது நீல நாக்கை அவன் உதட்டுக்குள் செலுத்தி வருடுகிறது! மெல்ல மெல்ல அந்த நாக்கு அவன் வாயை நிரப்பித் தொண்டையைத் தொடுகிறது, தொட்டு இன்னும் உள்ளே அழுத்தி ஈஸோஃபாகஸ் வழியாக மார்பு, வயிறு என்று பரவி உடம்பெல்லாம் நாக்காக...

“அய்யோ?”

வியர்வை வெள்ளத்தில் எழுந்துவிட்டான்.

“என்ன பாஸ்?” என்றான் வசந்த். படுக்கையின் கால் மாட்டில் நின்று கொண்டிருந்தான்.

“நாக்கு! நீல நாக்கு?”

“நாக்கா! நாக்கு வரண்டிருச்சா? தாகமா?”

வசந்த் தண்ணீர் தர அதை வாங்கி அப்படியே முகத்தில் தெளித்துக் கொண்டு, “பயங்கர கனா!” என்றான்.

“சொல்லாதீங்க. ஏற்கனவே டீலா இருக்கேன். ராத்திரி வேற மறுபடி போயாகணுமா?”

“வசந்த! இனிமே மத்தியானம் தூங்கக் கூடாது.”

“நான் தூங்கலியே!”

“என்ன செய்தே?”

“கொஞ்சம் இந்த வீட்டைச் சோதனை போட்டுப் பார்த்தேன்! சில விஷயங்கள் கண்டு பிடித்தேன்”

tamilpdffree.wordpress.com

கணேஷ் சட்டை மாற்றிக் கொண்டு, தலை வாரிக் கொண்டு, "என்ன கண்டுபிடிச்சே?" என்றான்.

"முதல்ல இந்த மெயின் வீட்டில நாம் ரெண்டு பேர் மட்டும்தான் தங்கறோம். மற்ற எல்லாரும் ராத்திரி வந்தா பெரிய வீட்டில் தங்கறதில்லை. அவுட் ஹவு**ஸு**க்குப் போயிடறாங்க."

"லீனா?"

"லீனாவும்தான்!"

"இரண்டாவது மாடியில் நாம போனதும் அந்த அறையில் ஏராளமா புஸ்தகங்கள் இருக்குது. பழைய–மிகப் பழைய புஸ்தகம். 1935'க்கு அப்புறம் புஸ்தகம் கிடையாது. பழுப்புக் காகிதங்கள். தொட்டால் பொடியாகிற ஒரு லைப்ரரியே இருக்கு!"

"இங்கிலீஷ் புஸ்தகமா?"

"இங்கிலீஷ், தமிழ்?"

"எல்லாத்தையும் பார்த்தியா?"

"பார்க்க முடியலை. ஆனா இந்தப் புஸ்தகம் நமக்குக் கொஞ்சம் சுவாரஸ்யம் தரும்னு நினைக்கிறேன்"

வசந்த் காட்டிய புஸ்தகம் கருஞ்சிவப்பு நிறத்தில் காலிகோ பைண்டு செய்யப்பட்டிருந்தது. முதுகில் தங்கவர்ண எழுத்துக்களில் 'சில விநோதங்கள் என்று பொறித்திருந்தது.

கணேஷ் அதை வாங்கிப் பிரித்தான்.

"ஜாக்கிரதை!" என்றான்.

"இஃது தாது வருஷம் மாசி மீ சென்னை சரவணா அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப் பெற்றது. விலை அணா ஆறு, துரைத்தனத்தார் அங்கீகாரத்துடன்... என்னடா அது?"

"ஏதோ சரித்திரம் மாதிரியும் இருக்கு, நாவல் மாதிரியும் இருக்கு. பஞ்சாங்கம் மாதிரியும் இருக்கு. திடீர்னு ஒட்டக்கூத்தர். கம்பர் ராமாயணத்தை அரங்கேற்றியது எல்லாம் வருது. சாவகாசமாப் படிக்கணும்."

"அத்தனை புஸ்தகத்தில் இந்தப் புஸ்தகத்தை எப்படித் தேர்ந்தெடுத்தே?"

"அலமாரிக்கு முன்னாலே தனியா ஒரு மேஜை மேல் கிடந்தது. அதிலயும் ஒரு பக்கத்தில் ஒரு பனை ஓலை சொருகியிருந்தது. எடுத்தேன். பிரிச்சேன்! படிச்சேன்! என்ன படிச்சேன்? சஸ்பென்ஸ். டட்டடாண்!"

"சொல்லு". வசந்த் 'க்கும்' என்று கனைத்துக் கொண்டு "சென்ற மூன்று நூற்றாண்டுகளுக்குத் தவறாமல் ஈதிப் படி நிகழ்கிறதென்பது எல்லோரும் உள்ளங்கை நெல்லிக்கனி போற் கண்டறிந்த விஷயமாகும். கார்த்திகை மாசம் இரண்டு வருஷங்களுக்கு ஒருமுறை வருவதிலயும் தவறுவதில்லை. ஓராண்டு பயிர் பழுதுபடும். ஓராண்டு மாடு மனைகள் அழிந்து போகும். ஓராண்டு அதன் வயப்பட்டு கட்டிழப்பர். இதற்கென்றே வியாசர்கள் பெண் பேறு பெற்றால் பிறந்த தினமே குளத்தில் போட்டு விடுவதும் உண்டு"



tamilpdffree.wordpress.com

“நான்சென்ஸ்!”

“எழுதியிருக்கே பாஸ்! பிசாசு இரண்டு வருஷத்துக்கு ஒருமுறை வர்றதை அப்படியே விவரமா எழுதி வெச்சிருக்கே!”

“சரி, அந்தப் புஸ்தகத்தை தனியா வை. நாளைக்குப் படிக்கலாம். இப்ப எனக்கு நீ ஒரு காரியம் பண்ணு. நேரா செங்கல்பட்டு டவுனுக்குக் காரை எடுத்துட்டுப் போயி உடனே ரிப்பேருக்கு கொடுத்துட்டு வந்துரு, அப்படியே மெட்றாஸுக்கு டாக்டர் பாலகோபாலுக்கு ஃபோன் பண்ணி இந்த வீக் எண்ட் இங்க வர முடியுமான்னு கேளு. என்ன விஷயம்னு கேட்டா ஒரு கோஸ்ட் பார்க்கலாம்னு சொல்லு. உடனே வந்துருவார். அப்புறம் அந்த தீபக்குக்குப் போன் செய்து எப்ப வரான்னு கேளு! குமாரவியாசனைக் காமிரா தயாரா கேளு. இல்லைன்னா இண்டியன் காமிரல ஒண்ணு வாங்கிட்டு வந்துரு!”

“ஃப்ளாஷ்?”

“ஃப்ளாஷ் கூடாது! அதான் தானாவே நல்லா ஒளி விடுதே! ஓப்பன் ஷட்டர் வசதி இருக்கக் கூடியதா ஒரு பாக்ஸ் காமிரா கூடப் போதும். நல்ல ஃபாஸ்ட் ஃபிலிமா போட்டுக் கிட்டு வா?”

வசந்த் சென்றதும் கணேஷ் அந்த புஸ்தகத்தை எடுத்துப் புரட்டினான். முகர்ந்து பார்த்தான். உட்கார்ந்தான். யோசித்தான்.

குமாரவியாசன் – அவர் சொத்தின் பேரில் ஆசைப்பட்டு லீனாவைத் தீர்த்துக்கட்டத் தலையைச் சுற்றி வளைத்து மூக்கைப் பிடிக்கிறார் என்று வைத்துக் கொண்டால் கூட... தஸ்தாவேஜுகள் எல்லாவற்றையும் கையெழுத்துப் போட்டுக் கொடுத்து விட்டாரே! அடடா, வசந்திடம் அந்த உயிலைப் பற்றிச் சொல்ல மறந்துவிட்டேன்! தீபக்கிடம் அந்த உயில் பிரதியைக் கேட்டு எடுத்து வரச் சொல்லியிருக்கலாம். இந்தப் பழைய புஸ்தகத்தைப் படித்துப் பார்க்கலாம் என்று அதை எடுக்க விரும்பித் திரும்பிப் பார்த்தால்...!

புத்தகத்தைக் காணோம்?

என்னடாது! வசந்த் எடுத்திட்டுப் போயிட்டானா? நின்று சுற்று முற்றும் பார்த்துத் திடுக்கிட்டான்.

அந்தப் புத்தகம் மெதுவாக அலமாரியை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

## 8

**வ**சந்த் மேலும் கீழும் நடந்து கொண்டே பேசினான். “புத்தகம் நகர்றது. மரத்திலே ராத்திரி பிசிர் பிசிறாப் பிசாசு, என்ன என்னவோ திடீர் திடீரென லோலோன்னு கன்னாபின்னா வார்த்தையெல்லாம் காதில் கேட்குது. மாடியில் பூட்டின ரூம்ல கொட்டம்... என்ன? நாள் பேசிக்கிட்டே போறேன்! கவனிக்கறீங்களா?”

கணேஷ் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தான். கடைசியில், “புத்தகம் எப்படிடா நகர முடியும்? என்றான்.

tamilpdffree.wordpress.com

"இந்த மாதிரி நிறைய 'எப்படி' கைவசம் இருக்கு. ஆனா...?"

"இந்த மாதிரிச் சாமான்கள் நகர்றது பற்றி நான் எங்கயோ படிச்சிருக்கேன். டெலிகினஸிஸ்னு சொல்லுவாங்க!"

"என்ன படிச்சே?"

"சில ஜனங்களுக்கு இந்தச் சக்தி உண்டாம். எந்தவித தொடர்பும் இல்லாம முறைச்சுப் பார்த்தே பொருட்களை நகர்த்துவாங்களாம்."

"டெலிகினஸிஸ்?"

"வார்த்தை அழகா இருக்கு இல்லை? இஸ்ரேல்ல ஒரு பொம்பளைக்கு இந்தச் சக்தி இருந்ததாம். 'லைஃப்'ல படிச்சபோது நான் நம்பலை. எல்லாம் புருடா, டபுள் டாவுன்னு நினைச்சேன்... இப்ப..."

"இது அப்படிக் கூட இருக்க முடியாது வசந்த்"

"வாஸ்தவம். முறைச்சுப் பார்க்க ஆள்கூட இல்லாம தானா நகர்றது... சரியாப் பார்த்தீங்களா? மயிர் கியிர் கட்டியிருந்ததா?"

கணேஷ் புத்தகத்தை எடுத்துப் பார்த்தான். புரட்டித் திருப்பிப் பிரித்துப் பார்த்து, "அசாதாரணமா எதுவும் இல்லே," என்றான்.

"பாஸ், ஒரு ப்ரில்லியண்ட் ஐடியா?"

"என்ன?"

"எல்லாத்தையும் உதறிப் போட்டுட்டுக் கிளம்பிடலாம்"

"டீஃபீடிஸம்"

"முதல்ல நம்ம எதிரி யாரு? இல்லே, தெரியாமத்தான் கேட்கிறேன்?' கணேஷ் ஜன்னலுக்கு வந்து கீழே குமார வியாசனும் லீனாவும் அருகருகே நின்று பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்தான்.

"ரெண்டு பேர்ல ஒருத்தர்!"

வியாசன் கையை அழுத்தமாக ஆட்டிப் பேசிக்கொண்டிருக்க, அருகே மௌனமாக லீனா அழகாகத் கவனித்துக் கொண்டிருந்தாள்.

"எப்படிப்பட்ட எதிரி? எதிரியுடைய ஆயுதங்கள் என்ன."

"தெரியாது."

கட்டம் கட்டமாகச் சட்டை அணிந்திருந்தாள். நீலநிற பாண்ட் வயிற்றில். இடுப்பில் இலைபோல் அழுந்தியிருந்தது.

"வசந்த், கமான். இப்பவே ஆரம்பிச்சுறலாம், நீ குமாரவியாசன். நான் லீனா!"

"என்ன?"

tamilpdffree.wordpress.com

“இப்பத் துவங்கி ராத்திரி வரை நீ குமாரவியாசனை அவர் அறியாமல் பின் தொடர்ந்து என்ன என்ன செய்யறார், எங்க எங்க போறார்னு தெரிஞ்சுட்டு என்கிட்டே சொல்லணும்.”

“நீங்க?”

“நான் அதே போல லீனாவைப் பின்தொடரப் போறேன். உங்கிட்டே லீனாவை ஒப்படைக்கறதிலே ரிஸ்க் இருக்கு. திடீர்னு எல்லாம் கேன்ஸல்னு போய் கையைப் பிடிச்சுருவே!”

“அவ்வளவு அவ நம்பிக்கையா?” என்று முறைத்தான் வசந்த். “எப்பவாவது நான் தொழிலையும் பொழுது போக்கையும் மிக்ஸ் பண்ணியிருக்கேனா?”

“உனக்கு எல்லாமே பொழுது போக்குதானே? ஓகே. இப்ப கேள். இன்னிக்கு நீ குமாரவியாசனைத் தொடறணும். இதபார் கிளம்பிட்டார். அவுட் ஹவுஸ் பக்கம் போறார். ஓடு.. ஓடு! ஜாக்கிரதை மறைஞ்சிருக்கணும். அவருக்குத் தெரியவே கூடாது.”

வசந்த் முணுத்துக் கொண்டே செல்ல, கணேஷ் தனியாக நின்று லீனாவைப் பார்த்தான். இயல்பாகச் சுற்றும்முற்றும் பார்த்தாள். அரச மரத்து மண்டபத்துக்குச் செல்லும் ஒற்றையடி பாதையில் நடந்தாள். கணேஷ் சட்டென்று புறப்பட்டான். கீழிறங்கி வந்த போது லீனாவைக் காணவில்லை. ஒற்றையடிப் பாதையில் மெல்ல நடந்தான். தன் காலடியின் சரக் சரக் அதிகப் படியாகக் கேட்க நின்றான். மற்றொரு சரக்! சரக்! அது யார்? சே பிரமை. திரும்பிப் பார்த்தான். ஒருவரும் தன்னைத் தொடரவில்லை. லீனா எங்கே? நடந்து பார்க்கலாம். அரசமர மண்டபம் தெளிவாகத் தெரியக் கூடிய ஒரு மர மறைவிற்கு வந்து எட்டிப் பார்த்தான்; லீனா அந்த மண்டபத்தில் நின்று கொண்டிருந்தாள். சுற்றிலும் பார்த்தாள். நிதானமாக, யாராவது தென்படுகிறார்களா என்று தேடும் பார்வை மரத்தின் மேல் விழும் போது கணேஷ் ஒளிந்து கொண்டு சற்று......

தயங்கி ஒற்றைக்கண்ணால் எட்டிப் பார்த்தான். இப்போது லீனா சுனையை விரைந்து சென்றுகொண்டிருந்தாள். அடுத்த அடுத்து மர மறைவுகளுக்குத் தாவி மண்டபத்திற்கு வந்து விட்டான். மண்டபத் தூணின் பின்னாலிருந்து மறுபடி சுற்றும்முற்றும் பார்த்துக் கொண்டிருந்தாள். சாய்ந்த மாலை வெய்யில், அவள் கூந்தல் விளிம்பில் விளையாடியது. அவள் யாருக்கோ காத்திருக்கிறாள் என்று முதலில் கணேஷ் நினைத்தான்.

சற்றும் எதிர்பாராத வகையில் லீனா தன் சட்டையைக் கழற்றினாள் பாண்ட் பட்டனைத் தளர்த்தி அதன் ஜிப்பைக் கீழ் தால்களினின்றும் உதறினாள். மிகச்சிறிய டிராயரும் மார்பின் குறுக்கே பூப்பூவாக ஏதோ ஒன்று அணிந்திருந்தாள். மற்றொரு தடவை சுற்றிலும் பார்த்து முதுகுபக்கம் கொக்கியை விடுவித்து மார்பின் சமாசாரத்தை உதிர்த்துக் கீழே போட்டாள். இடுப்பின் எலாஸ்டிக்கை நகர்த்தி வழுக்கி எல்லா உடைகளையும் கும்பலாகப் பக்கத்தில் வைத்துவிட்டுக் கைகளை உயர்த்தித் தன் கூந்தலைமுடிந்து கொண்டாள். திரும்புகையில் மார்பகங்கள் இரண்டு வெண்புறாக்கள் போல, இரண்டு ஷாம்பேன் கோப்பைகள் போல–மிகக் கொஞ்சம் ஊதா தொட்டுத் தெரிய கணேஷ் எச்சிலை நடைக்கேற்ப அவள் மார்பு மெல்ல மெல்லக் குலுங்க இடுப்பும் அழுந்திய இளைத்த வயிறும்... கவிஞர்கள் சொல்லும் படவரல்கல்.

லீனா தண்ணீரில் குதித்தாள். ஒரு சோம்பேறி மின்னல் போல நீந்தினாள். தலையைச் சீராகச் சீராகத் திருப்புவதும் நீண்ட கரங்கள் ஏதோ பரதநாட்டிய முத்திரை போல் கச்சிதமாக நீரை வெட்டுவதும் அவ்வப்போது ஜலத்துக்கு மேலே ஜலத்துக்குள் என்று அவைகள் கண்ணாமூச்சி விளையாட, கணேஷ் மிகுந்த சுவாரஸ்யத்துடன் அவளை பார்த்துக்கொண்டிருந்தான். அறுவருப்பு ஏதும் ஏற்படாத அழகான காட்சி. கணேஷுக்கு

tamilpdffree.wordpress.com

அதில் குற்ற உணர்வு கூடத் தோன்றவில்லை. அப்படியே அந்த ஜல கன்னிகை தால் மூழ்கி 'களுக் என்ற ஒரு பெரிய சப்தத்துடன் மறைந்து போவாளோ பொருள்! அதன் இயக்கத்தில், மென்மையில். வளைவுகளில், உயிரில் எத்தனை அழகு இருக்கின்றது! சேதப்படாத பளிங்குபோல அந்த உடலை ஒரு மைக்கல் ஆஞ்சலோவின் ஆர்வத்துடன் தான் பார்த்தான். எந்த நூற்றாண்டிற்கும் செல்லுபடியாகும் காட்சி அது. ஒர மரம், ஒரு நிழல் ஒரு பொய்கை. ஒரு பெண்ணின் உடல்.

மெல்ல மெல்ல மெல்ல மெல்ல

“களுக்...களுக்.” என்றது நீர். “வாங்க!” என்றது வயசான சன்னமான குரல். திடுக்கிட்டு நின்றான். “யாரு?”

“உமது தாய் புத்திரதி! அவள் புத்திரவதியல்ல என்று மறுத்துவிடும் பார்க்கலாம்!”

இதே குரல் தான் மறுபடியும்.

“ஓ! காலில்லாத முடவன். எலியைப்பிடிக்காத மண் பூனை...” கணேஷ் தூணைப்பிடித்துக் கொண்டு சுற்றிலும் பார்த்தான். எங்கே அந்தக் குரல்? மேலேயா? கீழேயா? கிட்டத்திலா? தூரத்திலா...? விழியோரத்தில் லீனா கரையேறுவது தெரிந்தது. “போய் விடு! பார்த்துவிடுவாள் போய்விடு...

அந்தச் சிரிப்பு மறுபடி ஒரு செகண்ட மெரட்டினாற் போல நன்னு கேட்டது. கணேஷ் தூணிவிலிருந்து விலகி விரைவாக நடக்க–

“மிஸ்டர் கணேஷ்.”

திரும்பினான். லீனா சட்டையை மட்டும் அணிந்து கொண்டு இன்னும் தலையிலும் மார்பிலும் திட்டாக ஈரமிருக்க... “எங்கே இந்தப் பக்கம்” என்றாள்.

கணேஷ் பதில் கூற முடியாமல் தத்தளித்தான்.

“குளிச்சிட்டிருந்தேன்!” என்றாள்.

“அப்படியா.”

அவள் மரத்துக்குபின் சென்று பாண்ட் அணிந்து கொண்டு வந்தாள். “உங்களுக்கு நீந்தத் தெரியுமா?”

“தெரியும். ஸ்விம்மிங் டிரெஸ் கொண்டு வரலை!”

“பரவாயில்லை. இங்கே ஒருத்தரும் பார்க்க மாட்டாங்க?” வேண்டுமென்று டீஸ் பண்ணுகிறாளா என்ன? எத்தனை இடத்தில் தெரிகிறாள். “கணேஷ் ஸார். உங்ககிட்டஒண்ணு கேக்கணும்!”

“என்ன”

“இன்னைக்கு எதுக்காகக் கிராமத்து ஜனங்க என்னை அடிக்க வந்தாங்க?”

“அவங்க உன்னை வேறு யாரேன்னு நினைச்சுக்கிட்ட தாலே!”

tamilpdffree.wordpress.com

“நான் வேறு யாரோவா?”

“சேச்சே! வாக்கியத்திலேயே காண்டிரக்ஷன் இருக்கே?”

“கணேஷ் ஸார். நாம இங்கஇருக்க வேண்டாம். போயிறலாம்.”

“சரி. லீனா நான் உன்னை ஒண்ண கேட்கட்டுமா?”

“கேளுங்க.”

“உன்னை நான் தொட்டு பார்க்கலாமா? தப்பா நினைச்சுக்க மாட்டியே?”

“சேச்சே தொட்டுப் பாருங்க!”

“நீ நிஜமான்னு தெரிஞ்சுக்கணும் எனக்கு.”

லீனா கணேஷின் கையைப் பற்றிக் கொண்டாள். “நான் நிஜம்தானே?”

“உனக்கு இருதயம் அடிச்சுக்குதான்னே எனக்குச் சந்தேகமா இருக்கு”

“பாருங்களேன்.” என்று அவன் கையைத்தன் மார்பில் மேல் வைத்துக் காட்டினாள்.”

கணேஷின் இருதயம் டபுள்ரேட்டில் அடித்துக்கொண்டது. வீட்டை நெருங்கினார்கள்.

“டாடா” என்று அவள் அவுட்ஹவுஸ் பக்கம் சென்று விட்டாள். திரும்பத்தான் அறைக்கு வந்தான். அவளைத் தொட்ட தன் மென்மை இன்னும் பாக்கியிருந்த தன் கையை ஒரு தடவை தனக்கே சொந்தமில்லை போல் புத்தகத்தைப் பிரித்தான்.

‘தமயந்தி விரகதாபப் படுகையிற் சந்திரன் காய்வது அவளுக்குக் சகிக்க மாட்டாமையால் அவள் தன் தோழிமாரை நோக்கி, பொற் செப்புப் போன்ற இளமையாகிய ஸ்தனபாரத்தையுடைய பெண்களே! ஒரு செய்தி கேளுங்கள்...

செப்பிளங் கொங்கையீர் திங்கட்சுடர் பட்டுக் கொப்புளம் கொண்ட குளிர்வானை–

கணேஷ் படிப்பதை நிறுத்திவிட்டுச் சற்றுமுன் பார்த்த காட்சியை மனத்தில் ஒரு தடவை ஓட்டினான்.

செப்பிளம் கொங்கை! தப்பு தப்பு. இப்படி நினைப்பது தப்பு... எங்கே இந்த வசந்த்? இன்னும் இரண்டு நாள் இங்கே இருந்தால். இந்த லீனாவின் அடிமையாகி சாஸனம் எழுதிக் கொடுத்துவிடுவான். அவளை அடுத்த தடவை பார்க்கும் போது அந்தப் பொய்கை காட்சி திரும்ப வந்து கலக்கப்போகிறது. வேண்டாம். கணேஷ் அந்தப் புத்தகத்தில் மற்ற பக்கங்களை புரட்டினான். ஒரு பக்கத்தில அடிக்கடி அடிக்கோடிட்டிருந்தது.

‘...கொண்ட கொழுநனை மேன்மையாகப் பாவித்து அவன் சொல்லைத் தடுக்காமல் அவனுக்குக் கீழ்ப்படிந்து பக்தி விநயத்துடன் பொய் பேசாமல், கறந்த பால் கறந்தபடி அவன் விஷயத்தில் உண்மையாய் ஊசியும் சரடும் போல் மனைவி அவன் ருத்தின் வழி ஒழுக வேண்டும். தன் புருஷன் அழகிருந்த ஊரில் குடியிருந்தறியாத குரூபியா யிருந்தாலும் அவனை மன்மதனாவும் எண்ணி ரோகமுடையவனாயிருந்தாலும் அரோகதிடகாத்–திரனாகவும் பாவனை செய்து அவனை அவமதியாமல் அனவரதமும் பேணி நடக்கவேண்டும்!...’

tamilpdffree.wordpress.com

இந்த வரிகள் அத்தனையும் அடிக்கோடிடப்பட்டு அதன் பக்கத்தில், “ஆனால் நீ?” என்று பென்சிலால் எழுதியிருந்தது. சற்று நேரம் தூங்கிவிட்டான். கதவு திறந்தபோது எழுந்தான். வசந்த் “அப்பாடா” என்று சலித்துக் கொண்டே உள்ளே வந்தான். அவன் கையில் ஒரு கேமிரா இருந்து. தோளில் ஒரு ரிவால்வரின் வடிவத்தில் தோல் பை இருந்தது.

“ஏய், நான் அவரைச் சந்திக்கவா சொன்னேன்?”

“இல்லை, சொல்றேன்! நான் அவரைச் சந்திக்கலை. வேலைக்காரன் மூலமாக இது இரண்டையும் கொடுத்து அனுப்பியிருக்கார்...”

“அதுசரி நீ அந்தாளை ஃபாலோ பண்ணறது என்ன ஆயிச்சு?”

‘‘நத்திங்! பிளாங்க்!’’

‘‘ஏன்?’’

‘‘அவர் பின்னால் அவுட் ஹவுஸ் வரைக்கும்போனேன், தன் அறைக்குள்ள போய் கதவைச் சாத்திக்கிட்டாரு. நான் மெதுவா பின்புறமாய் போய் எகிறி குதிச்சி ஒரு ஜன்னலைத் திறந்து மனுஷன் உள்ளே என்ன செய்றார்னு பார்க்கிறேன், என்ன செய்தார். முதல்ல ஒரு பெட்டியில் தன்னுடைய ஷர்ட், பாண்ட், ஷேவிங்செட் எல்லாத்தையும் அடுக்கி வைச்சார். பம்பாய் போறதுக்கு பாக்கிங் பண்றார். அப்பறம் சம்பிரமமா தன் பைப்பை கடி கடின்னு கடிச்சு, பொதையிலை அடைச்சு ஈயம் பூசறவன் மாதிரி ஊதி ஊதிப் பத்த வெச்சுக்கிட்டார். நாற்காலியில் உட்கார்ந்து காலை ஆட்டிக்கிட்டு ஒரு மணி நேரம் புஸ்தகம் படிச்சார். என்ன புஸ்தகம்? ‘டெவில்ஸ் ஆல்டர்னேட்டிவ்’ காத்திருந்தேன். அப்புறம் மெல்ல எழுந்தார்....இப்ப கேளுங்க. என்ன செஞ்சார் தெரியுமா? ஸ்வாரஸ்யமான விஷயம். பாத்ரூம் கதவை திறந்தார். உள்ளே தாப்பாள் போட்டுகிட்டார்’’

‘‘ஹௌ எக்ஸைட்டிங்!’’

வசந்த் தன் கடிகாரத்தைப் பார்த்தான். ‘‘சரியா ஆறரைக்குப் போனவர், ஆறரையிலிருந்து ஏழரை வரை ஒரு மணி நேரம் பாத்ரூம்லேயே இருந்தார். பிரம்மசவசம்.

‘‘குளிச்சாரா?’’

‘‘குளிச்சா மாதிரித் தெரியலை. கல்க்குடல் போலிருக்கு. டிரெஸ் கிஸ் மாற்றலை. வெளியே வந்தார் மறுபடி. நாற்காலியில் உட்கார்ந்துட்டு, ’டெவில்ஸ் ஆல்டர்னேட்டிவ்’ இன்னும் படிச்சிட்டிருக்கார். உங்க பக்கம் என்ன ஆச்சு?’’

‘‘சொன்னா பொறாமைப்படுவே!’’

‘‘என்ன? என்ன? நேரா அரசமரத்தடிக்குப் போனாளா? அங்கே ஸ்விம்மிங் **ஸூ**ட்ல பொய்கையில நீந்தினாளா...! நீங்க ரெண்டு பேரும் திரும்பிவரதைப் பார்த்தேன் தலையெல்லாம் நனைந்திருந்தது அவளுக்கு’’

‘‘ஸ்விம்ங் **ஸூ**ட் அவகிட்டே இல்லை!’’

‘‘அப்படின்னா?’’ வசந்த் கணேஷை நேராகப் பார்தான்.

‘‘ஆமாம்.’’



tamilpdffree.wordpress.com

“ஒண்ணுமே கிடையாதா?”

“ம்ஹூம்”

வசந்த் அலுத்துக் கொண்டான். “ஹூம்... ஜாதக ராசி அது! மச்சம்! நான் என்னடான்னா மணிக்கணக்கா ஒரு பாத்ரூம் கதவைப் பார்த்துக்கிட்டு இருக்கிறேன்... சுடாதீங்க.

கணேஷ் அந்தத் துப்பாக்கியை அதன் உறையிலிருந்து எடுத்துப் பார்த்தான். அதன் சேம்பரைத் திறந்து பார்த்தான். தோட்டா இருந்தது.

“வசந்த்! நாளைக்கு நீ மெட்றாஸ் போய் அவசரமாகச் சில விஷயங்கள் விசாரிச்சுட்டு வரணும். முதல்லே அந்த உயிலோட நகல். அப்புறம் டெலிகினஸிஸ்னு சொன்னியே அதைப்பத்தி, சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பற்றிக் கொஞ்சம் டோப், சாயங்கால பஸ்ஸிலே திரும்பி வந்துரு. காரை என்ன செஞ்சே!

“மெட்றாஸுக்கு டோ பண்ணி எடுத்துட்டுப் போறாங்களாம்”

“கிளிக்’ என்றது காமெரா.

“ஃப்ளாஷ் கூட வேலை செய்யுது”

“ஃப்ளாஷ் எதுக்கு பாஸ்?”

“ஃப்ளாஷ் போட்டு, ஃப்ளாஷ் இல்லாமல் ரெண்டு விதமாகவும் எடுக்கலாம். எடுத்த ஃபிலிமையும் நாளைக்கு எடுத்துட்டுப் போயிரு!”

“சரி பாஸ். என்னய்யா முண்ட கண்ணன்?”

“சாப்பாடு தயார்னு சொல்லச் சொன்னாங்க. என் பேரு பெரிய கண்ணனுங்க!”

பெரிய ஹாலில் மேஜையில் நான்கு நாற்காலிகள் போட்டிருக்க, மேலே ஒரே ஒரு பல்பு மட்டும் தொங்க... குமார் வியாசனும் லீனாவும் அவர்கள் வரக் காத்திருந்தார்கள். “என்ன மிஸ்டர் கணேஷ்! எல்லாம் ரெடியா?” என்றாள் லீனா.

“நீங்க மறுபடி அரசமரத்து மண்டபத்துக்குப் போகப் போறீங்களா...?” என்றான் வியாசன்.

கணேஷ் தலையாட்ட ‘நாங்களும் கூட வரப்போறோம்.” என்றாள் லீனா.

tamilpdffree.wordpress.com

## 9

**வ**சந்த் லீனாவைப் பார்த்து நீங்க ரெண்டுபேரும் வரப்போறீங்களா? வாங்கோ ஜோரா வாங்கோ. கம் ஒன் கம் ஆல்” என்றான். கணேஷ் சிந்தனையில் இருந்தான். அவன் மனத்தில் ஒரு சித்தாந்தம் கலைந்து கொண்டிருந்தது.

“உங்களுக்குப் பிசாசைக் கண்டா பயமில்லையா?” என்றான் வசந்த். “நான் பார்த்ததில்லை” என்றாள்.

‘‘பயம்னா லபக்குனு என்னைக் கட்டிக்கலாம்’’ என்றான்.

‘‘கட்டிட்டா கணேஷ் ஸாரைத்தான் கட்டிப்பேன்’’ என்றான்.

‘‘இத பார்றா மச்சம்! என்றான்.

குமாரவியாசன் வந்து ‘‘என்ன மிஸ்டர் கணேஷ் எல்லாம் ரெடியா?” என்றார்.

‘‘நீங்க வந்தப்புறம் இலை போடலாம்னு காத்துப்டிருக்கோம்’’ என்றான் வசந்த்.

‘‘சாப்பிட்டப்புறம் நாம அங்கே போறமில்லே?...துப்பாக்கி, காமிரா ஃப்ளாஷ் எல்லாம் சரியா இருக்குதா?’’

‘‘துப்பாக்கி வெடிக்குமா ஸார்’’

‘‘லோட் பண்ணியிருக்கு...’’ என்று அதை எடுத்தார்.

‘‘நேராக் காட்டாதீங்க கொஞ்சம் தள்ளியே வெச்சுக்கங்க’’

அவர்கள் மௌனமாக சாப்பிட்டார்கள். கிண்ணங்கள் நகர்த்தப்படுவதும், தண்ணீர் நிரப்பப்படுவதும் பீங்கான் பீங்கானை தொடுவதும் போன்ற சின்ன சின்ன சப்தங்கள் கூட தெளிவாகக் கேட்டன. கணேஷ் பேசவே இல்லை. அவன் மூளைக்குள் நிறைய விர்ர். உடம்பில் ஒரு எதிர்பார்ப்பு, **ஜு**ரம். ஆல் ரைட் இன்றும் அந்த உருவத்தைப் பார்க்கிறோம் என்றால் பார்த்து என்ன முடிவுக்கு வரமுடியும்? பிசாசு இருக்கிறது என்றால் அதுதான் தீர்மானித்த விஷயமாயிற்றே? தீர்மானித்ததா? ஏறக்குறைய அப்படித்தானே. கணேஷ் உனக்குக் தெரியாத விஷயங்கள் எத்தனை இருக்கின்றன. ஸி,ஆர்.பி ஸியும், ஐ.பி.ஸி.யும் டார்ட்**ஸு**ம் தவிர வெளியுலகத்தில் எத்தனை தெரியும் உனக்கு? சரித்திரம், விஞ்ஞானம்... இதெல்லாம் உன் வழக்குகளுக்கு தேவையான அளவு தானே தெரியும் உனக்கு. உலகளவுக்கு விரிந்திருக்கும் நீ அறியாத தேசத்தில் எங்கே இருக்கிறது. இதன் விடை? எப்படி கண்டு பிடிப்பது...?

வசந்த் “கபில்தேவ் மயங்கி விழுந்து விட்டானாம் சோடா கொண்டுவந்தார்களாம். கவாஸ்கர் எங்கே கவாஸ்கர் எங்கேன்னு எல்லாரும் தேடினார்களாம். ஏன் சொல்லுங்க?’’

‘‘ஏன்?’’ என்றாள் லீனா.

‘‘ஏன்னா அவன்தானே ஓப்பனர்!’’

லீனா வசீகரமாகச் சிரித்தாள்.

‘‘சிரிக்கிறீங்களா! பரவாயில்லையே இன்னொரு அறுவை ஜோக் சொல்லட்டுமா?’’

‘‘மிஸ்டர் வசந்த் பி சீரியஸ்’’.

‘‘ஸார்! பி சியர்ஃபுல். போயிட்டுத் திரும்பி வருவமான்னு சந்தேகமா இருக்கிற சமயத்தில் கொஞ்சம் சிரிச்சிட்டு போலாமில்ல. பணமா காசா?’’

கணேஷ் நீரருந்திவிட்டு மற்ற பேர் சாப்பிட்டு முடிக்க காத்திருந்துவிட்டு ‘‘புறப்படலாமா?’’ என்றான்.

‘‘வெங்காயம் இல்லையா?’’ என்றான் வசந்த்.

tamilpdffree.wordpress.com

‘‘கொண்டு வரச்சொல்லட்டுமா?’’

‘‘வேண்டாம் சார் வாங்க’’ என்றான் கணேஷ். அவனை முறைத்து நால்வரும் மெதுவாக வீட்டுக்கு வெளியே வந்தார்கள். இரவு சந்திரன் கொஞ்சம் சேதப்பட்டு அதன் மிக அருகே வீனஸ் தெரிந்தது. கணேஷ் அந்தத் துப்பாக்கியை வைத்திருந்தான். வசந்த் காமிரா. நால்வரும் நடந்தார்கள் ‘‘இது எப்ப எடுக்கிறது பாஸ்?’’

‘‘சொல்றேன்.’’

‘‘ஃப்ளாஷ் இல்லாமலா?’’

‘‘ரெண்டு விதமாகவும் எடுக்கலாம்’’

அரசமரத்தை நெருங்கி விட்டார்கள் ‘‘நீங்க எப்போதும் என் பக்கத்திலேயே இருங்க! என்ன?’’

‘‘சரி’’ என்றாள் லீனா.

கணேஷ் அந்த மண்டபத்தை பார்த்தான். சின்ன வால்போல் இருந்தது. அதன் வாசல் மௌனமாக வா என்றது. கூர்மையான நிசப்தம். நிலவு முலாம் காற்றில் ஒரு சிலிர்ப்பு. தூரத்தில் நெட்டை மரங்கள் துக்கத்தில் களைத்துப்போன கணவனை இழந்த பெண்கள் போல மெதுவாகத் தலையாட்டிக் கொண்டிருந்தன. ராத்திரி விமானம் ஒன்று சிவப்பு பளிச் பளிச்சுடன் சிக்கிக் கொண்டு சென்றது. கணேஷ் எதிர்பார்த்தான். கண்கள், காதுகள், மனம் எல்லாவற்றையும் திறந்துகொண்டு அந்த நிசப்தத்தைத் துருவினான். நிகழவில்லை.

‘‘மண்டபத்துக்கு போகலாம்’’ என்றான் தயக்கத்துடன். மண்டபத்தைக் அணுகினார்கள். மரத்தின் அடியில் நின்றார்கள். மேலே அண்ணாந்து பார்த்து வசந்த், ‘‘ஹலோ செக்... ஒண், டு, த்ரி.. ஆர் யு தேர்,’’ என்றான்.

மௌனம். ‘‘என்ன பாஸ் இன்னிக்கு லீவா அதுக்கு?” என்றான். யாரும் பேசவில்லை.

‘‘என்ன சிரிக்கிறீங்க?’’

‘‘நான் சிரிக்கலை.’’

‘‘பின்னே?’’

கணே**ஷு**க்கும் அந்தச் சிரிப்பொலி கேட்டது. ஒரு டேப் ரிகார்டர் கொண்டு வந்திருக்கலாமே என்று யோசித்தான். கவனித்தான். குமாரவியாசன். ‘‘அங்க பாருங்க?’’ என்றார்.

‘‘எங்கே?’’

‘‘அங்கே! இடது பக்கம். தண்ணிப் பக்கம்...’’ அங்கே அந்தப் பெண் தெரிந்தாள். சுனைக் கரையில் மேலும் கீழும் நடந்து கொண்டு தலை குனிந்து கொண்டு கைகளை மார்பின் முன் பிணைத்துக் கொண்டு அடிமேல் அடியெடுத்து வைத்து நிதானமாகச் சிந்தனையில் நடந்து கொண்டிருந்தாள்.’’ கவனி சரியாக கவனி கணேஷ்’’

அவள் பாதங்கள் தெரிந்தன. இருந்தும் அவைகள் நிலத்தில் அழுந்திப் பதிவதாகத் தெரியவில்லை. நடக்கும் சப்தம் கேட்கவில்லை. காற்று அடித்ததில் அவள் உடைகள் அலைவதாகத் தெரியவில்லை. வெளீர் நீலப்பெண். உடம்பு பூராவும் வெளீர் நீலத்தில்

tamilpdffree.wordpress.com

சிற்சில வித்தியாசங்கள். இங்கிருந்து அவளுடைய பக்கவாட்டுத் தோற்றத்திலும் அவள் லீனாவைப் போலிருப்பது தெரிந்தது.

“மை காட். வசந்த், என்னைப் புடுச்சுக்குங்கோ!... என் மாதிரியே! என் மாதிரியே...”

“பயப்படாதே லீனா!”

“ஷ்ஷ்....” என்றான் குமாரவியாசன். அவர் கை தன்னை அறியாமல் கணேஷின் தோளில் படரத் திடுக்கிட்டான். “கணேஷ்! வாங்க போயிறலாம்,” அவர் கை ஈரமாக நடுங்குவது தெரிந்தது. கணேஷ் ரகசியமாக, “கொஞ்சம் இருங்க!” என்றான். “வேண்டாம். வேண்டாம் சுடாதீங்க.”

“வசந்த்! காமிரா! காமிரா!”

அவன் காமிராவை எடுத்து முதலில் இயக்கினான். க்ளிக் என்றது. ப்ளாஷின் ஒரு வெளிச்ச வெட்டு. கணேஷ் டார்ச் அடித்தான். அந்த ஒளி அதன் மேல் படாமல் ஊடுருவிச் சென்றது போல் இருந்தது. கணேஷ் துப்பாக்கியை எடுத்துக் குறி பார்த்தான்...

“கணேஷ் எனக்கு பயமாயிருக்கு வேண்டாம்.”

“டுமீல்.” தூரத்தில் சிறிய குன்று ஒன்றில் எதிரொலித்து மறுபடியும் அந்த டுமீல் சிறியதாகக் கேட்டது. மரப்பறவைகள் அட்டகாசமாகச் சிறகடித்துச் சப்தமிட்டுப் பறந்தன.

அவள்–அது இன்னும் நடந்துகொண்டிருந்தது. இவர்கள் இருப்பதையே கவனிக்கவில்லை போல தனக்கென்றே பிரத்தியேகச் சிந்தனையில் முழுவதும் மூழ்கிவிட்டது போல...

டுமீல் டுமீல், கணேஷ் மற்றும் இரண்டு முறை சுட்டான். “ம்**ஹூ**ம்!”

வசந்த் தடுமாறி ஃப்ளாஷ் சாதனத்தை நீக்கிவிட்டு மற்றொரு க்ளிக்கினான். கணேஷ் யோசித்தான். “நீங்க இருங்க நான் கிட்டப்போய்ப் பார்க்கிறேன்...”

“பாஸ்! எங்கயாவது ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆயிடப்போவுது...”

“இரு வசந்த்...” கணேஷ் மெல்ல அந்த உருவத்தை அணுகினான். லீனா இரண்டு கண்களையும் பொத்திக்கொண்டு வசந்த்தின் பின்னால் ஒண்டிக்கொண்டிருந்தாள். குமாரவியாசன். “வேண்டாம். வேண்டாம் மிஸ்டர் கணேஷ்.. போகாதீங்க போகாதீங்க!” என்றார்.

கணேஷ் செலுத்தப்பட்டவன்போல் அதை நோக்கி நடந்தான். இது ஒரு சவால். அவனுடைய சிந்தனா சக்தியை நம்பிக்கைகளையெல்லாம் தகர்க்கும் இந்த ஆபத்தத்திற்கு முடிவு கட்டியே ஆகவேண்டும். வேண்டாம் கணேஷ்! வேண்டாம் என்று மன ஓரத்தில் ஒரு குரல் கேட்டுக்கொண்டே இருக்க அதை மீறி நடந்தான். “பாத்துர்றது இதை” என்று ஒரு பிடிவாத வைராக்கியத்துடன் நடந்தான்.

அந்தப் பெண் மேலும் கீழும் நடந்துகொண்டிருந்தது. அருகே...அருகே...

“கணேஷ்! ப்ளீஸ்! கணேஷ்!”

“பாஸ், வந்துருங்க. வேண்டாம்.”

tamilpdffree.wordpress.com

அந்தப் பெண் தெரிந்தாள். கிட்டத்தில் சோகை பிடித்த உதடுகள். கழுத்தில் கையில் எதுவுமில்லை. வெளிர் நீல ஸாரி... முகத்தில் கண்ணீர்... இதோ இதோ. அணைப்பதற்கு அருகே கணேஷ் நெருங்கித் தன் இரண்டு கைகளையும் நீட்ட...

சுரீர் என்று அவன் உடம்பு பூராவும் பரவியது அந்த அடி. அம்மா என்ற கன்னத்தைப் பிடித்துக்கொண்டு அப்படியே சாய்ந்து சற்றுத் தடுமாறிச் சகதியில் விழுந்தான். அவன் நினைவிழப்பதற்கு முன் அந்த உருவம் மெல்ல மெல்ல... அங்கிருந்து சிறிதாகி விலகுவதும் அது இப்போது சிரிப்பதும் கேட்டது. சிரிப்பலைகள் எங்கும் வியாபித்து இங்கே அங்கேனே எங்கும் ஒலிப்பது போல் கேட்க கணேஷ் முழுவதும் நினைவிழந்தான்.

ஜன்னலுக்கு வெளியே ஒரு குருவி ரீச் கிரீச் என்றது. சூரிய வெளிச்ச வெள்ளம் தரையைத் தொட்டுக் கட்டிலில் மடங்கி கணேஷின் மூடியிருந்த கண்களில் பட்டு ரத்த திரையாகத் தெரியக் கண்விழித்துக் கண்கூசினான்.

‘‘அப்பாடா! குட்மானிங்!’’ என்றான் வசந்த்.

விழிகளை அசைத்து அவனைப் பார்த்தான்.

‘‘எப்படி இருக்கீங்க?’’ வசந்த் அவன் கழுத்தில் தொட்டுப் பார்த்தான்.

‘‘வலி.’’ என்றான். உடம்பு பூரா ஊமை வலி, ‘என்ன ஆச்சு?” என்றான் பிரயாசத்துடன்.

“என்ன ஆச்சு! அடிச்சிறுச்சு உங்களை! ச்ச்ச்ச்...கன்னத்தில் பாருங்க”

கணேஷ் கன்னத்தை தடவிக்கொண்டான். வலித்தது. “கண்ணாடி!” என்றான்.

கண்ணாடியில் வலது கன்னத்தில் சிவப்பாகச் சூட்டுக் காயம்போல ஒரு கோபித்த தழும்பு தெரிய, “பொசுக்குனு விழுந்திட்டிங்க பாஸ்! அப்படியே எனக்கு வெலவெலத்துப் போச்சு கை கால் நின்னு போச்சு! இந்தப் பொண்ணு குய்யோ முறையோன்னு கத்துது. வியாசர் அங்கேயே பாத்ரூம் போயிட்டார். நான் ஒன்டியாளு. கிட்ட வர பயம்...என்ன பாஸ்! வேண்டாம் வேண்டாம்னு அடிச்சிக்கிட்டேன். ஒரு வழியா தைரியத்தை உண்டாக்கிக்கிட்டு உங்களைக் குண்டு கட்டா தூக்கி... என்ன கனம்! வெய்ட் போட்டிருக்கிங்க!”

“ஸாரி...”

“பிழைச்சிங்க! ஆமா! என்னதான் செஞ்சுது? கடிச்சிடுச்சா?”

“இல்லை”

“கிட்டப் போனிங்க. அய்யோன்னு சப்தம் கேட்டுது. குப்பையா விழுந்துட்டிங்க! அறைஞ்சிதா!”

“இல்லை”

“பின்ன?”

“ப்ளீஸ்!”

“ஸாரி. தொந்தரவு பண்றேன். தூங்குங்க”

tamilpdffree.wordpress.com

“ஜன்னல்...”

“இதோ சாத்திடறேன்”

ஜன்னல் திரைகளை வசந்த் மூட, கணேஷ் மறுபடி கண் மூடினான் தூக்கமா அது. ஏதோ அவனை உள்ளுக்குள் இழுத்தது. மறுபடி அந்த இடத்திற்கு நடந்து போனான். சிரிப்பொலி.... பெண்ணுருவம். கண்ணீர்... சாம்பல் நிறக் கண்ணீர். வெளிர் நீல முத்துக்கள். ஏன் அழுகிறாள். ஏன் சிரித்தாள். யார் அது... என்ன அது? மளார் என்று ஒருஅறை... அடித்தாளா, கடித்தாளா? கன்னத்தில் ஒரு சின்ன நெருப்பு. கணேஷ் ஓடினான். இரைக்க இரைக்க ஓடினான். ஏதோ நீளமான பாதையில் ஒரே ஒரு மைல்கல் தெரிய அதை நோக்கி ஓடினான். மைல்கல் கிட்டக்கிட்ட எட்ட எட்டப் போய்க் கொண்டிருக்க எத்தனை நேரம் ஓடுவது. இரைத்து இரைத்துக் காய்ந்து சுக்காகி தேகத்தில் இருந்த தண்ணீர் எல்லாம் வற்றிப்போய் பசி தாகம் பார்க்காமல் ஓடினான். எட்டாத மைல்கல் அது. களைத்து விழுந்தான். இந்தப் பாதையிலேயே உறங்கிப்போனான்,

பிற்பகல் ஒரு மணிக்கு எழுந்தான். கொஞ்சம் உடம்பு முடியும் போல இருந்தது. அறையில் சுற்றிலும் பார்த்தான்.

வசந்த் எங்கே? கட்டிலுக்கு அருகே மேசை மேல் ஒரு காகிதம் இருந்தது. “பாஸ்! எழுந்ததும் கூப்பிடுங்கள், அவுட் ஹவுஸில் இருக்கிறேன். மூன்றுமணி வரை.” கணேஷால் எழுந்திருக்க முடிந்தது. உடல்வலி சற்றுக் குறைந்திருக்க அகலமாகப் பல் தேய்த்தான். கதவு திறந்து திடுதிடுவென்று நுழைந்தான். படுக்கையைப் பார்த்து, ‘அட ஆளைக்காணம்!’ என்றான்.

“இங்க இருக்கேண்டா!” திரும்பிப் பார்த்து, “ஒரு நிமிஷம் வெலவெலன்னு உதறிடுச்சு!”

“ஏன்?”

“ஏதாவது இட்சிணி வந்து தூக்கிட்டுக் கீக்கிட்டுப் போயிருச்சோன்னு.”

கணேஷ் திராணியில்லாமல் சிரித்தான்.

“யு ஆர் கெட்டிங் ஸூப்பர்ஸ்டிஷஸ்”

“இல்லை. நெர்வஸ்”

“வசந்த், நீ உடனே மெட்றாஸ் போகணும்”

“உங்களை விட்டுட்டா”

“ஐம் ஆல்ரைட் நௌ!”

“ராத்திரி மறுபடி உங்களுக்கு வந்துதுன்னா!”

“வராது நாம தேடிக்கிட்டுப் போனாத்தான்”

“இப்ப சொல்லுங்க. என்ன நடந்தது”

“கிட்டப் போனேன்” துப்பி விட்டுக் கொப்பளித்தான். “தொடப் பார்த்தேன் ஒரு உதறு, அவ்வளவுதான். கீழே விழுந்தேன். நினைவு தப்பிடுச்சு... லீனாவுடைய ரியாக்ஷன் என்ன,”

tamilpdffree.wordpress.com

“பயந்துக்கிட்டு ரூம்ல பூஜை பண்ணிக்கிட்டு இருக்கா. வியாசர்தான் ரொம்ப ஆடிப் பூட்டார். ரூமை விட்டு வெளியே வரலை. பாஸ், ஒண்ணு தெரியறது”

“என்ன?”

“அந்தப் பிசாசு லீனா இல்லை. வியாசர் இல்லை”

“அப்பா! பெரிய கண்டு பிடிப்பு”

“நீங்க ஆரம்பத்தில் சந்தேகப்பட்டீங்களே?”

“நான் நினைக்கிறதையே விட்டுட்டேன். சரி. நீ கிளம்பு சொன்னது எல்லாம் ஞாபகம் இருக்கில்ல?”

“ம்! டாக்டர் பாலகோபால், டெலிகினிஸிஸ், தீபக், உங்களுடைய காப்பி அல்லது சாராம்சம்!”

“எப்ப வரே...”

“இரண்டு நாள். அதுவரை நீங்க அரசமரத்துப் பக்கம் தலைவச்சுப் படுக்காதிங்க”

“நேற்று நீ கூடவந்து ஒண்ணும் புரட்டினாப்பல தெரியலியே!”

“நான் வர்றதுக்குள்ள குடு குடுன்னு முன்னால ஓடினிங்க? முனி ஒரு அடி அடிச்சுது. பர்னால் போட்டுக்கறீங்களா?”

“வேண்டாம். சரியாயிடும்”

“எதுக்கும் ஒரு ஏ.டி.எஸ். எடுத்துக்கலாம். நீங்க என்கூட மெட்றாஸ் வந்துருங்களேன்?”

“இல்லை. நான் இருக்கேன். அ! மறந்தே போய்ட்டேனே! ஃபிலிம் சுருள் இருக்குதில்ல? அதை எடுத்து எக்ஸ்போஸ் பண்ணி ப்ரிண்ட் எடுத்துட்டு வந்துரு...”

“சரி. பாஸ். ஆர் யு ஷ்யூர், தனியா இருப்பீங்களா?”

“இருக்கேன்! போய்ச் சாப்பிடு. ஆறியிருக்கும்”

வசந்த் சற்றுத் தயக்கத்துடன்தான் புறப்பட்டான். கணேஷ் நன்றாக முகம் கழுவித் தலைசீவிக் குளிக்காமல் சட்டை மாற்றிக்கொண்டு வீட்டுக்கு வெளியே வந்தான். வியாசரின் அவுட் ஹவு**ஸு**க்குச் சென்றான். கதவைத் தட்டுவதற்கு முன் எட்டிப்பார்த்தான். அறை காலியாக இருந்தது. கதவு உள் பக்கம் தாளிடப்பட்டிருந்தது. எதிரே இருந்த டாய்ல்ட் கதவு சாத்தி அதனுள்ளிருந்து நீர் சொரியும் உறுமல் கேட்டது.

“என்ன பார்க்கறீங்க?” திடுக்கிட்டுத் திரும்பினான். லீனா. “அடாடாடா! வெங்காயம்! ச்ச்ச்! அருகில் வந்து அவன் கன்னத்தைத் தொட்டுப் பார்த்தாள். லீனாவின் முகத்தை அவ்வளவு அருகே பார்த்ததில் கணே**ஷு**க்கு மறுபடி அந்த முகம் நினைவுக்கு வந்தது. என்ன ஒற்றுமை! இதே முகம்தான். யார் அந்த உருவம்? யார் அவள். இவள் முன்னோரில் யாராவதோ? இருக்கலாம். அதுதான் உருவ அமைப்பில் அத்தனை ஒற்றுமை!

“நேற்றைக்கு நான் பயந்தே போய்விட்டேன் கணேஷ்! உங்களைத் தூக்கிட்டு வர உதவி செய்யலாம்னு ஆசை இருந்தாலும் கிட்டவர அச்சமா இருந்தது. பாவம் வசந்த்தும்

tamilpdffree.wordpress.com

சித்தப்பாவும்தான் தூக்க முடியாம தூக்கி!... கணேஷ் கணேஷ்! நீங்க அதைக் கிட்டப் பார்த்தீங்களா?”

“ஆமாம்”

“என்னை மாதிரித்தான் இருந்தது?”

“ஆமார். அச்சு நீயே போல! ”

“கண்ணு, மூக்கு?”

“எல்லாம்”

“தொட்டீங்களா!”

“தொட முடியலை. அதுக்குள்ள...”

“அடிபட்டாப்பல இருந்ததா?”

“சொல்றது கஷ்டமா இருக்கு”

“அது என்ன கணேஷ்?”

“நீ சொல்லேன். அது என்ன?”

“பூதம்? பிசாசு?”

“அது அது! அவ்வளவுதான்”

“இன்னிக்குப் போய்ப் பார்ப்பீங்களா? நான் வரலை”

“இல்லை” கணேஷ் ஓடி வருபவனை அப்போது கவனித்தான். பெரிய கண்ணன் இரைக்க இரைக்க வந்து. “அய்யா... அய்யா... இல்லீங்களா?” என்றான்.

“அய்யா உள்ளே இருக்கார். என்ன பெரியகண்ணு”

“தோட்டத்திலே தோட்டத்திலே...”

“என்னப்பா?”

“ஒரு செத்த பொணம் கிடக்குதுங்க.”

## 10

**க**ணேஷ் அதிர்ந்துவிட்டான். “வசந்த்! வசந்த்!” என்று உரக்கக் கூப்பிட்டான். லீனா கணேஷ் அருகில் வந்து அவன் தோளைப் பற்றிக்கொண்டு, “கணேஷ் ஸார், என்னை விட்டுடாதீங்க! எனக்குப் பயமா இருக்கு” என்றாள்.

tamilpdffree.wordpress.com

“ஏய்! வசந்த்!” என்றான் முழுத்தொண்டையில்.

மாடியிலிருந்து எட்டிப் பார்த்த வசந்த் “என்ன பாஸ்! கத்தறீங்க!” என்றான்.

“உடனே வா! விபரீதம்!”

“அய்யா! மரத்தாண்டை சவங்கிடக்குதுங்க!”

“ஓ! காட். வர்றேன். உடனே வர்றேன்.”

“பெரியகண்ணு அந்த அம்மாகூட இங்கேயே நில்லு, எங்க பார்த்தே சரியாச் சொல்லு”

“கணேஷ்! எனக்கு பயமா இருக்கு. என்னைத் தனியா விட்டுறாதீங்க!”

“இரு லீனா! நீ வரவேண்டாம். இவன் இருப்பான். வா வசந்த்! போய்ப் பார்க்கலாம்.”

“டெட் பாடியா!” என்றான் வசந்த். ஓடிவந்திருந்தான். இரைத்தான். “எங்கய்யா பார்த்தே?”

“அரசமரத்து மண்டபத்தாண்டே! கொஞ்சம் மேக்கால”

“யோவ்! உனக்காக நான் ஜியாக்ரஃபி படிக்கணுமா? மேக்கு கிழக்கெல்லாம் விடு. எந்தப் பக்கம்! கனைப்பக்கமா?”

“ஆமாங்க!”

“எவ்வளவு தூரம்?”

“கிட்டதாங்க! சகதியில குப்புறக் கிடக்குது. நிறைய ரத்தம்”

“வசந்த் வா! லீனா, இரு!”

“நான் சித்தப்பாகிட்டே போயிட்றேன்!”

“இந்தப் பெண்ணை அய்யா கிட்ட அளைச்சிட்டு போய்யா!”

கணே**ஷு**ம் வசந்தும் அரச மரத்தை நோக்கி நடந்தார்கள். “பாஸ் விஷயம் விபரீதமா போய்க்கிட்டிருக்கும்! கழுத்தறுப்பில் மாட்டிக்கிட்டம்”

கணேஷ் கலவரப்பட்டான். மண்டபத்தை அணுகும்போது எதிர்பார்ப்பில் அவன் இதயம் சுவரைப் பிய்த்துக் கொள்ளுகிற மாதிரி அடித்தது. கை கால்கள் எல்லாம் பரபரப்பு மயிர்க்கால்களில் குறுகுறுப்பு. மூளை அதிவேகத்தில் செயல்பட ‘கொண்டு வா எக்ஸ்ட்ரா ரத்தம்’ என்று கேட்டது. உடல் உடல் என்று போலீஸ் விசாரிப்பு. கேள்விகள், சந்தேகங்கள் சந்தேகப் பார்வையில் தானும் இருப்போம். என்ன செய்வது நடப்பது நடக்கட்டும். முதலில் அங்கே!

அந்த உடல் மண்டபத்திலிருந்து சுனைக்குப் போகும்வழியில் ஏறக்குறைய நேற்று கணேஷ் அடிப்பட்ட இடத்தில்தான் கிடந்தது. குப்புறத்தான் கிடந்தது. தலை ஒரு பக்கம் திரும்பியிருக்க திறந்த கடைவாய் ஓரம் உறைந்த ரத்தம். இரண்டு கைகளும் ‘எல்’ வடிவத்தில் மண்ணில் மடங்கியிருக்க பிராணன்போய் மணிக்கணக்காயிருக்க வேண்டும். உற்சாகக் கட்டெறும்புகள். மூக்கோட்டையில் ஈக்கள் நடுத்தர வயதினன் போல தோன்றினான். மயிக்கற்றை ஒன்று ரத்த மண்ணுடன் கலந்து இறுகியிருந்தது. சட்டை

tamilpdffree.wordpress.com

பாண்ட் அணிந்திருந்தான். ஒரு கால் செருப்பு கழன்று அருகில் கிடக்க வசந்த் சுற்றி வந்தான். சற்றே அருகில் சென்று உற்றுப் பார்த்தான். கன்னத்தில் காயம்.

கணேஷ் தன் கன்னத்தின் காயத்தை தொட்டுக் கொண்டான்.

“டெர்ரிபிள், புரட்டிப்பார்த்தா இன்னும் ரத்தம் தெரியும்.”

“தொடாதே!”

“சேச்சே! நான் ஏன் தொடறேன்! குமட்டுது பாஸ்! இவனைப் பூராவே அடிச்சிடிச்சி! நீங்க தப்பிச்சீங்க!”

“வசந்த்! இவனை நாம எங்காவது பார்த்திருக்கமா?”

“இல்லை” பாண்ட்டில் அங்கங்கே எண்ணெய்க் கறைகள் தென்பட்டன. பழைய பாண்ட்.

“வி. அர் ஸ்டக்! போலீஸ் வந்து விசாரிக்கிற வரைக்கும் நாம இங்கயே இருந்தாகணும்”

“பேயடிச்சுருக்கன்னு சொன்னா அவுங்க நம்புவாங்களா?”

“ம்**ஹூ**ம்;”

“பேய்தான்.... அடிச்சிருக்கு! உங்களுக்கு வந்தது! நினைச்சுப் பார்த்தாக்கூட பயங்கர உதறல்! நீங்க அடிபட்டிருக்க வேண்டியது தப்பிச்சீங்க?”

“வசந்த்! எனக்கென்னவோ...”

முடிப்பதற்குள் ஆட்கள் வரும் சரசரப்புக் கேட்டது. குமாரவியாசன், லீனா, பெரியகண்ணன், மற்றொரு ஆள். லீனா அங்கேயே நின்றள். “நான் வரலை! நான் திரும்பிக்றேன். பயமா இருக்கு!”

“ஷட் அப் லீனா,” என்று சொல்லிவிட்டு வியாசன் நெருங்கினார். பெரியகண்ணனும், அந்தப் புதிய ஆசாமியும் சுற்றி வந்தார்கள். வியாசர் அந்தப் பிணத்தின் முகத்தைப் பார்த்தார்.

கணேஷ், “இந்த ஆளைத் தெரியுமா உங்களுக்கு?” என்றான்.

“ம்**ஹூ**ம்...!”

“அட! இவனை....” என்று பெரியகண்ணன் ஆரம்பித்து உற்றுப்பார்த்தான். “என்னய்யா, இவனைப் பார்த்திருக்கியா?”

“பார்த்த முகமா இருக்குது கந்தசாமி. புரட்டு!”

“அய்ய! நான் தொடமாட்டேங்க! பேயடிச்ச கே**ஸு** !”

“வேண்டாம். போலீஸ் வரட்டும். வசந்த்! மிஸ்டர் வியாசன் ரூமுக்குப் போய் போலீசுக்கு டெலிபோன் செய்துடு. எங்கய்யா பார்த்தே?”

“கொஞ்சம் நாளைக்கு முன்னாலே தோட்டத்தில் இந்த ஆளைப் பார்த்தா ஞாபகம் இருக்கு எசமான்”



tamilpdffree.wordpress.com

“எத்தனை நாளைக்கு முன்னே?”

வியாசன் அவசரமாக, “அதெல்லாம் போலீஸ் வந்து பார்த்துக்கட்டும்” என்றார்.

லீனா வசந்த் பின்னால் ஒட்டிக் கொண்டு அவசரமாக ஓடுவதை கணேஷ் பார்த்தான். குமாரவியாசன் மிகுந்த சிந்தனையுடன் பைப்பைக் கடித்துக் கொண்டு நடந்தார். “கணேஷ் கொஞ்சம் வாங்க,” என்று அவனை அணைத்து மண்டபத்துக்கு அருகில் அழைத்துச் சென்றார். “எனக்குக் கவலையா இருக்கு.” என்றார்.

“என்ன?”

“இது இரண்டாவது கொலை”

“புரியலை”

“லீனா செஞ்ச இரண்டாவது கொலை”

“அப்ஸர்ட்”

“இல்லை கணேஷ். இரண்டு வருஷத்துக்கு முந்தி ஏறக்குறைய இதே இடத்தில் அந்த உடலைப் பார்த்தேன், மறைச்சேன். இப்ப மற்றொரு உடல் மறைக்க முடியாது! எப்ப இறந்திருப்பான்னு சொல்ல முடியுமா?”

“ரத்தம் பூரா உறையிலை, காலைலதான் இறந்திருக்கான்!”

“அதிகாலையுல சூர்யோதயத்துக்கு முந்தி லீனா உங்க ரூமுக்கு வந்தாளா?”

“இல்லை, ஆனா நான் படுத்திருந்தேன்.”

“அப்ப! அவ உங்க ரூமுக்கு வரலை. இங்க வந்திருக்கா கொலை செய்ய!”

“அபத்தம்”

“நீங்க ரெண்டு வருஷத்துக்கு முந்தி நடந்ததை பார்க்கலை. நான் பார்த்தவன். ஓ மைகாட். அவ கதியை நினைச்சா எனக்கு பகீர்ங்குது.”

“லீனாவையே கேட்டுப் பார்த்துடலாம்...”

“அவளுக்கு நினைவே இருக்காதே! செலுத்தப்பட்டுன்னா அவ செய்யறா! இப்ப போலீஸ் வந்து ஃபிங்கர்ப்ரிண்ட் ஏதாவது எடுத்து அவபேர்ல...”

“அவ செய்யலை மிஸ்டர் வியாசன்” என்றான் ஆணித்தரமாக.

“எப்படிச் சொல்றீங்க?”

“கொலை செய்ய எத்தனை பலம் வேணும்? எத்தனை வெறுப்பு வேணும்? மர்டர்னா சும்மாவா!”

“அந்த பலம் அவகிட்ட கிடையாதுன்னு சொல்றீங்களா?”

“கிடையாது”

tamilpdffree.wordpress.com

“அந்தச் சமயத்தில்?”

“எந்தச் சமயம்? உளறாதிங்க!”

“நேற்று நீங்க பார்க்கலை! அதனுடைய பாதிப்பில நீங்களே அறை வாங்கிண்டிங்க. மறந்திட்டிங்களா?”

மறக்கவில்லை. இன்னும் அந்த வலி மிச்சமிருந்தது. நேற்று பார்த்த உருவம் என்ன என்கிற பகுத்தறிவுக்கு அகப்படாத கேள்வி இன்னும் மிச்சமிருந்தது.

“கொலை செய்தது சாதாரண லீனா இல்லை. நேற்று வந்த பிசாசு அவளுக்குள்ளே புகுந்து அவளுக்கு அமானுஷ்ய சக்தி ஏற்பட்டு...இது எந்த கோர்ட்டில் செல்லும்.”

“எனி வே போலீஸ் வரட்டும்!”

முதலில் ஒரு கொலை. அப்புறம் இது. மற்றொருமுறை உடலைப் பார்த்தான். அது திடீரென்று மறைந்து போனாலும் ஆச்சர்யமில்லை.

அரைமணியில் போலீஸ் வந்தார்கள். இன்ஸ்பெக்டர் சற்றுகுள்ளமாக இருந்தார். பென்ஸில் மீசையும் சற்று மை தீட்டினாற்போலக் கண்களும் ரோமம் நிறைந்த கைகளுமாய் துடிப்பாகக் கான்ஸ்டபிள்களுடன் ஜீப்பில் வந்து இறங்கினார். கணேஷைச் சந்தேகப்பார்வை பார்த்துவிட்டு, “எங்கய்யா?” என்றார்.

சுட்டிக்காட்டப்பட்ட உடல் அருகே சென்று ஒரு முழங்காலில் குனிந்து அந்தக் கையை உயர்த்திப் பார்த்தார். சற்றுப் புரட்டிப் பார்த்தார். ரத்தச் சேறு. சுற்றிலும் பார்த்தார். உடலுக்கு கீழே ஆராய்ந்தார். தடயங்கள் தேடினார். மிகமிக ஜாக்கிரதையாக உடலின் அடியில் இருந்த ஒரு பொருளை எடுத்துத் தன் கையிலிருந்து கைக்குட்டை எடுத்து அதில் மடக்கிக்கொண்டார். கீழே கிடந்த செருப்பை எடுத்துத் திருப்பிப் பார்த்தார். மண்டபத்திலிருந்து உடல்வரை பூமியில் நிதானமாக ஆராய்ந்தார். அங்கிருந்து சுனைவரை நடந்தார். மற்றொரு பொருளை பொறுக்கிப் பத்திரப்படுத்தினார்.

“நீங்கள்லாம் கொஞ்சம் விலகியே இருங்க! பிரேதத்தை யாரும் தொடலியே?”

“இல்லிங்க!”

“முதமுத பார்த்தது யாரு?”

பெரியகண்ணன் தயங்கி, “நாந்தாங்க.” என்றான்.

“என்ன பார்த்தே?”

“சவங்கிடக்குது. அதான். குப்புறக் கிடக்கிறதை...”

“இந்த ஆள் யாரு தெரியுமா?”

பெரியகண்ணன் சொல்ல ஆரம்பிக்க வியாசன் குறுக்கிட்டு,” சரியாத் தெரியலை இன்ஸ்பெக்டர்!”

“முகம் பாதி மறைஞ்சிருக்கு. புரட்டுய்யா!”

tamilpdffree.wordpress.com

உடல் நிமிர்த்தப்பட்டது. கை மறுபடி மடங்கி விழுந்தது. இப்போது அந்த முகம் தெரிந்தது. திறந்த வாய் கழுத்துப் பக்கத்தில் ரத்த வெட்டு. கணேஷின் வயிற்றை கலக்கியது. திரும்பிக்கொண்டான். "எறும்பு மொய்க்குது" என்றான் கந்தசாமி உடலைப் பார்த்து. வசந்த் திரும்பி வந்தான்.

"லீனா எங்கே"

"முதுகுக்குப் பின்னால் ஒளிஞ்சுண்டுருக்கா!"

"சரிதான்" ஒரு கண் மட்டும் பயத்துடன் எட்டிப் பார்த்தது.

வசந்த், கணேஷ் அருகில் வந்து தாழ்ந்த குரலில், "போலீஸ்கிட்ட நேற்று பார்த்ததை எப்படிச் சொல்லப் போறீங்க" என்றான்.

"அப்படியே"

"நம்புவாங்களா?"

"அதைப் பற்றிக் கவலையில்லை, லீனா, நீ இன்னிக்குக் காலையிலே..." வேண்டாம். அவர்களே கேட்டு விசாரிக்கட்டும், லீனாவை நேராகப் பார்த்தான். பயக்கண்கள். இவளா! சே! சட்டென்று மனத்தில் சில காட்சிகள் மாறின.

'ரத்தம் என்ன அழகான நிறம். பார்த்திங்களா. சிவப்பு கூட இல்லை, சிவப்பில் கொஞ்சம் கறுப்பு. லேசா நீலம் கலந்து அந்த அணில்! செத்துப்போயிருக்கும் இல்ல? நான் காலை உடைசிட்டேன் போல இருக்கு. அதனால்தான் அதால ஓட முடியல்லை. சின்ன எலும்பு! மளுக்குனு உடையறபோது சப்தம் கேட்டுது.'

யார் நீ லீனா!

இவளுக்குள் ஒரு மூர்க்கம் இருக்கிறதா! குழம்பினான். முதலில் ஒரு அருவம். லீனாவின் வடிவில் ஒரு உருவம். நகரும் புத்தகம். காலி அறையில் மக்கள் குரல். நேற்று பட்ட அடி. இந்த உடல்! என்ன சம்பந்தம்!

இன்ஸ்பெக்டரும் குமாரவியாசனும் பேசிக்கொண்டு வந்தார்கள். "நான் பார்த்துக்கறேன் கவலைப்படாதீங்க. ஆளு யாருன்னு முதல்ல தெரியணும். இந்த எஸ்டேட்ல யார் யார் இருக்காங்க? விவரம் வேணும். இவரு யாரு மிஸ்டர் வியாசன்!"

"லாயர் கணேஷ்!"

"அப்படியா நீங்கதானா?" என்று ஒருமுறை அவன் உடல் முழுவதையும் பார்வையால் வருடினார்.

"என்னால் ஹெல்ப் பண்ண முடியும்" என்றான்.

அவர் கவனிக்காமல், "இது யாரு?"

"லீனா. என் அண்ணன் மகள்"

"பொம்பளைங்க வேறு யாரும் இருக்காங்களா?"

"வேலைக்காரிங்க ரெண்டு பேர் இருக்காங்க"



tamilpdfree.wordpress.com

“வாங்க வீட்டுப் பக்கம் போகலாம். எனக்கு எங்கங்க வேலை இருக்குது.”

“நீங்க என்ன நினைக்கிறீங்க?”

“மர்டர்தான். கழுத்தில மார்ல பெரிய காயம்”

“ஏதாவது தடயங்கள் கிடைச்சுதா?”

“ம்..!”

சட்டென்று நின்ற இன்ஸ்பெக்டர் லீனாவைக் கூர்ந்து கவனித்தார். “கொஞ்சம் கிட்ட வாங்க” என்றார்.

அவள் பயத்துடன் “ஏன்?” என்றாள்.

தயங்கி வந்தாள்.

“காதைக் காட்டுங்க....எங்கே?...”

கணேஷ் அவள் காதைக் கவனித்தான். ஒரு காதில் ஸ்டட் இருந்தது.

“அந்தக் காது?”

மற்றக் காது வெறுமையாய் இருந்தது.

இன்ஸ்பெக்டர் தன் பையிலிருந்து கைக்குட்டையை எடுத்து அதை ஜாக்கிரதையாகப் பிரித்துக் காட்டினார். “இதைப் பாருங்க!”

“காது ஸ்டட்!”

“இது உங்களுதுதானா?”

“ஆமாம்! இது எப்படி?” லீனா தன் காதைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள். “கீழே விழுந்திருக்கு! தாங்க்ஸ்!” என்று அதைக் கைக்குட்டையிலிருந்து எடுத்துக்கொள்ள முற்பட்டாள்.

“தொடாதீங்க!” என்று மறுபடி அதை மடித்துப் பத்திரப்படுத்திக் கொண்டார்.

“இது எப்படி உங்களுக்குக் கிடைச்சுது?” என்றாள் ஒரு குழந்தையின் அறியாமையுடன்.

“சொல்றேன்” என்றார்.

கணேஷ் அதிர்ச்சி அடைந்தான். இறந்த உடலின் அடியிலிருந்து அவர் அதை எடுத்துக் கைக்குட்டையில் வைத்து மடக்கிக் கொண்டது ஞாபகம் வந்தது. கான்ஸ்டபிள்கள் லீனாவை ஒருவிதமாகப் பார்க்கலாயினார். “வாங்க எல்லோரும். சக்திவேல் நீங்க வண்டி வர்றவரைக்கும் இங்க இருங்க! டெலிபோன் எங்க இருக்குது?”

“சரி வாங்க காட்டறேன்” என்றார் வியாசன். “விசாரிப்பை இப்பவே துவங்கிடுவீங்களா!”

“ஆமாம்... மிஸ்டர் கணேஷ். இவர் யாரு!”

tamilpdffree.wordpress.com

"என் பேர் வசந்த். நைஸ் மீட்டிங் யூ இன்ஸ்பெக்டர்"

"உங்களைப் பத்தியும் கேள்விப்பட்டிருக்கேன்... நீங்க எதுக்கு இங்க வந்தீங்கன்னு எனக்கு அப்புறம் சொல்லுங்க! நீங்க போகலாம்."

கணேஷ் தயங்கி நின்றான். லீனா அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள். என்னை விட்டுடாதீங்க!

"போங்க! மிஸ் லீனா! கொஞ்சம் வரீங்களா! உங்களைக் கொஞ்சம் விசாரிக்கணும்"

## 11

அதிகாரி லீனாவை அவுட்ஹவுஸுக்கு அழைத்துச் செல்ல கணேஷ் கலவரத்துடன் பார்த்தான். "ஷி ஈஸ் இன் ட்ரபிள்." என்றான். அவர்கள் அறைக்குள் நுழைவதைப் பார்த்தான். ஆஸ்பத்திரி வண்டி உறுமிக் கொண்டு வந்து நின்றது. வசந்த், "இப்ப என்ன?" என்றான்.

"உடனே மெட்றாஸ் போ. நாளை சாயங்காலத்துக்குள்ள வந்துரு"

"போலீசுக்கு நான் போறதைத் தெரிவிக்க வேண்டாமா?"

"ஏன்?"

"திடீர்னு உங்களை உங்க ஃப்ரெண்டு எங்கேன்னு கேட்டு, நீங்க மெட்றாஸுன்னு சொல்லி என்னைச் சந்தேகப்பட்டு உள்ள தள்ளிட்டா? பாடி தாங்காது பாஸ்!"

"நடக்காது. இப்ப முதல் சந்தேகம் லீனா பேரில். அவள் காதணி உடலுக்குப் பக்கத்தில் கிடைச்சிருக்கு, அதை வெச்சுட்டுத்தான் குடையப் போறாங்க."

"எதுக்கும் நான் போறதைப் போலீசுக்கிட்டயும் ஒரு வார்த்தை சொல்லிடலாமே!"

"அது கூடச் சரிதான்," கணேஷ் அந்த அறைக்குச் சென்று கவனிக்க ஒரு சந்தர்ப்பதை வரவேற்றான். "வா."

அவுட்ஹவுஸ் அறையிலிருந்து இன்ஸ்பெக்டரின் குரல் சற்று அதட்டலாகவே கேட்டது. "எப்படி அந்த இடத்தில் விழுந்திருக்க முடியும்னு உங்களாலே சொல்ல முடியுமாம்மா?"

"தெரியாது," லீனா.

"நீங்க அந்தப் பக்கம் போகவே இல்லியா?"

"எப்ப?" என்றாள்.

"எப்ப? நீங்க சொல்லுங்க. உங்களை நான் கேக்கறேன்"

"நேற்று"

tamilpdffree.wordpress.com

"தனியாகவா?"

"இல்லை. நாங்க நாலு பேர். நான், சித்தப்பா, கணேஷ், வசந்த். பிசாசைப் பார்த்தோம்."

"என்னது?"

"ஆமா சார் பிசாசு!"

"இத பாருங்க, இந்தப் பிசாசு பிசினஸ் எல்லாம் அப்புறம் வெச்சுக்கலாம்"

"இன்ஸ்பெக்டர், நீங்க அதை லைட்டா எடுத்துக்காதீங்க!" என்றார் வியாசன்.

"முதல்ல பூமியிலே நடக்கிற, நடந்த சமாசாரங்களைப் பார்த்துட்டு, அப்புறம் ஆவியுலகத்துக்குப் போகலாம் என்ன?"

இன்ஸ்பெக்டர் ஜன்னலில் கணேஷைப் பார்த்து விட்டார். "என்ன மிஸ்டர் கணேஷ், எட்டிப் பார்க்கறீங்க?"

"வசந்த், இப்ப மெட்றாஸ் போகணும்"

"போய்ட்டு வந்துருவாரில்ல?"

"வந்துருவேன் நாளைக்கே" என்றான் வசந்த்.

"தாராளமா போய்ட்டு வாங்க. நீங்க இப்ப தேவையில்லை எனக்கு"

"நீங்க இந்தப் பெண்ணை எப்படி விசாரிக்கிறீங்க?"

அவர் புருவங்கள் சுருங்கின. "ப்ரிலிமினரி, ஏன்?"

"லீனா, நீ ஜாக்கிரதையாய் பேசணும்"

"என்ன என்னவோ கேக்கறார் கணேஷ்!"

"கணேஷ், நீங்க போறீங்களா?"

"இன்ஸ்பெக்டர் நீங்க அரெஸ்ட் பண்ணப் போறீங்களா?" என்றான் வசந்த்.

"ஏன்?"

"அரெஸ்ட்னா உடனே ஒரு ரிட்டு போடலாம்னுட்டு. ஹேபியஸ் கார்ப்பஸ்! ஆர்ட்டிக்கிள் 22'ன்படி நீங்க கைது செய்யற ஆள்கிட்ட எதுக்காகக் கைது செய்யறோம்னு சொல்லணும்!"

இன்ஸ்பெக்டர் வசந்த்தை ஒருவித எரிச்சலுடன் பார்த்து, "கவலைப்படாதீங்க. அரெஸ்ட் பண்றதுக்கு முன்னால உங்ககிட்ட லா கேட்டுட்டுச் செய்யறேன். பெரிய பேச்சுப் பேசறீங்களே செக்ஷன் 334 தெரியுமா?"

"பின்ன எதுக்கு மடக்கி வைச்சுட்டு அவளைக் கேள்வி கேட்கணும்?"

tamilpdffree.wordpress.com

“எனக்கு இந்த மாதிரித் தறுதலை லாயர்களுக்கெல்லாம் பதில் சொல்லிக்கிட்டிருக்க வேண்டியதில்லை”

“தறுதலை? பாஸ், கேட்டீங்களா? தறுதலைங்கறார்? உடனே டெஃபமேஷன்!”

“வசந்த்! சும்மா இரு! இன்ஸ்பெக்டர், நீங்க விசாரிக்கலாம். ஆனா லீனாவுடைய லாயர்ங்கிற முறையில் நான் இருக்கலாமில்லையா?”

“அவர் ஜூனியர்ங்கிற முறையில் நானு?”

“எதுக்கு? யாருடைய உரிமையும் பறிபோறதில்லே கணேஷ் இப்ப! சும்மா அடாவடித்தனம் செய்யாதீங்க! அனாவசியமா என்னை ப்ரவோக் பண்ணி நிலைமையை இன்னும் மோசமாக்காதீங்க. நீங்க படிச்ச லா நானும் படிச்சிருக்கேன்.”

“334 எப்படி இதுக்குப் பொருந்தும்?” என்றான் வசந்த்.

“அடப் போய்யா?” என்று கத்தினார்.

“வசந்த் நீ போ. நான் பார்த்துக்கறேன்”

“சும்மா சத்தம் போடறார்! நான் வரேன் பாஸ்!”

‘அவுங்க முதல்ல செத்தது யாருன்னு கண்டுபிடிக்கணும். அதுக்கப்புறம்தான் சந்தேகங்கள். நீ போ!”

“எதுக்கும் நீங்க பக்கத்திலே நிக்கலாம்.”

“இப்ப வேண்டாம். வசந்த், நான் சொன்ன விஷயங்கள்!”

“போட்டோ, உயிலுடைய பிரதி...”

“பிரதி முக்கியம். முடியலைன்னா உயிலுடைய சாராம்சம்.”

“டன்! அப்புறம் டெலிகிராஃபிஸ், தீபக், அப்புறம் பி.கே. கிருஷ்ணமூர்த்தி”

“அது யாரு?”

“சஸ்பென்ஸ். கண்டுபிடிங்க,” என்றான்.

“யார்றா அது?”

“சொல்ல மாட்டேன். ராத்திரி பூரா ரூம்லயே போட்டு உளைஞ்சு பாருங்க. ரத்தக் காட்டேரியைச் சந்திக்கப் போயிறாதீங்க?”

“இல்லை”

வசந்த் புறப்பட்டவன் நின்று திரும்பி வந்தான். ‘பாஸ், திடீர்னு இன்னொரு விஷயம் ஞாபகம் வந்தது. தமிழ்வாணன் புஸ்தகம் ஒண்ணுல சினி ப்ரொஜக்டர் போட்டு பனித்திரையிலே பிசாசு மாதிரிப் படம் காட்டறதா வர்றது. அப்படி ஏதாவது இருக்குமோ? யாராவது படம் காட்டறாங்களா?”

tamilpdffree.wordpress.com

“பனியும் இல்லை திரையும் இல்லை. வெட்டவெளியில அது தெரியுது. கிட்டப்போனா அடிச்சிருக்கு! வசந்த், இந்த தியரி எல்லாம் அப்புறம் பார்க்கலாம். முதல்ல தகவல் என்ன?”

“தகவல் ரைட் யூ ஆர். நாளைக்குத் தகவல் திலகமா வந்து சேர்றேன். கொஞ்சம் ஆசீர்வாதமும் ஐம்பது ரூபாய் சில்லறையும் தர்றீங்களா?”

வசந்த் சென்றதும் கணேஷ் சற்று நேரம் அங்கேயே நின்றான். பி.கே.கிருஷ்ணமூர்த்தி– யாமே! யாராது? அவுட்ஹவுஸிலிருந்து வியாசன் குரலும் இன்ஸ்பெக்டரின் குரலும் ஒலித்தன. அங்கே வேண்டாம் என்று தீர்மானித்து மெல்லத் தன் அறைக்குச் சென்றான். ஜன்னலில் சாயங்காலச் சூரியன் இருளை முன்மொழிந்து கொண்டிருந்தது. கணேஷ் ஹால் விளக்கைப்போட்டு நிலைக்கண்ணாடியில் நின்றான். கன்னத்தின் வடு கருஞ்சிவப்பில் இருந்தது. ஒரு கன்னத்தில் அப்படி அடிக்கக் கூடியது அந்த ஆளை அடித்து வீழ்த்துவது எம்மாத்திரம்? அது என்ன?

‘அது என்ன... அது என்ன...?’ என்று கேட்டுக்கொண்டே குழம்பினான். அந்த நகர்ந்த புத்தகம் மேஜை மேல் இருந்தது. அந்தப் பனை ஓலை அதே பக்கத்தில்தான் இருந்தது!

“கார்த்திகை மாதம் இரண்டு வருஷங்களுக்கு ஒருமுறை வருவதிலும் தவறுவதில்லை”

வரிகளைத் தாவினான்.

“இதற்மென்றே வியாசர்கள் பெண் பேறு பெற்றால் பிறந்த தினமே குளத்தில் போட்டு விடுவதும் உண்டு.”

வியாசர்கள்! குமாரவியாசன்!

அடுத்த பக்கத்தைப் புரட்டினான். கவிதை!

## மரணக்குறிப்பு :

“மரணமது அறிவதற்குக் குறிப்பைச் சொன்னோம்.

மாலையிலோ காலையிலோ சம்பிக்கும் விரணமென்னும் பொறிகள் எல்லாம் தளர்த்து மெத்த விசை நரம்புதான் குலைந்து விரைத்து வாங்கி நறநறப் பற்கடித்து உதிரம் பொங்கி நா உலர்ந்து மூச்சடைத்து நடுங்கிக் காணும் துரணமென வாதபித்த சிலேற்பம் எல்லாம் துடித்து வரும் விட்டிலைப்போற் துடிக்கும் தானே!

கணேஷ் அந்தப் புத்தகத்தை மேலும் புரட்டுவதற்குள் சட்டென்று அதன் கடைசிப் பக்கத்தைப் பார்த்தான்.

ரதின்ந்னுஷா, செல்லம்மாள், மதவதி கூடிய சீக்கிரத்தில் முடிவு பெறும். வேறு புத்தகங்கள் வேண்டுமானாலும் அனுப்பப்படும். இங்ஙனம் பி.கே.கிருஷ்ணமூர்த்தி, 54 ஜெனரல் முத்தையா, முதலி வீதி, ஜி.டி. சென்னை.

பி.கே.கிருஷ்ணமூர்த்தி! வசந்த் சொன்ன ஆசாமி! வசந்த் இந்தப் புத்தகத்தின் ஆசிரியரைச் சென்னையில் தேடப்போகிறான். கணேஷ் புத்தகத்தின் பதிப்பு வருஷத்தைப் பார்த்தான். 1922! கிருஷ்ணமூர்த்தி உயிருடன் இருந்தால் தொண்டு கிழம்! குட்லக் வசந்த்! வசந்த்தின் அறிவுக் கூர்மையைச் சற்று நேரம் வியந்தான். இத்தனை கலவரத்தின் இடையிலும் அவன் சுவாரஸ்ய உணர்ச்சி பத்திரமாக இருக்கிறது. அந்த இன்ஸ்பெக்டரை

tamilpdffree.wordpress.com

வெறுப்பேற்றியதை நினைத்துப் புன்னகைத்தான். லீனா, கவலைப்படாதே, உன்னை அவர்கள் கைது செய்தாலும் நாங்கள் இருவரும் சேர்ந்தால் எந்தக் கோர்ட்டும் கலகலத்து விடும். லீனாவின் மென்மையான உடலும் அதைத் தற்செயலாக நிர்வாணமாகப் பார்த்ததும் அவன் மனத்தில் வருடின. இவளைப் போய் எப்படி அந்தக் கோரச் செயலுடன் சம்பந்தப்படுத்த முடியும்? நான்சென்ஸ்! இருந்தும் இருந்தும்...

அந்தப் புத்தகத்தின் மற்றப் பக்கங்களில் அவன் சிந்தனை செல்லவில்லை. மூடிவிட்டு ஜன்னலருகே வந்தான். பூராவும் இருட்டியிலிருந்தது. நிலா தாமதித்துத்தான் வரும்போல இருந்தது. சேதப்படப் போகும் கிருஷ்ண பட்சம். தோட்டத்து வாசலில் ஆம்புலன்ஸ் நகர்வதும் குமாரவியாசன் பைப் புகைத்தபடி சற்றுக் கலவரத்துடன் வெளியே வர, கூட வந்த இன்ஸ்பெக்டர் அவருடன் பேசிக் கொண்டு வர, சற்றுத் தயங்கி அருகே நின்ற லீனாவின் கண்களில் கண்ணீருடன் துடைத்துக் கொள்வதைப் பார்த்தாள். போலீஸ் அதிகாரி ஆர்வத்துடன் அதிக பட்சமாகத் தன் கைகளை ஆட்டிப் பேசிக் கொண்டே ஜீப்பில் உட்கார, அவர் புறப்பட, குமாரவியாசன் திரும்பி லீனாவைப் பார்த்தான்.

கணேஷ் படியிறங்கி அங்கே சென்றான்.

“மிஸ்டர் கணேஷ் விஷயம் கொஞ்சம் தீவிரமாய்ப் போச்சு!”

“என்ன?”

“லீனா காலைல தோட்டத்துக்குப் போனதைப் போலீஸ் கிட்ட சொல்ல வேண்டியதாய்டுச்சு!

“யாரு, நீங்க சொன்னீங்களா?”

“இல்லை, லீனா சொல்லிட்டா! அந்த ஆள் கேள்வி கேட்டதில்!”

“உண்மையைச் சொன்னேன் கணேஷ்!”

“உண்மை! இந்த இடத்தில் நடக்கிறதெல்லாம் உண்மையா, இல்ல பிரமையான்னு பல தடவை சந்தேகம் வருது. லீனா! மேல என்ன சொல்லியிருக்கீங்க!”

“தோட்டத்துக்கு நான் போனபோது எதையுமே பார்க்கலை கணேஷ்!”

“அதையும் சொன்னீ இல்லே?”

“இல்லையே, அதை அவர் கேட்கலையே! தோட்டத்துக்குக் காலைல போனியான்னுதான் கேட்டார். கணேஷ் அவர் என்னை அரெஸ்ட் பண்ணிடுவாரா?”

“ஆள் யாருன்னு தெரிஞ்சுதா?”

“இல்லை, நெப்பூரில் போய் விசாரிக்கப் போறாங்க, கணேஷ். கொஞ்சம் தனியா வாங்க”

“என்னை விட்டுறாதீங்க கணேஷ்!”

“இரும்மா, பத்து தப்படிதான் போறம்!”

சற்றுத்தூரம் நடந்து கணேஷின் தோளில் சகோதரத்துவமாகக் கை வைத்து, “நிலைமை கொஞ்சம் விபரீதமாப்போச்சு!”

tamilpdffree.wordpress.com

“என்ன சொல்லுங்க ” என்றான் கணேஷ்.

“லீனாவைச் சந்தேகப்படறாங்க. கொஞ்சம் அசந்து இருந்தபோது அவளுக்கு ஒரு டம்பளர்ல கூல்ட்ரிங்க்ஸ் கொடுத்து அந்த டம்பளரை வாங்கிக்கிட்டிருக்கார் இன்ஸ்பெக்டர். அப்புறம் அந்தக் கான்ஸ்டபிள் தோட்டத்தில் ஒரு கத்தியையோ எதையோ கண்டெடுத்திருக்காரு. என்னன்னு சரியாச் சொல்ல மாட்டேங்கறாங்க! சிக்கல்.”

“நீங்க என்ன பயப்படறீங்க!”

“விரல் ரேகைகள்!”

“சேச்சே! உங்க ஆரம்ப சித்தாந்தமே தப்பு. லீனாவாவது இந்தக் கொடூரமான காரியம் செய்யறதாவது!”

“லீனா இல்லை. லீனா மூலமா அது!”

அது! மறுபடி அது!

“பார்க்கலாம். லெட்ஸ் ப்ளே இட் பை தி இயர்........ நீங்க எதுக்கும் கவலைப்படாதீங்க! நான் ஒரு லாயர் இருக்கேன். அவளைக் காப்பாற்ற முடியும். நான் விடமாட்டேன்!”

“எவ்வளவு தூரம்ங்கிறதுதான் இப்ப பிரச்சினை!”

“கடைசி வரைக்கும்,” என்றான் அழுத்தமாக.

“சரி, தாங்க்ஸ்,” என்றார்.

குரலில் ஒருவித ஏமாற்றம் தென்பட்டதோ என்று சந்தேகித்தான்.

“லீனா இங்க வாம்மா.” என்றான்.

அவள் தயங்கி முன்வர மெலிதான போர்ச் வெளிச்சத்தில் அவள் முகத்தில் உண்மையான பயத் திரையைக் கவனித்தான். “இத பார் லீனா. நீ கவலையே பட வேண்டாம். நான் எல்லாத்தையும் கவனிச்சுக்கிறேன். அவங்க உன்னை ஒண்ணும் செய்துற முடியாது. காலைல நீ தோட்டத்துக்கு எதுக்குப் போனே?”

“படிக்க”

“நீ அங்க ஒண்ணும் பார்க்கலையே?”

“ம்**ஹூ**ம் கொஞ்ச நேரம் படிச்சேன். நடந்தேன். திரும்பி வந்தேன். அவ்வளவுதான்!”

“நேற்று நாமபார்த்தோமே ஒரு உருவம்... அதைப்பற்றி பயமா இல்லையா உனக்கு?”

“பயம்தான்”.

“பின்ன ஏன் காலைல அங்கே போனே?”

“கணேஷ், நீங்களும் என்னைச் சந்தேகிக்கிறீங்களா?”

tamilpdffree.wordpress.com

“இல்லை. அழாதே!”

“எல்லோரும்... எல்லோரும் என்னைச் சொல்றாங்க! அந்த இன்ஸ்பெக்டர் என்னைப் போட்டு துளைச்சு எடுத்துட்டார். என் வளையல் கிடக்குதாம். காது தோடு கிடக்குதாம். எப்படி அதெல்லாம் அங்க போயிருக்கும்னு எனக்குத் தெரியவே இல்லை?” என்று விசும்பல்களுக்கு இடையே சொன்னாள்.

“கவலைப்படாதே! நீ அதைச் செய்யாதவரைக்கும் சட்டம் உன்னை ஒண்ணும் செய்துடாது. பைதிவே இந்தக் காது தொங்கலை நீ எப்பவாவது கழட்டுவ இல்லை?”

“குளிக்கிறபோது”

“காலைல ஸ்விம்மிங் செய்தியா?”

“இல்லையே!”

“ஒரு வேளை, லூஸா இருந்து விழுந்திருக்குமா?”

“இருக்கலாம்”

“இதென்ன வளையல் மிஸ்டர் வியாசன்?”

“உடைஞ்ச வளையல்களையும் பார்த்திருக்காங்க அந்த உடலுக்குப் பக்கத்தில்!”

“காட்டினாங்களா?”

“இல்லை”

கணேஷ் யோசித்தான்.

“மிஸ்டர் வியாசன்! நான் லீனாவை என் அறைக்கு அழைச்சுட்டுப் போக விரும்பறேன். அவகிட்ட கொஞ்சம் பேசணும். உங்களுக்கு ஆட்சேபணையில்லையே?”

“நானும் வரவா?”

“நீங்க வேண்டாம்”

“காலைல வெச்சுக்குவோம்!”

“சரி”

“இல்லை கணேஷ். நான் வர்றேன். நீங்க வாங்க!” லீனா அவன் கையைப் பற்றி இழுத்துக் கொண்டே சென்றாள். “ஐல் ஈவன் ஸ்லீப் வித் ஹிம். நீங்க யார் கேக்கறதுக்கு?” என்று குமாரவியாசனைத் திரும்பிப் பார்த்துச் சொன்னாள்.

tamilpdfree.wordpress.com

## 12

**ஏ**றக்குறைய அவன் மேல் இடித்துக் கொண்டு மாடிக்கு வந்த லீனா, "விளக்கைப் போட்டுறுங்க" என்றாள். தயக்கமின்றி அவன் மேல் ஒட்டிக் கொண்டிருந்தாள். வினோதம்! ஸ்விட்ச், பிரகாசம். "கணேஷ்," என்றாள் மறுபடியும்.

"முதல்ல உன்னை எதில் இருந்து காப்பாத்தறது என்கிறதே தெளிவா இல்லை."

"போலீஸ்"

"உக்காரு,"

அடக்கமாக பவ்யமாக முழங்கால்களிடையே சொருகிக் கொண்டு உட்கார்ந்தாள். "அவன் யாரு கணேஷ்?"

"எவன்?"

"செத்துப் போய்ட்டானே அவன்"

"தெரியாது."

"லீனா, என்னை நேராப் பார்"

"எதுக்குப் பார்க்கணும்?"

"பேசாதே பார்"

கொஞ்சம் கூட அசையாமல் அவனையே செங்குத்தாகப் பார்த்தாள். கண்களில் பொய்யில்லை. பொய் மறைந்திருந்தால் இவள் மிகத் தேர்ந்த நடிகை.

"போதுமா?" என்றாள். கண்கள் இன்னும் விலகவில்லை. வதனத்தின் 'இன்றைய ஸ்பெஷல்' அந்தக் கண்கள். மையின்றி பொய்யின்றி இரண்டு கரிய சஞ்சலங்கள்.

"லீனா, உனக்கு எப்போதாவது மயக்கம் வருமா?"

"இல்லை"

"எப்பவாவது உன்னை டாக்டர் கிட்டே அழைச்சுக்கிட்டுப் போயிருக்காங்களா?"

"சில தடவை ஜுரம், சளி என்று போயிருப்பேன்"

"மனோதத்துவ டாக்டர்?"

"இல்லை. லேடி டாக்டர் கிட்ட ஒரு தடவை போயிருக்கேன்"

"எப்ப?"

"ஃபர்ஸ்ட் பீரியடின் போது"

கணேஷ் அவசரமாக விஷயத்தை மாற்றி, "உங்க அப்பா அம்மாவைப் பத்திச் சொல்லேன்," என்றான்.

tamilpdffree.wordpress.com

“அம்மா சின்ன வயசில செத்துப் போயிட்டாங்க, எனக்கு ஞாபகமே இல்லை. அப்பாக் கூட மெட்றாஸ்லே படிச்சுக்கிட்டிருந்தேன். நாலு வருஷத்துக்கு முன்னாலே அவரும் இறந்துட்டாரு”

“எப்படி”?

“ஒரு விபத்தில். கார் விபத்து. என்னைப் பாடியை பார்க்க விடலை. ரொம்ப சேதமாயிடுச்சாம். அப்பா லீ...னான்னு கூப்பிட்டு என்னை அப்படியே ஆகாசத்தில் தூக்குவாரு ஞாபகம் இருக்கு. சித்தப்பா மாதிரிதான் ஜாடையெல்லாம்.”

“பண்ணைலதான் இருந்தாரா?”

“இல்லை, மெட்ராஸ்ல. சித்தப்பாதான் பண்ணையைப் பார்த்துக்கிட்டிருந்தாரு”

“அப்பா பேர்”?

“ராஜவியாசன்.”

“வியாசர்கள்!”

“அவர் இறந்தப்புறம் நான் ஹாஸ்டல்ல சேர்ந்துட்டேன். சித்தப்பா வாரம் ஒருமுறை வந்து கவனிச்சுப்பாரு”

“சொத்து பூரா உனக்குதான்னு எப்ப தெரியும் உனக்கு?”

“போன வருஷம் சித்தப்பா சொன்னார். அடுத்த பர்த்டேக்கு எனகிட்ட வரப்போவுதுன்னு. எனக்கு வேண்டாம் கணேஷ்!”

“ஏன்?”

“இந்த இடம் நல்லால்லை – வித்துறலாம்!”

“முதல்ல உன் கைக்கு வரட்டும் லீனா. ரெண்டு வருஷத்துக்கு முந்தி நீ இங்கே வந்தியா?”

“பத்து பதினைஞ்சு நாள் லீவுன்னா உடனே வந்துடுவேன். அடிக்கடி வந்திருக்கேன்”

“அந்த உருவத்தைப் பார்த்தமே எப்பவாவது முன்னாடி அதை பார்த்திருக்கியா?”

“இல்லவே இல்லை.”

“சென்ற இரண்டு வருஷங்களில் உனக்கு சந்தோஷமா துக்கமா... என்ன என்ன நடந்தது சொல்ல முடியுமா?”

“ம் ம்... வந்து சந்தோஷமானது சொல்றேன் முதல்ல. ஒரு தடவை பிக்னிக் போனபோது தீபக்கை சந்திச்சது... அப்புறம் ஷேக்ஸ்பியர் டிராமாவிலே ஒஃபிலியாவா நடிச்சது. ரேடியோவில் யூத் ப்ரொகிராம் குடுத்தது. பீச்சில் பேல்பூரி சாப்பிட்டது. ஹாஸ்டல் தினத்தில்...”

“சந்தோஷத்தை விட்டுறலாம் துக்கம்?”

“அப்பா செத்துப்போனது”

tamilpdffree.wordpress.com

“அது நாலுவருஷம். சென்ற ரெண்டு வருஷத்தில”

“ம்... ரெண்டு வருஷத்தில் பயாலஜில் மார்க் குறைச்சலா வாங்கினது. மிஸ் ரத்தினம் செத்துப்போனது”

“ம்ஹூம் விட்டுறு...,” என்றான் கணேஷ் அவன் நினைத்த விடை கிடைக்கவில்லை. அறையை சுற்றிலும் நடந்தாள், “நான் இங்கேயே படுத்துக்கவா?” என்றாள்.

“வேண்டாம் அவுட் அவுஸ் போயிடு”

“ஏன்? என்னை கண்டா பயமா? நான் கொலை செஞ்சேன்னு நினைக்கிறீங்களா? இல்லை எனக்கும் அந்தப் பிசாசுக்கும் ஏதாவது சம்பந்தம்னு நினைக்கிறீங்க?”

“நினைக்கிறதையே நிறுத்திட்டேன். தலைகால் புரியலை”

“எனக்கு ஒண்...ணும் தெரியாது கணேஷ்”

“ஏன் காலைல தோட்டத்துக்கு போனே?”

“புஸ்தகம் படிக்க”

“மில்ஸ் அண்ட் பூன்”

“லீனா இந்தப் புத்தகத்தை எப்பவாவது பார்த்திருக்கியா?”

வாங்கிப் புரட்டி “சில வினோதங்கள். நான் படிச்சதில்லை” என்றாள்.

“நான் இந்த சோபாவில படுத்துக்கறேன். நீங்க கட்டில்ல.”

“சாப்ட்டியா?”

“நிறைய ஸாண்ட்விச் சாப்பிட்டேன். இன்ஸ்பெக்டர் கேள்வி கேக்கறபோது அவரை எனக்குப் பிடிக்கலை. நீங்க சாப்பிட்டீங்களா? சாப்பாடு எடுத்துட்டு வரவா?”

“இந்த இருட்டில் வேண்டாம். எனக்குப் பசியில்லை. பிஸ்கட் பாக்கெட் இருக்கு”

“கொசு கடிக்குது. ஃபானை போட்டுட்டே தூங்கலாம். உங்களுக்கு தூக்கம் வருமா?”

“வரும்”

“ராத்திரி அதுவந்தா உங்களை அப்படியே கட்டிப் பிடிச்சுறுவேன்.”

“வராது!”

பாத்ரூமுக்குச் சென்றான் கணேஷ். யோசித்தான். என்னைக் கண்டா பயமா?

வேண்டுமென்றே இங்கே படுத்துக்கொள்ள வந்திருக்கிறாளா? குமாரவியாசன் ஏன் இதற்கு அதிகம் மறுப்புத் தெரிவிக்கவில்லை. ஜன்னலுக்கு வந்து அவுட் அவுஸைப் பார்த்தான்.

வியாசனின் அறை விளக்கு எரிந்துக் கொண்டிருந்தது. சன்னல் இருட்டில் மேலும் இருட்டாக மரங்கள் வானில் விரல் வருடின. அதோ அங்கேதான் கிடந்தான். அதிர்ச்சி!

tamilpdffree.wordpress.com

அருகே நடந்த கொலை இந்தப் பெண்மேல் படர்ந்த பிசாசு செய்திருக்கலாம் என்று நம்ப இடமிருக்கிறது. இவள் இங்கே படுத்துக் கொள்ள போகிறாள்.

“கணேஷ் கணேஷ்!” பாத்ரூமிலிருந்து குரல் கேட்டது.

“என்ன?”

“சீக்கிரம் வாங்களேன்.”

பதற்றத்துடன் பாத்ரூமை அணுகினான். விளக்குப் போட்டிருந்தது. உள்ளே சென்றான். அவளைக் காணவில்லை. திடீர் என்று “இங்கே இருக்கேன்” என்று குரல் கேட்கத் திடுக்கிட்டு திரும்பினான். “லீனா விளையாடாதே! ஏன் கதவுக்குப் பின்னால் ஒளிஞ்சிருக்கே?”

“அங்கே! அங்கே” என்று பயத்துடன் காட்டினாள்.

அவள் காட்டிய ஓரத்தில் பளிச் என்று கண்களை வைத்துக் கொண்டு மீசை துறு துறுக்க...

ஒரு சுண்டெலி!

“மை காட்! என்ன லீனா இது விளையாட்டு!”

“இல்லை கணேஷ். எனக்கு எலியைக் கண்டா ரொம்பப் பயம். ஆவ்! கிட்ட வரது...‘ஓடி வரது...’ அவன் மேல் பாய்ந்து கட்டிக் கொண்டாள்.

கணேஷின் புஜத்தில் அவள் மார்பின் ஸ்பரிசம் அவனைத் தடுமாற வைத்தது. உடம்பில் ஒரு உஷ்ணம் ஏற்பட்டது. பயப்படாதே என்று அவள் நெஞ்சில் தடவிக் கொடுத்தான். அவள் அதைப் பாராட்டியதாகத் தெரியவில்லை. “அதன் கண்ணைப் பாருங்க பளிச்சினு.” என்றாள். கணேஷ் நிறுத்தி கையைச் செலுத்தி அவளைத் தொட்டான். அவளை நெருங்கி மிக மிக அருகே கொண்டு வந்து அவள் உதடுகளை...

“கிஸ் பண்ணப் போறீங்களா?”

பதித்தான். பெப்பர்மிண்ட் மூச்சு. அழுத்தினான். அவள் பத்து விரல்களாலும் அவன் கன்னங்களை அள்ளிக் கொண்டு அப்படியே அவனைப் பருக விரும்புபவள் போல...

சுரீரென்று வலித்தது. கன்னத்தில் நேற்று அடிபட்ட இடம். கொள்ளை வலி. உதறிக் கொண்டு விலகிவிட்டான். “என்ன கணேஷ்! என்ன ஆய்டும்?” என்று ஒரு சிறு குழந்தையின் ஆர்வத்துடன் கேட்டாள்.

“ஸாரி! உணர்ச்சி வசப்பட்டுட்டேன். லீனா, லீனா நீ தனியா இங்க படுக்கிறது நல்லதில்லை!”

“ஏன்?”

கணேஷ் ஜன்னல் அருகே சென்று “மிஸ்டர் வியாசன் மிஸ்டர் வியாசன்!” என்று கத்தினான்.

“என்ன ஆச்சு, ஏன்?” என்றாள்.

tamilpdffree.wordpress.com

சற்று நேரத்தில் கதவு திறந்து வியாசன் நைட்கவுனுடன் வெளிப்பட்டார். “மிஸ்டர் வியாசன், இங்க வாங்க”

“ஏன் கணேஷ்?” என்றாள் லீனா.

“வேண்டாம் லீனா. ஒரு சின்ன சபலத்துக்கு இப்ப இடம் கொடுத்தா பின்னால நிறைய ப்ராப்ளம்ஸ் வந்துடும்.”

“இதில் என்ன தப்பு?” மறுபடி குழந்தையின் அறிந்து கொள்ளும் ஆர்வம்.

“நோ! நோ! நோ!”

குமாரவியாசன் உள்ளே வந்து, “என்ன கணேஷ்!” என்றார்.

“இவளோட நான் பேசியாச்சு ஸார்! நீங்க இவளை ஜாக்கிரதையாக அழைச்சுட்டுப் போங்க!”

“**ஹு**!” என்று மெலிதாக ஏளனச் சிரிப்புடன் அவனை சற்று நேரம் பார்த்தாள். கணேஷ் அவள் பக்கம் திரும்பவில்லை. “வாம்மா லீனா!” என்றார். திரும்பப் பார்த்துக்கொண்டே சென்றாள்.

சென்றதும் கணேஷ் படுக்கையில் மல்லாந்தான். சற்று நேரம் சும்மா இருந்தான். அவள் உதடுகள் பட்ட உதடுகளை வருடிப் பார்த்துக்கொண்டான். சுலபமான சந்தர்ப்பம். ஏன் அப்படிச் செய்தேன்? எனக்கு ஆசை இல்லையா?

ஆண்மையில்லையா? எல்லாம் இருக்கும்போது ஏன் இப்படி?

பயம்!

அவள் யார் என்று இன்னும் நீ தீர்மானிக்கவில்லை. அவளிடம் உனக்குப் பயம்தான். முத்தமிடுகிறார்போல் உன் உயிரை உறிஞ்சிவிடுவாளோ... பகுத்தறிவில்லாத பயம். கன்னத்தில் இன்னும் வலித்தது. இந்த வினோத நடவடிக்கைகளின் ஞாபகச் சின்னம்.

ஜன்னலைச் சாத்தினான். கதவுகளை உட்புறம் தாளிட்டுக்கொண்டு விளக்கை அணைக்காமல் மறுபடி வந்து படுத்தான். அந்தப் புத்தகத்தை பிரித்தான்.

‘....அடி அபலே, நீ வாயெடுக்கும்போது விலை மதித்த ஏதோவொன்றை கேழ்க்கப் போகிறாயென்று நினைத்தேன். என் கழுத்திலிருக்கும் மகரகண்டியைக் கேட்டிருந்தாலும் கொடுத்திருப்பேன்...’

அந்த வினோத வசனத்தில் லயிக்காமல் மனது திரும்ப திரும்ப லீனாவிடம் அலைமோதியது.

‘கருத்த மேனியும் தலையிடுவார் அக்னிகுண்டமும் கையில் சுமக்க முடியாத ஏதோவொன்றைத் தூக்கிக் கொண்டு அதிவேகமாக இவர்களுக்கெதிரில் வந்த ரக்ஷாஸ்**ஸு**...’

புத்தகம் விழுந்தது.

tamilpdffree.wordpress.com

மெலிதான நூலிழைத் தூக்கம் அவனைச் சுற்றிக் கொண்டது. விளக்கை அணைக்க வேண்டும் என்கிற ஆசை எங்கோ ஒரு மூலையில் ஒலித்தது. அதைத் தூக்கம் ஆக்கிரமித்தது.

ஒரு நிமிஷமா ஒரு வருஷமா? தெரியவில்லை. “கணேஷ்! கணேஷ்!” லீனாவின் குரல். அவன் தூக்கத்துக்குள் ஒலித்தது!

“யாரு?” திடுக்கிட்டு எழுந்தான். எங்கிருக்கிறேன் என்று தெரியவில்லை. பம்பாயில் அவன் ஆரம்ப நாட்களில் ஹரிணியின் அறையில் ஒரு தடவை தூங்கிப் போய்விட்டானே அப்போதா இது!

“கணேஷ்! கணேஷ்!” இல்லை. அது லீனாவின் குரல். இருட்டாக இருந்தது. இல்லை அது வேறு இடம்! வேறு குரல் “கணேஷ் கணேஷ்!”

ஸ்திர நிலை எய்தி, “என்ன லீனா?” என்றான்.

“சீக்கிரம் வாங்களேன்!” இப்போது குரல் பாத்ரூமிலிருந்து வருவது தெளிவாகக் கேட்டது.

“என்ன ஆச்சு லீனா?”

“கணேஷ்...கணேஷ்...சீக்கிரம் வாங்களேன்.”

எழுந்து விட்டான். விளக்கை யார் அணைத்தது! எனக்கு ஞாபகமில்லையே. ஜன்னல் கதவு திறந்திருந்தது. காற்றில் அது மெலிதாக ஆடி ஆடி கீய்ச் கீய்ச் என்றது. கணேஷ் அந்தச் சப்தத்தை நோக்கி மெதுவாக நடந்தான். “சீக்கிரம் வாங்களேன் சீக்கிரம் வாங்களேன்!”

மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன. உடல் பூராவும் சின்ன சின்ன ஊசிகளைப் போல பயம் கொத்தியது. முழுங்கால்கள் தேய்த்துக்கொண்டன. உஷார் உஷார் என்று அட்ரினலின் சுரந்தது. மார்க்கூட்டில் இதயம் இடித்தது. நெருங்கினான்.

சரேல் என்று அவன்மேல் அது பாய்ந்து உடனே அவன் கழுத்தைப் பிடித்தது. சமாளிப்பதற்குள் விழுந்துவிட அவன் மார்பின் மேல் ஒரு டன் இறங்கியது. அத்தனை சக்திகளையும் ஆக்ரோஷத்தையும் வரவழைத்துக் கொண்டு இருட்டில் வீசினான். எங்கோ பட்டது. ஏதோ ஒரு ஆடை கைக்கு அகப்பட்டது. அதைப் பற்றிக்கொண்டு நிமிர்ந்தான். கடித்தான். அடித்தான். புரண்டான். உருண்டான். உதைத்தான், திமிறினான். ஒரு சந்தர்ப்பத்தில் தற்காலிகமாகப் பிடித்ததை அவன் காதருகே ஹ...ஹ...ஹ என்று மூச்சுக் கேட்டது. எதையோ பற்றி இழுத்தான்.

திடீர் என்று ஒரு விலகல். ஒரு விகிர்ப்பு. தடதடவென்று அறையின் குறுக்கே அந்த உருவம் ஓடுகிற சப்தம் கேட்டது. திறந்த ஜன்னலில் தற்காலிகமாக ஒரு கறுப்பு மறைப்பு. அவ்வளவுதான்.

மஹா மௌனம்.

உடல் பூரா வலியிருந்தாலும் ஜன்னலுக்கு ஓடினான். பெரிசாக வாயிரைப்புடன் வெளியே எட்டிப் பார்த்தான். தூரத்தில் தோட்டத்தில் இலைகள் சிலிர்க்கும் சப்தம்...

வேறொன்றும் தென்படவில்லை. திடீர் என்று அறையில் வெளிச்சம் பரவியது. அதிர்ந்து திரும்பினான். யார் விளக்கைப் போட்டார்கள். அறையில் ஒருவரும் இல்லை. பாத்ரூம் விளக்கும் எரிந்தது. எச்சரிக்கையுடன் நகர்ந்து அங்கு சென்று பார்த்தான். யாருமில்லை.

tamilpdffree.wordpress.com

கணே**ஷு**க்கு அத்தனை பயமும் சற்று விலகிப்போய் பதிலாக ஒரு பிடிவாதத் தீர்மானம் ஏற்பட்டது. இந்த விவகாரத்தில் எல்லையை, முடிவை எப்படியாவது கண்டே ஆக வேண்டும். இப்போதே துவங்கவேண்டும்.

அறைக் கதவைத் திறந்து வெளிப்பட்டான். இருட்டில் படிகளில் இறங்கினான். பயப்பட அவகாசமில்லாமல் ஓடிக் குமாரவியாசனின் அவுட் ஹவுஸ் கதவைத் தட்டினான். பொறுமையில்லாமல் அடிக்கடி தட்டினான். பலமாகத் தட்டினான்.

உள்ளே விளக்கு போடப்பட்டது. சற்று நேரத்தில் கதவு திறக்கப்பட்டது. குமாரவியாசன் தூக்கம் நிறைந்த கண்களுடன் நின்றிருந்தார்.

“என்ன கணேஷ்!”

“லீனா எங்கே?”

“உள்ளே தூங்கறா! அதோ பாருங்க!”

லீனா சுருட்டிக்கொண்டு அந்த அறையில் படுத்திருந்தாள்.

“டெலிபோன் செய்யணும்” என்றான் கணேஷ்.

## 13

**க**ணேஷ் டெலிபோனின் மண்டையில் தட்டித் தட்டி ஆபரேட்டரை எழுப்பினான்.

“என்ன கணேஷ் கையெல்லாம் நடுங்குது? குழம்பியிருக்கீங்க,” என்று குமாரவியாசன் ஆர்வத்துடன் கேட்டதை மதிக்காமல், “ஆப்ரேட்டர், நான் 396லிருந்து பேசறேன். உடனே ஒரு மெட்றாஸ் கால் போடணும். நம்பர்கால் 24696 அர்ஜெண்ட் லைட்னிங்,” என்றான்.

“விஷயம் என்ன சொல்ல மாட்டிங்களா?”

“சொல்றேன் மிஸ்டர் வியாசன்... மேக் இட் அர்ஜெண்ட் ப்ளீஸ். தாங்ஸ்.” டெலிபோனை இளைப்பாற்றினான். முகத்தைத் துடைத்துக் கொண்டான். “என்னை ஒரு ஆசாமி சற்று நேரம் முன்னால அந்த அறையில் கொல்லப்பார்த்தான்”

“இஸ் இட்? மை காட்! யாரு?”

கணேஷ் அவர் முகத்தை நிமிர்ந்து பார்த்தான். பதற்றம் போதாது, “ஓடிப்போய்ட்டான்.”

“ஆளா?”

“அப்படின்னுதான் நினைக்கிறேன். கதவெல்லாம் உள் பக்கம் தாளிட்டிருந்தேன்”

“பின்ன எப்படி உள்ள வர முடியும்? கனாக் கண்டிங்களா?”

“கனவா? இதபாருங்க?”

“அடடா! ரத்தம். அடிபட்டிருக்கு. டெட்டால் தரட்டுமா?”

டெலிபோன் அலுத்துக் கொண்டது. எடுத்துக் கேட்டான்.

tamilpdffree.wordpress.com

"ப்ளீஸ் மறுபடி ட்ரை பண்ணுங்க. கான்ஸல் பண்ணாதீங்க. ஆசாமி தூங்கிட்டிருப்பான். இன்னொரு முறை பலமா அடிச்சுப் பார்க்கச் சொல்லுங்க"

"எனக்கென்னமோ மறுபடி அதுதான்னு தோணுது"

"லீனா எப்ப வந்தா?"

"அப்பவே வந்த உடனே தூங்கிட்டா. ஏன்"

லீனாவின் குரல் கேட்டது அங்கே

"சரிதான். மறுபடி அதுதான்!"

அது! மறுபடி அது! இதன் அடித்தளத்தைத் தொட்டு விட்டுத்தான் மறுகாரியம்.

டெலிபோன் மறுபடி ஒலிக்க

"ஏய் வசந்த், தூங்கு மூஞ்சு, எழுந்திருடா"

மறுமுனை வசந்த் "யார் பேசறது" என்றான்.

"ஏய், உரக்க பேசுடா. கேக்கலை! கணேஷ் பேசறேன்!"

"யாரு! பாஸ்? நீங்களா, என்ன இந்த வேளையில்?"

"உடனே புறப்பட்டு வா!"

"எங்க?"

"இங்கதான் பண்ணை வீட்டுக்கு"

"நான் வந்த காரியம் முடியலை"

"உடைப்பிலே போடு! அப்புறம் பார்த்துக்கலாம் வா? கார் ரெடியா?"

"பாதி ரெடி"

"பாதிக் கார்ல வா. பஸ்ல வா, ட்ரெய்ன்ல வா, நடந்து வா, விடியறதுக்குள்ள வந்து சேரு"

"ஏன் இன்னொரு காவு வாங்கிடுச்சா?"

"என்னைக் கொல்ல முயற்சி நடந்து மயிரிழையில் தப்பிச்சேன்!"

"அய்யோ! பாஸ்? நீங்கதானே பேசறது, இல்லை உங்க ஆவியா?"

"ஷட் அப் ஐ நீட் ஹெல்ப்"

"உடனே வரேன். பாஸ்"! என்றான் வசந்த் அவசரத்துடன்.

டெலிபோனை வைத்துவிட்டு அறையைப் பார்த்தான். கட்டிலில் படுக்கை கலைந்திருந்தது. லீனா அடுத்த அறையில் சுருட்டிப் படுத்திருந்தாள். கணேஷுக்குத் தடுமாறியது. இவள் குரல் அங்கே எப்படிக் கேட்டது? உட்பக்கம் தாளிட்டிருந்த

tamilpdffree.wordpress.com

அறையில் ஜன்னல் கதவு எப்படித் திறந்துகொண்டது? விளக்கை யார் அணைத்தார்கள்? என்னுடன் போராடிய உருவத்தைத் தொட்டேனே. என் கழுத்தை நெறித்த அதன் மூச்சுக் காற்று கேட்டதே. ஆண்? பெண்? அது? குழம்பினான். உடலில் வலி. எண்ணங்கள் மனத்தில் மாறும்போது வியாசனை இமைக்காமல் பார்த்தான். தீர்மானித்தான் வசந்த் வரட்டும். அதுவரை மேம்போக்காகச் செலுத்தலாம். என்னைச் சுற்றி விரியும் இந்த சஞ்சல சரித்திரத்தின் உள் அர்த்தம் தெரியும் வரை. எப்படிப்பட்டவர் என்று இனம்கண்டு கொள்ளும்வரை. “மிஸ்டர் வியாசன்! இப்ப புரிஞ்சிடுச்சு! விஷயம் இதுதான். லீனா கூப்பிட்ட மாதிரி குரல் கேட்டு எழுந்தேன். விளக்கு அணைஞ்சு போயிருந்தது. நான் அணைக்கவே இல்லை. ஜன்னல் கதவு திறந்திருந்தது. என்மேல ஏதோ படர்ந்து கழுத்தை நெறிச்சது. போராடித் தப்பிச்சேன். இந்த வட்டாரத்தில் உலவற அந்தப் பிசாசா இருக்கலாம் அது. அதுதான் இங்க நடக்கிற எல்லா வினோதச் செயல்களுக்கும் காரணம். எனக்குத் தீர்மானமாகத் தெரிஞ்சுடுச்சு”

வியாசன் “நானும் அதைத் தான் நம்பறேன் கணேஷ். மேலும் அது லீனாவின் மேல் அல்லது லீனாவின் ரூபத்தில் வர்றதுன்னு தோணுது.”

“இருக்கலாம். நிச்சயம் அப்படித்தான் இருக்கு” லீனாவைப் பார்த்தான். ஒரு சின்னக் கரடிப் பொம்மையைக் கட்டிக்கொண்டு ஆழமான நித்திரையில் இருந்தாள்.

“இந்த நிலையில இவகிட்ட சொத்தை ஒப்படைக்கிறது நல்லதாங்கிறதுதான் கேள்வி”

“யோசிக்கவேண்டிய காரியம்”

“எனக்கு இதில் ஒரு இண்ட்டரஸ்ட்டும் இல்லை. நீங்கதான் பார்த்தீங்களே. மாத்திக் கொடுக்கப் பத்திரம் எல்லாம் ரெடியா இருக்கு. எந்த நிமிஷமும் நான் தயார்.”

நடுவில் ஒரு டெட்பாடி! இந்தப் பெண்ணுடைய வினோத நடவடிக்கைகள். “இந்தக் குழப்பத்தில மாத்தறதை ஒத்திப்போடறது நல்லதுன்னு நினைக்கிறிங்க”

“உயில்படி அப்படி ஒத்திப்போட முடியாது, லீனாதான் நேர் வாரிசு. பதினெட்டு வயது வரை நான் கார்டியனா இருந்து ஒப்படைக்கணும். பதினெட்டு ஆயிடறது அவளுக்கு”

“அடுத்த வாரிசு யாரு?”

“நான்தான்! ஆனா எனக்கு இதை எடுத்து நடத்தறதுக்கு இப்ப இஷ்டம் இல்லை. விற்கவும் முடியாது. அதான் சிக்கல். முப்பது வருஷம் அம்பது வருஷம்னு லீஸ்சுக்கு விட்டுறலாம். பம்பாய்ல ரெண்டு மூணு பார்ட்டிக்கு இண்ட்டரஸ்ட் இருக்கு!”

“பேய் உலாவற இடம்னு தெரிஞ்சா வருவாங்களா?”

“கட்டிடத்தை இடிச்சுட்டு, மரத்தை வெட்டிட்டு...? எல்லாத்தையும் டிமாலிஷ் பண்ணிட்டுப் பெரிய ஃபார்ம் லாண்டா பண்ணிடுவாங்க! எனக்கென்னவோ அதுதான் உத்தமம்னு படுது.”

சற்று நேரம் கணேஷ் மௌனமாக இருந்தான். எழுந்தான். “வரேன்” என்றான்.

“எங்க கிளம்பிட்டிங்க? நீங்க மறுபடி தனியாப் போக வேண்டாம். உங்க வசந்த் வர்ற வரைக்கும் இங்கேயே இருங்க”

“பரவாயில்லை. கதவைத் திறந்து வெச்சுக்கறேன்.”

tamilpdffree.wordpress.com

“நான் வேணா கூட வரட்டுமா? எனக்கும் பயம்தான். லீனா வேற தனியா இருக்கா”

“வேண்டாம். சப்தம் போட்டா வாங்க போதும்!”

“ஜாக்கிரதை இருங்க. எல்லா விளக்கையும் போட்டுடறேன்.”

கணேஷ் வெளிச்சத்தில் நடந்தான். கூப்பிடு தூரத்தில் அமிழ்ந்த இருள் திட்டுகளை நோக்காமலே நடந்தான். பெரிய வீட்டின் வாசலுக்கு வந்தான். விசில் அடித்துக் கொண்டே வாயிற் படிகளில் ஏறினான். சீட்டி சற்று நடுங்கியது. அவனுள் அச்சமில்லை என்பதில்லை. எந்தத் திருப்பத்திலும் சட்டென்று தன் மேல் ஏதாவது ஒன்று பாயும் என்கிற உஷார் அவன் நரம்புகளில் பரவியிருந்தது. மாடிப்படியில் அவன் காலடி ஓசை துல்லியமாகக் கேட்டது. மரம் முழுவதும் பெரிசாகக் கேட்டது. என்ன அசட்டுத் தைரியம் இது! மறுபடி ஏன் அங்கே செல்கிறேன்? வசந்த் வரும் வரை இங்கேயே காத்திருக்கலாமா! ஏன் இப்படிச் செலுத்தப்பட்டவன் போல் நடந்து கொள்கிறேன்? ஒரு வேளை அதுதான் நிஜமோ? செலுத்தப்படுகிறேனோ? நடந்த விஷயங்கள் அத்தனையின் மேலும் ஒரு மெலிதான மஸ்லின் திரைபோல அமானுஷ்யம் போர்த்தியிருக்கிறதோ! இவர்கள் எல்லோருமே மனிதப் பிறவிகள் இல்லையா? லீனா, குமாரவியாசன், பெரிய கண்ணன். தோட்டத்தில் தென்பட்டவர்கள் எல்லோருமே அதே வெளிர் நீல உருவத்தின் வேறுபாடுகளோ! இப்போது திடீர் என்று ஓடிப்போய் அவுட்ஹவுஸில் பார்த்தால் அது காலியாக இருக்குமோ. நடப்பதெல்லாம் என்ன மற்றொரு கணேஷின் கனவா? எப்போதாவது சட்டென்று தன் ஆபீஸ் அறையில் விழித்தெழப் போகிறானா?

கணேஷ் மாடி அறைக்கு வந்துவிட்டான். விளக்கு இன்னும் எரிந்து கொண்டிருந்தது. ஜன்னல் திறந்திருந்தது. எச்சரிக்கையாக அறையைச் சுற்றி நடந்தான்.

பின்னிரவின் மௌனம் உடம்பின் மேல் ஏறிக் கொள்ளும்போல இருந்தது. இங்கேதான் படுத்திருந்தேன். பாத்ரூமில் குரல் கேட்டது. விளக்கு அணைந்திருந்தது. இப்படி நடந்து வந்தேன். இங்கேதான் தாக்கப்பட்டு கீழே விழுந்தேன். புரண்டேன். பிடித்தேன்.

கணேஷ் அந்த இடத்தை ஆராய்ந்தான். கீழே ஒரு பித்தான் கிடந்தது. நீலநிறப் பித்தான். சட்டைப் பித்தான். சட்டையின் நூல் ஒட்டிக் கொண்டிருந்த ஒரே ஒரு பித்தான். அதைப் பத்திரப்படுத்திக் கொண்டான். சட்டை போட்ட பிசாசா?

என்னைத் தாக்கியது பிசாசல்ல. ஒரு ஆள். தோட்டத்தில் தெரிந்தது? அதை மற. தற்போதைக்கு மற. இந்த அறைக்குள் ஜன்னல் வழியாக வந்தது ஒரு ஆசாமி. ஜன்னலில் போய் பார்த்தான். வியாசனின் விளக்கு இன்னும் எரிந்து கொண்டிருந்தது. கான்க்ரீட் சஜ்ஜாவின் ரூட்டலில் குதித்து ஜன்னலில் சுலபமாக ஏறி வந்திருக்கலாம். அதிக உயரமில்லை. ஜன்னல் எப்படித் திறந்தது. தாழ்ப்பாளைப் பார்த்தான். அது வெடித்து நாதாங்கியுடன் தொங்கிக் கொண்டிருந்தது. என்னை ஏன் தாக்க வேண்டும். புரியவில்லை. நான் ஏன் எதிரி? யோசித்துப் பார்த்ததில் அந்த உருவம் சுலபமாகத் தன்னைக் கொன்றிருக்க முடியும். அப்படியொரு மூச்சுத்திணறல் அவனுக்கு ஏற்பட்டது. இருந்தும் அது சட்டென்று விலகிவிட்டது. யாரோ மானசீகமாக, ‘போதும்’ என்ற ஆணையிட்டது போல் விலகி ஓடிவிட்டது அது ஏன்?

தூங்குவதற்குத் தயங்கினான். மறுபடி அந்தப் பித்தானைச் சோதித்தான். குமாரவியாசனின் அறைவிளக்கு அணைக்கப்படுவதைப் பார்த்தான். இங்கிருந்து அவுட்ஹவு**ஸு**க்கு எத்தனை தூரம் இருக்கும். முன்னூறு அடி? ஜன்னல்கள் அத்தனையும் சாத்தியிருந்தன. முன்னிரவில் நடந்தது என்ன? லீனா வந்தாள். பேசினாள். பாத்ரூமுக்குக் கூப்பிட்டாள். என்மேல் சரிந்தாள். ஒரு கனம் அவளை அணைத்துக்கொள்ள முயற்சித்து

tamilpdffree.wordpress.com

விட்டு இந்த ஜன்னலுக்கு வந்தேன். வந்து குமாரவியாசனைக் கூப்பிட்டேன். ஒரு சந்தேகம். நான் கூப்பிட்டது அவருக்கு எப்படிக் கேட்டிருக்கும்? எல்லாக் கதவுகளும் சாத்தியிருந்தும் கூப்பிட்ட உடனே கதவு திறந்து வெளிவந்தாரே எப்படி? வசந்த் வந்ததும் சோதித்துப் பார்க்க வேண்டும். வியாசன், நீ யார்? இந்த வினோத நாடகத்தில் உன் பங்கு என்ன நடிகனா? பார்வையாளனா? சூத்திரதாரியா? லீனா, உன் பங்கு? நீங்கள் எல்லாருமே பொய்ப்பிம்பங்களா? கட்டிலில் வந்து உட்கார்ந்தான்.

அதிகாலை வானவிளிம்பில் ஆரஞ்சுப்பந்து பறவைகளை விளையாட அழைக்க, புதிய உற்சாகக் குரல்கள் எழுப்ப வானின் கருநீலம் நீலமாகி வெண்ணிறமாகி வெளுத்த உடன் திடீர் என்று எல்லாமே நிஜமாயின. கணேஷின் ஃபியட் ஒரு தடவை சீறிவிட்டு நின்றது. வஸந்த் கதவை ஜாக்கிரதையாகச் சாத்திவிட்டு வெளிபட்டான். காரில் திட்டுத் திட்டாக பெயிண்ட் அடிக்கும் ப்ரைம் தெரிந்தது. பின்புறக் கண்ணாடி நீக்கப்பட்டிருந்தது. வஸந்த் மாடிக்கு ஓடிவந்தான்.

“என்ன பாஸ்?”

“வா உக்காரு. சொல்கிறேன்.”

வஸந்த் கணேஷின் முகத்தைப் பார்த்து “அடிபட்டிருக்கிங்க! கன்னமே வீங்கியிருக்குது! கழுத்தில விரல் அடையாளம்! என்ன ஆச்சு! மறுபடி அரசமரமா?”

“இல்லை வஸந்த். அறைக்குள்ள நடந்தது.”

“உள்ளயே வந்துடுச்சா?”

“இது அது இல்லை. ஒரு ஆள்!”

“ஆளா?”

“ராத்திரி பின்னிரவில் நடந்தது வசந்த்! லீனா இங்க வந்தா. ஒரு மாதிரி பிஹேவ் பண்ணா...”

“ஒரு மாதிரின்னா?”

சொன்னான்.

“அடாடா! நானாயிருந்தா பேசாம மல்லாக்க வெச்சு...”

“கேள் வசந்த். வியாசனைக் கூப்பிட்டு உடனே அவளை அழைச்சுட்டுப் போயிறச் சொல்லிவிட்டேன்!”

“சரியான கற்பு பாஸ் உங்களுக்கு. நான் ஆடறேன்! ஐ ஸ்வே!”

“நடுராத்திரி புஸ்தகம் படிச்சேன். விளக்கை அணைக்காம தூங்கிட்டேன். மறுபடி லீனாவுடைய குரல் கேட்டுது.”

“சரிதான். வந்துட்டாளா?”

“இல்லை. வெறும் குரல், பாத்ரூமிலிருந்து முழிச்சுக்கிட்டேன். இருட்டு.”

விவரமாகச் சொன்னான். வசந்த் மேலும் குறுக்கிடாமல் சுவாரசியமாகக் கேட்டான்.

tamilpdffree.wordpress.com

“என்ன சொல்றது?”

“என்னத்தைச் சொல்றது? இப்ப வந்து இந்தக் காரியங்கள் எல்லாம்...”

“ஒரு நிமிஷம் வசந்த்!”

“ஏன்?”

“வா, வெளியே போகலாம். நடந்துக்கிட்டே போகலாம்”

“ஏன்?”

“சொல்றேன் வா”

“நடக்க முடியுமா? டலா இருக்கிங்களே?”

“பரவாயில்லை வா!”

தூரத்தில் பச்சைப் போர்வையுடன் ஒரு குன்று தெரிந்தது. அதை நோக்கி ஓர் ஒற்றையடி நெளிந்து சென்றது. அதில் சற்றுத் தூரம் நடந்தனர். “எதுக்கு இவ்வளவு தூரம்?”

சௌகரியமாக ஒரு கல்லின் மேல் உட்கார்ந்து கொண்டார்கள்.

“அந்த வீட்டில் எனக்கு நம்பிக்கையில்லை.”

“மயன் பங்களா மாதிரி மறைஞ்சிடுமா?”

“இல்லை. அங்கே நாம பேசுறது யாருக்கோ காது கேட்கும்னு எனக்கு உள்ளுணர்வு சொல்றது”

“பக்கிங்கா?”

“ஏதோ ஒண்ணு. வசந்த், எனக்குக் குமாரவியாசன் மேல சந்தேகம் வர்றது. இந்த பட்டனைப் பாரு? இது நான் அந்த இடத்தில் போராடினபோது பிஞ்சு விழுந்திருக்கு. ஆண் பிள்ளைச் சட்டை பட்டன் இல்லையா இது?”

“சட்டை பட்டன். இப்ப ஆண்பிள்ளை பெண்பிள்ளை எல்லாருமே சட்டை போட்டுக்கறாங்களே! நந்தம்பாக்கத்திலே மாலினின்னு ஒரு பொண்ணு ஜிப்பா போடறது...”

“இல்லை வசந்த். அந்த ஆள் என்னோடு சண்டை போட்ட ஆவேசத்திலிருந்து அவன் மூச்சுக் காற்றிலிருந்து அவன் ஆண்தான்னு நிச்சயம் சொல்ல முடியும்”

“எதுக்காக உங்களைத் தாக்கணும்?”

“அப்புறம் அந்த வியாசன் நான் ஜன்னலிலிருந்து கூப்பிட்டபோது என் குரல் அவருக்கு நிச்சயம் அவர் அறைக்குள்ள கேட்டிருக்குமான்னு சந்தேகம்?

“அதை என்கிட்ட விடுங்க. வெரிஃபை பண்ணிடறேன். பாஸ், முதல்ல நாம கண்டுபிடிக்க வேண்டியது இதெல்லாம் என்ன? பேயா, மனுஷனா? அவ்வளவுதான்.”

“நீ மெட்ராஸ்ல என்ன ஆச்சு சொல்லு.”

tamilpdffree.wordpress.com

“பாலகோபால் ஊர்ல இல்லே. உயில் காப்பி கிடைச்சுது. கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்துட்டேன்”

“உயில் என்ன சொல்லுது?”

“ப்ராப்பர்ட்டி ரொம்பப் பழங்காலத்து விஷயம். பிரிட்டிஷ் ராஜா ஆர்க்காட் நவாப் காலத்துக்குப் போவுது. வியாசர்கள் பரம்பரையை விட்டு இதுவரை விலகாத பிரிக்க முடியாத சொத்து. ஆனா ஒரு முக்கியமான விஷயம். சொத்தோட மதிப்பு ஒண்ணறைக் கோடி”

கணேஷ் விசிலடித்தான். “இது எப்படி சாத்தியம்? சர்க்கார் பிடுங்கிட்டு இருப்பாங்களே! லாண்ட் ஸீலிங்ல?”

“அதானே சாமர்த்தியமா மறைஞ்சுருக்குது. நிலம்னு பார்த்தா ஃபார்ம் லேண்டுனு இறுநூறு ஏக்கராகூடத் தேறுது. ஆனா பினாமியா நிறைய இருக்குது, பாடசாலை, ஆசிரமம்னு அங்கங்கே சிதறிக் கிடக்குது. முக்கியமான விஷயம் இந்தச் சொத்தைப் பிரிக்க முடியாது. விற்க முடியாது. நேர்வாரிசு இல்லைன்னா தம்பிகளுடைய குடும்பத்துக்குப் பொறுப்புப் போகணும். நேர் வாரிசு இருந்தா பெண்ணோ பிள்ளையோ அவர்களுக்குத்தான் போகணும். மைனரா இருந்தா பதினெட்டு வயசு வரைக்கும், மிகக் கிட்டத்து உறவுக்காரங்க கார்டியனா இருக்கலாம். இப்ப லீனாவுக்கு வர்றது. லீனா கல்யாணம் செஞ்சுக்கலை. குழந்தையே இல்லாம இறந்து போய்ட்டான்னா அடுத்தது குமாரவியாசன். அவருடைய வாரிசுகளுக்கு போயிடும். சிக்கலான லெகஸி. ஆனா பெரிய சொத்து.

“குமாரவியாசனுக்கு இதைத் தொடர்ந்து அனுபவிக்கிறதில ஆசையிருக்கலாம். இல்லையா!”

“நிச்சயம்”

“வேற ஏதாவது கிளெய்மண்ட்ஸ் இருக்காங்களா?”

“இருக்கலாம். தெரியலை”

“அப்புறம் அந்தக் கிருஷ்ணமூர்த்தி?”

“அதை ஏன் கேக்கறீங்க! ரொம்ப இண்ட்ரஸ்டிங் பாஸ்! பதிற்றுப்பத்திலே கருங்கண் பேய் மகன்னு பேயைப் பற்றிச் சொல்லியிருக்கு தெரியுமா?”

“அதுக்கு என்ன சம்பந்தம்?

“அந்த ஆள் வயசு எண்பதுக்கு மேல இருக்கும். பேயுடைய குரல் விரல் கூந்தல் வாய் நாக்குன்னு ஸர்ச் பண்ணியிருக்கார். சாளனின்னு ஒரு தேவராட்டியாம். பேய் மகளிர் ரத்தம் நரம்பு குடலை உருவற மாதிரி நிறையச் சொன்னார் கிழவர். நாம பார்த்தமே அந்தப் பிசாசுடைய சரித்திரத்தையே புட்டுப் புட்டு வெக்கறார்.

வசந்த் மேலே தொடர்வதற்குள் தூரத்தில் சுனையருகில் போலீஸ் ஜீப் வந்து நிற்பது தெரிந்தது. இன்ஸ்பெக்டர் இறங்கி அவர்களைச் சைகை செய்து அழைப்பது தெரிந்தது...

கணே**ஷு**ம் வசந்த்தும் விருட்டென்று எழுந்து நடந்து அங்கே சென்றார்கள். “குட்மார்னிங்! என்ன விஷயம்?”

tamilpdffree.wordpress.com

இன்ஸ்பெக்டர் கலவரத்துடன் “பிணத்தைக் காணோம்” என்றார்.

## 14

இன்ஸ்பெக்டர் அதிர்ந்திருந்தார். “பெரிய ரோதனையாப் போயிடும் போல இருக்கு இந்தக் கேஸ்” என்றார்.

“என்ன சொல்றீங்க! பிணத்தைக் காணமா?”

“ஆமாம். முழுசாக் காணாம போயிறுச்சு!”

“எழுந்து நடந்து போயிருச்சா? எப்படி சார் அது சாத்தியம்?”

“ராத்திரி விசாரிச்சுட்டு நான் தனியா ஜீப்லே போய்ட்டேன். வீட்டுக்குப் போயிட்டேன். வண்டி வந்து பாடியைப் பின்னால லோட் பண்ணிட்டு எங்குவார்டர்ஸ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துட்டுப் போயிருக்காங்க ஒரு டிரைவர் இன்னொரு கான்ஸ்டபிள் முன்னால உட்கார்ந்திருக்காங்க. பின்னால உடல். நடுவில் ரயில்வே கேட்டில் ஒரு தடவை நின்னிருக்காங்க. அப்புறம் நேரா ஆஸ்பத்திரிக்கு வண்டி எடுத்துட்டுப்போய் பின்பக்க கேட்டு வழியா நுழைஞ்சு பிணவறை தனியா இருக்கு. அதன் வாசலில் நிறுத்திட்டு ஆர்டர்லியை கூப்பிடப் போயிருக்காங்க. திரும்பி வந்தப்போ உடலைக் காணோமாம்!”

“பூட்டியிருந்ததா வண்டி?”

“இல்லிங்க. பின்னால ஓப்பன் பிக் அப் வேனைக் கன்வர்ட் பண்ணது, இது என்னடாதுன்னு அதிர்ந்து போய் என்ன பண்ணியிருக்காங்க. வர்ற வழியில ஆட்டத்தில் எங்கேயாவது சாலையில விழுந்திருக்குமோன்னிட்டு வண்டியை திருப்பி ரெயில்வே கேட்டு வரைக்கும் எடுத்திட்டு வந்திருக்காங்க. நெடுகப் பார்த்திருக்காங்க. ரெயில்வே கேட்டைத் தாண்டி ஏறக்குறையப் பண்ணை வரை வந்திருக்காங்க. கிடைக்கலை பாதையில் ஒரு ஆசாமி, ‘அய்யோ அய்யோ என்னைக் காப்பாத்துங்க’ன்னு அழுதிட்டிருந்தானாம். என்னடான்னு விசாரிச்சா…கணேஷ், இதை நீங்க நம்ப மாட்டீங்க!”

“சொல்லுங்க”

“வெளுப்பா சாம்பல் நிறத்தில் ஒரு பொம்பளை உருவம். ஒண்ணு…ஒத்தைக் கையால ஒரு பிணத்தை இழுத்துக்கிட்டு ஏறக்குறைய பறந்து போய்க்கிட்டிருந்ததை அவன் பார்த்தானாம். ஒரு கையைப் பிச்சுத் தின்னுக்கிட்டே!”

வசந்த் எச்சில் விழுங்கினான்.

“அந்த ஆளு அப்படியே பிரமை பிடிச்சா மாதிரிப் பினாத்தினானாம். வேன்ல ஏறிக்கிட்டு என்னைக் காப்பாத்துங்கன்னு, கதறினானாம். வேன் டிரைவர் உடனே ஓடியாந்துட்டான். வீட்ல படுத்துட்டான். அதிகாலைல எழுப்பி என்கிட்டே விஷயத்தைக் கதறிக் கதறிச் சொல்றான். எனக்குப் புரியவே இல்லை. பண்ணைக்கு வந்து வியாசனைக் கேட்டா…அவர்கூட அந்த உருவத்தைப் பார்த்திருக்காராம். நீங்களும் பார்த்திருக்கீங்களா? என்ன கணேஷ் இது உண்மையா? நீங்க பிசாசைப் பார்த்திங்களா?”

tamilpdffree.wordpress.com

கணேஷ் யோசித்தான். வசந்த், “பாஸ்! எனக்குச் சின்னதா ஒரு காப்பி சாப்பிடணும்,” என்றான்.

“என்ன கணேஷ், நீங்க என்ன பார்த்தீங்க? இதையெல்லாம் நம்பறீங்களா?”

“இன்ஸ்பெக்டர் நான் பார்த்ததை சொல்றேன். அதோ தெரியுது பாருங்க அரச மரம். அதில அன்னிக்கு ராத்திரி ஒரு உருவத்தைப் பார்த்தேன். பெண், பெண் உருவம். வெளுப்பா டிரெஸ் போட்டுக்கிட்டு இருந்தது. கொஞ்சம் சின்னதா இருந்தது. தொடர்ந்து இரண்டு ராத்திரி பார்த்தேன். இரண்டாவது முறை கிட்டப் போனப்ப அது என்னை ஓங்கி அறைஞ்சுருச்சு... இதோ கன்னத்தில் காயம் பாருங்க...”

“அப்படின்னா... அப்படின்னா நிஜமாவே பிசாசா? என்னங்க இது...? கணேஷ், நீங்க ரேஷனல் ஆன ஆசாமின்னு நினைச்சேன். நீங்க கூட நம்பறிங்களா?

“இது நம்பிக்கைப் பிரச்சினை இல்லை இன்ஸ்பெக்டர். நான் பார்த்தது. எனக்குப் புரியவில்லை. இது எப்படி சாத்தியம்னு எனக்குப் புரியலை. இந்தக் கற்பனைன்னும் சொல்ல முடியலை. ஒரு விதமான உரு வெளித்தோற்றம். ஹாலுசினேஷன்னும் சொல்ல முடியலை. ஏன்னா இந்தப் புண் நிஜம்.”

“இப்ப நான் என்ன செய்யப் போகிறேன்! முதல்ல பாடி இருந்தாத்தானே இன்வெஸ்டிகேஷன்!”

வசந்த், “இன்ஸ்பெக்டர், கேஸ் ரிஜிஸ்தர் பண்ணிட்டீங்களா?” என்றான்.

“ஒரு என்ட்ரி விட இருந்தேன்!”

“போடாதீங்க!”

“நெப்பூர் கிராமம் பூராப் பேசிக்குது.” என்றார் அருகிலிருந்த கான்ஸ்டபிள்.

“என்னய்யா?”

“பிசாசு பிணம் தின்னுடுச்சுன்னு...”

“பார்த்தாங்களாமா?”

“ஆமாம்.”

இன்ஸ்பெக்டர், “நீங்களும்தான் லா படிச்சிருக்கீங்க. இந்த மாதிரி கேஸுக்கு இடமே ஏதாவது...”

“ம்ஹூம் ஸி ஆர் பி ஸிபில சுத்தமா தரையில கால் பாவாத கேஸுக்கு இடமே இல்லை.”

“இன்ஸ்பெக்டர், இதைப்பத்தி நீங்க மேலதிகாரிகளுக்கு ஒரு ரிப்போர்ட் எழுதலாம். அதான் இந்தச் சூழ்நிலையில் செய்ய முடியும். மேற்கொண்டு விசாரிக்கலாம்.

எனக்கென்னவோ ரொம்ப உதைக்குதே... கடத்திக் கிட்டுப் போயிருப்பாங்களோன்னு!... இந்த பிசாசு பிஸினஸ் எல்லாம் நம்ப முடியலை. நான் பார்த்தாத்தான்.”

“ராத்திரி வந்துடுங்களேன். பார்த்துறலாம்...”

tamilpdffree.wordpress.com

"மிஸ்டர் கணேஷ். எதுக்கும் நான் இதைப்பத்தி சூப்ரண்டுக்குத் தெரிவிச்சே ஆகணும். சிரிப்பாரு! உங்களை ஒரு சாட்சியா குறிப்பிடலாமா?"

"தாராளமா! நான் பார்த்ததைச் சொல்றேன்!"

"நானும் பார்க்க விரும்பறேன். ஒவ்வொரு ராத்திரி வருதா?"

"அப்படித்தான் தெரியுது"

அவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருக்கையில் புழுதியை கிளப்பிக் கொண்டு ஒரு டாக்ஸி வந்து நின்றது. நிற்பதற்குள் இரண்டு பேர் வெளிப்பட்டார்கள். விடுவிடுவென்று நடந்து வந்தார்கள். ஒருவரிடம் நோட்டு புத்தகம். மற்றவரிடம் கேமரா.

"சரிதான். பத்திரிகைகாரங்க! மூக்கில வேர்த்தாச்சா?"

"இங்க ஒரு பிரேதம் காணாமப் போயிட்டதாகவும் பிசாசு கொண்டுட்டுப் போயிட்டதாகவும் சொன்னாங்களே இன்ஸ்பெக்டர், நிஜமா!"

"நீங்க யாரு?"

"நான் ராமசுப்பு. தினமலர்"

காமிராக்காரர் வீட்டை எடுத்தார். தோட்டத்தை எடுத்தார். தரையை எடுத்தார்.

இன்ஸ்பெக்டர், "ஸ்டேட்மென்ட் கொடுக்க டயமில்லை. ஸ்டேஷனுக்கு வாங்க"

"இவர் மிஸ்டர் கணேஷ்தானே?"

"ஆமா"

"நீங்க என்ன சொல்றீங்க மிஸ்டர் கணேஷ்! நீங்க பார்த்திங்களா!"

"நான் ஒரு உருவத்தைப் பார்த்தேன்!"

"ராமசுப்பு, ஒரு காரியம் செய்யுங்களேன். ராத்திரி ஒரு நடை வந்துட்டுப் போங்களேன். தாயத்து ஏதாவது கட்டியிருக்கீங்களா?" என்றான் வசந்த்.

"யூ மஸ்ட் பி வசந்த்! வெரி இன்ட்டரஸ்டிங்!"

அருகில் நின்ற குமாரவியாசன், "அதெல்லாம் வேண்டாம்! அனாவசியத்துக்கு புரளி வேண்டாம்னு தோணுது."

"தின மலர்! கொஞ்சம் என்னோட வறீங்களா?..."

"துரை! இவங்க ரெண்டு பேரையும் ஒரு ஸ்நாப் அடிச்சுடு. சரியான ஸ்கூப்."

"யோவ்! காமிராவைப் புடுங்கி ஏரில போட்டுடுவேன்!"

"இன்ஸ்பெக்டர், இப்ப பிரஸ் குழப்பம் வேண்டாம்னு தோணுது..."

"எப்படியோ விசாரிச்சுட்டு வந்துர்றாங்களே!"

tamilpdffree.wordpress.com

“என்ன சொல்றீங்க? கிராமமும் கொல்லுனு போயிடுச்சு! பிசாசு உலாத்துதாம். சுமை தாங்கியில உக்காந்துண்டு இருந்ததாம். ஆகாசத்தில பறக்கிறதாம்!”

“நம்பறீங்களா? எல்லாத்தையும் நம்பறீங்களா?”

“வெரிஃபை பண்ணாம எதுவும் போடறதில்லை. இருந்தாலும் நெப்பூர் மார்க்கெட்ல போய் பாருங்க மிஸ்டர் கணேஷ். நீங்க பேய் பிசாசெல்லாம் நம்பறீங்களா?”

“தினமலர்! அப்புறம் வரீங்களா? எங்களுக்கு நிறைய ஜோலி இருக்கு!”

“ஒண்ணும் பேராது போல இருக்கு.”

“மிஸ்டர் கணே**ஷு**க்கு ஏன் முகமெல்லாம் வீங்கினாப்பல இருக்கு? அடிச்சுருச்சா?”

வசந்த். “ஒரு அறுவை ஜோக் சொல்றேன் உங்க பத்திரிகையில் போடறீங்களா?” என்றான்.

“வா வசந்த்.”

“கணேஷ். நீங்க எதுக்கும் பத்து மணி சுமாருக்கு ஸ்டேஷனுக்கு வர்றீங்களா? சூபரண்டு வந்தாலும் வருவார்!”

“சரி ஸார்.”

“பார்க்கலாம். வாங்க தினமலர்!”

கணே**ஷு**ம் வசந்தும், குமாரவியாசனும் நிற்க அவர்கள் விலகிச் செல்லுமுன் காமிரா ஒருமுறை அவர்களை நோக்கி திரும்பி கிளிக் செய்தது.

“புரியவே இல்லை. மிஸ்டர் கணேஷ்!” என்றார் வியாசன்.”

“லீனா எங்கே?”

“தூங்கறா... வஸந்த், எப்ப வந்தீங்க?”

“பொழுது விடியறப்போ வந்தேன். பாஸ், வரிங்களா? உங்களுக்கு ரெஸ்ட் தேவைன்னு நினைக்கிறேன்.”

“ஆமாம் மிஸ்டர் கணேஷ். ரொம்ப டயர்டா இருக்கீங்க.”

“மிஸ்டர் வியாசன். நீங்க போங்க. நான் வசந்த் கூடக் கொஞ்சம் பேசிட்டு வர்றேன். டோன்ட் ஒர்ரி. ஐயம் ஓகே!”

“ப்ரெக்ஃபாஸ்ட் கொண்டு தர சொல்லட்டுமா?”

“நாங்களே வரோம். நீங்க போங்க!”

அவர் தயங்கிச் சொன்னார். சென்றதும், “வசந்த்! நீ என்ன நினைக்கிறே?”

“பாடி காணாம போறதாவது!”

tamilpdffree.wordpress.com

“அதுவும் அந்த உருவம் தூக்கிட்டுப் போச்சாம்”

“வெண்நிணச் சுவையன் நிணத்தின் வாயள்னு கிருஷ்ணமூர்த்தி சரியாத்தான் சொன்னார். தின்னுகிட்டே போச்சாம். பயங்கரம்.”

“என்னடாது. புரியவே இல்லை! கிருஷ்ணமூர்த்தி வேற என்ன சொன்னார்...?”

“இந்த சொத்தெல்லாம் இவங்க குடும்பத்துக்கு எப்படி வந்ததுன்னு சொன்னார். நவாப் காலத்தில் வெள்ளைக்காரங்களுக்கும் லோக்கல் நவாப்பிற்கும் சண்டை நடந்தபோது வெள்ளைக்காரங்க ஏறக்குறைய தோத்துப்போன சமயத்தில் பக்கத்தில் கர்நாடக மாநிலத்தில் இருந்த காரிஸன்ல இருந்து நூற்றுக்கணக்கா ரைபிள் கடத்தற பிஸினஸ் செய்தாராம். வின்சென்டர் ரைஃபிளோ ஏதோன்னாரு. வைக்கோல் போர்ல ஒளிச்சு வெச்சுட்டுக் கடத்திக் கொண்டுவந்து பிரிட்டிஷ் மேஜருக்குக் கொடுத்துட்டாராம். அவைகளை உபயோகிச்சு அந்த பாட்டில்ல நவாபுடைய படைகளைத் துளைச்சு எடுத்து ஒரே தினத்தில் ஆயிரக்கணக்கில் சுட்டுத் தள்ளிட்டாங்களாம். அவர் செய்த உதவிக்குத் துரைத்தனத்தார் கொடுத்த பரிசாம் இந்த சொத்து. ரத்தம் சிந்திச் சம்பாதித்த சொத்து. அந்தப் பாவம் அந்தக் குடும்பத்தை இன்னும் சுத்துதுன்னு சொன்னார். போன நூற்றாண்டில் 1920–ல் அங்க குமாஸ்தாவா இருந்தாராம். இந்த ஃபேமிலி ஹிஸ்டரி முழுவதும் தெரியுமாம்.

ஏதாவது ஒரு அகால மரணம் நிகழ்ந்துக்கிட்டே இருக்குமாம். புத்திரவதின்னு ஒரு பெண் பிள்ளை அவர் காலத்தில் தற்கொலை பண்ணிக்கிட்டுச் செத்துப் போனாளாம். அவளுடைய ஆவி ரெண்டு வருஷத்துக்கு ஒருமுறை கார்த்திகை மாதம் தவறாம இங்க வருமாம். அதைத்தான் நீங்க பார்த்திருக்கீங்கன்னு சத்தியம் பண்றார். வெரி ஓல்ட் மேன். அடிக்கடித் தனக்குத் தானே சிரிச்சுக்கிறார்... அவர்கிட்டே இன்னும் நிறைய விஷயம் இருக்கு. இருமி இருமி இவ்வளவுதான் சொன்னார். புறநானூறிலேருந்து ஆரம்பிச்சார். என்ன பாஸ் யோசிக்கறீங்க? கவனிக்கலையா?”

“வசந்த் இன்னிக்கு முக்கியமா நீ ஒரு காரியம் செய்யணும்.”

“சொல்லுங்க!”

“எனக்கு முதல் சந்தேகம் குமாரவியாசன் மேல. அந்தச் சந்தேகத்தை எலிமினேட் பண்ண பிற்பாடுதான் இந்தப் பேய் பிசாசு பிசினஸைப் பார்க்க முடியும்.”

“இப்ப என்ன செய்யலாம் சொல்லுங்க.”

“பத்து மணிக்கு வியாசனை நான் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைச்சுட்டுப் போயிடறேன், நீ இருந்து அந்த ரூமைத் தலைகீழாப் புரட்டிடு!”

“லீனா?”

“லீனாவையும் நான் கூட்டிட்டுப் போயிடறேன்!”

“ஹூம்! டர்ட்டி ஒர்க் எல்லாம் நான்தான் செய்யணும்! பரவாயில்லை. பெரியவர் கேக்கறீங்க, செய்யறேன், என்ன என்ன கண்டுபிடிக்கணும்?”

“வித்தியாசமா எது இருந்தாலும், முக்கியமா அந்த பட்டனுக்கு உரிய சட்டை. லைட் ஸ்விட்ச். அவர் ரூம்ல இருந்து நம்ப அறை விளக்குகளைக் கண்ட்ரோல் பண்ண முடியுமா? அப்புறம் மைக்போன் ஸ்பீக்கர் ஏதாவது இருக்கா?”

tamilpdffree.wordpress.com

“நீங்க என்ன இன்னும் விஞ்ஞான ரீதியா நடந்ததை எல்லாம் நிரூபிக்க விரும்பறீங்களா?”

“தலை சுத்துது எனக்கு. விஞ்ஞானமா? விபரீதமா? பிசாசா? புரளியா? ஒண்ணுமே எனக்குத் தோணலை. ஆனா இந்த குமாரவியாசன் மேல சந்தேகம் லேசா இருக்கு. இந்த ஆள் நடந்துக்கற விதத்திலே ஏதோ ஒரு எல்லாந் தெரிஞ்சத்தன்மை இருக்கிற மாதிரி படுது. பதற்றம் போறலை. ஒரு ஆள் தோட்டத்திலே செத்துக்கிடக்கான்னா பதற வேண்டாமா? பத்தாது. கழுத்தில என்ன?”

“வந்து... ஒரு சின்ன தாயத்து. அனுமார் ஜோசியர் கொடுத்தார். காத்துக் கறுப்பு அண்டாம இருக்க!”

“சரிதான். நீயும் அந்தக் கட்சிக்குப் போட்டியா?”

“எதுக்கும் ஒரு ஸேஃப்டிக்கு இருக்கட்டும்னுதான். சக்கரம் எழுதி தரேன்னார். பஞ்லோகத்தில் நாற்பது ரூபாய் ஆகும்னார். அஞ்சு ரூபாய்ல டெம்ரவரியா, ஒண்ணு போட்டுக் கொடுங்க ஜோசியரேன்னு... பாஸ், ஆனா இதை போட்டதும் ஒரு மாதிரி கஸ்தா இருக்கு...உங்களுக்கும் ஒண்ணு கொண்டு வந்திருக்கேன்.”

“தூக்கி ஏரில போடு. நான் சொல்றதைச் செய் முதல்ல”.

“கவலைப்படாதீங்க பாஸ். புரட்டி எடுத்துடறேன்”

“வசந்த்! உன்னை டைரக்ட்டா ஒரு கேள்வி கேக்கறேன்”

“பேய் பிசாசு இருக்கா? அதானே?’

“அதான்”

“இருக்கு. நாம பார்த்ததுக்குச் சரியான எக்ஸ்பிளனேஷன் கிடைக்கிறவரைக்கும் இருக்கு! ஆகாசத்தில் பந்தாடுது... கன்னத்தில் அறையுது. இதெல்லாம் எப்படி பாஸ் முடியும். விஞ்ஞானமாவது? எழவாவது? வெட்ட வெளியில் அந்தப் பொம்பளை விர்ர்னு பறக்கறதைப் பார்த்தமா? இல்லையா?

“வா போகலாம்!”

“ரொம்ப டவுனா இருக்கீங்க! உங்களை சிரிக்க வைக்க வேண்டியது என் கடமை!”

“அறுவை ஜோக்கா! நான் இப்ப மூட்ல இல்லை வசந்த்!

“லேட்டஸ்ட் கேளுங்க! பட்டணத்திலேயே வளர்ந்த ஒரு சின்னப் பையன் புதுசா கிராமத்துக்குப் போனான். மாட்டு வண்டில போனான். பையன் எப்பவும் கார்ல போய் பழக்கமானவன். மாட்டுவண்டியே புதுசா இருக்கு. வண்டிக்காரன் ஹை ஹைன்னு விரட்டரதும் மாடு தலையை ஆட்டிட்டு ஆட்டிட்டுப் போறதும், ஒரு இடத்தில் சட்டுன்னு வண்டி நின்னுடுச்சு. மாடு நிதானமா சர்ர்னு ஒண்ணுக்கடிச்சது. பையன் பார்த்துக்கிட்டே இருக்கான். ‘அப்பா இனிமே இந்த வண்டி போகாதுப்பா’ன்னான். ஏன்டான்னார். பக்கத்தில் உக்காந்திருந்த அப்பா... ‘அதான் பெட்ரோல் எல்லாம் கொட்டிப் போச்சே’

கணேஷ் சிரித்தான்.

“அப்பாடா! ஒரு வழியா சிரிக்க வெச்சுட்டேன். பேசாமப் போய் ரெஸ்ட் எடுத்துக்கங்க. லீனா எழுந்தாச்சான்னு விசாரிச்சுட்டு வர்றேன்.”

tamilpdffree.wordpress.com

கணேஷ் அறைக்கு வந்து முகம் கழுவினான். கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டான். கன்னத்தில் மெலிதாக வீக்கம். தொட்டால் வலி. ஆத்திரமாக வந்தது. மெல்ல நகர்ந்து படுக்கையில் விழுந்தான். உறக்கம் கவ்வியது.

“வரலாமா?” என்ற குரல் கேட்டது. லீனா கதவருகில் காப்பிகோப்பையைக் கலக்கிக் கொண்டே நின்றாள். பளிச்சென்று அந்த அறையில் வெளிச்சம் போட்டாற்போல இருந்தது. “குட் மார்னிங் நல்லா தூங்கினீங்களா?”

கணேஷ் சிரித்தான். லீனா முகம் கழுவிப் புதிதாக இருந்தாள். கரடி குட்டியைக் கட்டிக்கொண்டு தூங்கும் குழந்தைத்தனம் நினைவுக்கு வந்தது. அதே சமயம் நேற்றுக்கேட்ட அவள் குரல் உறுத்தியது.

“லீனா, வந்து உட்காரு!” என்றான்.

எதிரே உட்கார்ந்தாள். ‘காப்பி சாப்பிடுங்க! அட! அடிபட்டிருக்கே!” அவன் கன்னத்தைத் தொட்டாள். மெலிய விரல்கள். மோகினி.

“என்ன ஆச்சு? ராத்திரி ஏதோ ரகளையாமே?” என்றாள்.

“லீனா என்னோட பத்து மணிக்கு வரயா?”

“எங்கே?”

“போலீஸ் ஸ்டேஷனுக்கு”

“எதுக்கு?” என்றாள் பயத்துடன்.

“பயப்படாதே! நேற்றைக்குச் செத்துப் போனானே அந்த ஆள், அவன் போய்ட்டான். உடலே காணாம போயிடுச்சு!”

“அதான் சாப்ட்டாச்சே!” என்றாள் லீனா.

tamilpdffree.wordpress.com

## 15

கணேஷ் லீனாவை நேராகப் பார்த்தான். “என்ன சொன்னே? மறுபடியும் சொல்லு” என்றான்.

“யாரோ தின்னுட்டாங்களாமே அதை? அப்படித்தான் பேசிக்கிட்டாங்க!”

“உனக்கு யார் சொன்னா? நீ இப்பதானே தூங்கி எழுந்துவரே?”

“ம். வந்து சித்தப்பா சொன்னார்”

“பொய் சொல்லாதே லீனா”

“சேச்சே! காப்பி சாப்பிடுங்க”

அவளை மாறாமல் பார்த்துக்கொண்டே காப்பி பருகினான். மெலிதான கசப்பு. ஏதாவது கலந்திருப்பாளோ? சே! என்ன கற்பனை! இருக்கிற வினோதங்கள் போதாதா? காப்பியில் விஷம் வேறு வேண்டுமா என்ன? இருந்தும் லீனாவின் மிகையான குழந்தைத் தனமான தோற்றத்தில் ஏதாவது ஒரு உறுத்தல், ஒரு தப்பு இருக்கத்தான் வேண்டும். ஒரு கணம் லீனா இருட்டில் சுமைதாங்கியின் மேல் பெரிசாக உட்கார்ந்து கொண்டு மடியில் உடலைக் கிடத்திக்கொண்டு பிய்த்துப் பிடுங்கி ரசித்துச் சாப்பிடுவது போல் ஒரு காட்சி அவன் மனத்திரையில் உருவாகி உடனே அதைக் கலைத்தான். “லீனா, நான் அனேகமாக நாளைக்குத் திரும்பி மெட்றாஸ் போயிடுவேன்”.

“நானும் வந்துடறேன் கணேஷ்”.

“இந்தச் சொத்து விவகாரத்தை ஸெட்டில் பண்றதைக் கொஞ்சம் ஒத்திப் போட்டு வெச்சுறலாம்னு தோணுது”.

“நீங்க எப்படி சொல்றீங்களோ அப்படிச் செய்யறேன்”.

“நான் ஒரு ஆளைக்... வேண்டாம்!”

“லீனா, பத்து மணிக்கு போலீஸ் ஸ்டேஷன் போகலாம்னு இருக்கேன். என் கூட வர்ரியா? சித்தப்பாவும் வருவார்”

“வரேன். கணேஷ், நேத்திக்கு ராத்திரி நான் கொஞ்சம் தப்பா நடந்துகிட்டேன் இல்லை?”

“தப்புன்னு இல்லை. கொஞ்சம் தைரியமா நடந்துகிட்டே!”

“தைரியம் இல்லை. பயம்! எனக்கு எலினா உதறல். அதான் உங்களை அப்படியே கட்டிப் பிடிச்சுட்டேன்”

“நம்பச் சொல்கிறாயா?”

“வித்யாசமா எடுத்துக்காதீங்க”

“இல்லை”

“ஏன் கணேஷ், ஒரு ஆம்பிளைத் தொட்டுட்டா உடனே கற்பு போயிடுதா?”

“எனக்குச் சரியாப் பதில் சொல்லத் தெரியலை லீனா”

“கற்புங்கறது என்ன? கல்யாணம் ஆன பிற்பாடுதானே கற்பு? கணேஷ். இப்ப நீங்களே என்னை அந்த ரூமுக்குத் தனியா அழைச்சுகிட்டுப் போயி ‘லீனா உன்னை நான் பார்க்க விரும்பறேன்’ சொல்றீங்க! அதில என்ன தப்பு?”

கணேஷ் அவள் கண்களைப் பார்த்தான். என்ன மனுஷி இவள். வேண்டுமென்றே என்னை வம்புக்கு இழுக்கிறாளா? டீஸ் பண்ணுகிறாளா? இல்லை தெரியாமல்தான் கேட்கிறாளா? அவள் நகங்கள் வெட்டப்படாமல் கூர்மையாக இருந்தன.

கணேஷின் மார்பில் ஒரு சின்ன ரத்தக் கோடு. அதற்குதான் கூப்பிடுகிறாள். அவர்கள் நம்புவது போல் இவள் மனுஷப் பிறவி இல்லை. ஏதோ ஒரு நிறைவேறாத ஆவி இவளிடம் வந்து ஒண்டிக் கொண்டிருக்கிறது. அதுதான் போலும்.

“உமது தாய் புத்திரவதி. அவள் புத்திரவதியல்ல என்று மறுத்து விடும் பார்க்கலாம்.

tamilpdffree.wordpress.com

புத்திரவதி!

“பாவம், உங்களுக்குதான் ரொம்ப சிரமம் இல்லையா கணேஷ்! அடிப்பட்டு கன்னத்தில் கன்னிப்போயிருக்கு.”

யார் அவள் என்கிற கேள்வி மறுபடி தாக்கியது .

“உங்க கூட வந்தா எனக்குப் பயமே இல்லை கணேஷ். போலீஸ்காரங்க கிட்டே கூடப் பயமில்லை.”

நீ கூட வந்தால் எனக்குதான் சற்றுப் பயம்.

“நீ போய்க் குளிச்சுட்டு டிரஸ் பண்ணிக்கிட்டு ரெடியா இரு என்ன?”

அவனைக் கன்னத்தில் பரிவாகத் தொட்டுவிட்டுக் காற்றில் ஒரு முத்தம் தந்துவிட்டு ஓடினாள். கணேஷ் அவள் உற்சாகமாக அவுட் ஹவுஸ் நோக்கிச் செல்வதை ஜன்னல் வழியாகப் பார்த்தான். எந்த விதத்திலும் இவளை இன்னும் இனம் காண முடியவில்லை. பெண்ணா? பேயா? மானிடமா? தேவதையா? குற்றம் செய்கிறவளா? செய்தவளா? செய்யப்படுபவளா? வசந்த் எங்கே? அதோ அந்த அவுட்ஹவுசில் எங்கேயாவது மறைத்திருக்கலாம். இல்லை, விசாரிக்க வெளியே போயிருக்கலாம்.

பாத்ரூமிற்குச் சென்று ஷவரைத் திறந்து பார்த்தான். சில்லென்று நீர் விரிய அதில் தலையை நனைத்தான். சற்று நேரம் குளிர்ந்த தண்ணீரில் தலையை அப்படியே நனைத்துக் கொண்டே நின்றான். ஜாக்கிரதை. காயங்கள்... இருந்தும் அவன் மண்டைக்குள் குழப்பங்களை நிவர்த்திக்க அந்த விநோத ஸ்னானம் தேவையாக இருந்தது.

**நெ**ப்பூர் போலீஸ் நிலையம் ஊருக்குச் சற்று வெளியே இருந்தது, அரைவட்ட ஆர்ட்ஸில் சிவப்பு எழுத்துக்களை ஒரு மல்லிகைக் கொடி சில சமயம் மறைந்தது. ஓரமாக ஒரு ஜீப்பும் வானும் நிற்க உள்ளே சற்றுத் தூரம் நடந்ததும் வலது புறத்து அறையில் போலீஸ் சூப்ரண்ட் நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அவருக்கு இன்ஸ்பெக்டர் வயதுதான் இருக்கும். சின்ன, ஏறக்குறைய உச்சந்தலையில் மட்டுமே கிராப் வைத்திருந்தார். தொப்பி அணிந்து அணிந்து தலையில் ஒரு ‘டயாடெம்’ போல வட்ட சுவடு தெரிந்தது, மூக்கிற்குக் கீழ் அனாவசியமாகப் பெரிசாக மீசை வைத்திருந்தார். உதடுகளை ஏறக்குறைய மறைத்த மீசை. ஒரு எஸ்.பி.க்குரிய தோரணையை இந்த மாதிரி செயற்கை முறைகளில் அதிகப்படுத்திக் கொள்ளத் தேவையிருக்கும். சற்று சிறிய உடற்கட்டு. இருந்தும் புஜங்களில் வலு இருந்தது.

“வாங்க மிஸ்டர் வியாசன். நீங்க கணேஷ். இந்தம்மா தான் மிஸ் லீனா அப்படித்தானே?”

“அப்படித்தான் ஸார்”

“வசந்த் வர்லியா?”

“இல்லை. சொல்லி அனுப்பட்டுமா?”

“வேண்டாம் மிஸ்டர் கணேஷ், என்ன இது புரளி?”

“எது?”

“நீங்க நிசமாவே பிசாசைப் பார்த்தீங்களா?”

“ஆமாம் பார்த்தேன்’ என்றான் கணேஷ் தெளிவாக.

“என்ன பார்த்தீங்க, சொல்லுங்க” என்றார் புன்னகையுடன்.

“பண்ணையில் ஒரு அரசமரம் இருக்கு”

“ஏன்யா பேயயெல்லாம் புளிய மரத்திலேதானே வரும்னு சொல்லுவாங்க?”

“இது அரசமரம். முதல் தடவை போனபோது சிரிப்பொலி கேட்டுது. ‘வாங்க! ‘ஐயா வாங்க!’ இப்படியெல்லாம் குரல்கள். புத்திரவதி சித்திரவதின்னு யார் யாரோ பேசிக்கிற மாதிரி குரல்கள், வேறவேற குரல்கள்”

“வெறும் குரல்கள் தானா?”

“அதுமட்டுமில்லை. சாம்பல் நிறத்தில் ஒரு பெண் உருவம் புடவை கட்டிக்கிட்டு மனித பரிமாணங்களோட ஒப்பிட்டாக் கொஞ்சம் சின்னதா பழங்காலத்து நகை மாதிரி அணிஞ்சுக்கிட்டு அச்சு லீனா மாதிரி முக ஜாடையோட ஒரு உருவம். அப்புறம் அது உயரப் போய் மரக்கிளை வரைக்கும் போய் பயங்கரமா விஸில் சப்தம் போட்டுட்டு மறைஞ்சு போயிருச்சு”

“நான் நம்பலை? கண்கட்டு வித்தைங்கறாங்களே அதா இருக்குமா?”

“இரண்டு முறை பார்த்தேன். மறுமுறை பார்த்தப்போ அது நடந்துக்கிட்டு இருந்தது. அப்ப அதைத் துப்பாக்கியால சுட்டுப் பார்த்தேன். போட்டோ எடுத்துப் பார்த்தோம்”

“போட்டோ இருக்கா?”

“எடுத்திருக்கோம். டெவலப் பண்ண மெட்றாஸ்ல கொடுத்திருக்கோம்”

“துப்பாக்கியால சுட்டது என்ன ஆச்சு?”

“ம்**ஹூ**ம். அதை ஏதும் செய்ய முடியலை. அப்புறம் கிட்டப்போனேன். மூஞ்சில அடிச்சிருச்சி. இத பாருங்க காயம்”

எஸ்.பி. யோசித்தார். “கணேஷ் நீங்க பகுத்தறிவுவாதிதானே?”

“ஏன்.”

“பிசாசு உண்டுன்னு நம்பறிங்களா?

“நான் பார்த்த காட்சி சார் இது. இதை ஸ்டேட்மெண்ட்டா கொடுக்கவும் தயார்.”

“இருபதாம் நூற்றாண்டில் இந்த மாதிரி ஒரு புருடாவா?” என்று சிரித்தார்.

“நீங்க வேணும்னா அங்க வந்து ராத்திரி பார்க்கலாம்”

“தினம் ராத்திரி வர்றதா?”

“அப்படித்தான் தோணுது”

tamilpdffree.wordpress.com

“அதான்யா சரி! என்ன துரைராசன். ராத்திரி போய்ப் பாத்துருவமா?”

இன்ஸ்பெக்டர் தயக்கத்துடன் “ம்...சரிங்க” என்றார்.

“ஏன்யா ஹெட் கான்ஸ்டபிள் நீங்களும் வந்துருங்க”

“எல்லாரும் போயிட்டா இங்க டூட்டி பாக்கறது யாருங்க?”

“நடுங்கிச் சாவாதிங்கய்யா! மிஸ்டர் கணேஷ், வியாசன் நீங்களும் என் கூட வரீங்க, அடையாளம் காட்ட... அது கிடக்கட்டும் அதைவிட இப்ப முக்கியம் அந்தக் காணாம போன பாடி! திடுதிப்புன்னு மறைஞ்சு போச்சு. பிசாசு தூக்கிட்டுப் போச்சுன்னு சொன்னா யாராவது நம்புவாங்களா? ஐ.ஜி. ஆபீஸ்ல சிரிப்பாங்க!”

“உண்மை அதுதாங்களே?” என்றார் காண்ஸ்டபிள்.

“சேச்சே! உண்மை அதில்லை. அந்த பாடி இப்ப நமக்குக் கிடைச்சு ஆகணும். எல்லாம் சரடு. இரண்டு வருஷமாம். கார்த்திகை மாசமாம். பிசாசு வரதாம். பிணந்தின்னுதாம். என்னய்யா இதெல்லாம். ப்ரிண்ட்ஸ் எடுத்திங்களா?”

“எடுத்திருக்கம் சார். மெட்றா**ஸு**க்கு அனுப்பிச்சாச்சு. இந்த நகை ஒண்ணு பக்கத்தில் கிடந்தது”

“நகை இருக்கு! பிணத்தையே காணமே இப்ப. எதை வெச்சுகிட்டு பஞ்சநாமா பண்ணுவீங்க!”

“அதானே?”

“என்னய்யா அதானே? கோட்டை விட்டுட்டு.. இதபாருங்க துரைராசன் நான் இதெல்லாம் நம்பமாட்டேன். முதல்ல இறந்தவன் யாருன்னு தெரிஞ்சா அந்த பாடி ஏன் மிஸ்ஸிங்னும் தெரிய வரலாம். கிராமத்தில துப்பரவா விசாரியுங்க, எவனாவது காணாம போயிருக்கானா அதை முதல்ல தெரிஞ்சுக்கங்க. என்ன?”

“சரி சார்.”

“நான் செங்கல்பட்டு போயிட்டுச் சாயங்காலம் வந்துர்றேன். ராத்திரி எல்லாரும் மிஸ்டர் கணே**ஷு**டைய பிசாசை பார்க்க போகலாம்,” என்று சிரித்து விட்டுப் புறப்பட்டார்.

“அவர் சென்றதும். “சின்னவரு! இள ரத்தம்.. தெரியாமப் பேசறாரு!” என்றார் கான்ஸ்டபிள், கணேஷ் கடியாரத்தைப் பார்த்தான். பத்து நாற்பது. இன்னும் இருபது நிமிஷமாவது இருக்க வேண்டும். வசந்துக்கு ஒரு மணிநேரமாவது தேவையாக இருக்கும், தேடுவதற்கு.

“போகலாமா?” என்றார் குமாரவியாசன்.

“இருங்க. இன்ஸ்பெக்டரோட கொஞ்சம் பேசணும்”

“நான் கிளம்பவா, நீங்க அப்புறம் வரீங்களா?”

“கொஞ்சம் இருங்களேன். நானும் வந்துடறேன்”

கான்ஸ்டபிள், லீனாவைப் பயம் கலந்த பார்வையுடன் பார்த்து “நீங்க, அந்த பெஞ்சில போய் உக்காந்துக்கங்கம்மா.” என்றான்.

tamilpdffree.wordpress.com

“காருக்குப் போயிறட்டுமா” என்றாள் லீனா.

“வேண்டாம் லீனா. இங்கயே இரு!”

“கிராமத்துப் பயலுக பார்த்தாங்கன்னா கல்லைத் தூக்கிடுவாங்க! உள்ளவே இரும்மா”

பதினொன்றைக்குத் திரும்பினார்கள். வசந்த் சாது போல் அறையில் புத்தகம் படித்துக் கொண்டிருந்தான். லீனாவும் குமாரவியாசனும் அவுட்ஹஸ் சென்று விட்டார்கள்.

“வசந்த்! என்ன ஆச்சு!”

வசந்த் புத்தகத்திலிருந்து, “இப்பூத கணங்களின் பேதங்கள் முப்பத்து மூன்று. அதன் குறி குணங்கள் அளவற்றவைகள். இப்பூதகணங்கள் யாவரையும் பிடிக்குமெனினும் புருஷர், கன்னிப் பெண்கள், காவிகள், அசாத்தியார்கள், முரடர்கள். பூர்வகர்மா, கோவதை, சிசுவதை பிராம்மணவதை முதலியவைகளைச் செய்தவர்களைப் பிடிக்கும்” என்றான்.

“என்னடா பைத்தியக்காரப் புஸ்தகம் இது!”

“அகஸ்தியர் அஷ்ட மாசித்த மந்திரஜோதி”

“தூக்கி எறிடா”

“லீனா பூர்வ ஜன்மத்தில் ஒரு பசு, ஒரு சிசு, ஒரு பிராமணன் எல்லாரையும் கொன்னுருக்கா பாஸ்!”

“வசந்த்! ஷட் அப்! காரியம் என்ன ஆச்சு!”

“பலன்.”

“சொல்லு.”

இங்கையா என்று சைகை காட்டினான் வசந்த்.

இரு என்று சைகை காட்டி கணேஷ் தன் பெட்டியிலிந்து டிரான்ஸிஸ்டரை எடுத்து அதை உரத்த குரலில் பாடவிட்டான்.

வசந்த்தை அருகில் அழைத்து வைத்துக் கொண்டு அருகே மெதுவாகப் பேசினான்.

“நான் சொன்னதைச் செஞ்சியா?”

“ம்? ஒரு மணிநேரத்தில் துழாவிட்டேன். பின்பக்கம் ஒரு சர்விஸ் எண்ட்ரன்ஸ் மாதிரி இருந்தது. பூட்டி இருந்தது. ஒரு நெம்பு நெம்பி...”

“நீ பூட்டுத் திறக்கறதில எக்ஸ்பர்ட். தெரியும். உள்ள என்ன கண்டுபிடிச்சே சொல்லு...”

“முதல்லே ஒரு சர்ப்பரைஸ். பட்டன்! இந்த பட்டன் லீனாவுடைய சட்டையைச் சேர்ந்தது...”

“இஸ் இட்? சர்ப்ரைஸ்ஸிங்?” கணேஷ் யோசித்தான்.

tamilpdffree.wordpress.com

“இரண்டாவது, நீங்க ராத்திரி இங்க இருந்து இரைஞ்சு கூப்பிட்டது அவுட் ஹவுஸுக்குள்ள இருந்த குமாரவியாசனுக்குக் கேட்டிருக்க முடியாது. ஜன்னல் எல்லாம் சாத்தியிருந்தா உள்ள கம்ப்ளிட்டா சவுண்ட் கேட்காது. சான்ஸே இல்லை”

“சரி அப்புறம்?”

“வியாசருடைய அத்தனை காயிதங்களையும் குடைஞ்சுட்டேன். கடுதாசுகள், பைல்கள், புத்தகங்கள் எல்லாத்தையும் நிறையப் புஸ்தகம், என்ன என்னவோ புஸ்தகம். பம்பாய்ல கேதார்நாத்துன்னு ஒருத்தரோட நிறைய பிஸினஸ் கரஸ்பாண்டன்ஸ். அப்பறம் டைனர்ஸ் கிளப், பங்களூர்ல செஞ்சுரி கிளப் ஜேஸிஸ் என்ன என்னவோ மெம்பர்ஷிப். அதெல்லாம் முக்கியமா எனக்குப் படலை. இந்த ஒரு விளம்பரத்தைத் தவிர. ஹிந்துவில இருந்து கட்டிங் எடுத்து ஒரு காகிதத்தில் ஒட்டியிருந்தது பாருங்க”

அந்த விளம்பரத்தில்:

Wanted a good technician with IIT certificate or diploma in electrical and electronic with experience. Very attractive terms. Box no...

“அப்பறம் இந்தக் கடிதம். இதைப் படிச்சுப்பாருங்க என்றான் வசந்த்.

“எடுத்துட்டே வந்துட்டியே”

“திருப்பி வெச்சுறப் போறமில்லையா?”

அந்தக் கடிதத்தில்.

“அன்புள்ள திரு சந்திரசேகருக்கு.

உங்கள் 21.2.77 தேதியிட்ட விண்ணப்பத்திற்கும் அதன்பின் உங்களைச் சந்தித்துப் பேசினபின் எங்கள் பண்ணையில் உங்களுக்குக் காண்ட்ராக்ட் வேலை அளிக்க எனக்குச் சம்மதமே. உடனே வேலைக்கு வரமுடிந்தால் நல்லது.

உண்மையுள்ள குமாரவியாசன்.”

கணேஷ் அந்தக் கடிதத்தை மறுபடி படித்து ஆழமாக யோசித்தான்.

“வசந்த், எனக்கு ஒண்ணு தோணுது.”

“எனக்கும் அதேதான் தோணுது பாஸ்!”

## 16

டிரான்சிஸ்டரை அலற வைத்து கணேஷ் தன் குரலை இன்னும் சற்றுத் தாழ்த்திப் பேசினான்;

“நான் நினைக்கிறது கொஞ்சம் விபரீதமானது”.

tamilpdfree.wordpress.com

"நான் நினைக்கிறதும் அதேதான். சொல்லட்டுமா? கொலையுண்டது அந்த மெக்கானிக்"

"அட" என்று வியந்தான் கணேஷ். "வசந்த். நீ எனக்குத் தம்பி கிம்பின்னு ஏதாவது உறவா?"

"போன ஜன்மத்தில் பந்தம்! என்ன பாஸ். இத்தனை வருஷம் உங்க கூடக் குப்பை கொட்டிருக்கேன்; உங்க மனசிலே ஓடற எண்ணங்களை என்னால் தொடர முடியாதா?"

கணேஷ் சிரித்தான்.

"கிடக்கட்டும். ஆனா நாம ரெண்டு பேரும் நினைக்கிறத லேசா அபத்தமானதாக்கூட இருக்கு; கவனிச்சிங்களா?"

"எந்த விதத்தில்?"

"ஒரு மெக்கானிக்கை எதுக்குக் கொல்லணும்? கொல்ல வேண்டியது லீனாவை இல்லையா?"

"எப்படி?"

"தெரியாத மாதிரி கேக்கறீங்களே! லீனாவைக் கொல்றதிலே குமாரவியாசனுக்கு லாபம் இருக்கு"

"இல்லை வசந்த். கதை வசனத்தை இந்த மாதிரி போட்டுப்பாரு. இங்கே நடக்கிறது எல்லாமே விஞ்ஞானப்படி நடந்திருக்கு"

"அதெப்படி? அந்த வெட்ட வெளி உருவம்"

"அது உதைக்குது. அதைப்பத்தி அப்புறம் யோசிக்கலாம். மற்றதெல்லாம் விஞ்ஞானப்படி சாத்தியம் இல்லையா? ரூம்ல பேச்சுகுரல், விளக்கு அணையறது..."

"புஸ்தகம் நகர்றது?"

"ஏன் அதுகூட ஏதாவது சக்தியை வெச்சுக்கிட்டு முடியும்னு நினைக்கிறேன். வசந்த், ஒரு சாத்தியத்தைத்தான் இப்ப நாம யோசிக்கிறோம். என்னைப் பொறுத்தவரையிலும் முதன் முதல் விஞ்ஞான சாத்தியம் அந்த உருவெளிப்பாட்டை விட்டுட்டா மற்றதெல்லாம் விஞ்ஞானப்படி சாத்தியம்னு ஒரு ஆரம்ப சித்தாந்தம், ஒரு அடிப்படை வெச்சுக்கலாம்"

"இதையெல்லாம் இயக்கற சூத்திரக்காரி?"

"குமார வியாசன்னு வெச்சுக்கலாம்"

"சொல்லுங்க. எதுக்குங்கற கேள்வியை அப்புறம் வெச்சிக்கலாம்"

"இப்பவே வெச்சுக்கலாம், இந்த வீட்டைப்பற்றி, இந்தக் குடும்பத்தைப் பற்றி ஒரு லெஜண்ட் ஒரு பேய்க்கதை–இருக்குது. ரெண்டு வருஷத்துக்கு ஒரு முறை கார்த்திகை மாதம் பேய் வந்து விளையாடுது அப்படின்னு ஒரு வதந்தி இருக்குது. அந்த வதந்தியைத் தனக்கு சாதகமாக வெச்சுகிட்டு லீனாவைச் சொத்துக்கு வாரிசா வராம செய்யறதுக்கு ஒரு முயற்சி இதுன்னு வெச்சுக்கலாம்"

"உதைக்குது,"



tamilpdffree.wordpress.com

“எப்படி?”

“எதுக்கு சுத்தி வளைக்கணும்? லீனாவை நேர்லயே தீர்த்துக்கட்டலாமே?”

“என்ன வசந்த் மழுங்கிப் போய்ட்டே! அப்படி நேரடியா செஞ்சா முதல் சந்தேகம் யார் பேர்ல வரும்? இவர்தானே உடனே வாரிசு? ஸக்ஸஷன் ஆக்ட் செக்ஷன் 25 படி உடனே டிஸ்க்வாலிபை ஆய்டுவார். அப்படிச் செய்யமாட்டார். மறைமுகமா விஸ்தாரமா அவளைத் தீர்த்துகட்டறதுக்கு இந்தப் பேய் பிசாசு கட்டுக்கதையை பயன்படுத்தி மக்களை நம்ப வெச்சு கடைசியில ஒரு கோரமான வீழ்ச்சியில் அவ மேலேயே பேய்வந்து. அவளை ஒழிச்சி கட்டிடுச்சுன்னு ஸ்தாபிக்க திட்டம்னு வெச்சுக்கலாம்”

“புரியுது அந்த திட்டத்தின் செயல்பாட்டில் குறுக்கே நாம வந்துட்டமா”

“தட்ஸிட்! சரியான சமயத்திலே நாம் வந்துட்டம் கொஞ்சம் அந்த பிளானை ஒத்திப் போடும்படியாக ஆய்டுச்சு நம்மையும் பயங்காட்ட வேண்டியதா? ஆய்டுச்சு!”

”ஆமாம் இப்ப இந்த மெக்கானிக்?”

“குமாரவியாசனுக்கு இந்த மாதிரி வினோதச் செயல்களை எல்லாம் ஏற்பாடு செய்ய உதவறதுக்குத் தேர்ந்த எலக்ட்ரிகல், எலக்ட்ரானிக்ஸ் ஆசாமி தேவை பட்டிருக்கான். அந்த ராமமூர்த்தியோ யாரோ வந்து சேர்ந்திருக்கான். தோட்டக்காரன் பெரிய கண்ணன் ஒருமுறை இவளைப் பார்திருக்கிறதாகச் சொன்னான் இல்லையா?”

“ஆமாம், ஞாபகம் இருக்கு. ஆனா இது நாள்வரை அவன் எங்க இருந்திருக்கான்!”

“வசந்த், நான் இன்னும் அனுமானமாத்தான் சொல்லிகிட்டு வரேன். இந்தச் சாட்சிகளையும் சப்தங்களையும் கண்ட்ரோல் பண்றதுக்கு ஒரு ரகசிய இடம் ஒரு ரகசிய அறை– இருக்கலாம். மண்டபத்தில், மண்டபத்துக்கு அடியில, அல்லது...”

வசந்த் விரலைச் சொடுக்கினான். “பாத்ரூம், தட்ஸிட்! பாத்ரூம் ஏன் எப்பவும் பூட்டி இருக்கு? அன்னிக்குப் போனவர் ஏறக்குறைய ஒரு மணிநேரம் உள்ள இருந்தார்”

“சாத்தியம்தான். பாத்ரூம்ல அந்தச் சூட்சுமம் ஏதாவது இருக்கலாம்.”

“பாத்துறலாம். மேலே சொல்லுங்க! மை காட்! திஸ் இஸ் கெட்டிங் இன்ட்டரஸ்டிங்”.

“வியாசன் அந்த மெக்கானிக்கைப் பயன்படுத்திக்கிட்டு இந்தச் சித்து வேலைகள் ஜால வேலைகள் எல்லாம் அமைச்சிருக்கார். அவனுக்கும் அவருக்கும் கடைசியில ஏதாவது ஒரு விஷயத்தில் தகராறு ஏற்பட்டிருக்கும். அவன் சற்று அதிகப்படியா இவரைப்பற்றி ரகசியங்களைத் தெரிஞ்சிட்டிருக்கலாம். வெளியில போய் அந்த ரகசியங்களையெல்லாம் சொல்லிடப் போறேன்னு அவனைக் கொன்றிருக்கார்”

வசந்த் யோசித்தான்.

“கொன்று அவனை யார்னு அடையாளங் கண்டு பிடிக்கிறதுக்கு முன்னமேயே பாடியை அந்த வண்டி லெவல் கிராசிங்கில நிக்கறபோது அல்லது ஆஸ்பத்திரியில பின்பக்கத்திலிருந்தோ கடத்திக்கிட்டுப் போய் எங்கேயாவது புதைச்சிருக்கலாம்”

“சாத்தியம். ஆனா குமார வியாசன் ஒண்டி ஆளால முடியாது”

tamilpdfree.wordpress.com

“முடியாது. நான் நினைக்கிறபடி இந்த இடத்தில் ஒரு கோஷ்டியே வேலை செய்கிறது” கணேஷ் ஜன்னல் அருகே சென்று வெளியே பார்த்தான். “எவ்வளவு பெரிய பண்ணை! மொத்தம் எத்தனை பேர்? வியாசன், லீனா, பெரிய கண்ணன், தோட்டக்காரன், சமையற்காரன் அஞ்சு பேர் போதாது? பாக்கி ஆட்கள் எங்கே? எவ்வளவு பெரிய பிரதேசம் பாரு. உள்ள யாரு போய்ப் பார்த்தா? அந்த மலைக்குப் பின்னால யார் போய்ப் பார்த்தா...?

“அந்தப் பிணத்தை ஆவி வந்து தூக்கிட்டுப் போனத ஒரு ஆள் பார்த்திருக்கானே?”

“அந்த ஆள் வியாசனுடைய ஆளாயிருந்தா?”

“வியாசன்தான் மாஸ்டர் மைண்ட்டுனு உங்க தியரி?”

“ஆமாம்.”

வசந்த் சற்றுத் தயங்கி, “அங்கங்கே உதைக்குது.” என்றான்.

“மிகப் பெரிய உதைப்பு நாம் பார்த்த பிசாசு. என்னைக் கன்னத்தில் அறைஞ்ச பிசாசு, அது எப்படி இருக்கும் தெரியலை. அது ஒரு எக்ஸ்!”

“ராத்திரி உங்களை ரூம்ல தாக்கினது?”

“அது வியாசனுடைய ஆட்களில் ஒருத்தனா இருக்கலாம். என்னைப் பயப்படுத்தி விரட்டறதுக்கு!”

“லீனாவுடைய குரல் கேட்டது. அவள் பட்டன் இங்க கிடந்தது?”

“அதனால அவ இங்க இன்னிக்கு ராத்திரி மறுமுறை வந்தாள்னு எப்படிச் சொல்ல முடியும்? வியாசன் பேரிலே எனக்குச் சந்தேகம் ஆரம்பிச்சதே அந்தச் சம்பவத்திலேதான். அன்னிக்கு ராத்திரி முதல்ல லீனா வந்தா. பாத்ரூமுக்குள்ள எலியைப் பார்த்து பயந்துட்டா, ‘கணேஷ். கணேஷ்! சீக்கிரம் வாங்க!’ன்னு கூப்பிட்டா. நான் போனேன். அதற்கப்புறம் ஜன்னலிருந்து குமாரவியாசனைக் குரல் கொடுத்துக் கூப்பிட்டேன். அது அவர் மூடின அறைக்குள்ள நிச்சயம் கேட்டிருக்கமுடியாது. இருந்தாலும் அவர் கதவைத் திறந்துகிட்டு வந்து அவளை அழைச்சுகிட்டுப் போனார். அதனால் நாம இங்க பேசறது அங்க கேக்கறதுக்குச் சாதனங்கள் இருக்கும்னு தெரிஞ்சு போச்சு! மேலும் அது அங்க ரிக்கார்ட் ஆவுது!”

tamilpdffree.wordpress.com

“எப்படி?”

“பின்னிரவில் அந்த உருவம் என்னைத் தாக்க வரதுக்கு முன்னாடி மறுபடி லீனா என்னைக் கூப்பிடற சப்தம் கேட்டது பாரு! அப்பவும் அதே வார்த்தைகள்! ‘கணேஷ். கணேஷ் சீக்கிரம் வாங்க கணேஷ் கணேஷ் சீக்கிரம் வாங்க...” அதுவே முன்பு அவ என்னைக் கூப்பிட்டதே ரிக்கார்ட்டிங் பண்ணி வெச்சித் திருப்பி உபயோகப்படுத்தி என்னை எழுப்ப யுக்தியா இருந்திருக்கலாம்.”

“ஒரு மாதிரி குண்ட்ஸா பொருந்தறது. நான் அந்த பாத்ரூமை எப்படியாவது திறந்து பார்த்துர்றேன்.”

“இன்னிக்கு ராத்திரி சூப்ரண்ட், இன்ஸ்பெக்டர் எல்லாம் வரப்போறாங்க. பிசாசு வர்றதான்னு பார்க்க. அந்தச் சமயம் நீங்க எங்க கூட வர்றாப்பல வந்து நைஸா நழுவிடு. நேரா பாத்ரூமைப் பாத்துறு!”

வசந்த் திடீரென்று, “பாஸ், இதைவிட முக்கியம் ஒண்ணு இருக்குது. உங்க தியரிப்படி பார்த்தா அவர்கள் குறிக்கோள் லீனாதான். லீனாவைக் கொல்ல வைக்க ஏற்பாடுதான் நாம இடையில வந்துட்டதாலே ஒத்திப் போட்டுட்டாப்பல ஆயிடுச்சு!”

“ஆமாம்.”

“நமக்குத் தெரியும்கிறது வியாசனுக்குத் தெரியாதில்லை?”

“தெரியாது.”

“அதனால லீனா இன்னும் அந்த அபாயத்தில இருக்கா இல்லையா?”

“ஆம்.”

“அவளைப் பத்திரமா நம்ம பக்கத்திலே வெச்சுக்கறது நல்லதில்லையா?”

“வெரிகுட். நீ போய் அவளைக் கூட்டி வந்துடு. எஸ்டேட் பற்றி டிஸ்கஸ் பண்ணணும்னுட்டு.”

“சரி.”

“ஆனா ஜாக்கிரதை. வியாசனுக்கு எந்தவிதச் சந்தேகமும் வரக்கூடாது. பிசாசுக் கதையை நாம பூரா நம்பற மாதிரித்தான் காட்டிக்கணும். என்ன?”

“பாருங்களேன். ஏற்கனவே தாயத்து, நெத்தில குங்குமம் வெச்சுடறேன். பயபக்தியா காதில துளசியெல்லாம் செருகிட்டு, ‘பய நாசனஹ’ன்னு சஹஸ்ர நாமம் உச்சரிச்சுக்கிட்டு வரேன்…”

“டோன்ட் ஓவர் டூ இட்”

“சரி,இப்ப லீனா!”

வசந்த் சென்றதும் கணேஷ் டிரான்சிஸ்டரை நிறுத்திவிட்டு இரண்டு விரல்களால் புருவத்தின் இடைப் பாலத்தைக் கிள்ளிக் கொண்டு யோசித்தான். எத்தனை ஓட்டைகள் இருந்தும் வியாசன்தான் முதல் சந்தேக இலக்கு. மிகப் பெரிய சொத்து.. லீனா உயிருடன் இருந்து திருமணம் செய்துகொண்டு பிள்ளை பிறந்து அவள் வாரிசுக்கு விலகிப் போகப்போகும் சொத்து. வியாசனின் பம்பாய் பிஸினஸ் என்ன? விசாரிக்க வேண்டும் ஆரம்பத்தில் வியாசனைச் சந்தித்தப்போது டி ஷார்ட்டில் I love my computer என்று எழுதியிருந்ததே. கம்ப்யூட்டருக்கும் அவருக்கும் ஏதாவது தொடர்போ? அந்த பார்ரூம் திறந்தால் அதற்குள் ஒரு ரகசிய அறை கதவு தெரிந்து அந்த அறைக்குள் ஒரு கம்ப்யூட்டர்–இங்கு நடக்கும் அத்தனை வினோதங்களையும் செயல்பாடுகளையும் சப்தங்களையும் கட்டுப்படுத்தும் கம்ப்யூட்டரால் வெட்ட வெளியில் பெண் ஆவியை நிறுத்திப் பேச வைக்க முடியுமா? அபத்தம். ஆனால் மற்றவை சாத்தியம். மெக்கானிக்! எலெக்ட்ரிக்கல் எலெக்ட்ரானிக்ஸ் ஆசாமி ஏதோ மின் இணைப்பு அமைக்க வந்திருக்கிறான். ‘இந்த மாதிரி செய்.’ என்று சொல்லியிருப்பான். அவன் செய்வதுடன் இன்னும் கொஞ்சம் ஆர்வம் ஏற்பட்டு அந்த ரகசிய அறைக்குள் நுழைந்து விட்டானோ

tamilpdffree.wordpress.com

என்னவோ! உடனே போடு! தீர்த்துக்கட்டு... குற்றம் சுமத்த இருக்கவே இருக்கிறது– பிசாசு!

என்ன ஒரு கற்பனை! கற்பனையோ, நிஜமா? தலைசுற்றியது.

லீனாவுடன் வசந்த் நுழைந்தான். “இன்னிக்கு இந்தம்மா டாப்ஸா டிரெஸ் பண்ணிட்டிருக்காங்கல்ல பாஸ்?” என்றான்.

“இது என்னங்க மேலே போட்டுக்கிட்டு இருக்கிங்களே இதுக்கு என்ன பேர், ஷெமீஸா?”

“பேர் தெரியாது.” என்றாள் லீனா.

“பேர் இல்லாட்டி என்ன? நல்லா இருக்கே”

“வசந்த், எதுக்கு என்னைக் கூட்டி வந்தீங்க?”

“கணேஷ் உங்களைச் சில விஷயங்கள் கேட்கணும்னாரு.”

“என்ன கணேஷ்?”

“உங்க சித்தப்பா எங்கே?”

“அவுட்ஹவுஸ்லதான் இருக்கார்!”

“பாவம், அவருக்குத்தான் ரொம்ப ஸ்ட்ரெய்ன்! மிஸ் லீனா! நீங்க உங்க சித்தப்பாவுக்கு நிறைய தாங்க்ஸ் சொல்லணும் எஸ்டேட் ரிக்கார்ட்ஸ் எல்லாம் பர்ஃபெக்டா வெச்சிருந்தார். டிரான்ஸ்ஃபர் ரொம்ப ஈஸி. அதில ஏதும் சிக்கல் கிடையாது. ஆனா...”

“வசந்த், இதே டிஸைன்ல என்கிட்ட மஞ்சள்ள ஒரு சட்டை இருக்குது.”

“பெரியவர் என்ன சொல்கிறார்? சரியா கவனிங்க! அப்புறம் மஞ்சள் டிரெஸ்!”

“லீனா, நீ கொஞ்சம் இந்த வீட்டில் இந்தச் சூழ்நிலையில் ஜாக்கிரதையாய் இருக்கணும்.”

“ஏன்?” என்றாள்– தன் கை நகப்பூசை ரசித்துக் கொண்டு. தடுமாற வைக்கும் உடல் அமைப்பு. மென்மை. அதே இடத்தில் அவளை அணைத்து மறுபடி முத்தமிட வேண்டும்போல இருந்தது கணே**ஷு**க்கு.

வசந்த் தன்னைப் பார்ப்பது உறுத்தியது. தன் மனத்தின் எண்ணங்களை உடனே படித்துவிடுவான்?

“லீனா, நீங்க இப்படி நிக்காதீங்க! போஸ் கொடுக்காதீங்க. அப்படியே கடிச்சுச் சாப்பிடணும் போல இருக்கு... என்ன பாஸ்”

‘‘கணேஷ் என்னை கிஸ் பண்றார் வசந்த்!’’

‘‘என்னது?’’ என்று அதிர்ந்தான் வசந்த்.

‘‘அது வேற விஷயம் லீனா. இந்த வீட்டைச் சுற்றிலும் அது உனக்காக வர்ற பேய். நீ ஜாக்கிரதையாய் இருக்கணும். தனியா எங்கேயும் போகக்கூடாது.. எங்க கூடவே இருக்கிறது நல்லது. அல்லது.. வசந்த்தை ஒரு தடவை பார்த்துக்கொண்டு ‘‘உங்க

tamilpdffree.wordpress.com

சித்தப்பா கூடவே இருந்துரு. தனியா மட்டும் போகாதே!'' கணேஷ் இந்த வார்த்தைகளைச் சப்தமாக சற்று நிதானமாகவே சொன்னான்–இங்கே பேசுகிறது குமாரவியாசனின் அறையில் நிச்சயம் கேட்கும் என்ற நம்பிக்கையில்.

வசந்த் அவளையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''என்ன பாஸ், இது நிஜமா?''

''என்னது?''

''நீங்க இவளைக் கிஸ் பண்ணது?''

''சும்மா ஒரு குழந்தை பாவத்தில்.''

''எங்க?"

''உதட்டில்!'' என்றார் லீனா.

''கன்னத்தில்தான் லேசா முத்தமிடறதா இருந்தேன். அது தவறிப்போய் உதட்டில் பதிஞ்சுப் போச்சு! என்ன லீனா?"

வசந்த், "லீனா நானும்தான் உங்களை உன்னை ஒரு சிறு குழந்தை மாதிரி மதிக்கிறேன். எனக்கும் ஒண்ணு உண்டா?''

லீனா கையில் முத்தமிட்டு அதை வசந்தின் பால் பறக்க விட்டான்.

''ஜாதக ராசி! உங்களுக்கு உதடு எனக்கு காத்து!''

''லீனா, நான் சொன்னது உனக்குத் தெளிவா ஞாபகம் இருக்கா?''

''இருக்கு கணேஷ். ஜாக்கிரதையா இருக்கணும்ங்கறீங்க. நான் எப்போதும் உங்க பக்கத்திலேயே இருக்கணும். தனியாப் போகக்கூடாது. அந்தப் பிசாசு என்மேல் வந்துறும்ங்கறிங்க''

"ஆமாம் நிச்சயம்! உன் உயிருக்கே ஆபத்து இருக்கு. அந்தப் பேய் ரொம்ப விபரீதமா ஏதாவது செய்து அடிச்சிறுச்சுன்னா உன்னால் தாங்க முடியாது. நான் மயிரிழையில் அன்னிக்குத் தப்பிச்சேன்''

''நீங்க எனக்காக எவ்வளவு கவலைப்படறீங்க!'' என்றாள்.

அந்தக்குரலின் தொனியில் மெலிதான கேலி இருந்ததோ என்று சந்தேகித்தான் கணேஷ்.

''உதட்டிலா?'' என்றான் வசந்த் கவலையுடன்.

**இ**ருட்டினதும் போலீஸ் ஜீப் ஆர்ப்பாட்டமாக வந்து நின்றது. ஸுப்ரண்ட். இன்ஸ்பெக்டர், ஓர் உபரி கான்ஸ்டபிள் மூவரும் இறங்க வியாசன் அவர்களை வரவேற்றார். கணேஷ், வசந்த், லீனா மூவரும் அவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். டார்ச், துப்பாக்கி எதற்கோ கயிறு எல்லாம் தயாராக இருந்தன. கணேஷ் கைக்கெடிகாரத்தைப் பார்த்து'' கொஞ்சம் சீக்கிரம் வந்துட்டிங்க'' என்றான்.

tamilpdffree.wordpress.com

‘‘பரவாயில்லை. வாங்க அங்கே போயிறலாம் முன்ன. சித்த முன்ன பின்ன இருந்தா பரவாயில்லை. காத்திருக்கலாம். இன்னிக்கு ஒண்ணுல ரெண்டு தீர்த்துடலாம். கிராமத்தில நிறையப் பேர் பார்த்ததாச் சொல்றாங்க. ஆனானப்பட்ட கணேஷ் வசந்தே பார்த்திருக்காங்க. நாங்க போலீஸ்காரங்க பார்க்கவேண்டாமா?”

எல்லோரும் மெதுவாக அரசமரத்தை நெருங்கி மண்டபத்தில் கும்பலாக நின்றார்கள். இருட்டு சாதகமாக இருந்தது. நிலா வருவதற்கு அறிகுறிகள் தென்படவில்லை. **ஸூ**ப்ரண்ட் சிகரெட் லைட்டரை பற்ற வைத்துப் பார்த்தார். வெளிச்சம் போதவில்லை. டார்ச் ஒளி எல்லா இடங்களிலும் விளையாட, கணேஷ் வசந்தின் கைகளை தேடிப் பிடித்து இறுக்கி செய்தி சொன்னான்.

குறிப்பறிந்து வசந்த் இருட்டில் வியாசனின் அறையை நோக்கி மெல்ல நழுவினான்.

## 17

**வ**சந்த் விலகியதை அவர்கள் பார்த்திருக்க மாட்டார்கள். எல்லோருக்கும் இருக்கும் எதிர்பார்ப்பில் ஆள் கணக்கு எடுக்க எவருக்கும் ஈடுபாடு இருக்காது. வெளிச்சம் வேறு போதவில்லை. சூப்ரண்டின் டார்ச் ஒளி அங்கும் இங்கும் பொறுமையில்லாமல் உலவியது. மணி சுமார் எட்டரை இருக்கும். திருக்கழுக்குன்றத்தில் கழுகுக்கு காத்திருந்த ஞாபகம் வந்தது கணே**ஷு**க்கு. இன்றும் அந்த உருவம் வந்துவிட்டால் எனக்கு தொல்லையில்லை. போலீசுக்கு ஸ்டேட்மெண்ட் கொடுக்க வேண்டிய தேவை விலகிவிடும். வா பெண்ணே வா. வந்து உன் முகத்தை காட்டு. நட. சிரி. காற்றில் பற கிட்ட வந்தால் சீறு... வாயேன்!

எதிரே சின்ன இருள். மரச்சிலிர்ப்பு. அரச மரத்தை நோக்கி ஆவலுடன் காத்திருக்க... லீனா அருகில் இருப்பது அவள் தடவியிருந்த பர்ஃப்யூம் மணத்தில் தெரிந்தது. லீனா இங்கேதான் இருக்கிறாள். அந்த உருவம் இவளில்லை. இவள் ஒரே சமயத்தில் திடப் பொருளாகவும் ஒளிக் கற்றையாகவும் இருக்க முடியாது. எப்படிச் சாத்தியம்? இன்று அது வரும்போது அதைச் சற்றுக் கூர்ந்து கவனிக்க வேண்டும். மூச்சு விடுகிறதா, மார்பு அசைகிறதா, விரல்களில் நகங்கள் உண்டா, கால் விரல்கள் உண்டா, இல்லை அங்கே காற்றா? சுற்றப்புறத்தில் காற்று வீசும்போது அதன் உடைகள் அலைகின்றனவா? அந்தப் போட்டோ என்ன ஆயிற்று? அதை மறந்தே விட்டேன். சென்னை சென்றவுடன் பார்க்கவேண்டும்.

‘‘என்ன இது...இன்னும் வரலை?....’’ என்றார் சூப்ரண்ட். “வேளை வரலையா இன்னிக்கி?”

“இன்னும் கொஞ்சம் பொறுத்துப் பார்க்கலாம் ஸார்’’ என்றான் கணேஷ்.

‘‘அதோ பாருங்க’’ என்றார் இன்ஸ்பெக்டர்.

‘‘எங்கே?’’

‘‘ஸாரி! நட்சத்திரம் விழுது’’

‘‘ஏன்யா சும்மா புரளி பண்றீங்க!’’

‘‘மிஸ்டர் வியாசன், நீங்க என்ன சொல்றிங்க? வருமா வராதா?’’ என்றான் கணேஷ்.

tamilpdffree.wordpress.com

‘‘உங்களுக்குத் தெரிஞ்சதுதான் எனக்கும் தெரியும்’’

‘‘பேய் கடிகாரம் கட்டிக்கிட்டிருக்குதா? நின்னு போச்சா?’’என்றார் சூப்ரண்ட்.

‘‘நீங்க இன்னும் நம்பலைன்னு தெரியுது’’

‘‘இந்தப் பக்கம் அங்கங்கே கஞ்சாச் செடி இருக்கும். அந்தத் தழையைத் தின்னா பிசாசு என்ன, கடவுளே தெரிவார்னு சொல்வாங்க! பளபளன்னு சங்கு சக்கரம் கதாயுதத்தோட!’’

கணேஷ் துணுக்குற்றான். ‘‘அதெல்லாம் இல்லை ஸார். தழை தின்னாமத்தான் பார்த்தோம்!’’

‘‘மிஸ்டர் வசந்த் எங்கே!’’ என்றார் வியாசன்.

‘‘இங்கேதான் இருந்தான்! வசந்த்! வசந்த்... பாத்ரூம் போயிருக்கானோ என்னவோ!’’

‘‘எங்க போயிட்டார்?’’ வியாசனின் குரலில் சற்றுச் சந்தேகம் ஏற்பட்டது.

‘‘எங்கே போறீங்க!’’ என்றார் இன்ஸ்பெக்டர்.

‘‘வசந்த்! அவரைக் காணோமே! எனக்குக் கவலையா இருக்குது’’

‘‘இருங்க! எல்லாரும் போய்ட்டா எப்படி?’’ என்றார் சூப்ரண்ட்.

‘‘இருங்க ஸார்,’’ என்றான் கணேஷ் அழுத்தமாக. அவர் தோளில் கை வைத்துச் சற்று அழுத்தினான். அவன் அவன் கையைத் தள்ளினார்.

“கொஞ்ச நேரம் எல்லோரும் சத்தம் பேசாம இருங்க! யாரோ சிரிச்சா மாதிரி சப்தம் கேட்குது!’’

உடனே சட்டென்று மௌனம் நிலவியது.

‘‘வாங்க’’ என்றது வயதான சன்னமான குரல்.

‘‘என்னய்யா இது!’’ என்றார் சூப்ரண்ட்.

‘‘ஐயா வாங்க!’’

‘‘கூப்பிடுதுங்க...’’ என்று நடுங்கும் குரல் கேட்டது.

‘‘உமது தாய் புத்திரவதி. அவள் புத்திரவதியில்லை என்று மறுத்து விடும் பார்க்கலாம்’’

‘‘என்னடாது! எங்கேருந்து சத்தம் வருது?’’

‘‘புத்திரவதி த்வஜன கோலாகலன்!’’

பத்து வயது பன்னிரண்டு வயசுப் பெண்பிள்ளைக் குரல் போல. கணேஷ் காதையும் கண்களையும் தீட்டிக் கொண்டான். அவர்கள் நின்றிருந்தது மண்டபத்திற்குள்ளேயே. அங்கிருந்து ஒன்றும் தெரியவில்லை. அந்தச் சப்தங்கள் மட்டும் கேட்க வியாசன் நடுங்கும் குரலில் ‘‘இன்ஸ்பெக்டர், கணேஷ்! சூப்பிரண்ட் ஸார்! மேலே மேலே....” என்று கத்திக் கொண்டே, “வந்துடுங்க.... வெளியே வந்துடுங்க.’’ என்று ஓடினார்.

tamilpdffree.wordpress.com

இவர்கள் அடிமைகள் போல அவர் பின்னால் ஓட, கணேஷ் சற்றுத் தயங்கித்தான் வெளி வந்தான். டார்ச் ஒளியை நோக்கிச் சென்று பாதையில் நின்று திரும்பிப் பார்த்தபோது மறுபடி அந்த உருவத்தைப் பார்த்தான். சந்தேகமில்லை. அதேதான். சந்தித்த ஞாபகம் இருந்தது. இருட்டுக்குள் மெலிசாகச் சாம்பல் நிற வெளிச்சம். பிசிறாக வடிவம். ஒளி அதிகரித்து சர்வ சாம்பல் நிறப்பெண். கருநீல உதடுகள். புடவை. இடுப்பில் அது என்ன கொடி போல? இல்லை. இடுப்பில் அணியும் நகையா? பெல்ட்டா, ஒட்டியாணமா? புரியவில்லை. மூக்கில் ஒரு நகை இருந்தது. வலது நாசியில்.

அவள் மெலிதாக அழ ஆரம்பித்தாள். அப்புறம் குலுங்கிக் குலுங்கிக்...இது என்ன...

முதலில் பார்த்த மாதிரிதான். ஆனால் இன்று?

சட்டென்று அவளைக் காணவில்லை. எல்லாமே அடங்கிவிட்டது. திடீர் என்று மகா மவுனம்.

‘‘ஸார், வாங்க போயிறலாம். இங்க மேற்கொண்டு நிற்கிறது நல்லதில்லை. வாங்க ஓடிடலாம்,’’ என்று வியாசன் குரல் கேட்டது.

‘‘ஆச்சரியமா இருக்குதே! வெட்ட வெளியில உலாத்துது’’

‘‘சீக்கிரம் வந்துருங்க. சீக்கிரம்!’’ ஆட்கள் ஓடும் சப்தம் கேட்டது. பூட்ஸ் ஒலி கேட்டது. ‘‘வந்துடுங்க வந்துடுங்க.’’

போன தடவை அரச மரத்தில் போய் விரிந்து வீறிட்டது. இந்த முறை? திடீர் என்று மறைந்துவிட்டது. வசந்த்? வசந்த் எங்கே? கவலைப்பட்டான். அவனை அங்கே போய் வியாசன் அறையில் பாத்ரூம் கதவைக் திறந்து பார்க்கச் சொன்னது முட்டாள்தனம்! திடுதிப்பென்று எதிர்பாராமல் இப்போது வியாசன் முன்னே ஓடுகிறார். தன் அறைக்குச் செல்வார். கையும் களவுமாக மாட்டிக்கொள்ளப் போகிறான். வியாசன் ஏற்கெனவே சந்தேகக் குரலில் வசந்த் எங்கே என்று விசாரித்தார். போலீஸ் வேறு இருக்கிறார்கள். கணேஷ் மண்டபத்தைத் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றான். எல்லாம் ஓய்ந்துவிட்டது. அதே சமயம் எல்லாருக்கும் முன்னே ஓடும் வியாசனை முந்தவேண்டும். வசந்தை எச்சரிக்கை செய்ய வேண்டும்.

‘‘இருங்க கணேஷ் ஸார்...என்னை விட்டுறாதிங்க!’’ இருட்டில் அவன் புஜத்தை லீனாவின் கை இறுகப் பிடித்தது. ‘‘எனக்குப் பயம்மா இருக்கு. போய்டாதீங்க!’’

‘‘சீக்கிரம் வா லீனா. ஏன் இழுக்கிறாய்?’’

லீனாவால் அவனுக்கு ஈடு கொடுத்து நடக்க முடியவில்லையா? வேணுமென்றே செய்கிறாளா?

‘‘இருங்க இருங்க!’’ என்றாள். ‘‘நில்லுங்களேன்’’ என்றான்.

‘‘என்ன லீனா?”

‘‘அவங்க போகட்டும். ஒரு விஷயம் உங்ககிட்ட முக்கியமாச் சொல்லணும். எனக்கு சட்டுனு ஞாபகம் வந்தது.’’

‘‘என்ன? அதை ரூம்ல வெச்சுச் சொல்லலாமே!’’

tamilpdffree.wordpress.com

“இல்லை. தனியா உங்ககிட்ட சொல்லணும்”

“காலைல சொல்லேன்...வாயேன்!”

“காலைல மறந்து போய்டுவேன். இப்பவே சொல்லிடறேன். இருக்கிற குழப்பத்தில...”

“என்னா லீனா?”

“இப்ப அந்தப் பொண்ணு பேசிச்சு பாருங்க? என்னவோ புத்திரவதி புத்திரவதியில்லை... அப்படின்னு பேசிச்சே. அந்த வார்த்தைகளை நான் ஏங்கேயோ பேசின மாதிரி ஞாபகம் வந்தது கணேஷ்! அப்புறம் அந்த மூக்கு, நகை, இடுப்பில் பெல்ட் மாதிரி நகை இதையெல்லாம் நான் கூடப் போட்டுகிட்டு இருந்த மாதிரி ஞாபகம் வர்றது கணேஷ்! நிச்சயம் அதை செஞ்சிருக்கேன்.”

“எல்லாத்தையும் போட்டுக்கிட்டு அழுத மாதிரி ஞாபகம் ஏதாவது வருதா?”

“அதுகூடச் சரிதான். அழுதிருக்கேன் அதுவும் தெளிவா இருக்குது”

“எப்ப? எங்கே?”

“அதுதான் சொல்லத் தெரியலை! தூக்கத்தில மாதிரி... கனவில மாதிரி.... இல்லை.... போன ஜன்மத்தில மாதிரி... ஆனா அதே புடவை அந்த நகை அணிஞ்சுகிட்டு நான் அதே வார்த்தைகளைப் பேசியிருக்கேன்.”

“சரிதான்”

“அழுதுகூட இருக்கேன்...”

“சரி”

“விக்கி! விக்கி”

“இத பார் லீனா, நீ கொடுக்கற இந்தக் தகவலினால் இன்னும் குழப்பம்தான் ஜாஸ்தியாகுது.”

“இருந்தாலும் உங்ககிட்ட உடனே சொல்லிடம்னு தோணிச்சு! என்மேலே உங்களுக்கு இத்தனை அக்கறை, கவலை இருக்கிறதினாலே.”

“கவலை எனக்கு இப்ப வசந்த் மேலே.”

“ஆமாம்! எங்கே அவர் காணமே?”

“ஓடி வா பார்க்கலாம்!”

காய்ந்த இலைகள் மேல் மெத்து மெத்தென்று நடந்தார்கள். சரக் சரக் என்று அவைகள் உடைய. “இங்கே படுத்துறலாம்னு தோணுது கணேஷ்! படுத்துறலாமா? காற்றில் எவ்வளவு சுத்தம் பாருங்க! அப்படியே துடைச்சுவிட்ட கண்ணாடி மாதிரி...

“இப்ப இயற்கை வர்ணனைக்குச் சமயமில்லை லீனா வேகமா ஓடு. அவங்கெல்லாம் போய்ட்டாங்க!

tamilpdffree.wordpress.com

குமாரவியாசனின் அறைக்குள் நுழைந்ததுமே நாற்காலியில் மற்றபேர்களின் குற்ற வேல் பார்வைகள். மத்தியில் வசந்த்தை எதிர்பார்த்தான். வசந்த்தைக் காணோம்.

வயிற்றில் சின்னதாக ஒரு பயக்கத்தி குத்தியது. என்னடா இது!

‘‘கணேஷ், வசந்த் எங்கே? நம்ம கூடத்தானே வந்தார்?’’ என்றார் வியாசன்.

சூப்ரண்ட் ஒரு சிகரெட் பற்ற வைத்து அதை ஆழமாகவே இழுத்து மெல்லப் புகை விட்டார். ‘‘மிஸ்டர் கணேஷ், வாங்க, இப்படி உட்காருங்க?’’

‘‘ஸார், என் ஃப்ரெண்ட் வசந்தைக் காணலை?’’

‘‘அவரை அப்புறம் தேடிக்கலாம். நீங்க உட்காருங்க சொல்றேன். உங்களுக்காகத்தான் காத்திருக்கிறேன்.’’

வேண்டா வெறுப்பாக உட்கார்ந்தான்.

சூப்ரண்ட். ‘‘புரியவே இல்லிங்க...’’ என்றார்.

‘‘இதே காட்சியை நானும் இன்னிக்கு, முதநாள் பார்த்துட்டு இன்னும் குழம்பிக்கிட்டிருக்கே!’’

‘‘பயந்துபோய் உங்க ரூமுக்கு போய்ட்டாரோ? கான்ஸ்டபிளை அனுப்பட்டுமா பார்த்துட்டு வரிங்களா?’’

‘‘ஏதாவது சினிமா வேலையா இருக்குமா?’’

‘‘நான் இதை நல்லா யோசிச்சுப் பார்த்துட்டேன் ஸார். விஞ்ஞான முறைகள் படி இது சாத்தியம் இல்லை!’’

‘‘பின்னை பிசாசு இருக்குங்கிறீங்களா?’’

‘‘நீங்கதான் பார்த்திங்களே!’’

‘‘அதென்ன, அது கொஞ்சம் சின்னதா இல்லே? ஏன் அழுவுது?’’

‘‘தெரியல!’’

‘‘மிஸ்டர் வியாசன்... அது என்ன லெஜண்ட் சொன்னீங்க?’’

‘‘புத்திரவதின்னு எங்க ஃபேமிலில ஒரு பொண்ணு தற்கொலை செய்துக்கிட்டாங்க. ஆனா இரண்டு வருஷத்துக்கு ஒருமுறை கார்த்திகை மாசம் திரும்பத் திரும்ப எங்க ஃபேமிலி மெம்பர்ஸ் மேலே பழி எடுத்துக்க வராள்னுதான் பரம்பரையாக் கதைங்க. கிராமத்திலே ஒவ்வொரு தடவையும் பார்த்ததாச் சொல்லுவாங்க. நான் இதை நம்பலைங்க. சமீபத்தில் நான் பார்த்த பிற்பாடுதான் எனக்கு இப்ப அந்தப் பிசாசு எனக்கு வந்திருக்கா இவளுக்கு வந்திருக்கான்னு தெரியலிங்க? ஏற்கனவே ஒரு ஆளை அடிச்சுப் போட்டிருக்கு!’’

‘‘அவன் யாரு தெரியுமா?’’

“தெரியாதுங்க. யாரோ அன்னியன்னுதான் தோணுது. அகஸ்மாத்தா தோட்டத்தில நுழைஞ்சு பிசாசைச் சந்திச்சு அடிபட்டிருக்கான். அப்புறம் அந்த பாடியை எடுத்டுட்டுப்

tamilpdffree.wordpress.com

போயிருச்சு சூப்ரண்ட் ஸார். நானு பகுத்தறிவுவாதிதான். நவீன பௌதிக விஞ்ஞானம் எல்லாம் படிச்சவந்தான். இருந்தும் இந்த ஃபினாமினனை என்னால் எக்ஸ்ப்ளெய்ன் பண்ண முடியலை. அவுங்க சொல்றதில உண்மை இருக்குன்னுதான் தோணுது.”

“கிட்டப் போனா அடிச்சுறுச்சா?”

‘‘ஆமாங்க’’ என்று கணேஷ் தன் கன்னத்தைக் காட்டினான்.

சூப்ரண்ட் அந்தக் காயத்தைப் பார்த்து, ‘‘சுட்ட மாதிரி இருக்குது! கன்னிப் போயிருக்குது! என்ன கணேஷ், நான் எப்படி எங்க அதிகாரிகள் கிட்ட சொல்ல முடியும்? பேயாவது பிசாசாவதுன்னு சிரிப்பாங்க! அவர்களைக் கூட்டிவந்து காட்டலாம். ஆனா அவுங்க வர்றபோது நிச்சயம் இதுவும் வரும்னு எப்படி சொல்ல முடியும்? வரலைன்னா கேலிக்கிடமாய்ப் போயிரும்! என்ன சொல்றீங்க?

‘‘என்னைப் பொறுத்த வரையிலும் நீங்க காலைல ஸ்டேஷன்ல சொன்னது சரின்னு படுது. பேய் பிசாசு எல்லாம் மறந்துட்டு சாதாரண ஒரு கொலைக்குற்றத்தை விசாரிக்கிற மாதிரி விசாரிச்சு பார்க்கலாம். இருக்கிற தடயங்களிலிருந்து பாடியைக் காணோம். பரவாயில்லை. இருந்தாலும் இந்த ஆள் யாருன்னு கண்டுபிடிக்கலாம். பேயடிச்சுத் தூக்கிட்டுப் போனதை நாம பார்க்கலை. பேயைப் பார்த்திருக்கிற சாட்சியங்களை இகலோகத்தில் மட்டும் ஒட்டவெச்சுப் பார்க்கலாம். என்ன சொல்றிங்க! இந்த வசந்த் பய எங்க போனான்?’’

‘‘பயந்து போய் உங்க ரூமுக்குப் போய்ட்டாரோ? கான்ஸ்டபிளை அனுப்பட்டுமா பார்த்துட்டு வர்றிங்களா?’’

‘‘இல்லைங்க. நான் போய்ப் பார்க்கறேன். ஒரு நிமிஷம்!’’

கணேஷ் சற்றுப் பதற்றத்துடன் தன் அறைக்குச் சென்றான். ஸம்திங் ராங்! வசந்த்தை வியாசனின் அறையில்தான் எதிர்பார்த்தான். எங்கே அவன்? சே! என்ன முட்டாள்தனம்! அவனைத் தனியாக அனுப்பியது தப்பு! நான் ஒரு சுயநலக்காரன். இருவரும் சேர்ந்தே இயங்கவேண்டும். இந்த இடத்தில் பொதிந்துள்ள அபாயங்களை நான் தப்புக் கணக்கிட்டு விட்டேன்!

வசந்த்தை தனியே அனுப்பியது கேனத்தனம்!

கணேஷ் மாடிப்படி ஏறினான். ‘‘வசந்த்! ‘‘வசந்த்! வசந்த்!’’ என்று பரிவுடன் அழைத்துக்கொண்டே அறை விளக்கைப் போட்டான்.

அறை காலி! ‘‘வசந்த்! வசந்த்!’’ சற்று உரக்க, சற்று மௌனம். ஏதாவது முனகுகிற சப்தம் கேட்கிறதா என்று கவனித்துக் கேட்டான். ம்**ஹூ**ம்,

கவலையோடு படியிறங்கி மறுபடி வியாசனின் அறைக்குச் செல்ல முற்பட வெளியே வந்தான். எங்கே போயிருப்பான்? வியாசனின் அறைக்குத்தானே அனுப்பினேன்! ஒருவேளை அங்கே செல்லும்போது வழியில் அதைச் சந்தித்து...

அது!

அவன் கன்னத்தில் அதிர்ந்த அது! அரசமரத்தில் விரிந்த அது. ஓர் ஆளை கொன்று போட்டுவிட்டு பிணத்தைப் பற்றிக்கொண்டு தரதரவென்று இழுத்து அங்கம் அங்கமாகப் பிய்த்துத்தின்ற அது!

tamilpdffree.wordpress.com

புத்திரவதி!

‘‘நிச்சயம் நான் அதை செஞ்சிருக்கேன். தூக்கத்தில மாதிரி, கனவில மாதிரி... இல்லை. போன ஜன்மத்தில மாதிரி அதே புடவை அதே நகைகள் அணிஞ்சுக்கிட்டு நான் அதே வார்த்தைகளைப் பேசியிருக்கேன்.’’

‘‘அதான் தின்னாச்சே!’’

தின்னாச்சே!

தூரத்தில் ‘‘பா ஆ...ஸ்...’’ என்று நீளமாக வசந்தின் ஓலம் கேட்டது.

## 18

tamilpdffree.wordpress.com

**தி**டுக்கிட்டு சப்தம் வந்த திசை நோக்கி “வசந்த்தினுடைய குரல்.. அவனுக்கு என்னவோ ஆயிடுச்சு! ஸார்! சீக்கிரம் வாங்க!’’ என்று கணேஷ் பதறினான்.

வெளியே வந்த சூப்ரண்ட் ‘‘என்ன சப்தம்?” என்றார். அவர் கையிலிருந்த டார்ச்சைப் பற்றிப் பிடுங்கிக் கொண்டு ‘‘என் பின்னாடி வாங்க’’ என்று சப்த திசை நோக்கி ஓடினான். உடம்பு துடித்தது. ஆழம் தெரியாது காலை விட்ட பயங்கரச் சுனை இது. வசந்த் எப்படி அங்கே போயிருக்க முடியும்? அவன் சென்றது அறைக்கு அல்லவா? நான் இதுவரை சந்தேகித்த பாதை தவறா நிஜமாகவே எல்லாம் பிசாசு வேலையா? வசந்த்தை இப்போது தூக்கிச் சென்று அடித்துப் போட்டு ரத்தம் கக்க வைத்து... ஐயோ கடவுளே என்ன ஒரு பொறுப்பற்ற காரியம் செய்து விட்டேன்!

டார்ச் போதவில்லை. சோகையாய் ஒளி பாதையில் உலவியது. மர நிழல்களில் மஞ்சளடிக்க பயந்த ஆந்தை வண்ண வெளிச்சம் பார்த்ததும் கிகிரிக் என்று சப்தமிட்டுப் பறந்தது. ‘‘வசந்த்!’’ என்று உரக்கக் கூப்பிட்டான். பின்னால் போலீஸாரின் பூட்ஸ் கால்கள் கேட்டன. பிரமித்து ஓரிடத்திலேயே நின்றான். எங்க தேட? எங்கே திரும்ப? பாதையற்ற பாதை. எதிரே மலைமுகட்டில் வெட்டப்பட்ட நிலா ஒட்டிக் கொண்டிருந்தது. எங்கிருக்கிறான் வசந்த்! காட்..!

பூட்ஸ் ஒலி ஓடி வந்து அவனிடம் சேர்த்து கொள்ள ‘‘ஸார், வசந்த்துக்கு ஏதோ விபரீதமா ஆயிடுச்சு! ப்ளீஸ் ஹெல்ப் மீ’’ என்றான்.

‘‘பதட்டப் படாதீங்க கணேஷ்!’’ அவன் தோளில் ஒரு கை.

‘‘சப்தம் எங்கிருந்து வந்தது.’’

‘‘சொல்லத் தெரியலையே ஸார்! வசந்த்! ஏய் வசந்த்!” நரம்புகள் புடைக்கக் கத்தினான். மலைமுகடு ‘‘ஏய் வசந்த்’’ என்றது.

‘‘ஷ்ஷ்! குரல் கேட்குது.’’

‘‘எங்கே?’’

‘‘ஷ்ஷ். கவனிங்க’’

மௌனத்தின் அடியே அடித்தளத்தில் ‘‘ம்...ம்’’ என்று மெலிதான முனகல் கேட்டது. ‘‘இந்தப் பக்கம்! க்விக்!’’ என்று ஓடினான்.

‘‘ஓடாதேங்க! பாதையிலே மெல்ல டார்ச் அடிச்சுட்டுப் போங்க’’

கணேஷின் கால்களில் ஏதோ தடுத்தது. திடுக்கிட்டு டார்ச் வட்டத்தைக் கீழே காட்ட–

வசந்த் முடங்கிக் கிடந்தான். காதருகில் ரத்தம் வடிந்து கொண்டிருந்தது. வாய் திறந்து பற்கள் தெரிய! முழங்கால் நெஞ்சில் செருகி, கை மலராக விரிந்து–

கணேஷ் குனிந்து அவன் முகத்தைத் திருப்பி ‘‘வசந்த், ஏய்! ஏ! இங்கப் பாரு! என்னைப் பாரு! நான்தான் கணேஷ்! வந்துட்டேன். முழிச்சுக்கடா’ என்றான்.

கண்கள் ஒரு தடவை திறந்து மூடின. ‘‘வலி!’’ என்றான். நெற்றிப் புருவத்தின் மேல் ஒரு வெட்டுக் காயம்.

‘‘சரியான அடி பட்டிருக்கு’’

‘‘தூக்குங்க! மெல்லத் தூக்குங்க.’’

மற்றவர்கள் சேர்ந்து கொள்ள வசந்த்தை நிமிர்த்தி மெதுவாகத் தூக்க, ‘‘அய்யோ... உயிர் போவுது.’’ என்றான் வசந்த் மிக ஹீனமாக. உடனே அவன் தலை தொங்கிப் போய் மயக்கம் அவனைக் கவிழ்த்தது. ‘‘க்விக்! உடனே ஆஸ்பத்திரிக்கு அழைச்சுட்டுப் போகணும். இல்லாட்டி பிழைக்க மாட்டாரு. மிஸ்டர் வியாசன்! சட்டுனு ஜீப்பை இங்கக் கொண்டாரச் சொல்லுங்க.’’

ஜீப்பின் பின்புறத்தில் வசந்த் கிடத்தப்பட்டான். பின்னிரவில் தலைமை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சேர்த்து கா**ஷு**வாலிட்டியில் அவர்கள் பதறிப் போய் பெரிய டாக்டர் விளிக்கப்பட்டு காயங்கள் கணக்கெடுக்கப்பட்டு மெல்ல அவைகளை வெவ்வேறு திரவங்களால் சுத்தம் செய்து–கணே**ஷு**க்கு வலித்தது. நெற்றி, இடது காது ஓரம், கழுத்தில் எல்லாம் வளைந்த ஊசிகள் செருகித் தையல் போட்டு வலி மறக்க ஊசி போட்டு ரத்தம் அளித்து–மூக்கில் ஆக்ஸிஜன் குழாயைச் செருகி.

கண் திறக்கவே இல்லை வசந்த். கணேஷ் படுக்கை அருகில் அவனை வெறித்துப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

அவர்கள் எல்லோரும் பன்னிரண்டரை வரை இருந்து விட்டுச் சென்றுவிட்டார்கள். கணேஷ் ஸ்தம்பித்த நிலையில் உட்கார்ந்திருந்தான். புரியவே இல்லை. ஏன்? ஏன் அங்கே போனான். எப்படி அடிபட்டான். யார் செய்தது இது. பிழைத்து விடுவான். மெதுவாக மூச்சு விடுகிறான்.

வேண்டாம். ஓசைப் படாமல் சென்னை திரும்ப விடலாம். நான் தோற்றுவிட்டேன். எனக்கு ஒரு அட்சரம் புரியவில்லை... மெல்ல அவனைத் தொட்டான். ஒரு கை விரிந்து ஒரு கை மூடியிருந்தது. விரல்களைப் பிரித்தான். கட்டின் இறக்கத்தில் நீலம் பாரித்து வீங்கியிருந்த விரல்கள். அருகே வசந்த்தின் சட்டை தொங்க அதை எடுத்து ஆராய்ந்தான். பர்ஸ் அதனுள் பணம்! கணேஷின் போட்டோ. மற்றொரு காகிதம் தனியாக இருந்தது. இதென்ன! நாலாக மடிக்கப்பட்டு பழுப்பாக இருந்தது. பிரித்தான்.

tamilpdfree.wordpress.com

அச்சடித்த பக்கம் மிகப் பழசான புத்தகத்தின் பக்கம் படிப்பதற்கு வார்டு வெளிச்சம் போதவில்லை. வசந்தின் மூச்சு சீராக இயங்குவதைப் பார்த்து விட்டு மெல்ல நடந்து வார்டுக்கு வெளியே வந்து காரிடார் வெளிச்சத்தில் அந்தக் காகிதத்தை ஆராய்ந்தான்.

‘‘புத்திரவதி த் வஜன கோலாகலன்’’

‘‘உமது தாய் புத்திரவதி! அவள் புத்திரவதியல்ல என்று மறுத்துவிடும் பார்க்கலாம்?

‘‘அடே! நான் திரும்பி வருமளவும் நீ இந்த இடத்தைவிட்டு அசையக்கூடாது. உன்னை இன்னாரென அறிவித்துக்கொள்வது கூட உதவாது....’’

ஏறக்குறைய பிசாசின் வாக்கியங்கள். அது வசந்த்துக்கு எப்படிக் கிடைத்தது? என்று உடனே எழுப்பிக் கேட்கவேண்டும் போல இருந்தது. அவன் இப்போது பேசுகிற நிலையில் இல்லை. முக்கியமாக ஏதோ நிச்சயம் பார்த்திருக்கிறான். அதற்குள் அடிபட்டிருக்கிறான்.

கணேஷ் மேலும் கீழும் காரிடாரில் நடந்தான். கேஸை விட்டுவிடுவது உத்தமான செயல். இருந்தும் மறைந்த பனிக்கட்டியின் முனை மட்டும் தெரிகிறது. என்ன சொல்வது? வார்டுக்கு சென்று படுக்கையருகில் உட்கார்ந்தான். கடிகாரம் 3.30 என்று ஒளித்தது. வசந்த்தின் நெற்றி சுருங்கி வாய் திறந்து மூச்சுவிட்டு கொண்டிருந்தான். உயிர் தப்பித்திருக்கிறான். கை முழங்கால் மார்பில் கட்டுக்கள் கன்னத்தில் ஒரு பெரிய கூட்டல் குறி. நெற்றில் பிளாஸ்திரி நாசித் துவாரத்தில் உறைந்த ரத்தம்.. பாவம்!

உட்காந்தவாறே தூக்கம் திருட ஆரம்பித்தான் கணேஷ். ஜன்னலில் பத்து சதுர அடிக்கு வானம் வெளுத்து ஆஸ்பத்திரிக் காகங்கள் கூப்பிட்டன. நர்ஸ்கள் புதிதாகப் பிறந்தவர்கள் போல் வந்தார்கள். பிளாஸ்டிக் பக்கெட் மருந்து வாசனை தண்ணீருடன் தரை துடைக்க வந்தது. கணேஷ் சட்டென்று விழித்தான். வசந்த் விழித்திருந்தான். ‘‘என்னடா? எப்படி இருக்கு?’’ என்றான்.

‘‘வலி’’

‘‘எங்கே?’’

‘‘எங்க இல்லை?’’

‘‘பேசாம படுத்துத் தூங்கு!’’

வசந்த் தலையை ஆட்டி ‘‘கிட்ட வாங்க” என்றான். அருகே சென்றான். பாத்ரூம் என்றான்.

‘‘பாத்ரூம் போகணுமா? ஒரு நர்ஸ்கிட்டே சொல்லேன்’’

‘‘இல்லை. வியாசன் பாத்ரூம், அதைத் திறந்து பாருங்க! நான் திறக்கறப்போ அடி பட்டுகிட்டேன்.

‘‘அப்படியா? அந்தக் காகிதம் எப்படிக் கிடைத்தது?’’

‘‘பாத்ரூம் வாசலில் தனியாக் கிடந்தது’’

கணேஷ் அவன் கன்னத்தில் லேசாகத் தட்டிக் கொடுத்து, ‘‘அப்புறம் பேசலாம். ரெஸ்ட் எடுத்துக்க’’ என்றான்.

tamilpdffree.wordpress.com

“என்ன, பேஷண்ட் எப்படி இருக்குது?” என்றாள் ஒரு ஏராள நர்ஸ். “வாங்க,” என்றான் வசந்த். “சிரிக்க முடியலை”

“தலையணையை மாத்திறலாமா?”

“சிஸ்டர்! அவனாலே எழுந்திருக்க முடியாதுன்னு நினைக்கிறேன்.”

“பரவாயில்லை. வலிக்காம மாத்திடறேன். ஸ்டாஃப் வந்தா கோவிக்கும்.” சற்று அதீதமான மார்புடன் வசந்த்தின் பால் சாய்ந்து “மெல்ல, கொஞ்சம் கூட வலிக்காது... தலையைத் தூக்கறீங்களா?” என்றாள்.

“உங்களைப் பார்த்தா எழுந்து உட்காரலாம்னு தோணுது... முடியலியே! நீங்க கிறிஸ்டியன்ஸா?” என்றான் வசந்த்.

“ஏய், கொஞ்சம் சும்மாரு!”

“பாஸ்! நீங்க போய்க் கொஞ்சம் தூங்குங்க! இவுங்கள்ளாம் என்னை நல்லாப் பார்த்துப்பாங்க.

“ஸிஸ்டர்! இந்த ஆள் கொஞ்சம் லொட லொட! கொஞ்சம் தெம்பு வந்தா எழுந்திருவான். பார்த்துக்குங்க.”

“கவலைப் படாதீங்க.” என்ற புன்னகைத்தாள்.

கணேஷ் புறப்பட்டான். வசந்த்தை அந்த நிலையில் விட்டுச் செல்ல விருப்பமில்லைதான். ஆனால் மற்றொரு கவலை இருக்கிறது. லீனா. அவள் முகம் தெரியாத ஒரு ஆபத்தில் இருக்கிறாள். குமாரவியாசன் பற்றிய அவன் ஆரம்ப சந்தேகங்கள் ஊர்ஜிதமாகி விட்டன. குமாரவியாசனின் அறையில் இருக்கிறது விடை. ஆஸ்பத்திரி மரத்தடியில் தன் காரைத் திருப்பி ரிவர்ஸ் செய்து புறப்பட்டு வெளிப்பட்டான்.

வியாசன்தான் சூத்திரதாரி. சந்தேகமில்லை. மண்டபத்தில் வசந்த் இல்லையென்று தெரிந்ததுமே அவர் குரலில் பதற்றம் தெரிந்தது. நிச்சயம் நாங்கள் அவரைச் சந்தேகிப்பது அவருக்கு தெரிந்திருக்க வேண்டும். அந்த அறைக்கதவைத் திறந்து அந்த பாத்ரூமில் என்னதான் இருக்கிறது என்று பார்த்து விடவேண்டும். முதல் காரியம். இதைப் பகல் முயற்சியாகச் செய்யலாம். இரவு வேண்டாம். ஆபத்துதான். இருட்டான விவகாரத்துக்கு முடிவு தெரிய அந்தக் கதவு திறக்க வேண்டும்.

அதில் இருக்கிறது சூட்சுமம்.

காரை நிறுத்திப் பூட்டிவிட்டு மாடி ஏறித் தன் அறைக்கு வந்தான். கண்களில் தூக்கம் கெஞ்சியது. சட்டையை கழற்றி மாட்டிவிட்டுப் படுப்பதற்குமுன் அந்த ஓசை கேட்டு உஷாரானான். அந்த அறைக்குப் பக்கத்தில் ஒரு சிறிய அறை அதற்குச் செல்லும் கதவு ஒருக்களித்திருந்தது. சப்தம் அங்கிருந்துதான் வந்தது. கணேஷ் பஞ்சடி வைத்து அங்கே சென்று கதவுப் பிளவில் மெல்ல எட்டிப் பார்த்தான். லீனா தன் பாண்ட்டை ஜிப்பிக் கொண்டிருந்தாள். சட்டை அணிந்து பித்தான்களை மெல்லப் பொருத்தினாள். ஒரு கணம் கணேஷ் தயங்கி கனைத்தான்.

“யாரு?”

“கணேஷ்”

tamilpdffree.wordpress.com

“உட்காருங்க கணேஷ்!” கடைசிப் பித்தானுக்குக் காத்திருந்து உள்ளே சென்றான்.

“இப்ப எப்படி இருக்கு வசந்துக்கு?”

“நினைவு திரும்பிடுச்சு”

“நேத்திக்கு நான் செத்துப் போயிட்டார்னே நினைச்சேன்”

“இல்லை! லீனா! நீ இங்கே என்ன செய்துகிட்டிருக்கே?

“அங்கே தனியாப் பயமாயிருந்தது உங்க ரூமுக்கு வந்து விட்டேன்.”

“சித்தப்பா எங்கே?”

“காலையில இருந்தே காணலை. ஒரு வேளை மலைப்பக்கம் போயிருக்காரோ என்னவோ?”

“மலைப்பக்கமா?”

“அடிக்கடி மலைப்பக்கம் வாக் போவார். நான்கூடத் தனியா போய்க்கிட்டிருந்தேன். இப்ப பயமா இருக்கு கணேஷ்!

“இப்பகூட என் மார்பு திக்திக்குங்குது! இந்த ரூம்ல எனக்குக் கொஞ்சம் தைரியமாயிருக்கு. கணேஷ் வாங்க மெட்ராஸ் போயிறலாம். எனக்கு சொத்துக் கித்து ஒரு எழவும் வேண்டாம். எல்லாரும் என்னைச் சந்தேகப்படறாங்க! கணேஷ். நான் பிசாசா? நீங்களே சொல்லுங்க! நான் பிசாசா?” லீனா அவன் அருகில் வந்து அவன் கையைப் பற்றி “தொட்டுப் பாருங்க! நான் பிசாசா? இந்தக் கன்னம் பிசாசா? இந்த நெத்தி... இந்த கழுத்து...

அவன் கையைத் தன் உடம்பின் ஒவ்வொரு பகுதியிலும் ஒற்றி ஒற்றிக் காட்டினாள்.

“கணேஷ் என்னை காப்பாத்துங்க!” என்று கெஞ்சினாள்.

“கவலைப்படாதே!” என்று ஆறுதலாக அவள் முதுகில் தட்டினான்.

“நல்ல கணேஷ்!” என்று அவன் கன்னத்தில் மூக்கை வைத்து தேய்த்தாள்.

“லீனா! அவுட் ஹவுஸைப் பூட்டிட்டியா?”

“ம்”

“சாவி இருக்கா?”

“இருக்கு. ஏன்?”

“சாவி கொடுப்பாயா?”

“உங்களுக்கு இல்லாததா?”

“லீனா! நான் சொல்வதைக் கவனமாகக் கேளு. நான் இப்ப இந்த அவுட் ஹவுஸைத் திறந்து கொஞ்சம் தேடப்போறேன் உங்க சித்தாப்பாவுக்குத் தெரியாம. அவர் எங்க

tamilpdfree.wordpress.com

போயிருக்கிறார். எப்ப வருவார் தெரியாது. ஆனா நான் தேடப்போவது உன்னுடைய சார்பில். உன்னுடைய நன்மைக்கு... அதனால நீ கிட்டே இருந்து பார்த்துக்கிட்டே இரு. யாராவது அவுட்ஹவுஸை அல்லது உன் சித்தப்பா வர அறிகுறிகள் தெரிஞ்சுதுன்னு உடனே சப்தம் போட்டு கணேஷ்னு கூப்பிடு. நான் ஜன்னல் கதவைத் திறந்து வெச்சுக்கிட்டே இருக்கேன். என்ன சரியா?''

‘‘சரி கணேஷ் ரொம்ப திரில்!''

‘‘வரட்டுமா?''

‘‘கணேஷ், சித்தப்பா கெட்டவரா?''

‘‘அப்படித்தான் தோணுது. அவர் நல்லவரா, கெட்டவரான்னு அரை மணியிலே சொல்லிடறேன்! இங்கேயே பார்த்துகிட்டு இரு. என்ன?''

‘‘சரி!''

கணேஷ் அவளிடம் சாவி வாங்கிக் கொண்டு அவுட்ஹவுஸை நெருங்கினான். லீனா சாவி கொத்தாகக் கொடுத்திருந்தாள். அதில் தக்க சாவியைத் தேர்ந்தெடுத்து அவிட் ஹவுஸின் வாயிற்கதவைத் திறக்கும்போது கணே**ஷு**க்குக் கைகள் வியர்த்து நடுங்கின “ஈஸி’

திறந்து உள்ளே சென்று உள்பக்கம் தாளிட்டுக் கொண்டான். ஒரு ஜன்னலைத் திறந்தான். எதிரே மாடி ஜன்னலில் லீனா தெரிந்தாள். புன்னகையுடன் கையை ஆட்டினாள். “கணேஷ்!” என்றாள். “கேட்கிறதா?”

“கேட்கிறது” என்று தலையை ஆட்டினான். உள்ளே வந்தான். மூங்கில் நாற்காலிகள் முதுகில் பச்சை வளைவுகள். உறைகள் ஓரத்தில் ஒரு காத்ரெஜ் மேஜை. சுவர்களில் படங்களில் எல்லாம் பொட்டு வைத்திருந்தது. ஸ்வஸ்திக் வடிவத்தில் தாமிரத் தகடு தொங்கியது. சுவர்கள் சந்திக்கும் மூலைகளில் யு வடிவ ஆணியடித்து எலுமிச்சபழ அளவுக்கு ஏதோ ஒன்று மஞ்சள் துணியில் கட்டப்பட்டுத் தொங்கியது. பேய் அண்டாமலிருக்கத் தடுப்புச்சாதனங்கள்! பந்திர அட்சரங்கள்! வியாசனும் நம்புகிறாரா! அல்லது நம்புவதுபோல் பிறருக்குக் காட்டிக் கொள்கிறாரா! மெல்ல அந்த பாத்ரூமை அணுகினான். காதுகளை லீனாவின் குரலுக்குத் தீட்டிக் கொண்டு பூட்டை ஆராய்ந்தான். பாத்ரூமை எதற்கு பூட்ட வேண்டும். தன்னிடமிருந்த சாவிக்கொத்தில் ஒவ்வொன்றாக முயன்றான். ஒரு சாவி ஆச்சரியம். திறந்தது. கதவைத் தள்ளி உள்ளே எட்டிப்பார்த்தான் இருட்டாக இருந்தது. நுழைந்தான். ஜன்னலின் நீலத் திரைகள். அவைகளில் ஒன்றைத் தள்ளி வெளிச்சம் பண்ணிக்கொண்டான். உண்மையாகவே பாத்ரூம்தான். கண்ணாடி ஸிங்க். சோப் வகையறாக்கள். டபிள்யு ஸி... ஷவர்... அப்புறம் இது என்ன? மற்றொரு திரை... அதன் அருகே செல்ல. “வாங்க கணேஷ்’ என்றாள் லீனா.

## 19

**க**ணேஷ் சற்று நேரம் திகைத்து நின்றான். காதுகளைத் தீட்டிக்கொண்டு சப்தம் வந்த திசையைத் தேடினான். லீனாவின் குரல்தான் அது. லீனா அல்ல லீனா எங்கே இருக்கிறாள்? நம்பாதே! உன்னைக் குழப்ப யத்தனம் நடக்கிறது. கவனி சப்தம்



tamilpdffree.wordpress.com

எங்கிருந்து வந்தது? மறுபடி ஏதாவது நிகழக் காத்திருந்தான். ம்ஹூம். நிசப்தம்தான். அந்த அலமாரி உறுத்தியது. பாத்ரூமில் இத்தனை பெரிய அலமாரியா? அதன் கண்ணாடி கதவுகளுக்கு பின் புத்தகங்கள் தெரிந்தன. ஸ்விட்சிங் ஆட்டமேட்டா தியரி ஸக்ஸெஷன் ஆக்ட், எஸ்டேட் டியூட்டி என்று குழப்பமாக புத்தகங்கள். அலமாரிக் கதவைத் திறந்தான். கக் கக் கக் என்று ஏளனச் சிரிப்பு கேட்டது. சரேலென்று திரும்பினான். எங்கிருந்து வருகிறது இந்த வினோத ஒலி, திட்டவட்டமாகச் சொல்ல முடியவில்லை. எஸ்டேட் டியூட்டி என்ற தடிமனான புத்தகத்தை எடுத்தான். திறந்தான். உள்ளே வெறும் பக்கங்கள். அத்தனையும் வெள்ளைத்தாள்கள். புரியவில்லை. அதே சமயம் அவன் கவனத்தை அந்த குழப்பமான குரல்கள் ஈர்த்தன. மெல்ல ஒரு பொதுவான கசமுச. நடுநடுவே யாரோ இருமுகிறார்கள். ஏதோ ஒரு நாடகத்தில் இடைவேளையில் கொட்டகையின் விளிம்புகளில் கேட்கும் சப்தம் போல. புரியவில்லை. கணேஷ் திடீர் என்று கத்தினான். “மிஸ்டர் வியாசன் ! எனக்கு எல்லாம் தெரியும். உங்க திட்டம் பூரா தெரியும். சும்மா இந்த மாதிரி பயங்காட்டுறதை விட்டுவிட்டு ஒப்பனா வெளியே வாங்க! இல்லை தொலைச்சுடுவேன்!” என்று அதட்டினான். யாரிடம் எதற்குப் பேசுகிறோம் என்று தெரியாமல் அபத்தமாக உணர்ந்தான். மறுபடி அந்தக் கக் கக் கக் சிரிப்பு மட்டும்தான் கேட்டது.

கணேஷ் அந்தப் பாத்ரூமை விட்டு வெளியே வந்தான். லீனாவைத் தனியாக விட்டு வந்துவிட்டோமே என்று சட்டென்று கவலை ஏற்பட்டது. ஹாலின் குறுக்கே நடந்து வாயிற்கதவின் உள்தாழ்பாளை விடுவித்துக் கதவைத் திறக்க... முடியவில்லை. வெளியே தாளிட்டிருந்தது. அல்லது பூட்டியிருந்தது, என்னடா இழவு இது என்று அலுத்துக் கொண்டு ஜன்னலுக்கு வந்து, “லீனா! லீனா! என்று இரைந்தான். பதில் இல்லை. இப்போது அவனுள் அச்சம் பெட்ரோல் போல் பற்றிக்கொண்டது. மாட்டிக்கொண்டுவிட்டான். லீனாவைக் காணோம்! நான் பயந்தது நடக்கப்போகிறது. அவள் தனியாக அவர்களிடம் சிக்கிவிட்டாள். அவளைக் கொல்லப் போகிறார்கள். அவர்கள் விரித்த வலையில் விழுந்துவிட்டேன். அய்யோ! கதவை உடைக்க வேண்டும். ஜன்னலை உடைக்க வேண்டும். ம்ஹூம், முடியாது. வெண்டிலெட்டர்? ஆம், வெண்டிலெட்டர் கண்ணாடி முழுசாகப் பெரிசாக இருக்கிறது. உடை அதை, மேலே எப்படி ஏறுவது? இந்த மேசையை நகர்த்து! ம்...! சீக்கிரம், சீக்கிரம். இங்கிருந்து வெளியே செல்ல வேண்டும். ஆபத்து!

மேசையை நகர்த்த முற்படுமுன் கதவுப்பக்கம் திறக்கப்படும் ஓசை கேட்டது. சரேல் என்று கதவின் பக்கத்துச் சுவரின் அருகில் ஒதுங்கிக்கொண்டான்.

கதவு மெல்லத் திறந்தது.

ஒரு தலை எட்டிப் பார்த்தது.

கணேஷ் தன் கையை ஒரு கராத்தே வெட்டுக்குத் தயாராக்கிக் கொண்டு தன் அத்தனை பலத்தையும் பிரயோகித்து...

வெயிட்!

லீனா! நீயா!”

“கூப்பிட்டீங்களா? உங்க குரல் கேட்டது! பாத்ரூம்ல இருந்தேன், என்ன இது ஒளிஞ்சிக்கிட்டு! பயந்தே போய்ட்டேன்”

கணேஷ் தளர்ந்து போய் நாற்காலியில் உட்கார்ந்தான்.

tamilpdffree.wordpress.com

“கொஞ்சம் இரு,” என்றான். ஆசுவாசப்படுத்திக் கொண்டான். “லீனா, நீ இப்ப வந்தியே, வாசல் கதவு தாளிட்டிருந்தா!”

“இல்லையே?”

“பொய் சொல்லாதே ப்ளீஸ்! சற்று முன்னால அது வெளியே தாளிட்டிருந்தது”

“நான் வந்தப்போ திறந்துதான் இருந்தது கணேஷ் ப்ராமிஸ்!”

இவளை எவ்வளவு தூரம் நம்புவது? இவள் குரல் உள்ளே கேட்கிறது. கூப்பிட்டா பதில் சொல்லவில்லை. இவளும் இந்த ஏற்பாட்டில் ஒருத்தியோ என்ன ஒரு மாயச் சுயற்சி! இதற்கெல்லாம் என்னதான் அர்த்தம்!?... தலையும் இல்லை. காலும் இல்லை!

“எல்லாம் பார்த்துட்டிங்களா? ஏதாவது கண்டுபிடிச்சிங்களா?” குரலில் கேலி இருப்பது மற்றொரு மாயமா? சரி.

“ஒரு இழவும் கிடைக்கலை. வா என் கூட”

“எங்கே?”

“வசந்த்தைப் பார்க்கணும். ஆஸ்பத்திரிக்கு!”

“கணேஷ், நாம எப்ப மெட்ராஸ் போகலாம்?”

“அது போலீசைக் கேட்டுக்கிட்டுத்தான் தெரிஞ்சுக்கணும். அந்த ஆள் இறந்துபோனதை மேல விசாரிக்கிறதுக்கு நாம தேவைப்படுவோம். சட்டுனு நாம விலகிட முடியாது”

“போலாம்னு சொன்னீங்களே!”

“வசந்த் வேற அடிபட்டிருக்கான். ரெண்டு நாளைக்கு அவனை நகர்த்த முடியாதுன்னு நினைக்கிறேன்!”

“அதானே! பா...வம் இல்லை வசந்த் வசந்த்”

லீனா, நீ நிஜமாகவே ஒன்றும் அறியாத குழந்தையா? உன்னை எப்படிச் சேதப்படுத்தாமல் கீறி உண்மை ரூபத்தை வரவழைக்க முடியும்? இந்த விவகாரம் முழுவதிலுமோ ஏதாவது ஒரு விதத்திலோ லீனா இருக்கிறாள். அவள் குரல்... அவள் உருவம்... அவள் பேச்சில் இருக்கும் மிகையான குழைவு அவள் சொத்து... எப்படி இவளை இனம் பிரிப்பது? யார் கட்சி இவள்? ஒரு வேளை இவர்கள் எல்லோரும் சேர்ந்து கொண்டு என்னைப் பைத்தியமடிக்கிறார்களா?...

“லீனா, உன்னை ஒண்ணு கேட்கட்டுமா?”

“என்ன?”

“அந்த உருவம் சொன்ன வார்த்தைகளை நீ எப்பவோ ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் சொல்லியிருக்கிறதாய்ச் சொன்னியே அதைப்பத்தி?”

“கேளுங்க...”

“புத்ரவதிங்கறது யாரு? த்விஜன கோலாகலன்னுஅர்த்தம் தெரியுமா?”

tamilpdffree.wordpress.com

“ரெண்டுமே தெரியாது கணேஷ்!”

“அந்த வார்த்தைகளை ஏதாவது புஸ்தகத்தில் படிச்சியா?”

“இருங்க, யோசிக்கிறேன்!”

“யோசி” அவள் தன் கைவிரலை வசீகரமாக நெற்றிப்பொட்டில் தொட்டுக்கொண்டு யோசிக்க, அவளையே பார்த்துக் கொண்டிருந்த கணேஷ் மற்றொரு பொய் ஜோடிக்கிறாளோ என்று வியந்தான். இந்தச் சின்ன வாசல் பூட்டு விஷயத்தில் சட்டென்று பொய் சொன்னவள்... எல்லாமே பொய்யாக இருந்தால்? தான் அந்த வார்த்தைகளை முன்பு பேசியிருக்கிறேன் என்று சொன்னதே பொய் என்றால்? எதற்காக அந்தப் பெண் சொல்கிறாள் என்கிற கேள்வி மிஞ்சும். தி மிஸ்ஸிங் லிங்க் ஆதாரமாக ஒன்று உதைக்கிறது.

லீனா யோசனைக்குப் பின், “புஸ்தகத்தில் படித்த மாதிரி கூட ஞாபகம் வருது!’ என்றாள்.

“இந்தப் புஸ்தகமா பாரு!”

“இது புஸ்தகம் இல்லை. காகிதம்!”

“இது புஸ்தகத்தில் ஒரு பக்கம்!”

அதை பார்த்தாள். நிதானமாகப் படித்துப் பார்த்து, “படிச்சிருக்கேன்! இதே வரிகளைப் படிச்சிருக்கேன்!”

“எங்கே? எப்ப”

“ரொம்ப நாள் முன்னால!”

“ரொம்ப நாள்னா பத்து வருஷம்? பதினைஞ் வருஷம்?”

“நாற்பது வருஷம்!” என்றாள்.

“லீனா, உனக்கு வயசே பதினெட்டுத்தான் ஆகிறது!”

“சில வேளைகளில் ரொம்ப வயசாய்ட்ட உணர்ச்சி ஏற்படுது கணேஷ்!”

“போதும் குழப்பம். இதோடு போதும். இப்போதைக்கு நிறுத்திக்கலாம். இப்ப நீ என்கூட வரியா இல்லையா?”

“எங்க வேணா வரேன் கணேஷ்! என்ன வேணா செய்யறேன்!”

கணேஷ் லீனாவுடன் போலீஸ் நிலையத்திற்குச் சென்றான். சூப்ரண்ட் சென்னை திரும்பியிருந்ததாகவும் மறுபடி இரண்டு தினத்தில் வரப்போவதாகவும் சில அதிகாரிகளுடன் மறுபடி அந்த உருவத்தைப் பார்க்க அவர் விரும்புவதாகவும் இன்ஸ்பெக்டரிடமிருந்து தெரிந்து கொண்டான்.

“செத்தானே அந்த ஆளைப்பற்றி ஏதாவது தகவல் தெரிஞ்சுதுங்களா?”

tamilpdfree.wordpress.com

“இன்னும் இல்லிங்க! இந்தக் கேஸை எப்படி அப்ரோச் பண்றதுன்னே குழம்பிக்கிட்டிருக்கோம். எஃப் ஐ ஆர்லயே பாடி மிஸ்ஸிங்னா கேலிக் கூத்து.... பிசாசை பார்த்தம்னு எழுதினா இன்னும் சிக்கல்”

சொல்லலாமா இவரிடம் அந்த மெக்கானிக் பற்றி, இல்லை, நாளைக்குச் சொல்லலாம்.........

லீனாவுடன் மாலை ஐந்து மணி சுமாருக்கு வியாசனைப் பார்க்கச் சென்றான் கணேஷ்.

அவுட் ஹவுஸ் சென்று கதவைத் தட்டினான். பதில் இல்லை. பலமாகத் தட்டத் திறந்து கொண்டது.

வாயிற்படியில் திட்டாக ரத்தம் தெரிந்தது.

## 20

tamilpdfree.wordpress.com

புதிய ரத்தம். சிறிய திட்டாக இருந்தது. அதைப் பார்த்துவிட்டு அதிர்ச்சியுற்றான் கணேஷ். அவன் இதுவரை அனுமானித்து வைத்தது அத்தனையும் ஒரே கணத்தில் கலையப் போகிறது என்கிற எதிர்பார்ப்பின் சமீபம் அவனைத் தாக்கியது. கதவைத் திறந்தான். தரையில் இன்னும் கொஞ்சம் ரத்தம். தொடர்ந்து அதன் சுவடுகள் ஹாலின் பற்பல இடங்களில் தெரிய, “லீனா! கொஞ்சம் அங்கேயே இரு. உள்ளே வராதே!” என்றான்.

ஒரு சிறு குழந்தையின் ஆர்வத்துடன், “ஏன் கணேஷ்?” என்றாள்.

“உள்ளே வராதே ப்ளீஸ்! ஏதோ விபரீதமா ஆகியிருக்கு அங்கேயே இரு”

“நீங்க சொன்னா நான் உள்ளே வரலை,” என்றாள் சற்று மிகையாகத் தோன்றிய பயபக்தியுடன்.

உள்ளே நுழைந்து அந்த தடங்களின் மேல் கால் வைக்காமல் ஜாக்கிரதையாக நடந்தான். ரத்தம் கசிந்த–ஏன், பொங்கிய–ஏதோ ஒன்றைத் தரதரவென்று தரையில் தேய்த்து இழுத்து பாத்ரூம்வரை யாரோ எடுத்துச் சென்றிருக்கிறார்கள். பாத்ரூம் கதவு ஒருக்களித்திருந்தது. திறந்தான்.

அலறினான். “ஓ மை காட்!”

குமாரவியாசன்!

கீழே அசௌகரியமாக மல்லாந்து கிடந்தார். கை, கால்கள் நீண்டு வாய் திறந்து கடைவாய்ப் பகுதியில் இன்னமும் ரத்தம் மெலிய நூல் வடிவத்தில் ஒழுகிக் கொண்டிருக்க, மயிர்க்கற்றைகள் ரத்தப்பிசுக்கில் ஒட்டிக்கொண்டிருக்க, பின் மண்டைப்பகுதியில் ஒரு ஏராளமான சிவப்புக்குளம் தெரிய–

குமாரவியாசன்!

கணேஷ் சற்று நேரம் ஸ்தம்பித்து நின்றான். மைகாட்! மைகாட்! தன் அருவருப்பைச் சமாளித்து அவர் அருகில் சென்றான்! மெல்லக் கையை உயர்த்தி மணிக்கட்டைத் தொட்டுப் பார்த்தான்.

ம்**ஹூ**ம்! சான்ஸே இல்லை.

இறந்து போயிருந்தார்.

வீல் என்ற ஒரு எக்ஸ்பிரஸ் அலறல் கேட்டுத் திடுக்கிட்டு திரும்பினான். லீனா பாத்ரூமின் வாசலில் நின்று கொண்டு பயத்தில் வாய்த்திறந்து உச்ச கதியில் அலறினாள்.

“கணேஷ்! சித்தப்பா! சித்தப்பா என்ன ஆச்சு?” என்றாள்.

“உள்ளே வரவேண்டாம்னு சொன்னேன் இல்லை. உடனே வெளியே போ!”

“அய்யய்யோ! செத்துப் போயிட்டாரா? செத்துப் போயிட்டாரா?”

“ஆமாம் அந்தண்டை போ முதலில்!”

“நான் மாட்டேன்! மாட்டேன்! பயமா இருக்கு! சித்தப்பா! சித்தப்பா!” பெரிதாக முகம் விகாரி அழுதாள்.

“இதப்பார். கண்ணை மூடிக்கிட்டு ஓரத்திலே போய், உட்காரு. உன்னைக் கவனிக்க எனக்குச் சமயமில்லை.”

கணேஷ் அதிர்ந்த நிலையில் ஹாலில் இருக்கும் டெலிபோனை நோக்கி நடந்தான். அவன் கால்கள் நடுங்கின . லீனா அவன் பின்னாலே ஒட்டிக் கொண்டு ஓடிவந்தாள்.

“ஆபரேட்டர்! கொஞ்சம் அர்ஜெண்டா போலீஸ் ஸ்டேஷன் கொடுங்க!”

“என்னே விட்டுறாதீங்க கணேஷ்! காப்பாத்துங்க கணேஷ்!” தன் சட்டை ஓரத்தில் குனிந்தபோது ரத்தம் பட்டதில் கறை படிந்திருந்ததைக் கவனித்தான். கடவுளே மாட்டிக் கொண்டுவிட்டேன்! நான் இந்த இடத்தை விட்டு விலகமுடியாது. வசந்த் வேறு அடிப்பட்டுக் கிடக்கிறான். இந்தப் பெண்ணோ அட்டை மாதிரி ஒட்டிக்கொண்டு– என்ன செய்வேன்? இப்படி ஒரு பயங்கரத்தில் மாட்டிக்கொண்டு விட்டேன். விமோசனமில்லாது இனி எத்தனை கேள்விகள்...எத்தனை சந்தேகங்கள்.......

‘அதெல்லாம் இருக்கட்டும். நீ ஏன்யா அங்கே போனே?”

முகத்தை மூடிக்கொண்டு லீனா விசித்துக்கொண்டிருந்தாள்.

குமாரவியாசனா! என்ன ஒரு எதிர்பாராத பலி! வியாசன்தான் எல்லாவற்றையும் செலுத்தும் சூத்திரதாரி என்கிற என் சித்தாந்தம் தூள்! பரமபத சோபானப் பாம்பு ஆரம்பத்தில் கொண்டு வந்து விட்டு விட்டதே! இனி எங்கே போவேன்? யாரைச் சந்தேகப்படுவேன்? பாக்கி இருப்பவர்கள் நான், வசந்த் லீனா! பாத்ரூமை மறுபடி பார்த்தான். உடம்பில் காயம் எதையும் கண்டதாக ஞாபகமில்லை. எப்படி இறந்திருக்கிறார்? அதைவிடக் கவலை, யார்? செய்கிறார்கள் இதையெல்லாம்? யார்? எது? எங்கிருந்து? அப்புறம் எல்லாவற்றையும் விடப்பெரிய ஒரு மஹா மஹா ஏன்?

“இன்ஸ்பெக்டர், நான் கணேஷ் பேசறேன். உடனே பண்ணை வீட்டுக்கு வரீங்களா? மற்றொரு கொலை!”

tamilpdffree.wordpress.com

“என்னது? என்னய்யாது? என்னது?”

“இன்னொரு பாடி! இந்தமுறை குமாரவியாசன். நேர்ல வர்ரீங்களா பார்க்கலாம்!”

“எங்கிருந்து பேசறீங்க?”

“அவரோட அவுட் ஹவுஸ் டெலிபோன்ல! பாடி பாத்ரூம்ல கிடக்குது”

“நகராதீங்க! அப்படியே இருங்க உடனே வாரேன்!”

டெலிபோனை வைத்துவிட்டு லீனாவைப் பார்த்தான்–அவள் உடல் பதறிக் கொண்டிருந்தது. விரல்கள் நடுங்கிக் கொண்டிருந்தன. பாத்ரூமுக்கு தன் முதுகை காட்டிக் கொண்டு மேசை விளிம்பில் உட்கார்ந்திருந்தாள். கணேஷ் சற்று அப்பால் நகர உடனே அவனுடன் ஒட்டிக் கொள்ள ஆயத்தமானாள்.

கணேஷ் ஒரு மாத்திரையை விரும்பினான். மறப்பதற்கு ஒரு மாத்திரை. விழுங்கின உடனே தூக்கம் தாக்கி இந்த பயங்கர காட்சி ரத்து செய்யப்பட்டு முன்னூறுநாள் உறங்க வேண்டும் எல்லாரும். எல்லாமே ஒரு பொல்லாத சொப்பனம் என்று மற்றொரு உலகத்தில் விழித்தெழ வேண்டும். அதற்கான ஒரு மாத்திரை எங்கு கிடைக்கும்?

லீனா எதிரே உண்மையான பயக்கலவரத்துடன் அழுது கரைந்துக் கொண்டிருந்தாள். விசும்பல்களுக்கிடையே “விட்டுறாதீங்க விட்டுறாதீங்க” என்று திரும்பத் திரும்பத் சொன்னாள். “வயத்தைக் கலக்குது” என்றாள் அகஸ்மாத்தாக. ரத்தத்தைப் பார்த்தாள் உவேக் வாயிலெடுத்தாள்.

“ஹய்யோ! இது வேறயா? லீனா போய் மூஞ்சி அலம்பிக்க!’

“நான் தனியாப் போகமாட்டேன். நீங்களும் வாங்க!”

அவள் சட்டையெல்லாம் கக்கல். பரிதாபமாக அவளைப் பார்த்து நெற்றியைச் சுருக்கிக் கொண்டு மற்றொரு முறை ஒரு வெற்று முயற்சி!

“சரி வா என்னோட!”

இருவரும் மெல்ல வெளிவந்தார்கள். தோட்டத்தில் பறவைகள் உல்லாசமாகக் குரல் கொடுத்துக் கொண்டிருந்தன. தென்றல் காற்று அசந்தர்ப்பமாக வீசிக்கொண்டிருந்தது. தூரத்து மலர்களின் மணம் காற்றில் கலந்திருந்தது. வெறுமை, ஆளரவம் இல்லை சற்று தூரத்தில் பெரிய கண்ணன் நீண்ட பச்சை பிளாஸ்டிக் பைப் மூலம் செடி கொடிகளுக்கு நீர் வார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு ஏன் லீனாவின் அலறல் கேட்கவில்லை எதிர்காற்றினாலா? கூப்பிடலாமா? போலீஸ் வரட்டும்.

கணேஷ் அவளைத் தன் அறைக்கு அழைத்து சென்று அவள் முகம் கழுவக் காத்திருந்தான். அவன் மண்டைக்குள் ஒரு வினோதமான மான்டேஜ் போல விசித்திர வடிவங்கள் துரத்தின... குமாரவியாசனை முதலில் சந்தித்தபோது அவர் பனியனின் ‘ஐ லவ் மை கம்யூட்டர்’, சப்பிப்போட்ட மாங்கொட்டை மாதிரி! புத்திரவதி; வித்வஜனகோலாகலன்; அணில்; ரத்தமுத்து; கார் கண்ணாடிமேல் விழுந்து சிதறவைத்த பாறாங்கல்; நகர்கிற புத்தகம்; இன்னும் என்ன என்னவோ?

எப்படி எல்லாவற்றையும் ஒட்டவைப்பது, குழம்பினான்.

tamilpdfree.wordpress.com

லீனா தன் முகத்தைத் துடைத்துக் கொண்டு சற்றே சற்றுத் தெம்புடன் அவனை அடைந்து சோகையாய் சிரித்தாள். அவனை உடனே தொட்டுக் கொண்டு நடந்தாள்.

அவர்கள் அவுட்ஹவுசை நெருங்கி உள்ளே நுழையாமல் வாசலில் காத்திருந்தார்கள்.

போலீஸ் ஜீப் வந்து நின்றது. “எங்கய்யா பாடி?” என்று இன்ஸ்பெக்டர் குதித்து இறங்கின மாத்திரம் கேட்டார்.

“உள்ளே போய்ப் பாருங்க ஸார். பாத்ரூமுக்குள்ளே கிடக்குது. நான் எதையும் கலைக்கலை. பார்த்தவுடனே உங்களுக்கு ரிப்போர்ட் செய்துட்டேன்.

அவர் உள்ளே சென்றார். “நீங்களும் வாங்க கணேஷ் மிஸ் நீங்க இருங்க!” உள்ளே நிதானமாகச் சென்று பாத்ரூமை அணுகி எட்டிப்பார்த்து உள்ளே சென்று அந்த உடலைச் சுற்றி வந்தார்.

“என்ன எளவாப் போச்சுய்யா இது! முதல் கொலையையே கண்டுபிடிச்சு முடிஞ்ச பாடில்லை. இந்த ஆள் வியாசன் பேரில்தான் சந்தேகப்பட்டுக்கிட்டிருந்தோம். இவனே கிடக்கான்! ரோதனை புடிச்ச சமாசாரமாப் போச்சு!”

“நான்கூட எதிர்ப்பார்க்கலை ஸார்!”

“கணேஷ், நீங்க எப்படி உள்ளே வந்தீங்க?”

“வியாசன்தான் என்னையும் இந்தப் பெண்ணையும் சாயங்காலம் வான்னு ஆஸ்பத்திரியிலே வந்து கூப்டுட்டு போனாரு”

“எதுக்கு?”

“ஏதோ முக்கிய விஷயம் பேசனும்னாரு!”

“கொஞ்சம் இருங்க! ஏராளமா டெலிபோன் செய்ய வேண்டியிருக்குது. முதல்லே எஸ்.பி.க்குத் தகவல் சொல்லணும்!”

இன்ஸ்பெக்டர் நிச்சயம் அதிர்ந்திருந்தார். அவருடைய வலது பக்க புருவம் மட்டும் துடித்துக் கொண்டிருந்தது. அவருடைய சின்ன சாம்ராஜ்யம் தாங்கமுடியாத க்ரைஸிஸ் இது! ஒரு கொலையையே சமாளிக்க முடியவில்லை. இங்கே கொலை தினம் தினம் உதிர்கிறது. இதற்கு ஸி.ஐ.டி. தனி டிபார்ட்மெண்ட் ஒதுக்க வேண்டும்!

“ஸார். நான்தான் ஜே த்ரி போலீஸ் ஸ்டேஷன் எஸ்.ஐ.பேசறேன். ஸார்’” அவர் டெலிபோனில் கூச்சல் போட்டார். குரல் நடுங்குது சுலபமாகப் புரிந்தது. “எஸ்.பி. யோட அவசரமாப் பேசணும்”

காத்திருந்தார்.

“ரவுண்ட்ஸ் போயிருக்காரா? எப்படியாவது ஒயர்லெஸ் மூலமா தகவல் சொல்லி உடனே பேசச் சொல்லுங்க! ஒரு மர்டர் கேஸ்!”

டெலிபோனை வைத்துவிட்டு மறுபடி அதைத் தட்டி “ஆபரேட்டர், கொஞ்சம் எச் க்யூ ஆஸ்பத்திரி போடுங்க,” என்றார்.

சரம்சரமாக டெலிபோன் செய்து முடித்ததும் இன்ஸ்பெக்டர், கணேஷின் அருகில் வந்தார்.

tamilpdffree.wordpress.com

“சொல்லுங்க! நீங்க வர்றப்போ எத்தனை மணி?”

“அஞ்சரை சார்”

“கதவு திறந்திருந்ததா?”

“ஆமாம்”

“இந்தம்மாவும் இங்க கூட வந்தாங்களா?”

“ஆமாம்”

இன்ஸ்பெக்டர் மறுபடி அந்த அறைக்குள் சென்று உடலைப் பார்த்துவிட்டு வெளியே வந்தார்.

“பின் மண்டையிலேதான் அடிப்பட்டிருக்குன்னு நினைக்கிறேன். மறுபடி பிசாசா? இப்போ பொழுது சாயரதுக்குள்ளே வர ஆரம்பிச்சுடுச்சா?”

“இன்ஸ்பெக்டர், கொன்றவன் என்ன ஆயுதம் உபயோகப்படுத்தியிருப்பான்?”

“தெரியலை. பி.எம். பார்த்துத்தான் முடிவுகட்டணும்!”

“ஆயுதம் ஏதும் பக்கத்திலே இருக்கிறதாத் தெரியலை!”

“இன்னும் சரியாகப் பார்க்கலையே!”

“ஆயுதம் என்னன்னு தெரிஞ்சா பாதி கேஸ் தீர்ந்த மாதிரி,” என்றான் கணேஷ்.

“அதுகூடச் சரிதான்,” என்று இன்ஸ்பெக்டர் தன்னுடன் வந்திருந்த கான்ஸ்டபிள்களில் ஒருவரிடம், “ரூம் பூரா மேலாகப் பார்த்துக்கய்யா ஏதாவது கிடக்குதான்னு”

“வீட்டுக்கு வெளியே கூடத் தேடலாம்!” என்றான் கணேஷ்.

“நான் வரேன் வரேன். ஒவ்வொண்ணாகத்தானே தேடணும்? இது பெரிய கேஸ்தான் அனேகமா மெட்றாஸிலேயிருந்து படையை அளைச்சுட்டு வந்துடுவாங்க! அதுவரைக்கும் தடயங்கள் எதையும் கலைக்காம இருக்கணும். நீ ஏம்மா அழுவறே பயமா? துக்கமா?”

“ரெண்டும்தான்,” என்றான் கணேஷ்.

“நீங்க வர்றப்ப கதவு சாத்தியிருந்ததா கணேஷ்?”

கணேஷ் மௌனமாக இருந்தான்.

“எஸ்.பி.க்கு இந்நேரம் தகவல் போயிருக்கணும். நிச்சயமாய் லாபரட்டரியிலே இருந்து வண்டி வரும். பவுடர் அடுச்சுத் துப்புரவாய் பார்த்திடுவாங்க! நீங்க எங்கேயும் போயிறாதீங்க!”

இல்லிங்க!” லீனாவுடன் வெளியே வந்தான். தோட்டத்தின் ஃபவுண்ட்டனைச் சுற்றிலும் கட்டியிருந்த வட்டச்சுவரில் அவன் உட்கார, அவள் அருகில் உட்கார்ந்தான். சூரியன் மலைக்குப்பின் மறைந்திருக்க, காற்றில் ஒரு அமானுஷ்ய மௌனம் இறங்கியிருந்தது. ஓர் இலை அசையவில்லை. சற்று நேரம் பிரமித்து உட்கார்ந்திருந்தான் கணேஷ்.

tamilpdffree.wordpress.com

கணேஷ் எழுந்திருந்தபோது லீனாவும் கூடவே எழுந்தாள். இன்ஸ்பெக்டரும் கான்ஸ்டபிள்களும் தோட்டத்தில் தேடிக்கொண்டிருக்க அவரருகில் சென்று “ஸார், நான் ஒரு அரைமணி ஆஸ்பத்திரி வரைக்கும் போய் வரேனே! வசந்த் அங்கே கிடக்கிறான். எப்படி இருக்கான்னு பார்த்துட்டு வந்துர்றேன். உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே?” என்றான் கணேஷ்”

“சரி போய்ட்டு வாங்க ! உடனே வந்துடுங்க. எஸ்.பி. வந்துடுவார்!”

கணேஷ் காரில் ஏறிக்கொள்ள உடன் லீனாவும் கதவைத் திறந்து அவசரமாகத் தன்னை உள்ளே திணித்துக்கொண்டாள்.

வசந்த் அங்கே எழுந்து உட்கார்ந்திருந்ததைப் பார்த்ததும் முதல்முதல் தெம்பு வந்தது கணேசுக்கு. “என்ன பாஸ் இப்படி த்ராட்டில் விட்டுவிட்டு காணாமப் போயிட்டீங்க ரெண்டு பேரும் எங்கே? பக்கத்திலே அணைக்கட்டு இருக்காமே அங்க பிக்னிக்கா? பாஸ் ! இஸ் ஸம்திங் ராங்?”

“வசந்த், குமாரவியாசன் காலி!”

வசந்த் ஏறக்குறைய எழுந்துவிட்டான். “அடப்பாவமே ! குமாரவியாசனா? கடவுளே! என்ன இது சோதனை?”

“ஆமாம் வசந்த்... வீட்டிலே பாத்ரூம்ல பாடி கிடந்தது”

“எப்படி செத்தார்?”

“தெரியலை. மண்டையில் அடியா இருக்கும்னு நினைக்கிறேன். திரும்பிப் போகணும்!”

வசந்த் பளிச்சென்று நெற்றியில் உள்ளங்கையால் அடித்துக்கொண்டு “நல்லவேளை, லீனாவைக் கூட்டிக்கிட்டு வந்தீங்க! நான் நினைச்சது நடந்துருச்சு!” என்றான்.

## 21

**ச**ற்று அசந்தர்ப்பமான உற்சாகத்துடன் வசந்த் பதறினான் “நினைச்....சேன் ! எனக்குள்ள ஏதோ ஒரு பட்சி சொல்லிச்சு பாஸ்; இந்த மாதிரி குமாரவியாசன் மேலேயே எல்லா சந்தேகத்தையும் அடுக்கிட்டுப் போறேம். திடீர்னு அந்த ஆளே மண்டையைப் போட்டுட்டாருன்னா நம்ம த்யரி எல்லாம் அதோகதிதான்! அப்படியே ஆயிடுச்சு! நிஜமாவே செத்துட்டாரா?”

“ஆமாம்”

“ச்ச்ச்? இப்ப என்ன?”

“இப்ப என்ன?” என்று எதிரொலித்தான் கணேஷ்.

“எனக்கு மறுபடி பிசாசுமேல நம்பிக்கை வந்திருச்சு பாஸ்! எல்...லாம் பொருந்தது பாருங்க! வேற வழியில் நடந்த நிகழ்ச்சிகளுக்குத் தீர்வே கிடையாது?”

கணேஷ் யோசித்தான்.

tamilpdffree.wordpress.com

“உக்காருங்க, ஏன் நிக்கறீங்க! லீனாதான் ரொம்ப பயந்திருக்காங்க. ஒரு டம்ளர் மோர் சாப்பிடுங்க! நிஜமாவே போயிட்டாரா? எழுந்து நடந்துகிடந்து வந்துருவாரா?”

“வஸந்த்! நான் பார்த்துட்டேன், அவரை, அதை!.........அப்படியே... மண்டைக்குப் பின்னால்.....

“தயவு செய்து சொல்லாதீங்க. ஏற்கனவே தின்னரொட்டி தொண்டை கிட்டவே இருக்கு. பாஸ் இவங்க ஃபேமலியையே பிசாசு சுத்துது. முதலிலே இருந்து கவனிங்க. அமானுஷ்யமா எவ்வளவு நிகழ்ந்துபோச்சு. அந்தக் குரல்கள். அந்த ராத்திரி உருவம்... கருக்கட்டிக்கிட்டு குடும்பத்திலே உள்ளவர்களை ஒழிச்சே தீர்ரத்துன்னு வந்த பிசாசு அது!”

“என்னடா வசந்த், அந்த மெக்கானிக் குடும்பத்து ஆசாமியா? உளறாதே”

“அவன் மெக்கானிக்கிங்கறது ஊர்ஜிதமாகலையே பாஸ்–இது பிசாசுதான். இதன் குறிக்கோள் இந்த ஃபேமலி மட்டும் இல்லை. குறுக்க வந்தவங்க யாராயிருந்தாலும் அடிச்சிருக்கு. உங்களை, அந்த மெக்கானிக்கை, என்னை! பாத்ரூம்கிட்டே அந்த கடுதாசியை பொறுக்கிட்டு பூட்டை பதம் பார்த்துகிட்டிருக்கேன். க்ஷணகாலத்திலே ஒரு மின்னலடிச்சமாதிரி அடி! அவ்வளவுதான். அங்கேயே நான் அம்பேல்! அடுத்தது ஆஸ்பத்திரிதான். ஞாபகம் இருக்கு!”

கணேஷ் தலையை சிலிர்த்துக் கொண்டான்.

“ஏன் பாஸ் ஊறுகாய் பாட்டில் மாதிரித் தலையைப் போட்டுக் குலுக்கறீங்க?”

“குழப்பம்!”

“லீனா, சமத்தோல்லியோ? கொஞ்சம் அந்தண்டை போய் நிக்கறீங்களா? ப்ரைவேட்டா ஒரு விஷயம் பேசணும்?”

“நீங்க எது சொன்னாலும் செய்யறேன் வசந்த்!”

“தட்ஸ் த கர்ள்!”

“பாஸ், கிட்ட வாங்க. இந்தப் பெண்ணை ஜாக்கிரதையா பார்த்துக்கணும்”

“ஏன்?”

“அடுத்த பலி லீனாதான்! பட்சி சொல்லுது!”

“நான் வேற மாதிரி நினைச்சேன் வசந்த்! பாக்கி இருக்கிறது இரண்டு பேர். பெரிய கண்ணன், லீனா, ரெண்டு பேர்ல ஒருத்தர்தான் எல்லாத்தையும் நடத்தறாங்க!”

கணேஷ் கண்ணை மூடிக்கொண்டிருந்தான். தலையை ஆட்டினான். “வசந்த்! எல்லாத்தையும், எல்லாத்தையும் கலைச்சுட்டு முதலில் இருந்து ஆடப்போறேன். அங்க நடந்த கொலை, சம்பவங்களையும் ஒண்ணு சேர்த்துப் பார்க்கறதுலேதான் இத்தனை குழப்பம். இத்தனை சிக்கல், ஒவ்வொண்ணாப் பார்க்கலாம். ஒவ்வொண்ணையும் பூராத் தீர்த்துட்டுத்தான் அடுத்ததுக்கு போகணும். முதல் சம்பவம் என்ன சொல்லு?”

“அன்னிக்கு ராத்திரி முதல் முறையா நாம அந்த உருவத்தைப் பார்த்தது!”

tamilpdffree.wordpress.com

“இல்லை, குமாரவியாசன் நம்ம முதல்ல சந்தித்தபோது சொன்ன சம்பவம்!”

“அதுவா! இரண்டு வருஷத்துக்கு முந்தி லீனா செய்த கொலையா?”

“லீனா செய்ததாகச் சொன்ன கொலை! அதை ஏன் நம்பகிட்ட சொன்னார்? நான் வரேன் வஸந்த். போலீஸ்காரங்க தேடிக்கிட்டிருப்பாங்க! அனாவசியத்துக்கு சந்தேகம் வரும். வா லீனா!”

“சரி போய்ட்டு வாங்க! இன்னும் ஒரு நாள்! எப்படியாவது நொண்டிக்கிட்டாவது நான் வந்துர்றேன். ஆனா ராத்திரி அங்கே தங்காதீங்க! மறுபடி கிட்ட வாங்க!”

“என்ன?”

“நீங்க இல்லையே?”

கணேஷ் சிரித்து “நான் உன்னையும் பட்டியல்லே வெச்சிருக்கேன்” என்றான். “நானா! நான் என்ன பண்ண முடியும் பாஸ். இந்த அடிபட்ட உடம்பை வெச்சுகிட்டு. ஒரு நர்ஸைக் கணுக்குப் பண்ண முடியலே. பாஸ் அந்த இடம் வேண்டாம்! அதிலே சாவின் நிழல் படர்ந்திருக்கு”.

‘சரி வாரேன்’

கணேஷ் லீனாவுடன் மறுபடி சென்றபோது அங்கே காவல்துறை மொய்த்திருந்தது. லாபரட்டரி வண்டி வந்திருந்தது. போட்டோக்காரர்கள் கண் சிமிட்டிக் கொண்டிருந்தார்கள். இருபதுக்கும் குறைவின்றி போலீஸ்காரர்கள் தோட்டத்தில் தேடிக் கொண்டிருந்தார்கள். உபரியாக மூன்று வண்டிகள் நின்றன. கணேஷ் சூப்ரண்டிடம் சென்றான்.

“வி ஆர் செக்கிங் ஸார்! வி ஆர் செக்கிங்!” என்று ரேடியோவில் சொல்லிவிட்டுக் கணேஷைப் பார்த்தார்” என்ன? எங்க போய்ட்டீங்க, நீங்கதான் முக்கியமான சாட்சி!”

“வஸந்த் ஆஸ்பத்திரியில் இருக்கான் சார் அவனை...”

“தெரியும், எப்படி இருக்கார்”

“நாளைக்கு எழுந்துருவான். பாடியைப் பார்த்தீங்களா?”

“பார்த்தேன், எடுத்திட்டுப் போய் போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்கூட வந்திருச்சு!

“ஆயுதம் என்னவாம்?”

“தெரியலை. ஆனால் கூர்மையான ஆயுதம்.. ஆக்ஸிபிட்டலை இடது பக்கத்தில் துளைச்சு மூளைக்குள்ள புகுந்து ஸெரிலெல்லாம் ரத்த நாளங்கள் வெண்ட்ரிக்கிள்னு மானாவாரியாக் கிழிச்சிருக்கு. அந்த க்ஷணமே ஆட்டம் க்ளோஸ்”

கணேஷ் எச்சில் விழுங்கினான்.

கொன்னவன் பின்புறத்தில் இருந்து சடார்ன்னு தாக்கியிருக்கலாம்.

“கூர்மையான ஆயுதம்னா பிக் ஆக்ஸ் போலவா?” என்றான் கணேஷ்.

tamilpdffree.wordpress.com

“இருக்கலாம். நீங்க என்ன சொல்றீங்கன்னு புரியுது. பெரிய கண்ணனைக் கேள்வி கேட்டுக்கிட்டிருக்கோம். ஆனா அவன்கிட்ட இருக்கிற பிக்–ஆக்ஸ் சுத்தமாத்தான் இருக்குது. எதுக்கும் பிரிண்ட்ஸ் எடுத்துருக்கோம். முதல்ல நீங்க பார்த்ததை விவரமாக சொல்லுங்க. லீனாவும் உடன் இருந்தாங்களாமே?”

கணேஷ் மாலைச் சம்பவங்களை மறுபடி வருணித்தான்.

“கணேஷ்! இது கூடப் பிசாசு வேலைன்னு ஏற்கனவே கசமுசன்னு கான்ஸ்டபிளுங்களுக்குள்ள பேசிக்கிறாங்க. தேடறதுக்கே பயப்படறாங்க. செருப்பைப் போட்டுக்கடா. கைல எப்போதும் இரும்பை வெச்சுக்கடா! வெளிச்சம் எப்போதும் வேணும்டான்னு, எல்லோருக்கும் உள்ளூர உதைப்பு இருக்கு. என்னால தெளிவாச் சிந்திக்க முடியலை. மரணத்திலே ஒரு அமானுஷ்யமான சக்தி தெரியுது. செங்குத்தா மண்டையிலே வெட்டு!

“சார், நான் ஒண்ணு சொல்றேன். மறுபடியும் நீங்க அந்தச் சம்பவத்தைச் சாதாரண கொலைங்கற அணுகுமுறையிலே விவரியுங்க!”

“அப்படித்தானே செய்துக்கிட்டிருக்கோம்! ஆனா அதிகம் தாக்குப்பிடிக்காதுன்னு தோணுது. ஏற்கனவே ஒரு ஆள் அடிப்பட்டு பாடியைக் காணோம். காத்துலே போயிருச்சு. அடுத்தது இது! ஏகப்பட்ட வதந்தி! பீதி. இருட்டினா எல்லாக் கடைகளையும் அடைச்சுடறானுங்க. நம்ம இன்ஸ்பெக்டர் அகஸ்தியமகாமுனிவர் குருநாடி சாஸ்திரத்தில் மரணக்குறிப்பு படிச்சுக்கிட்டிருக்கார். பக்கத்து கிராமங்களில் திடுதிடுன்னு பரவி இங்க வெச்சுப் பார்த்தேன் அங்க வெச்சுப் பார்த்தேன்னு நூறு வதந்தி. போலீஷ் ஸ்டேஷனண்டை வந்து கதை கதையாச் சொல்றான்வ. எதை நம்பறது. எதை ஒதுக்கறது? தலை சுத்துது”

“எல்லாத்தையும் ஒத்துகிட்டு ஃபாக்ட்ஸ் மட்டும் பார்க்கலாம்”

“ஃபாக்ட்ஸ்னு நீங்க எதைச் சொல்றீங்க? நாம ராத்திரி பார்த்தது என்ன கணேஷ்? ஃபாக்டா, ஃபிக்ஷனா?”

“தெரியலை”

“அன்னிக்கு பாடி மறைஞ்சு போச்சே?அது?”

“தெரியலை”

“இந்தக் கேஸை வெச்சுக்கிட்டு என்ன பண்ணப் போறேன்னு தெரியலை”

“சிக்கல் சார், எனக்குத் தெரிய வந்த சில விஷயங்களை உங்ககிட்ட சொல்லட்டுமா, அதிகப் பிரசங்கித்தனம்னு கோச்சுப்பிங்களா?”

“சேச்சே! உங்கமேலே டிபார்ட்மெண்டில நல்ல ரெஸ்பெக்ட் உண்டு. ராஜேந்திரன் நிறையச் சொல்லியிருக்கார் உங்களைப் பற்றி. என்ன சொல்லுங்க?

“முதல்ல செத்தானே அந்த ஆள். பாடிகூட காணாமற் போயிடுச்சு. அவன் பெயர் சந்திரசேகர்னு இருக்கலாம். ஐ.டி.ஐ சர்டிபிகேட் அல்லது டிப்ளமா பாஸ் செய்த மெக்கானிக் அவன்னு எனக்கு ஒரு தகவல் தெரிந்தது. மைண்ட் யு. இட்ஸ் ஒன்ஸி எ கேஸ்!”

“அட! புதுசா இருக்கே? எப்படிச் சொல்றீங்க?



tamilpdffree.wordpress.com

“குமாரவியாசனுடைய காகிதங்களைக் குடைஞ்சபோது ஒரு விளம்பரம் பார்த்தோம். இந்த ஆளுக்கு அப்பாய்ண்ட்மெண்ட் ஆர்டர் கொடுத்திருக்கிற லெட்டர் பார்த்தோம். அவன் வந்து ஜாயின் பண்ணியிருக்கான்னு வெச்சுக்கிட்டா, எங்கே அவன்?”

“இன்டரஸ்டிங்! என்ன பேர் சொன்னீங்க.”

“சந்திரசேகரன், எலக்ட்ரானிக்ஸ் அல்லது எலக்ட்ரிகல் வேலைகளில் டிப்ளமா அல்லது சர்டிபிகேட்!

“வெரிகுட். அந்த ஆளை ட்ரேஸ் பண்ணிறலாம். மேல?”

கணேஷ் சற்றுத் தயங்கினான். லீனாவின் ‘முதல் கொலை பற்றி இப்போது வேண்டாம்! ஆனால்...

“இன்னொரு விஷயம். நாம அன்னிக்குப் பார்த்த உருவம் விஞ்ஞானப்படி சாத்தியம்னு எனக்குத் தெரிஞ்ச வரைக்கும் தோன்றலை. இருந்தாலும் அந்தச் சாத்தியத்தை ஒரு ஓரத்திலே வெச்சுக்கிடலாம். உங்ககிட்ட போலீஸ் சக்தி இருக்குது. நிறையப் போலீஸ்காரங்க வந்திருக்காங்க. ஒண்ணு செய்யலாம். அவுட்ஹவுஸ் அந்த வீடு, அரச மரத்தடி, தோட்டம் எல்லாத்தையும் துப்புரவா ஒரு இன்ச் விடாம துருவித் தேடிப் பார்க்கணும்’ ஏதாவது எலக்ட்ரிக் கம்பிகள், லவுட் ஸ்பீக்கர் இணைப்புகள் இப்படி இருக்குதான்னு தரோவாப் பார்த்துறலாம்.”

“நல்ல யோசனை, செய்துட்டாப் போறது!”

“பிசாசா? பிசாசு இல்லையான்னு தீர்மானிக்கறதுக்கு முந்தி இதெல்லாம் நிச்சயம் செய்தாக வேண்டும் இல்லையா?”

“நிச்சயம்! சரி, அப்படி ஒண்ணும் அகப்படலைன்னா?”

“அகப்படலைன்னா இதெல்லாம் பிசாசு வேலைதான்!”

“அப்பக்கூட என் தலைவலி ஓயறதில்லையே கணேஷ். நான் என்ன செய்வேன்?”

“கேஸை க்ளீனா க்ளோஸ் பண்ணிடுங்க. அன்–டிடெக்டட் மர்டர்ஸ் எவ்வளவு வைச்சிருக்கீங்க! அவுங்க என்க்வயரி வேணா நடத்தட்டும். நான் வலுவாச் சாட்சி சொல்றேன். என்ன பார்த்தோம், என்ன செஞ்சோம் எல்லாத்தையும் புட்டுப்புட்டு வெச்சுறலாம்”

“வெரிகுட்! நல்ல ஐடியா தாங்க்ஸ் கணேஷ். நான் முதல்ல அந்த சந்திரசேகரனைப் பத்தி விசாரிக்கச் சொல்றேன். நீங்க இங்கதானே இருப்பீங்க. மெட்ராஸ் போயிடாதீங்க!”

“உங்ககிட்ட சொல்லாம நகர மாட்டேன் சார்!”

“நல்லது, தேவைப்படறப்போ கூப்பிட்டு அனுப்பறேன். குட்நைட்!”

“குட்நைட்! லீனா! வா!” என்றான்.

லீனா வராந்தாவில் மூங்கில் நாற்காலியில் வெற்றுப் பார்வையுடன் கண் திறந்து தூங்குபவளைப் போல் உட்கார்ந்திருந்தாள். அவளை உலுக்கி. “வா!” என்றான்.

“எங்கே கணேஷ்?”

tamilpdffree.wordpress.com

“என் ரூமுக்குத்தான்?”

அவள் சற்றுத் தயங்கி அவனுடன் நடந்தாள். என்னதான் அவளுக்குத் தைரியம் சொன்னாலும் அவனுக்குள் குதிரைக் குட்டி உதைத்தது. மயிர்க்கால்களில் ஒரு சின்னச் சிலிர்ப்பு கொப்பளித்தது. லீனா பாதி வழியில் நின்று விட்டாள்.

“என்ன?”

“என் உடமைகள் எல்லாம் அவுட்ஹவுஸில் இருக்கு!”

“பத்திரமா இருக்கும். கவலைப்படாதே!”

“சேஞ்ச் பண்ணிக்க டிரஸ்கூட இல்லை. நீங்க ஷர்ட் தரீங்களா?”

“என் ஷர்ட் உனக்குப் பெரிசா இருக்கும்”

“பரவாயில்லை...”

“உனக்கு என்ன வேணும்! ஸாரியா?”

“நைட் டிரஸ்!”

‘ஆல்ரைட் நான் போய் எடுத்துட்டு வர்றேன். எங்க இருக்கு?”

“என் பெட்டியில. சாக்லேட் கலர் பெட்டி! வார்ட்ரோபிலே இருக்கு. அந்தப் பெட்டியை அப்படியே எடுத்துட்டு வந்துட்டீங்கன்னா சரி! அங்க போகவே எனக்குப் பயமா இருக்கு’

“சரி, அவர்களை அனுமதி கேட்டுப் பார்க்கறேன்” கணேஷ் சூப்ரண்டிடம் மறுபடி சென்று கேட்டான்.

“அலமாரி எல்லாம் ஸீல் வெச்சிருக்காங்கன்னு நினைக்கிறேன். ஒரு நிமிஷம்,” என்று இன்ஸ்பெக்டரைக் கூப்பிட்டார்.

“ப்ரிண்ட்ஸ்க்கு டஸ்ட் பண்ணிட்டோம். பூட்டின பெட்டிகளை இன்னும் திறந்து பார்க்கலை சார்!”

‘பெட்டி பூட்டியிருக்குதா கணேஷ்?’

‘தெரியாது ஸார்!”

“ஆமா ஸார் பூட்டியிருக்கு”

அவர் யோசித்தார். “சரி, உங்க உத்தரவாதத்தின் பேரில் தரேன். என்ன இருக்குதாம் பொட்டியில?”

“லீனாவுடைய சேஞ்ச் ஆஃப் டிரஸ்!”

“சரி, அந்த ஒரு பெட்டியை மட்டும் எடுத்துட்டுப் போங்க. மத்ததைக் கலைக்காதீங்க! என்ன?”

“தாங்ஸ் ஸார்”

tamilpdffree.wordpress.com

கணேஷ் மறுபடி அந்த அவுட்ஹவுஸ் அறைக்குள் நுழைந்தான். தரையெல்லாம் சாக்பீஸ் கோடுகள். விரல்ரேகைக்காக ஒற்றியிருந்த கெமிக்கல்லின் மணம் பரவியிருந்தது. சாமான்கள் சர்வமும் கலைந்திருந்தன. வார்ட்ரோப் கதவுகளின் குறுக்கே காகிதம் ஒட்டியிருந்தது. இன்ஸ்பெக்டர் கொஞ்சம் இருங்க என்று கத்தியால் கீறி அதைத் திறந்து கொடுத்தார்.

மேல் தட்டில் அந்த சாக்லேட் நிறப் பெட்டி இருந்தது சற்று அகலமான பெட்டி.“ இதை மட்டும் எடுத்துட்டுப் போறேன் ஸார்!” என்றான் கணேஷ்.

“ஏதாவது வித்தியாசமா இருந்தா எங்ககிட்ட காட்டிடுங்க!” என்றார் அவர்.

“சரி! எல்லாம் அந்தப் பெண்ணுடைய துணி!” என்றான். வெளியே வந்தான். லீனாவை அழைத்துக் கொண்டு மாடி அறைக்குத் தீர்மானமாக நடந்து விளக்கைப் போட்டான்.

அறையில் மெலிதாக மாற்றங்கள் இருந்ததாகப்பட்டது. அந்தப் புத்தகத்தை அந்த இடத்தில் வைக்கவில்லை. அவன் பெட்டி பத்தடி தள்ளி நகர்த்தப்பட்டிருந்தது.

போலீஸ் அவன் அறையையும் ஒற்றியிக்கிறார்கள்! சூப்ரண்ட் துப்புரவான ஆசாமி.

கணேஷ் அந்தப் பெட்டியை மேஜை மேல் வைத்தான். “பூட்டியிருக்கு” என்றான்.

லீனா தன் கழுத்துக்குள் கை விட்டு சங்கிலி எடுத்து அதில் பின் குத்தியிருந்த சிறிய சாவியை விடுவித்து அவன் பால் எறிந்தாள். “காட்ச்”

கணேஷ் அதைப் பிடித்து அந்தப் பெட்டியை திறந்தான். மேல்வாகாக அதில் ஆரஞ்சு நிறத்தில் ஒரு ஸாரி இருந்ததை கவனித்தான்.

மற்றொன்றையும் கவனித்தான். “பட்டைப்பட்டையா ஒரு நைட்கவுன் இருக்கும். அதை எடுத்துத் தறீங்களா கணேஷ்?”

கணேஷ் அந்த ஸாரியை விலக்கினான்.

நடுவே ஒரு பிக் ஆக்ஸ் இருந்தது. ரத்தக்கறை!

tamilpdffree.wordpress.com

## 22

**லீ**னா, இங்கே வா!” என்றான் கணேஷ் அழுத்தமாக, நிதானமாக, அவள் நகராமல் அங்கிருந்தே “என்ன கணேஷ்?” என்று குழைய நேராக அவளிடம் சென்றான். கையைப் பற்றினான். தரதரவென்று இழுத்து வந்தான். “விடுங்க வலிக்குது!”

“இங்கே பாரு! உன் பெட்டிக்குள்ள பாரு!”

அவள் பார்த்து “என்ன அது?”

“தெரியாது? இது என்ன தெரியாது? ரத்தம் தெரியாது? இந்த ஆயுதம் தெரியாது? பேத்துருவேன் சொல்லு!”

“அய்யய்யோ! என் பொட்டிக்குள்ள இதையெல்லாம் பார் போட்டா?”

கணேஷ் அவள் தோள்கள் இரண்டையும் பற்றிக் குலுக்கினான். “லீனா! பாசாங்கு போதும்! கம் ஆன்! அவுட் வித் இட். உனக்கு ஒண்ணுமே தெரியாதுங்கறே. கதையெல்லாம் காலாவதி ஆயிடுச்சு. சொல்லு உண்மையைச் சொல்லு.”

“நீங்க என்ன கேக்கறிங்கன்னே!...அம்ம...மா!

அவள் கன்னத்தில் அறைந்து விட்டான். உடனே அந்த இடம் வெளுத்து உடனே சிவப்பாகி விரல் முத்திரைகள் தெரிந்தன.

“அடிக்காதீங்க கணேஷ்! எதுக்கு அடிக்கிறீங்க....”

“எத்தனை புளுகு! இது என்ன தெரியுமா? உங்க சித்தப்பா குமாரவியாசனைக் கொன்ன ஆயுதம். இது எப்படி உன் பெட்டியில இருக்கு?”

“தெரியாது தெரியாது தெரியாது!” என்று கத்தினாள். அவன் கால்களைப் பிடித்து கொண்டாள். அழுதாள். அடிப்பட்ட வலியும், பயமும் கலந்து அவள் அழுவதைத் திகைப்புடன் சற்று நேரம் அனுமதித்தான் கணேஷ். அனாவசியத்திற்கு அடித்துவிட்டோம் என்று தன்மேல் வெறுப்பு ஏற்பட்டது. என்னால் கண்டுபிடிக்க முடியாத கையாலாகாத்தனத்தை, ஆத்திரத்தை இவளிடம் காட்டிவிட்டேன்! என்ன சூரன் நான்! சேச்சே!

“ஸாரி லீனா!”

“ஆமாம்! அடிச்சுப்புட்டு என்ன ஸாரி; வலிக்குது!”

“எழுந்திரு!

அவள் எழுந்திருக்கவில்லை. காலைப் பிடித்துக்கொண்டு “கணேஷ்! போலீஸ்கிட்டே சொல்லிடாதீங்க இதை! என் மேலே சந்தேகப்பட்டு ஜெயில்ல புடிச்சுத் தள்ளிடுவாங்க! காட் ப்ராமிஸ். எனக்கு இது பெட்டிக்குள்ள எப்படி வந்ததுன்னு தெரியாது! என்னைக் கைவிட்டுடாதீங்க கணேஷ்! என்னை அடிங்க, பரவாயில்லை. ஆனா போலீஸ்கிட்ட புடிச்சுக் கொடுக்காதீங்க!

“பார் லீனா! இந்த ஆயுதத்தை உன் பெட்டியிலே பார்த்ததைப் போலீஸ்கிட்ட சொல்லியே ஆகணும்” மறுபடி அதைப் பார்த்தான். சற்று சிறிய வலுவான ஆயுதம். ஒரு பக்கம் ரத்தம் தோய்ந்த கூர்மை. ஸாரியெல்லாம் ரத்தம், உறைந்த ரத்தம். தொடாதே! எத்தனையோ விரல் ரேகைகள் அவர்களுக்குக் கிடைக்கும்.

“அய்யய்யோ! போலீஸா? என்ன கணேஷ்!”

‘ஆமாம்! வேற வழியில்லே. இதை இப்ப மறைச்சு வெச்சா பிற்பாடு ஏகப்பட்ட குழப்பம் ஏற்படும். சமாளிக்க முடியாது. நீ ஒண்ணும் செய்யலைதானே?”

“சத்தியமா! சத்தியமா!”

“பின்ன ஏன் பயப்படறே? நான் பார்த்துக்கறேன். ஆனா இந்த முக்கியமான தடயத்தை மறைக்க கூடாது... உன் மேலே சந்தேகப்பட்டு சில கேள்விகள் கேட்கத்தான் செய்வாங்க. அதுக்கெல்லாம் தெளிவா பதில் சொல்லு. தெரியாதுன்னா தெரியாதுன்னு

tamilpdfree.wordpress.com

சொல்லிடு. நீ இதைச் செய்யாதவரை உனக்கு ஒண்ணும் நிகழாது. நான் உத்தரவாதம் தர்றேன்!" அவளைப் பார்த்தான்.

அவள் கையை உதறிக் கொண்டு "எனக்குத்தான் வலிக்கிறது. ஒரே மஸில்!" என்றாள்.

கணேஷ் அவள் கையைப் பற்றி தன் கன்னத்தில் அறைந்து கொண்டான். "இப்பதான் எனக்குச் சமாதானம். இரு!" என்று ஜன்னலருகே சென்றான். எட்டிப் பார்த்தான்.

கீழே தோட்டத்து விளக்குகள் அத்தனையும் எரிந்து கொண்டிருக்கப் போலீஸ் வண்டிகளின் கண்கள் அத்தனையும் விழித்திருக்க... சூப்ரண்டைப் பார்த்தான்.

"ஸார்!" என்று கத்தினான். நிமிர்ந்தார்.

"உடனே இங்கே மேலே வரிங்களா? ஒரு முக்கியமான விஷயம்!"

அவர் வந்ததும் "இதைப் பாருங்கள்!" என்றான்.

"மை காட்! இது எப்படி...?

"பொட்டியைத் திறந்தேன் இருந்தது!"

சூப்ரண்ட் லீனாவைப் பார்த்தார்.

"நான் இல்லை ஸார்!" என்று பயத்துடன் கெஞ்சினாள்.

"இதைத் தொட்டீங்களா?"

"திறந்தேன்! அவ்வளவுதான்"

"பொட்டி பூட்டியிருந்ததா?"

"ஆமாம்! பாட்லாக்கைத் தொட்டிருக்கேன்!"

"ப்ரிண்ட்ஸ் எடுத்துப் பார்த்துறலாம். நாகலிங்கத்தைக் கூப்பிடுய்யா? பெட்டி எங்க இருந்தது...?

"அந்த ரூம் வார்ட்ரோபிலே இருந்து நாங்க எடுத்து வந்த பெட்டி!

"ஏன் ஆழறாங்க?"

"பயம்!"

"பயப்படாதிங்க! உங்களை ஒண்ணும் செஞ்சுற மாட்டோம்!....நாகலிங்கம்! தேடு தேடுன்னு தேடிக்கிட்டிருக்கிங்களே! இங்க இருக்கு ஆயுதம். ரத்தக் கறையோட!"

"அட.. இது கணேஷ் எடுத்துட்டுப் போன பெட்டிலில்லை?"

"ஆமாம்!"

"அதெப்படி இதை மட்டும் தேர்ந்தெடுத்து..."

tamilpdffree.wordpress.com

“கேள்விகளை அப்பறம் வச்சுக்கலாம். லாப் ஆசாமிகளைக் கூட்டிவாங்க! டஸ்ட் பண்ணிறட்டும். கணேஷ் நீங்க வாங்க! லீனா. நீங்களும் வாங்க!

இருவரையும் தனியாக அழைத்துச் சென்று சற்றுத் தள்ளி ஒரு நாற்காலியை இழுத்து “உட்காருங்க!” என்றார்.

“சொல்லுங்க!”

லீனா கணேஷைப் பார்த்தாள்.

கணேஷ் “இந்தப் பெட்டியில அவ ஸாரிகள் இருக்குதுன்னு....” என்று ஆரம்பித்ததைத் தடுத்து “லீனா, நீங்க சொல்லுங்க, என்றார்.

“எனக்குத் தெரியாது.”

“தெரிந்ததைச் சொல்லுங்க!”

“இந்தப் பெட்டி எப்பவும் அங்க இருக்கும். என் துணிகள் இருக்கும். வேணாப் பாருங்க! அதை எடுத்துட்டு வரச் சொன்னேன்! கணேஷ் ஸார் அதைத் திறந்து பார்த்தா... உள்ளே இது இருக்கு!...”

“கொலை செஞ்சது நல்ல உயரமான ஆசாமி. கட்டு மஸ்தான ஆளா இருக்கணும். பின் மண்டையில் அடிச்சு அவ்வளவு பெனிட்ரேஷன் ஏற்ப குத்தறதக்கு உயரம் வேணும். அசாத்திய பலம் வேணும். ஹ்யூமன் ஸ்கல்ங்கறது எவ்வளவு வலுவானதுன்னு உங்களுக்குத் தெரியுமா? குமாரவியாசனுடைய உயரத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தா அந்த ஆளு குறைஞ்ச அளவு அஞ்சடி ஏங்குலமாவது இருக்கணும்! நோ கணேஷ். கேஸ் அவ்வளவு ஸிம்பிள் இல்லை. அந்த பாத்ரூம் அலமாரியில் சில புஸ்தகங்கள். டம்மி வெறும் வெள்ளைத்தாள்! எதற்கு?”

“அந்த அலமாரியைக் காலி பண்ணிட்டு துப்புரவாத் தேடிட்டோம்! ஒண்ணும் பேரலே.”

“ஒண்ணு செய்யலாம் சார் அந்த அலமாரியை இடிச்சுப் பார்த்துருங்க!”

சூப்ரண்ட் புன்னகைத்தார்... “அப்பவே சொல்லிட்டேனே இடிங்கடானுட்டு!... இடிச்சா நீங்க என்ன எதிர்பார்க்கறீங்க?”

“எதை வேணா!”

“என்ன நாகலிங்கம்?”

நாகலிங்கம் மிகுந்த ஜாக்கிரதையுடன் ஒரே ஒரு தலைமுடியை சின்ன ஃபோர்ஸப்ஸ் நுனியில் காட்டினார். ஒட்டிக்கிட்டிருக்கு. கைப்பிடியைத் துடைச்சிருக்காங்க யாரோ! ப்ரிண்ட்டு கிடைக்கலே!”

“சரியாப் போச்சு! ரத்தம் இருக்குதில்லே! இந்த ஆயுதம்தான் கொலை ஆயுதமான்னு கன்ஃபர்ம் பண்ணிடலாம் இல்லையா?”

“முடியும் சார்!”

“கணேஷ், இன்னொன்னு! இந்தக் கடுதாசியைப் பாருங்க. இது உங்களுக்குன்னு நினைக்கிறேன்.”

tamilpdfree.wordpress.com

தன் பையிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்துத் கொடுத்தார். அதில்–

“கணேஷ்! அவசரம் வெங்கடேசுவரனை 6” என்று ஒருவரி எழுதியிருந்தது. காகிதம் ஓரத்தில் கிழித்திருந்ததில் ஒரு அவசர சரக் தெரிந்தது.

“இது எங்க இருந்தது?”

“டெலிபோனுக்கு அடியிலே... வெங்கடேசுவரன் யாரு?”

“தெரியாது ஸார்!”

“இது குமாரவியாசன் கையெழுத்துதான்! அதை வெரிஃபை பண்ணிட்டோம்.”

கணேஷ் அந்தக் கடிதத்தை யோசித்தான். “என்னையும் லீனாவையும் அஞ்சு மணிக்கு சந்திக்க வரச்சொன்னார். அதுக்குள்ள ஏதோ ஒரு ஆபத்தை அவர் எதிர்நோக்கி உடனே அவர் இடத்தை விட்டு விலகவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கணும். எனக்கு ஒரு குறிப்பு எழுத ஆரம்பிச்சிருக்கார்...”

“அதை முடிக்கிறதுக்குள்ளே யாரோ வந்துட்டாங்க அல்லது வர்ற சப்தம் கேட்டுக் காகிதத்தை டெலிபோனுக்கு அடியிலே மறைச்சு வெச்சிருக்கணும்...”

“பாஸிபிள்”

“பெரியகண்ணனை விசாரிச்சுட்டிங்காள?”

“ஆச்சு! அவன் மேலே சந்தேகிக்கும்படியா எதுவும் இல்லை”

வெங்கடேஸ்வரன்! முதல் தடவையா புதுசா ஒரு பேர் கிடைச்சிருக்கு.”

“வெங்கடேஸ்வரனை 6... ! பஸ்லிங்!”

“வெங்கடேஸ்வரனை 6 மணிக்கா?”

“இருக்கலாம். நீங்க யோசிச்சுப் பாருங்க! நான் கீழே போய் நம்ம இடிக்கிற விவகாரம் என்ன ஆச்சுன்னு பார்க்கறேன்!”

அவர் அந்தக் கடிதத்தை வாங்கிக் கொண்டு விலக நாகலிங்கமும் கூட ஒரு கான்ஸ்டபிளும் அந்தப் பெட்டியை ஜாக்கிரதையாக எடுத்துச் செல்ல–

கணேஷ் அயர்ந்து உட்கார்ந்தான், யார் இது? வெங்கடேஸ்வரன்....

“லீனா! வெங்கடேஸ்வரன்னு யாராவது ஒருத்தரைத் தெரியுமா உனக்கு,!”

“ம்**ஹூ**ம் தெரியாது” என்று தலையாட்டினாள். “வாங்க போயிடலாம்”

புதிய கேள்விகள், புதிய குழப்பங்கள். இரவு இங்கே தங்குவதா விலகுவதா என்கிற பிரச்சினை. லீனாவை பார்த்தான். எனக்குத் தெரியாது தெரியாது... இதைத் தவிர இவள் வேறொன்றும் சொல்லவில்லை. சூப்ரெண்டிடம் பேசிக் கொண்டிருந்தபோது ஆவலாக மௌனமாக கேட்டுக் கொண்டிருக்கிறாள்.

tamilpdffree.wordpress.com

இதற்கு வேறு எந்தவித விளக்கமும் இல்லை. எல்லாமே பேய்தான்! என்னை அன்று அடித்தது... அந்த மெக்கானிக்கைக் கொன்றது... வஸந்தை அடித்தது... எல்லாமே அதன் வேலைதான். இங்கு நடந்த அத்தனை காரியங்களும் அமானுஷ்ய ஒலிகளும் உருவங்களும் அதன் செயல்தான். பூட்டியிருந்த பெட்டிக்குள் எப்படி இந்த ஆயுதம் சரணடைய முடியும்? வெட்ட வெளியில் எப்படி ஒரு சாம்பல் உருவம் விரிய முடியும்...நூறு பேர் சிரிப்பது எப்படிக் கேட்க முடியும்...ஒரு முழு உடல் எப்படி மறைய முடியும்.

நான் இதுவரை நம்பி வந்த பௌதிக விதிகள் அத்தனையும் சிதறிவிட்டனவே! வேறு எப்படி இவையெல்லாம் சாத்தியம்? ஆம், பேய் இருக்கிறது. நிச்சயம் இருக்கிறது...

“கணேஷ்!” சூப்ரெண்டின் குரல் தோட்டத்திலிருந்து ஒலித்தது. எட்டிப் பார்த்தான்.

“சீக்கிரம் வாங்க! அலமாரிக்குப் பின்னாலே ஸம்திங் இன்டரஸ்டிங்!” என்றார்.

tamilpdffree.wordpress.com

## 23

**க**ணேஷ் உடனே தன் அறையை விட்டு வெளியே வந்து படியிறங்கி விரைந்தான். “வெயிட் ஃபார் மி!” என்று லீனா பின்னால் ஓடி வந்தாள்.

“நீ வேற!” என்று அலுத்துக் கொண்டான்.

அவுட்ஹவு**ஸு**க்குள் நுழைந்து, எல்லோரும் பாத்ரூமில் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களை விலக்கி உள்ளே சென்றான். பாத்ரூம் அலமாரியைச் சேதப்படுத்தி இருந்தார்கள். அதன் மர ஃப்ரேமை நெம்பி சுத்தமாக வெளியே இழுத்து வைத்திருந்தார்கள். புத்தகங்கள் அத்தனையும் கீழே சிதறியிருந்தன. நீக்கப்பட்ட பகுதியில் சுவரில் தெளிவாக இரண்டு அடி சதுரத்திற்கு ஒன்றரை அடி ஆழத்திற்கு ஒரு பொந்து தெரிந்தது. அலமாரிக்குப் பின் ஒரு ரகசிய பொந்து. அது இரண்டாக பிரிக்கப்பட்டு இரண்டு அறைகளாக இருந்தது. இரண்டும் காலியாக இருந்தது.

“ஸீக்ரட் லாக்கர் மாதிரி! பார்த்தீங்களா?” சூப்ரெண்ட்.

“அது சரி, உள்ளுக்குள்ளே என்ன இருந்தது?”

“நத்திங்! அல்மோஸ்ட் நத்திங்!”

“அல் மோஸ்ட்னா...

“இத பாருங்க ஒரு நோட்டுப் புஸ்தகம், அப்புறம் ஒரே ஒரு நூறு ரூபா நோட்டு! இவ்வளவுதான் இருந்தது”

கணேஷ் அந்த நோட்டுப் புத்தகத்தை வாங்கிப் பார்த்தான். பைண்டு செய்யப்பட்ட சுமார் நூறு பக்க நோட்டு. அதைப் பிரித்தான். வெள்ளைத்தாள்கள். புத்தகத்துக்கு உள்ளே நீண்ட செருகி பத்திரப்படுத்தப்பட்ட கார்ட்ரிட்ஜ் வகை காகிதத்தில் நீண்ட சதுர வடிவத்தில் தனித் தாள்கள், அந்தத் தாள்கள் ஒவ்வொன்றிலும் சீராக செங்குத்தாகக் கோடுகள். கறுப்பு மசியில் வரையப்பட்ட அல்லது அச்சிடப்பட்ட வெறும் கோடுகள். இரண்டு அங்குலம் உயரம் ஒவ்வொன்றும், சில மெலிய கோடுகள். சில பட்டை கோடுகள்.

கணேஷை அந்தக் கோடுகள் கேலி செய்வது போல் தோன்றியது. மற்றொரு அர்த்தமற்ற தடயம், லீனாவின் பெட்டியில் ஆயுதம், விட்டத்தில் காலடிச் சுவடுகள்; காகிதத்தில் வெறும் கோடுகள்... ஒற்றை நோட்டு...”

“நூறு ரூபாய் நோட்டா?”

“புதுநோட்டு கணேஷ், எனக்கு ஒண்ணு தோணுது... இந்த ரகசிய அறையிலே நிறையப்பணம் இருந்து அதை அப்படியே அவசரமாக எடுத்தபோது ஒரே ஒரு நோட்டு மட்டும் உதிர்ந்திருக்கலாம் இல்லையா?”

“சாத்தியம் ஸார். எதுக்கும் ப்ரிண்ட்ஸ் எடுத்துப் பாத்துருவிங்க இல்லை? நம்பர் நோட் பண்ணிகிட்டா பக்கத்திலே பாங்க்கிலே கேட்டுப் பார்க்கலாம்... இந்தக் கோடுகளுக்கு அர்த்தம் என்னன்னுதான்...”

கணேஷ் உடைபட்டிருந்த அந்த அலமாரியை உற்று நோக்கினான். “சேதமாயிடுச்ச. இதிலே ஏதும் சாவித் துவாரம் பார்த்தீங்களா?”

“இல்லை”

“பின்னே எப்படி இந்தப் பின்புறத்துப் பிறைக்குக் கதவு?”

“எனக்கு என்னவோ கதவுன்னு தனியா இருந்திருக்க முடியாது. ஏறக்குறைய பர்மனண்டா அலமாரியை வெச்சு ஸீல் பண்ணி வெச்சிருக்கலாம்னு தோணுது. அலமாரியினுடைய பின் பக்கத்திலே ஏதாவது ப்ளாங்கை ஸ்க்ரூவை விலக்கி திறக்கிற ஏற்பாடா இருக்கலாம்”

கணேஷ் மேலே பார்த்தான், மேல் சுவரில் இன்னும் அந்தக் கால்சுவடுகள் இரண்டும் தெரிந்தன... சற்று சிறிய கால்கள். பெண்ணினுடையதோ? பகீர் என்றது. வெளியே வந்தான். லீனாவின் கால்களைப் பார்த்தான்.

“என்ன அப்படிப் பார்க்கிறீங்க கணேஷ்?”

“ஒண்ணுமில்லை...சூப்ரண்ட் ஸார். எங்க இரண்டு பேர் ஸ்டேட்மெண்டும் இப்பவே வேணுமா!”

“ஆமாம். ஏன்?”

“ரொம்ப டயர்டா இருக்கு. ரொம்பக் குழப்பமா இருக்கு. சுத்தமா எழுதிக் காலையிலே கொடுத்துடறேனே?”

“சரி, நீங்க போங்க! எங்க போவீங்க?”

“உம்... எங்க போறது...? என் அறைக்குப் போய் படுத்தா நிச்சயம் தூக்கம் வராது...மேலும்...

“மறுபடியும் அது வரும்னு எதிர்பார்க்கிறீர்களா? போய் மறுபடி காத்திருந்து பார்க்கலாமா? அரசமரத்தடியில்?”

கணேஷ் தயங்கினான் “மறுபடி அங்கே செல்வதில் என்ன பிரயோஜனம்?”

“பதட்டப்படாதீங்க. நிறைய போலீஸ்காரங்க இருக்கோம். இந்த அம்மாவை வேணா...”

tamilpdffree.wordpress.com

“ம்ஹூம்...நான் மாட்டேன். நான் தனியா இருக்க மாட்டேன்” என்றாள் லீனா.

“பின்னே வாங்க! அரசமரத்தடிக்குப் போய் மற்றொரு முறை பார்த்துறலாம்!”

கணேஷ் யோசித்தான். பார்க்கலாம். இப்போது ஒரே ஒரு வித்தியாசம் சூழ்நிலையில். முன்பெல்லாம் வியாசன் இருந்தார். இன்று அவர் இல்லை. வியாசன்தான் சூத்திரதாரி என்றால் இன்று அது வராது. வியாசனுக்கும் அதற்கும் சம்பந்தமிருக்கிறது என்றால்... இன்று வரக்கூடாது. அதேசமயம் இதைத் திட்டவட்டமாகவும் சொல்லமுடியாது...என்ன ஆகிறது பார்த்துவிடலாம். இத்தனை பேர் இருக்கிறார்கள்.

அத்தனை பேர் இருந்தாலும் அரசமரத்துக்குப் போவது பற்றிப் பேச்சு எழுந்ததும் அவரவர் கழன்று கொள்ள விரும்புவது தெரிந்தது.

“எனக்கு ஆஸ்பத்திரிக்குப் போகச் சொல்லி ட்யூட்டி போட்டிருக்காங்க. கன்னையன் நீ போய்யிட்டு வாய்யா”

“அட, நான் போய்ட்டன்னா இந்த லிஸ்ட்டை யார் எழுதுவாங்க? முடிச்சே ஆகணும்னு எஸ்.ஐ. சொல்லியிருக்கார்”

கணேஷ், “ஸார் ஒரு ஐடியா!” என்றான்.

“என்ன”

“நாம மூணு பேரும் அங்க போகலாம். நான், நீங்க, இன்ஸ்பெக்டர். ஒரு டார்ச்சு எடுத்துக்கலாம்... இங்கே ஒரு ஆளைப்போடுங்க. டார்ச்சு விளக்கை அரச மரத்தடி மண்டபத்திலிருந்து இரண்டுமுறை அணைச்சு ஏத்தினா இங்க மையின் ஸ்விட்சை அணைச்சுறச் சொல்லுங்க!”

“எதுக்கு?”

“அந்தப் பிசாசு வர்றதே! அது நிஜமாகவே பிசாசா அல்லது ஏதாவது மின்சார சம்பந்தப்பட்ட சாதனமான்னு தெரிஞ்சுக்க!”

“முதல்லே அது வரணும்!”

“வரும்னு வெச்சுக்கலாமே”

“சரி, இதுகூட ஐடியாத்தான். மெயின் ஸ்விட்ச் எங்கய்யா இருக்கு?”

அவுட்ஹவுஸில் சுற்றி வந்து தேடிப் பார்த்தார்கள். ஸ்விட்ச் போர்டு எதையும் காணவில்லை. “பெரிய வீட்டிலே இருக்குதோ என்னவோ?”

கணேஷ் “அப்ப ஒண்ணு செய்யலாம். மெயின் ஸ்விட்சை இப்ப தேடவேண்டாம்.. ஏதவாது ஒயர் கிடக்குதா பாருங்க! ப்ளக் பாயிண்ட் எதையாவது ஷார்ட் பண்ணிடச் சொல்லுங்க! மெயின் ஃப்யூஸ் புடுங்கிக்கும்!”

“சரிதான். திரும்ப ஃப்யூஸ் போடறதுக்கு மறுபடி அதே ஸ்விட்ச் போர்டைத் தேடியாகணுமே!”

“என்னய்யா?” என்று இன்ஸ்பெக்டரைப் பார்த்தார்.

tamilpdffree.wordpress.com

“ஏறக்குறைய முடிஞ்ச மாதிரிதான். காலையிலேதான் இனிமே தொடரணும்!

“லீனா, நீ இப்போ எங்க கூட வரவேண்டாம்!”

“அய்யய்யோ!”

“நான் சொல்றதைப் பூரா கேளு. ராத்திரி நாம இங்க தங்கப்போறதில்லையே. நீ போய் ஜீப்ல உட்கார்ந்துக்க. இவங்கள்ளாம் இங்கதான் இருக்கப்போறாங்க என்ன?”

“சரி!” அலுத்துக்கொண்டாள். “சீக்கிரம் வந்துறணும்!”

“என்னய்யா, ஒயர் கிடைச்சுதா?”

“கிடைச்சதுங்க. ஒரு துண்டு டேபிள்லைட்டுக்கு உண்டான ஒபரிலிருந்து வெட்டிக்கிட்டேன்!”

“சபாஷ்! நல்ல ஐடியா. வாங்க கணேஷ் பார்த்துறலாம். அது ஏதாவது எலெக்ட்ரிக் வேலைன்னா தெரிஞ்சுடும். ஃப்யூஸ் போனா நின்னு போயிடும்!”

“சரியா பத்து நிமிஷம் காத்திருந்து பார்க்கலாங்க” என்றார் இன்ஸ்பெக்டர்.

“ஷ்ஷ்ஷ்!”

“என்ன ஸார்” என்றார் சின்னதாக.

“ரயிலுங்க!”

“இல்லை ஐயா. சரியா கவனி!”

கணேஷுக்கும் அது கேட்டு விட்டது. ‘வாங்க அதே. ‘வாங்க’ பழைய ‘வாங்க!’ அப்புறம் அந்தக் கீழ் தொனிச் சிரிப்பு—அப்புறம். புத்திரீவதி... வித்வஜன கோலாகலன்!’ ஆம். இது தான் சமயம் எடு டார்ச்சை...

கணேஷ் டார்ச் விளக்கை அவுட்ஹவுஸ் பக்கம் நீட்டிக்காட்டி இரண்டு முறை ஏற்றி அணைத்தான்.

ஒரு செகண்டு, இரண்டு செகண்டு மூன்று. இன்னேரம் மின்சாரத்தை அவர்கள் ஷார்ட் செய்து வெட்டியிருக்க வேண்டும். கணேஷ் அவுட்ஹவுஸின் ஜன்னல்களைப் பார்த்தான். ஆம்! மின் விளக்குகள் அத்தனையும் அணைந்து போயின! இரட்டை இரட்டைப் பேய்க் கண்களாக போலீஸ் வண்டிகளின் ஹெட்லைட் வெளிச்சம் மட்டும் பாக்கியிருந்தது.

இப்போது?

கணேஷ் அரச மரத்தை நிமிர்ந்து பார்த்தான்....

அந்தச் சப்தங்கள் தொடர்ந்து ஒலித்தன..

‘புத்ரவதி வித்வஜன கோலாகலன்’

tamilpdffree.wordpress.com

அதோ அந்த உருவம் வெளிர் சாம்பல் உருவம். லீனாவைப் போன்ற உருவம். அதோ அவள் அழுகிறாள்... அவள் பின் வாங்குகிறாள். உயர்கிறாள்... மரத்தின் கிளைகள் வரை உயர்ந்த வீல் என்று சப்தம்!

பயந்த பறவைகள் சிறகடித்து சிதற–மௌன!

கணேஷ் நிஜமாக நடுங்கினான். இது மின்சாரமல்ல! விஞ்ஞானமல்ல! நிஜப்பிசாசு! அவனுக்குள் ஒரு பொந்துவிழுந்தது போல் உணர்ந்தான்! கடவுளே என்ன இதெல்லாம்? எங்கே இதற்கு வியாக்யானம்? எல்லாமே பேய் அரசாட்சியா? அவர்கள் சொன்னதெல்லாம் நம்பினதெல்லாம் நிஜமா! நிஜம்தான்! எத்தனைமுறை இதைப் பார்த்தாகிவிட்டது. அடிபட்டாகிவிட்டது! புலனறிவுக்குள் அகப்படாத எத்தனை விஷயங்களைப் பார்த்தாகிவிட்டது. இன்னும் எப்படி சந்தேகம் இருக்கமுடியும்? இது பேய்தான். குடும்பத்தினரைத் தீர்க்க வந்த பேய்தான்! லீனா! லீனாதான் அடுத்த பலி. ஓடு! அவளைக் காப்பாற்று. அதுதான் உன் அடுத்த வேலை. இந்த விஞ்ஞானப் பரிசோதனைகள் அல்ல.

“வாங்க ஸார் போயிறலாம்!”

சரக் சரக்கென்று அவர்கள் விரைவாகத் திரும்பும் போது சூப்ரண்ட் “என்ன ஆச்சு உங்க தியரி?” என்றார்...

கணேஷ் எதுவும் பேசவில்லை. மௌனமாக நடந்தான்.

“உண்மையைச் சொல்றேன் கணேஷ். எனக்கே கொஞ்சம் சிலிர்த்துத்தான் போயிருச்சு! நான் இந்த மாதிரி சப்தத்தை என் ஜன்மத்திலே கேட்டதில்லை. நரம்பு எலும்பெல்லாம் ஊடுருவிச்சு! ஸம்திங் ஸினிஸ்டர்! ஸம்திங் வெரி...வெரி...ஸினிஸ்டர்!”

டவுனுக்கு வெளிப்புறமாக இருந்த பிடப்ளியுடி இன்ஸ்பெக்ஷன் பங்களாவில் அன்றிரவை அவர்கள் கழிக்க சூப்ரண்ட் ஏற்பாடு செய்து தந்தார். கணேஷுக்கு வசந்த்தை இப்போதே போய் பார்க்கவேண்டும் போலிருந்தது. வேண்டாம் அதிகாலையில் பார்த்துக் கொள்ளலாம் என்று தீர்மானித்தான்.

நிர்வாணமாகத் தொங்கிய பல்பின் வெளிச்சத்தை மின் விசிறி வெட்ட வெட்ட கணேஷின் மூடிய கண்களுக்குள் பிம்பங்கள் தடைபட்டன. தூக்கமா, நினைவுகளின் விளிம்பா என்று சொல்லமுடியாத நிலையில் கனவு கண்டான்.

வத்வஜன கோலாகலா வா! என்னை முத்தமிடு. அந்த முகம் அவன் முகத்துடன் ஒட்டிக்கொள்ள பிரம்மாண்டமான நீல நிற ஸஹாராக்களாக இரண்டு உதடுகள் பிரிந்து ஒரு நாக்கு வெளியே வந்து அதன் ஈரம் அவன் முகத்தில் படிய, திடுக்கிட்டு விழித்தான். கண்ணைக் கசக்கிக் கொண்டான். உடலெல்லாம் வியர்த்திருந்தது. மேலே இன்னும் அந்த மின்விசிறியின் தடக்தடக் கேட்டுக்கொண்டிருந்தது. எதிரே கட்டிலில் லீனா படுத்....

லீனா எங்கே?

கட்டில் காலியாக இருந்தது! குபுக் என்று நூற்றைம்பது சதவிகிதம் விழித்துக் கொண்டு விட்டான். பாத்ரூம் போயிருக்கிறாளா? “லீனா!” என்று கூப்பிட்டான். பதில் இல்லை. வாயிற்புறத்துக் கதவைப் பார்த்தான். திறந்திருந்தது. உள்பக்கம் தாளிடப்பட்டிருந்ததை யார் திறந்தார்கள்?

tamilpdffree.wordpress.com

நீண்ட வராந்தா காலியாக இருந்தது. பேச்சுக்குரல் கேட்டது. கணேஷ் மெதுவாக சப்தமில்லாமல் குரலை நோக்கிச் சென்றான்.

லீனா சன்னமான அடிக்குரலில் பேசிக்கொண்டிருந்தாள்.

“அப்புறம் என்ன செஞ்சாங்க. மூணுபேரும் என்னை விட்டுட்டு அரசமரத்தடிக்குப் போனாங்க. மறுமுறை பிசாசு வர்றதான்னு பார்க்கறதுக்கு...?” லீனா சிரிப்பது கேட்டது.

கணேஷ் இன்னும் அருகே சென்று மூலை திரும்பினான்.

## 24

யாருடன் பேசுகிறாள்? இல்லை தனக்குத் தானேயா? புரியாமல் கணேஷ் காரிடாரின் மூலையை நோக்கிப் பைய நடந்தான்.

“அப்புறம் அந்த ஆயுதம் எப்படி என் பெட்டியிலே...” கணேஷ் அருகே வந்துவிட்டான். மூலை திரும்பினான். “வந்திருக்க முடியும்னு தெரியவே இல்லை வஸந்த். பயந்தே போய்ட்டேன்.”

அடப்பாவி! வஸந்த் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு காலை ஆகாசத்தில் நீட்டிக் கொண்டிருந்தான். அருகே லீனா நின்று கொண்டிருந்தாள்.

“ஏய் வஸந்த்! இங்கே எங்கடா வந்தே!”

திடுக்கிட்டுத் திரும்பினவன். “என்ன பாஸ் இது? ஏற்கெனவே ஹார்ட் ஃபிப்ரிலேட் ஆய்ட்டிருக்குது. பயங்காட்டறீங்களே?”

“ஏண்டா ஆஸ்பத்திரியை விட்டுட்டு வந்தே?”

“பாஸ், நான் இல்லாதபோது ஒரே மர்மமா நடந்திருக்காப்பல இருக்கே. இது என்ன கோடாலி, ரத்தம். அப்புறம் என்னத்தையோ இடிச்சாங்களாம்.”

“ரொம்ப ரொம்பக் குழப்பம். காலையிலே சொல்றேன்!”

“காலைலயா? என்ன இப்ப மணி? அஞ்சரை! கொக்கரகோக்கோ”

கணேஷ் உள்ளே வந்து முகம் கழுவிப் பல் தேய்க்க வஸந்த் விந்தி நடந்து வந்து அருகில் நின்றான்.

“உட்காரு நடந்ததைச் சொல்றேன்”

சொன்னான். வியாசன் கணேஷுக்கு எழுதியிருந்த அவசர அரைகுறைக் கடிதம், அதன் “வெங்கடேஸ்வரனை 6..................” லீனாவின் பெட்டி விவகாரம், புத்தக அலமாரிக்குப் பின் ரகசிய அறை. வெள்ளைத்தாள்களில் கோடுகள். ஒரே ஒரு நூறு ரூபாய் நோட்டு. அந்த உருவத்தை மறுபடி பார்க்கச் சென்றது. மின்சாரம் தடைபட்ட பின்னும் தொடர்ந்து அந்த உருவம் தெரிந்தது...

tamilpdffree.wordpress.com

“ஹோல்டான்! எனக்கு இப்பவே மயிரைப் பிச்சுக்கணும்போல் இருக்கு” என்றான் வஸந்த்.

“அவ்வளவுதான்!”

“போதாதா? முதல்ல ஒவ்வொண்ணாப் பார்க்கலாம். ஒன் திங் அட் எ டைம்னு கோவலன் கண்ணகி கிட்ட சிலம்பை வாங்கிக்கறதுக்கு முன்னாடி சொன்னாப்பல. முதல்ல என்ன? வெங்கடேஸ்வரனை 6. வியாசன் கடுதாசி…”

“அவரை ஆறு மணிக்கு சந்திக்கணும்னு எழுத நினைச்சு பாதியிலே கடுதாசி தடைபட்டுப் போயிருக்கலாம்னு யோசிச்சேன்”

“கில்லாடி நீங்க! அல்லது கொஞ்சம் லாட்டரல் திங்கிங்?”

“வெங்கடேஸ்வரனை 6 புள்ளி புள்ளி புள்ளின்னு ஒரு டெலிபோன் நம்பர்ல காண்டக்ட் பண்ணுங்கன்னு எழுத நினைச்சிருக்கலாம் இல்லையா?”

“மெட்றாஸ் டெலிபோன் டைரக்டரியிலே இருக்கிற அத்தனை வெங்கடேஸ்வரனுக்கும் அவன் டெலிபோன் நம்பர் 6ல ஆரம்பிச்சா…டிர்ரிங்! அடுத்தது என்ன?”

“ஆயுதம்! அதை லீனாவின் பெட்டிக்குள்ளே வெச்சு சந்தேகத்தை அவ பேர்ல ஏற்பட வைக்கிற பிரயத்தனமாக இருக்கலாம்”

“இருக்கலாம்! பெட்டி பூட்டியிருந்ததா?”

“ஆமாம்”

“எனக்குப் பிசாசு தியரியிலே நம்பிக்கை வந்திருச்சு!”

மூவரும் போலீஸ் நிலையத்திற்குப் புறப்பட்டார்கள்! “பாஸ், இங்க இருந்து எவ்வளவு சீக்கிரம் கிளம்ப முடியுமோ கிளம்பி மெட்றாஸ் போகணும். எனக்கு சில புஸ்தகங்கள் பார்க்கணும். சில தகவல்கள் சேர்க்கணும். அந்த பி.கே.கிருஷ்ணமூர்த்தியை மறுபடி பார்க்கணும். என்னைப் போலீஸ்ல விடுவாங்களா?”

“கேட்டுப் பார்க்கலாம்”

போலீஸ் நிலையத்தில் வாசலில் ஏழெட்டுப் பேர் நின்று கொண்டிருந்தார்கள். சூப்ரண்ட் டெலிபோனில் பேசிக் கொண்டிருக்க சர்க்கிள் இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர், கான்ஸ்டபிள்கள் சுற்றிலும் சூழ்ந்திருந்தனர்.

“என்ன கணேஷ்! வந்திங்களா? ஸ்டேட்மெண்ட் ரெடியா?”

“இதோ இப்ப எழுதிக் கொடுக்கறேன் ஸார்….”

“அதோடு லீனாவுடைய ஸ்டேட்மெண்ட்டும் வேணும்!”

“அதுவும் தரேன் ஸார். வேற ஏதாவது கிடைச்சுதா?”

“முக்கியமா ஒண்ணும் இல்லை. டாக்டர் கிட்டே அந்த ஆயுதத்தை காட்டினதிலே கொலை ஆயுதம் இதாத்தான் இருக்கணும்னு சொன்னார்.”

tamilpdfree.wordpress.com

"சரி நீங்க அதே ரூம்ல போய் உட்கார்ந்துகிட்டு நிதானமா எழுதிக் கொடுங்க. ஸி.ஐ.டி. டிபார்ட்மெண்டில இருந்து ஸ்பெஷலா ஆபீசர்ங்க ரெண்டு பேர் வராங்க! அவங்க வர்றவரைக்கும் இருந்து பதில் சொல்லிட்டுப் போங்க!"

கணேஷ் லீனாவை அழைத்துக் கொண்டு அறைக்குள் சென்றான். டிபார்ட்மெண்டின் பழுப்புக் காகிதத்தில் தெளிவாக எழுத ஆரம்பித்தான்.

"நான் ஜே. கணேஷ், வயது...."

"லீனாவுக்கு உண்டான ஸ்டேட்மெண்டை நான் வேணாக்கூட உட்கார்ந்துகிட்டு டிராஃப்ட் பண்ணிக் கொடுக்கட்டுமா?...உங்களுக்கு எதுக்குத் தொந்தரவு. வெளில போய்ப் பொடி நடையா கார்ல உட்கார்ந்துட்டுச் செய்துடறோமே!"

"தொலை!"

"வா லீனா!"

அவர்கள் சென்றதும் சூப்ரண்ட் உள்ளே வந்து. "என்ன கணேஷ்! எழுதியாச்சா?" என்றார்.

"ஏறக்குறைய முடிஞ்சமாதிரிதான்!"

"நீங்க சொன்னாப்பல தோட்டம் பூரா எலக்ட்ரிக் ஒயர்கள். லவுட்ஸ்பீக்கர்கள் ஏதாவது மறைஞ்சிருக்கான்னு துப்புரவாத் தேடிப் பார்த்துட்டோம்... ம்ஹூம் கிடைக்கலை"

"மண்டபத்திலே?

"ம்ஹூம் அங்கேயும் இல்லை. கல்லைப் பிரிச்சு கல்லுக்குள் ஏதாவது ஒட்ட வெச்சிருந்தாத்தான் உண்டு. எனக்கு என்னவோ அப்படி ஏதும் இருக்கறதாத் தெரியலை... அரசமரத்தைப் பாதியா வெட்டறதைத் தவிர பாக்கி எல்லாம் செஞ்சாச்சு! ம்ஹூம். எங்கே உங்க சிஷ்யப்பிள்ளை."

"வெளியே கார்ல இருக்கான் ஸார்! அந்தப் பெண்ணோட ஸ்டேட்மெண்ட்டு எடுத்துக்கிட்டிருக்கான்"

"ஏன் கணேஷ், அந்தப் பொண்ணுதானே சொத்துக்கு வாரிசு!"

"ஆமாம் ஸார்"

"சொத்துக்கு ஆசைப்பட்டு யாராவது செய்யறாங்களா?"

"சொத்துக்கு ஆசைப்பட வேண்டிய ஒரே ஆள் குமாரவியாசன் சார்!"

"அவர்தான் போயிட்டாரே!" என்றார். தொடர்ந்து "அல்லது இப்படி வெச்சுப் பார்க்கலாம்! ரெண்டு கோஷ்டி. ரெண்டு கட்சி! ஒண்ணு லீனா கட்சி. மத்தது குமாரவியாசன். இரண்டு பேருக்கும் ஏற்பட்ட பலப் பரீட்சைதான் நடந்த தினத்து சம்பவங்கள் எல்லாம்... மாஃபியா க்ரூப் வார் மாதிரின்னு வெச்சுக்கங்களேன். இந்தப் போராட்டத்தில் இப்ப லீனாவின் கட்சி வெற்றி பெற்றிருக்குது!...."

கணேஷ் புன்னகையுடன் "ஃபாஸினேட்டிங்!"

tamilpdffree.wordpress.com

“லீனா உங்க கிளையண்ட்தான். பார்க்கிறதுக்கு பொம்மை மாதிரி ஒண்ணுமே தெரியாத பாப்பா மாதிரித்தான் இருக்குது... இருந்தாலும் இந்த அறியாத்தனத்துக்கு பின்னால ஏதாவது மறைஞ்சிருக்கலாம். ஒரு இயக்கமே இருக்கலாம். நீங்க புத்திசாலி! அந்த மாதிரி இருந்தா உங்களை அவளால அதிக தினம் ஏமாத்த முடியாது. தற்போதைக்கு லீனாவை சம்பந்தப்படுத்தறதுக்கு ஆதாரம் சரியா இல்லை. ஆனா நீங்க ஏதாவது புதுசாக் கண்டுபிடிச்சிங்கன்னா அதை எங்களுக்குத் தெரிவிக்கிறது....”

“என் கடமை ஸார்! நிச்சயம். ராத்திரி அவ பெட்டியிலே அந்த ஆயுதத்தைப் பார்த்த உடனே உங்ககிட்ட சொன்னேனில்லையா! அதைப்போல!”

“சரி, என்ன பண்றதா உத்தேசம்?”

“ஸி.ஐ.டி. ஆபிசர்ங்க வர்றதுக்கு காத்திருக்கணுமா? மெட்றாஸ் அவசரமா போகணும்!”

“அவுங்க நாளைக்குத்தான் வராங்க. நீங்க போங்க. வேணும்னா தகவல் சொல்லி அனுப்பறேன்!”

கணேஷ் ஸ்டேட்மெண்ட் காகிதத்தை அவரிடம் கொடுத்துவிட்டு நிலையத்துக்கு வெளியே வந்தான்.

வஸந்த் தனியாக நின்று கொண்டிருந்தான்.

“லீனா எங்கே வஸந்த்?”

“தெரியலை பாஸ்?”

“என்னது, தெரியலையா?”

“ரெண்டு பேரும் கார்ல உட்கார்ந்திருந்தமா? சின்னதா ஒரு பாத்ரூம் போய்ட்டு வந்துர்றேன்னு இறங்கி வந்தேன். திரும்பி வந்து பார்க்கறேன்! லீனாவையும் காணோம். காரையும் காணோம்!”

“வஸந்த்! காரியத்தைக் கெடுத்துட்டே!” என்றான் கணேஷ்.

tamilpdfree.wordpress.com

## 25

“அவளைத் தனியா அனுப்பினது மடத்தனம். அவளைப் பாதுகாக்க வேண்டிய கடமை இருக்கு நமக்கு”

“நம்ம கார்கிட்ட ஒருத்தன் கை வெச்சுக்க முடியாதபடி மாஃபியா ஸ்டாஃப் கார்னு ஒரு ஸ்டிக்கர் ஒட்டிறப் போறேன். இதோ வர்றா!”

லீனா அமெச்சூர்தனத்துடன் அந்த ஃபியட்டை ஓட்டி கொண்டு வந்தாள். டாஷ் போர்டைப் பார்த்துக்கொண்டே ஓட்டி வந்து தத்தித் தடுமாறி குபுக் என்று குலுங்கி நிறுத்தினாள். இன்ஜின் தானே அணைந்து கொண்டது.

"ஏய்! எங்க போயிட்டே! அண்ணா ரொம்பக் கோவிச்சுட்டார் தெரியுமா? என்ன அப்படிப் பாழாப்போற அவசரம்?"

"எனக்கு ஒரு பொருள் தேவையா இருந்தது....வாங்கிட்டு வரலாம்னு போனேன்"

"என்ன வேணும் உனக்கு? நான் வாங்கிட்டு வரமாட்டேனா!" என்றான் வஸந்த்.

"ஸானிடரி டவல்!"

"சரிதான், நான் அம்பேல், நெப்பூர்லே கிடைக்காது"

"லீனா, இன்னி ராத்திரி மெட்றாஸ் திரும்பறம் நாம். மெட்ராஸ்ல எங்கு தங்குவே?"

"எங்க காலேஜ் ஹாஸ்டலுக்குத்தான் போகணும்"

"எனக்கு நீ தனியா தங்கறது உசிதமாப் படலை" என்றான் கணேஷ்.

"நான் தீபக்கை வரவழைச்சுக்கறேனே!"

"ஹாஸ்டலுக்கா? விடுவாளா?"

"ஹாஸ்டலுக்கில்லை? தனி ரூமுக்கு"

"வயசுப் பொண்ணு வயசு ஆம்பிளை. என்ன தான் நீ கட்டுப்பாடா இருந்தாலும் பருவம்னு ஒண்ணு இருக்கு பாரு!"

"நான் ஒரு ஏற்பாடு யோசிக்கிறேன். லீனா, எஸ்டேட் உன் பேரிலே வந்தப்புறம் என்ன செய்யறதா உத்தேசம்?"

"வித்துடுங்க"

"விற்க முடியாது!"

"குத்தகை மாதிரி யாருக்காவது கொடுத்துறலாம். சித்தப்பா கூட ஒருமுறை கேட்டார். சொத்து உன் கைக்கு வந்தப்புறம் லீ**ஸு**க்கு விட விருப்பம்னா பாம்பேல ஒரு பார்ட்டி தயாரா இருக்குன்னு"

"இப்ப ஒருத்தரும் லீஸ் எடுக்க மாட்டான். பேயடிச்சு ஆள் க்ளோஸ் ஆயிடுவான்."

"நான் உங்க பேர்ல அது என்ன சொல்லுவாங்க... அது எழுதிக் கொடுத்துடறேனே?"

"பவர் ஆஃப் அட்டானி"

"ஆமாம், நீங்க எப்படியோ டிஸ்போஸ் பண்ணிடுங்க"

"பார்க்கலாம்"

"கணேஷ், கொஞ்சம் உள்ளே வர்றீங்களா?" என்று இன்ஸ்பெக்டர் வந்து கூப்பிட வஸந்த், லீனா இருவரையும் பார்த்து "நீங்களும் வாங்க" என்றார்.

tamilpdffree.wordpress.com

உள்ளே புதிதாக வந்த சென்னை போலீஸ் அதிகாரிகள் சிந்தனையுடன் உட்கார்ந்திருந்தார்கள். ஒருவர் கணேஷை அடையாளம் கண்டுகொண்டு "எப்படி இருக்கீங்க" என்றார்.

"சரியான குழப்பத்திலே" என்று சிரித்தான்.

'நீங்க இங்க எப்படி வந்து மாட்டிக்கினீங்க?"

'போறாத காலம்".

'இதுதான் உங்க கிளையண்ட்டா? அப்படி ஒண்ணும் போறாத காலமாகத் தெரியலியே? ஷீ இஸ் சார்மின்."

"புதுசா ஏதாவது தடயம் அகப்பட்டுதா ஷண்முக சுந்தரம்?" என்றான் கணேஷ்.

"ஒண்ணே ஒண்ணு முக்கியமாப் படுது. அரசமர மண்டபத்துக்குப் பக்கத்திலே சில காலடிச்சுவடுகள் ஈர நிலத்திலே அழகாப் பதிஞ்சு காஞ்சு போயிருக்கு. ஃபாசில் முத்திரை மாதிரி"

"அதில ஏதாவது விசேஷமா?"

"ஜோடி ஜோடியா காலடிகள். இடதுகால் சுவடு நேரா இருக்கு! வலது ஒரு கோணத்தில திருப்பி இருக்கு."

"எல்லாத்திலேயுமா?"

"ஆமாம். என்ன அர்த்தம் சொல்லுங்க?"

வஸந்த், " அந்தக் காலடிகளுக்கு உரியவர் கொஞ்சம் ஜபேட்டுன்னு நினைக்கிறேன்"

"ஜபேட்டுன்னா?"

"ஒரு காலைவிட இன்னொரு கால் நீளமா இருந்தா இந்த மாதிரி அடிச்சுவடுகள் பதியும். கவனிச்சுப் பார்த்தா நல்ல கால் அடி கொஞ்சம் அழுத்தமா பதிஞ்சிருக்குமே!"

"சரிதான். பரவாயில்லை உங்கள் ஜூனியர்"

"கணேஷ், உங்களைப் பெரியவர் ஏதோ விசாரிக்கணுமாம்!" என்றார் நாகலிங்கம்.

கணேஷ் எழுந்து மற்றொரு அறைக்குச் சென்றான்.

"வாங்க கணேஷ்!"

"அட! ராசேந்திரன், நீங்க எப்படி?"

"டிபார்ட்மெண்ட் மாறிட்டேன் இப்ப. ப்யூர் அண்ட் ஸம்பிள் க்ரைம் அண்ட் டிடெக்ஷன். ஸி.ஐ.டியில் இருக்கேன். என்னது எல்லாரும் சேர்ந்து பிசாசு விடறீங்க? நீங்க கூடப் பார்த்தீங்களாம்?"

"ஆமா ஸார்"

tamilpdffree.wordpress.com

"அது பிசாசுதானா?"

"ஆமாம்."

"பிசாசுன்னா உங்க அகராதியிலே என்ன கணேஷ்?"

"உருவெளித் தோற்றம்".

"இப்ப மட்டும் புரியுதா?"

"இல்லே ராஜேந்திரன். எனக்கும் புரியலே. நான் பார்த்த உருவத்தை என்னால துல்லியமா வர்ணிக்க முடியும். ஆனா அது என்ன என்கிறதை அனுமானிக்க முடியலை. நம்முடைய கண்ல இருக்கிற ரெட்டினாவில எப்படி ஒரு உருவம் ஏற்படறது? அதுக்கு பௌதிக விதிகள் இருக்கு. ஒரு காட்சியை அமைக்கிறதுக்கு ஒளி வேணும். புரொஜக்ட் பண்ண சாதனங்கள் வேணும். ஷட்டர் லென்ஸ், இப்படி நமக்குத் தெரிஞ்ச விஞ்ஞான சமாச்சாரங்கள் ஏதாவது வேணும். இந்த மாதிரி சாதனங்களே இல்லாதபடி வெட்ட வெளியிலே தெரியற உருவத்தை என்னன்னு சொல்விங்க?"

"சாதனங்கள் இல்லைங்கறது ஊர்ஜிதமாயிடுச்சா?"

"உங்களோட ஆளுங்க துப்புரவாத்தான் தேடியிருக்காங்க"

"புரட்டி எடுத்துட்டோம் ஸார்" என்றார் நாகலிங்கம்.

"தின வாழ்க்கையுடைய லாஜிக்குக்கு ஒத்து வராது பல விஷயங்கள் இங்க நடந்து போச்சு".

"ஆனா எங்க போலீஸ் முறைகளில இந்த மாதிரி அக்கல்ட் ஸூப்பர் நேச்சுரல் எதுக்கும் இடம் கிடையாது. கோர்ட்டில கொண்டு பிசாசை நிறுத்த முடியுமா சொல்லுங்க?"

"உங்க சங்கடம் எனக்குப் புரியுது. ராத்திரி நாங்க திரும்பி மெட்றாஸ் போறோம். நீங்க எப்ப வேணும்னாலும் எங்களைத் திருப்பி அழைக்கலாம். விசாரிக்கலாம். நானும் கேஸை விடப்போவதில்லை. அப்ப உங்க உதவியும் தேவையா இருக்கும் எனக்கு"

"தாராளமா புதுசா ஏதாவது தெரிஞ்சுதுன்னா சொல்லுங்க"

"ராஜேந்திரன்! நீங்க அந்தப் பிசாசைப் பார்க்க வேண்டாமா? ராத்திரி போனிங்கன்னா தெரியும்!"

ஏறக்குறையப் பதின்மூன்று தினங்களுக்கு அப்புறம் மறுபடி சென்னைக்கு வருவதில் உற்சாகம் இருந்தது. தனியான வீட்டிலும் இருட்டிலும் வினோத மூலைகளிலும் சப்தங்களிலும் சம்பவங்களில் எந்த நிமிஷமும் எதுவும் நிகழக்கூடிய அந்த பயவாரத்திலிருந்து விடுபட்டு சென்னையின் சதா சந்தடியை நெருங்கிய பொழுது ஆறுதல் இருந்தது. வஸந்த் கார் ஓட்ட கணேஷ் அருகில் அமர்ந்திருக்க லீனா பின் ஸீட் தூக்கத்தில் சாய்ந்திருந்தாள்...

"இவளை என்னடா செய்ய."

"ஆபீஸ்லயே வைச்சுக்கலாமா? கைத்தாங்கலா ஒத்தாசையா."

tamilpdffree.wordpress.com

“உளறாதே, தீபக்குக்கு போன் செய்துறலாம். அவன்தானே நம்மை முதல்லே அனுப்பிச்சதே! அவன் ஏற்பாடு பண்ணட்டுமே!”

“இன்னிக்கு ராத்திரி நம்ம ரூம்ல படுத்திருக்கட்டும் பாஸ், நாளைக்குக் காலைலே அதை யோசிக்கலாம்.”

“சரி”

“ரூமுக்குப் போய்ச் சேர்ந்ததும் உடனே, ‘வெங்கடேஸ்வரன்!” அதை முதல்லே பார்.”

“அப்புறம் நாளைக்கு அந்தக் கிருஷ்ணமூர்த்தியைக் கூட ஒரு நடை போய்ப் பார்த்துட்டு வந்துடறேன், பாஸ்.”

கணேஷ் சோபாவை சுத்தம் செய்து தட்டிக்கொட்டி “இதிலே படுத்துக்க லீனா” என்றான்.

வஸந்த் டெலிபோன் டைரக்டரியைக் புரட்டி வெங்கடேஸ்வரன் பக்கத்தைத் தேடினான்.

“ஆறிலே ஆரம்பிக்கிற ஒவ்வொருத்தருக்கா போன் செய்!”

முதல் எண்ணைச் சுழற்றினான்.

“‘ஹலோ! மிஸ்டர் வெங்கடேஸ்வரன் இருக்காரா?”

“நீங்க யார் பேசறது?” என்றது பெண் குரல்.

‘நான் அவர் டெல்லி ஃப்ரண்டு, குமாரவியாசன்னு...”

“குமாரவியாசன்னு எங்களுக்கு ஒருத்தரும் ஃப்ரண்டு இல்லையே?”

“உங்களுக்கு தெரியாம அவருக்கு இருக்கலாம்...”

“எனக்குத் தெரியாம அவர் ஒரு காரியமும் செய்யமாட்டார்” என்றாள் அந்த அம்மாள் அழுத்தமாக. “பாத்ரூம் கூட போகமாட்டாரா? யு ஆர் லக்கி” என்று வைத்தான்.

வஸந்த் முயன்ற எட்டாவது வெங்கடேஸ்வரன், “குமாரவியாசனா? மெட்றாஸ் வந்திருக்காரா?” என்றார்.

வஸந்த் ‘ஷ்ய்’ என்று விசிலடித்து, “ஸார், உங்களைத்தான் தேடிட்டுருக்கோம்!” என்றான்.

“நீங்க யாரு?”

“என் பேர் வஸந்த், பிரபல கணே**ஷு**டைய பிரபல சிஷ்யன், எப்பச் சந்திக்கலாம்”

“வியாசன் சொன்னாரா?”

“ஆமாம் டைரக்டரியிலே இருக்கிற அட்ரஸ்லே வந்து உங்களைச் சந்திக்கலாமா?

“வியாசன் சொல்லலையா?”

“சொல்லலை. போய்ட்டார் சொல்றதுக்குள்ள.”

“எப்ப திரும்பி வருவார்?”

tamilpdffree.wordpress.com

“தெரியாது சார். திரும்பி வந்தாலும் வரலாம் லேட்டா போனார்,”

“புரியலை!”

“யூ ஸி ஸார்.. குமாரவியாசன் இறைவன் திருவடி, நிழல் எய்திவிட்டார்”

“என்னது?,

“போய்ட்டார் ஸார்: ஹீ வாஸ் மர்டர்ட்!”

“அப்படியா? நீங்க உடனே வரமுடியுமா வீட்டுக்கு?”

“அதைவிட எனக்கு வேற என்ன வேலை? தி நைட் இஸ் யங்.”

“இல்லை, நான் வரேன் உங்க வீட்டுக்கு.”

“இது வீடு இல்லை. ஆபீஸ்!”

“அட்ரஸ் சொல்லுங்க. பதினஞ்சு நிமிஷத்தில் வர்றேன்!”

“ஹைக்கோர்ட் பக்கம் வாங்க. தம்பு செட்டி ஸ்ட்ரிட்ல நுழையுங்க. நுழைஞ்சு ரெண்டாவது சந்து, அஞ்சாவது பில்டிங் வாசல்ல ஃபியட் நிற்கும். போர்டு போட்டிருக்கும்.”

“உடனே வர்றேன்.”

டெலிபோனை வைத்துட்டு. “அடுத்தது என்ன பாஸ்?” என்றான்.

கணேஷ் ஸோபாவில் புதிதாகப் பிறந்த பூனைக்குட்டி போல் தூங்கிக் கொண்டிருந்த லீனாவைப் பார்த்தான்.

“இவளாலதான் எல்லாம்” என்றான் வசந்த்.

“பாஸ், ஒரு போர்வையைப் போர்த்திடுங்க. தெரியற விஷயங்கள் மனசைக் கலக்குது...”

“நாளைக்கு இவளை பாலகோபால்கிட்ட அழைச்சுட்டுப் போகணும் மறந்துடாதே!’

“ஸைக்கியாட்ரிஸ்ட் பாலகோபால்? எதுக்கு?”

“அந்த உருவம் சொன்ன புத்ரவதி... எக்ஸெட்ரா வார்த்தைகளை நான் எங்கேயோ ஏதோ சந்தர்ப்பத்தில் சொல்லியிருக்கேன்.. போன ஜன்மத்தில போல் இருக்குன்னு ஒரு முறை என்கிட்ட சொன்னாள்”

“ஆமாம், அதுக்கு பாலகோபால் என்ன செய்ய முடியும்?’

“அது போன ஜன்மத்திலயா, சின்னவயசிலயா அல்லது ஹிப்னடிஸத் தூக்கத்திலயான்னு அவர் கண்டு பிடிச்சுடுவார்...”

“லீனா சம்மதிக்கணுமே!”

“கேட்டுப் பார்க்கலாம்.”

tamilpdffree.wordpress.com

“நீங்க இவளை விஞ்ஞான வியாக்கியானத்தைப் போட்டுக் குழப்பிக்கிட்டிருக்கிங்க. அது அப்பவே செத்துப் போச்சு...”

“வஸந்த், ஒரு ஒப்பந்தம்!”

“என்ன?”

“நாம ரெண்டு பேரும் எதிர் எதிர் கட்சியை எடுத்துக்கலாம். நான் விஞ்ஞானம், நீ பைசாசம். நடந்த ஒவ்வொரு நிகழ்ச்சியையும் முதல்ல பட்டியலிடலாம். ஒவ்வொன்றுக்கும் உண்டான விஞ்ஞான சாத்தியத்தை நான் ஆராயறேன். நீ என்ன பண்றே அதே நிகழ்ச்சிக்கு பிசாசு, பழி வாங்கல், விளக்கம்னு ஆராய்ச்சி பண்ணு. கடைசில லெட்ஸ் கம்பேர் நோட்ஸ்....”

“சரி பாஸ்! என் வேலை ரொம்ப சுலபம்....”

“சுலபம்தான். அதே சமயம் கோர்வையா இருக்கணும். எனக்குத் தேவையான ஆராய்ச்சியிலயும் நீ உதவி செய்யணும்... புஸ்தகங்கள் பார்க்கறது, சிலபேரை சந்திக்கிறது....”

“டன்! கணேஷ் வர்ஸஸ் வஸந்த்! திஸ் இஸ் க்ரேட்!”

வாயிற்புறத்தில் ஒரு கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது. கதவு சாத்தப்படும் சப்தம் கேட்டது.

“வெங்டேஸ்வரன் வந்துட்டார்,” என்று வஸந்த் வாயிற்புறம் சென்றான்.

“வாங்க ஸார், உங்களுக்காகத்தான் காத்துக்கிட்டு இருக்கோம்.”

வெங்கடேஸ்வரன் உள்ளே வந்தார்.

விந்தி விந்தி நடந்து வந்து நாற்காலியில் உட்கார்ந்தார்.

tamilpdffree.wordpress.com

## 26

வெங்கடேஸ்வரனுக்கு ஐம்பது இருக்கலாம். கணேஷ் அவர் உயரத்தை மானசீகித்தான். வியாசன் உயரம்தான் இருப்பார். அவரை மண்டையில் அடித்துப் பிளக்க...‘சே, போவோர் வருவோரையெல்லாம் விவஸ்தையில்லாமல் சந்தேகிக்காதே!’

உள்ளே, விந்தி விந்தி வந்து உட்கார்ந்தவர், “ஊம்... வியாசன் இறந்துவிட்டாரா?” என்றார் கவலையுடன்.

“ஆமா ஸார், உட்காருங்க!” அறிமுகப்படுத்திக் கொண்டார்கள்.

“எப்படிச் செத்துப்போனார்?”

“பின் மண்டைத் தாக்கல்! கபால மோட்சம்!” என்றான் வஸந்த்.

“யார் செஞ்சது?”

“அதுதான் தெரியலியே! யார் செஞ்சதுன்னுதான் எல்லாருமே இப்ப திணறிக்கிட்டிருக்காங்க! – உங்களுக்கு தெரிஞ்சவங்க யாராவது....”

அவர் சற்று நேரம் தலையை ஆட்டி, “ச்ச்ச்... போன மாசம்தான் பார்த்தேன் அவரை” என்றார்.

வெங்கடேஸ்வரன் நிதானமாக சிகரெட்டைப் பற்ற வைத்து நெஞ்சை நிரப்பிக்கொண்டு பேசினார். “நான் அவர்கிட்ட பணம் கொடுத்திருக்கேன்.”

“உங்களுக்கு வியாசனை எப்படித் தெரியும்?”

“பிஸினஸ். நான் ஒரு ஏஜெண்ட். என் கிளையண்ட் ஒருத்தருக்காக அந்த எஸ்டேட்டை இருபத்தி ஐந்து வருஷம் லீஸ் எடுக்கிறதுக்குக் கேட்டேன். கொடுக்கிறதாக சொல்லி அட்வான்ஸ் வாங்கிட்டார் ஒரு லட்சம்!”

“அட்வான்ஸே ஒரு லட்சம்?”

“எண்பதாயிரத்துக்கு ரசீது கொடுத்திருக்கிறார்,’ என்று தன் ப்ரீஃப் கேஸிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்துக் காட்டினார்.

“அக்ரிமெண்ட் எல்லாம் ஏறக்குறைய முடிஞ்சு டைப் அடிச்சு கையெழுத்துப்போடுற ஸ்டேஜிலே இப்படி ஆயிடுச்சே!”

“அவர் எப்படி உங்களோட லீஸ் அக்ரிமெண்ட் ஃபைனலைஸ் பண்ணமுடியும்? சொத்தே அவர்தில்லே!”

“பின்னே யார்து!”

“அதோ தூங்கறா பாருங்க. அவளது–வியாசனோட நீஸ்!”

“பவர் ஆஃப் அட்டர்னி இருக்கிறதாச் சொன்னார்?”

“இப்ப அவரைப்போய் விசாரிக்க முடியாது....!”

“அப்ப பணத்தை திருப்பிக் கொடுத்திருங்க!”

“ஸார் அது என்ன லீஸ்?”

“என் கிளையண்ட் பம்பாய்காரரர் ஒரு ஃபார்ம் நடத்தறதாகவும் ஒரு சின்ன எலெக்ட்ரானிக்ஸ் தொழிற்சாலை நடத்தறாதாகவும், ஒரு சில்லிங் பிளாண்ட் வெக்கறதாகவும் ஏற்பாடு, லெட்டர் ஆப் இன்டெண்ட் எல்லாம் வாங்கி வெச்சிருக்கார். வருஷத்துக்கு ஆறு லட்ச ரூபா தர்றதா ஏற்பாடு. நிறைய ஏரியா...எங்க ஆஃபரை வியாசன் ஒத்துக்கிட்டு அட்வான்ஸ் வாங்கி....”

“நீங்க வியாசனைக் கடைசியா எப்ப பார்த்திங்க?”

“ஒரு மாசம் முன்னடி”

“எங்கே?”

“அங்கேதான் பண்ணைக்குத்தான் போயிருந்தேன்....”

“அன்னிக்கு மழை பெஞ்சுதா?,” என்றான் வஸந்த்.

“அட!” என்று ஆச்சரியத்துடன் புருவங்களை உயர்த்தினார். “நீங்களும் வந்திருந்தீங்களா? அன்னிக்கு?”

“இல்லை. எங்களுக்குத் தெரியும்!”

“இப்ப இந்தப் பெண்ணுக்கு நீங்கதான் வக்கீலா?”

“ஆமாம்!”

“சொத்து இவ கைலதான் இருக்கா?”

“ஆமாம்!”

“அப்ப நீங்க குத்தகைக்கு வுடுவீங்களா?”

“யோசிச்சு சொல்றோம்!”

“எத்தனை நாளாகும்?”

“ஒரு வாரத்திலே சொல்றோம்!”

“பம்பாய்க்கு டெலிபோன் ஒண்ணு செய்யலாமா? க்ளையண்ட் நாளை ஃப்ளைட்ல வர்றார். கான்ஸல் பண்ணிட்டு அடுத்த வாரம் வரச் சொல்லலாம்!”

“பம்பாய்க்கா?”

“எஸ்.டி.டி போடறேன். அதற்கு உண்டான காசைக் கொடுத்துடறேன்!”

“அதெல்லாம் வேண்டாம். முதல்ல நம்பர் கிடைக்கிறதா பாருங்க!”

அவர் டெலிபோனுக்குச் சென்று... “முதல்ல ஒரு விஷயம் தெரியணும். நீங்க எங்களுக்கு குத்தகைக்கு விடலைன்னா அந்த எண்பதாயிரத்தையாவது திருப்பித் தந்துறணும்!”

“அதெப்படி? நீங்க வியாசனுக்குத் திருப்பி கொடுக்க வேண்டிய கடனாக்கூட அது இருக்கலாமே,” என்றான் வஸந்த்.

“என்ன விளையாடறீங்க! ரசீதிலே என்ன போட்டிருக்கு...டுவர்ட்ஸ் அட்வான்ஸ் ஃபார் லீஸ் அமௌண்ட்....”

“என்ன லீஸ்னு போடலிறே!”

“மிஸ்டர் கணேஷ். நீங்க சொல்லுங்க. பணம் திரும்பி வரதிலே ஏதாவது தகறார் இருக்குமா? ஏன்னா எங்க லீகல் அட்வைஸ்ரைக் கன்ஸல்ட் செய்யணும்!”

“பயப்படுத்தாதீங்க எங்களுக்கும் லா தெரியும்! முதல்லே வியாசனுக்குக் குத்தைக்கு விடறதுக்கு உரிமையே கிடையாது... இந்தப் பொண்ணு மேஜர் ஆற வரைக்கும் கார்டியனா இருந்திருக்கார்....”

tamilpdffree.wordpress.com

“கார்டியனா இருந்தபோது செய்த கமிட்மெண்ட் எல்லாம் செல்லுபடியாகுமே!”

“ராத்திரி வேளையிலே சட்டம் பேசவேண்டாம்...நீங்க போன் பண்றதா இருந்தா பண்ணுங்க!”

“அவன் பணத்தைப் பற்றிக் கேட்பானே?”

“தகறார் பண்றாங்கன்னு சொல்லுங்க.”

“இரு வஸந்த். ஸார், நீங்க பணத்தைப்பற்றி இப்ப பேசாதீங்க. நாங்க தீர விசாரிச்சுட்டு, கொடுத்தாலும் கொடுப்போம்.”

அவர் யோசித்தார். “லீஸ்க்கு விடறதைப் பற்றியும் நீங்க தீர்மானிக்க முடியும் இல்லையா? எங்களுக்கு அந்த இடம் நிச்சயம் தேவையா இருக்கு. உங்களை விரோதிச்சிக்க விரும்பலை நான்.”

“கொஞ்சம் டயம் கொடுங்க, அதையும் தீர்மானிச்சுடறோம்.”

“சரி இப்படிச் செய்யறேன். நான் இப்பப் போன் பண்ணலை. நாளைக்கு என் கிளையண்ட் வரட்டும். அவன்கூடப் பேசிடுங்க. சம்மதம்தானே?”

“பேசறதுக்குச் சம்மதம்.”

“சரி, நான் வர்றேன்!” என்று ரசீதைக் கவர்ந்து கொண்டு புறப்பட்டார்.

கணேஷ், “அந்தப் பண்ணைல பேய் உலாவுறதா எப்பவாவது பேச்சு வந்ததா?” என்றான்.

“ஏதோ வதந்தி இருக்கிறதா வியாசன் சொன்னார். எங்களுக்கு அதைப் பற்றி கவலையில்லை. வர்றேன். நாளை சந்திக்கலாம்,” என்று கணேஷின் கையை குலுக்கிவிட்டுச் சென்றார்.

“ஆசாமியைப் பத்தி என்ன நினைக்கிறீங்க?” என்றான் வஸந்த்.

“அவர் பொய் சொல்லலை.”

“எப்படிச் சொல்றீங்க?”

“மூணு விதத்திலே. பேப்பரைக் கொடுக்கறப்போ சிகரெட் பற்றவைக்கிறப்போ அவர் கை நடுங்கலை. பண்ணைக்கு ஒரு மாசம் முந்தி போயிருந்ததை உடனே சொல்லிட்டார். கை குலுக்கறப்ப கையிலே வியர்வை இல்லை. நிஜம்தான் சொல்றார்!”

வஸந்த் விஸிலடித்து “எவ்வளவு கவனிக்கிறீங்க பாஸ்! அப்படின்னா வியாசன் இவங்களுக்குப் பண்ணையைக் குத்தகைக்கு விடறதா உத்தரவாதம் கொடுத்துட்டு பணத்தை வாங்கிகிட்டுப் போயிட்டார்! போலீஸ் கண்டுபிடிச்சது இவரோட காலடிகள்தான்! ஆமாம். ஆனா பணம் எங்கே?”

“அலமாரியில் இருந்த ஒரே ஒரு நூறு ரூபா நோட்டு?”

“யாரோ வியாசன் கிட்டே இருந்து அடிச்சிருக்காங்க!”

“என்ன? கேஸ் உங்க பக்கம் சைடு வாங்குது.”

tamilpdffree.wordpress.com

“பிசாசு இல்லைடா இது! பிசாசுக்குக் கரன்ஸி நோட்டுத் தேவைப்படுமா?”

அதற்குள் எழுந்து உட்கார்ந்திருந்தாள் லீனா.

“ஏதோ கன்னாபின்னான்னு கனவு... முழிச்சுக்கிட்டேன்.” என்றாள்.

“கணேஷ், ராத்திரி என்னால இங்க தங்கமுடியாது. நான் சுமிதா வீட்டிற்குப் போயிடறேன்.”

“சுமிதா யாரு?” என்றான் வஸந்த் ஆர்வத்துடன் “தீபக்குடைய சிஸ்டர்.” லீனா டெலிபோனுக்கு சென்று டயல் செய்தாள்.

“ஹலோ! தீபக்கைக் கொஞ்சம் கூப்பிடுங்க. நான் லீனா பேசறேன்.”

“அப்ப இருக்க மாட்டியா? போறியா?” என்றான் வஸந்த்.

“இங்க எனக்கு சேஞ்ச் பண்ணிக்க டிரெஸ் இல்லை. படுத்துக்குச் சரியா படுக்கை இல்லை. இந்த ரூம்ல பாச்ச உருண்டை வாசனை அடிக்குது, சிகரெட் வாசனை,

“ஆபீஸ் ரூம்னா அப்படித்தான் இருக்கும். வேணும்னா கணேஷ் ஸாருடைய ரூம் அந்தப் பக்கம் இருக்க... அங்க வேணா...”

“தீ....பக். லீனா, நான் வந்துட்டேன்! ஹாய்!!’ டெலிபோனில் சிரித்தாள்.

“ஆமா, அவங்க கூடத்தான் வந்தேன்!”

“இருக்கார்.”

மௌனம். வசீகரமான சிரிப்பு....

“என்ன! ரா வேளையிலே சிரிப்பும் கும்மாளமும்.” என்றான் வஸந்த்.

“தீபக்! என்னை வந்து அழைச்சிட்டுப் போறீங்களா?”

“இப்ப!”

“சுமி கிட்டே சொல்லுங்க.... இருக்காளா?”

“ஹலோ சுமி! நான் இன்னிக்கு ராத்திரி உங்க வீட்டிலே தூங்கப் போறேன்... கிவ் மி ஒன் ஸாரி யார்?” அப்புறம் இரண்டு டீன்–ஏஜ் பெண்களின் பரிபாஷைகள்...

சிரிப்புகள்.... உல்லாசங்கள்.... வஸந்த் கடிகாரத்தைப் பார்த்தான். கணேஷ் தீவிரமாக எழுதிக் கொண்டிருந்தான்....

லீனா டெலிபோனை வைத்தும் வஸந்த் “சரியா பத்து நிமிஷம் இருபது செகண்ட்” என்றான்.

“ஹ்ம்! அப்ப நிஜமாவே போறதுன்னு நிச்சயம் பண்ணிட்டே?”

“ஆமாம், கொஞ்ச நாளைக்காவது அங்க தங்கிக்கறேன். உங்ககூட இருந்தா உங்களுக்குக் தொந்தரவா இருக்கும்.”

tamilpdffree.wordpress.com

“சேச்சே... தொந்தரவாவது...”

“இல்லை வஸந்த். அவ சொல்றது சரிதான். நாம காலைல எழுந்தா கோர்ட்டுக்குப் போயிடுவோம்... அவ தனியா என்ன செய்வா?”

“என்ன பாஸ் எழுதறீங்க?”

“கேள்விகள், குறிப்புகள்.”

“பார்க்கலாமா”

“பார்த்துக் கிட்டேதானே இருக்கே?”

வஸந்த் படித்தான். ‘ப்ரொபஸர் ராமச்சந்திராவுக்கு டெலிபோன் செய்யவும்... டாக்டர் பால கோபால், அந்தக் கோடுகள்....”

“ராமச்சந்திரா யாரு?”

“ஐ.ஐ.டியில ப்ரொபஸர்.”

“எதுக்கு...?”

“இப்ப கேட்காதே... வஸந்த். இந்த இடத்தில நாம பிரியறோம். நான் விஞ்ஞானம், நீ பைசாசம். சொன்னேனே!”

“ஓ எஸ் சொன்னிங்க.”

“நடந்த ஒவ்வொரு சம்பவத்துக்கும் நான் விஞ்ஞான முறையிலே விளக்கம் தேடறேன். நீ பேய் பிசாசு ஜாலக்கா பகவதி அம்மன் பூர்விக சரித்திரம் இந்த முறையில தேடு.... எல்லாத்துக்கும் கோர்வையா அடித்தளத்திலே ஒரு சரடு இருக்கணும். ஒரு காரணம் இருக்கணும்... பட்டியலாப் போட்டுத் தரேன்....”

“சரி! டன்! என் வேலை ரொம்ப ஈசி!”

“அவ்வளவு சுலபமில்லை...எல்லாச் சம்பவங்களையும் ஒரு மையக் கருத்தோட லிங்க் பண்ணலாம்!”

“செய்துறலாம். நாலு நாள் டயம் கொடுங்க. என்னைப் பொறுத்தவரையிலும் மையக் கருத்து ஒரு பழிவாங்கல்....”

“இப்ப ஒண்ணும் சொல்லாதே என் கிட்ட... நான் எதிர்க் கட்சி!” கணேஷ் மேலும் எழுத ஆரம்பித்தான்.

சற்று நேரத்தில் வெளியே ஸ்கூட்டர் சப்தம் கேட்டது “தட் மஸ்ட் பி தீபக்?” என்றாள் லீனா. அவள் முகம் பிரகாசமாவதை வஸந்த் கவனித்தான்.

“சரி பிரியாவிடை கொடுக்கிற நேரம் வந்தாச்சு! வாங்க தீபக்! வழில ஒண்ணும் ஆக்சிடெண்ட் ஆகலையா!”

“ஹலோ வஸந்த்! ஹலோ கணேஷ்!”

tamilpdffree.wordpress.com

இளைஞன் தீபக் நல்ல உயரமாக இருந்தான். தலைமயிரை வாராமல் ஒரே ஒரு தடவை சீப்பால் தொட்டிருப்பான் போல இருந்தது. நல்ல சிவப்பாக இருந்தான். மீசை வில்லாக வளைந்து கீழுதட்டை விசாரித்தது. கண்களில் மெலிதான சிரிப்பு. பல் வரிசையில் ஒரு பல் தடம் புரண்டிருந்தது அழகாகவே இருந்தது. "என்ன ரொம்ப நாளா ந்யூஸே இல்லை? அங்கேயே போய் பண்ணைல செட்டில் ஆயிட்டிங்களோன்னு நினைச்சேன்! எல்லாம் முடிந்ததா?" வெளிர் நீல சட்டை அணிந்திருந்தான்.

"முடிஞ்சது கந்தர்கோளம்!"

"என்ன ஆச்சு!" கார்டுராய் பாண்ட்.

"நீங்க பேப்பர் பார்க்கறதில்லையா?"

"இல்லை, ஒரு வாரமா டில்லி போயிருந்தேன்."

"குமாரவியாசன் ஏதாவது தகறார் பண்ணாரு?

"இல்லை பண்ணலை. அமைதியா இருக்கார்!"

"தீபக், அது பெரிய கதை... காலைல வெச்சுக்கலாம்"

"நான் எல்லாம் சொல்றேன் வாங்க தீபக்" என்றாள் லீனா

"வீட்டுக்குப் போனதும் சொல்லு லீனா. வழியில் போறபோது சொல்லி வைக்காதே. ஸ்கூட்டர் பயந்து போய்க் கார்பரேட்டர் அடைச்சுக்கும்!"

"புரியற மாதிரி பேசுங்களேன்"

"இப்ப வேண்டாம்! வி ஆர் டயர்ட்!

"சரி, வரயா லீனா? சுமி முழிச்சிட்டு ஆவலாக் காத்திட்டிருக்கா!"

அவர்கள் கிளம்ப கணேஷ். "ஒரு நிமிஷம் தீபக்... உங்க வீட்டு அட்ரஸும் டெலிபோன் நம்பரும் கொடுத்துட்டுப் போங்க! காலைல காண்டாக்ட் பண்றேன்..."

தீபக் ஒரு காகிதத்தில் எழுதிக் கொடுத்தான்.

"குட் நைட் வஸந்த்! குட் நைட் கணேஷ்! ஸ்லீப் வெல்" என்றாள் லீனா

வஸந்த் கைக்குட்டையால் கண்களை ஒத்திக் கொண்டான். அவர்கள் சென்றதும் கணேஷ், "வஸந்த் நீ ஒண்ணு கவனிச்சியோ?" என்றான்.

"கவனிச்சேன் பாஸ்! ஷி இஸ் இன் லவ் வித் தீபக்! அவன் உள்ளே வந்ததும் கண்கள் ரெண்டும் பல்பு போட்ட மாதிரிப் பிரகாசமாயிடுச்சு! அதிர்ஷ்டக்காரன்!"

"இல்லை, வஸந்த். நான் அதை சொல்லலை..."

"பின்ன?"

"நோ!" என்று டெலிபோனை அணுகி, "வெங்கடேஷ்வரன் நம்பர் என்ன சொல்லு."

tamilpdffree.wordpress.com

“636458. எதுக்கு?”

“அவரை ஒண்ணு கேட்க மறந்துட்டேன்,”

“ஹலோ மிஸ்டர் வெங்கடேஸ்வரன்...? ஸார், கணேஷ் ஹியர். உங்களை இந்த வேலையில் மறுபடி தொந்தரவு செய்யறதுக்கு மன்னிச்சுடுங்க.”

“பரவாயில்லை சொல்லுங்க,” என்றது மறுமுனை.

“ஒண்ணுமில்லை. சின்ன விஷயம்தான். நீங்க ஒரு மாசம் முன்னாடி வியாசனைப் பார்க்க போனிங்களே, அவரை எங்கே சந்திச்சிங்க?”

‘பண்ணைலேதான். அவர் அவுட் ஹவுஸில.”

“வேற எங்கேயும் போகலியா?”

“போனோம், அப்புறம் அவர் என்னை அழைச்சுட்டுப் போனார். அரசமரத்துக்குப் பக்கத்திலே ஒரு மண்டபத்துக்கு.”

“அங்க என்ன?”

“அங்க இன்னொரு ஆளை அறிமுகப்படுத்தி வெச்சார்.”

கணேஷ் சற்றுப் பதறிப் போனான். பதற்றத்துடன், “அவர் பேரு என்ன? சொன்னாரா? ஞாபகம் இருக்கா?”

“இருக்கு, தீபக்!” என்றார்.

## 27

டெலிபோன் சம்பாஷணையின் இந்த முனையை மட்டும் கேட்டுக் கொண்டிருந்த வசந்திற்கு கணேஷின் திடீர் முக மாற்றத்தின் அர்த்தம் புரியவில்லை. ‘என்ன பாஸ்? பேஸ்த் அடிச்சிட்டீங்க?” கணேஷ் போனில், “நிச்சயம் அந்தப் பேர்தானா?’ என்றான்.

“தீபக்தான். நல்லா ஞாபகம் இருக்கு.”

“ஆள் எப்படி இருந்தார்?”

“சிவப்பா ஆஜானுபாகுவா...சின்னப் பையன், இருபது இருபத்திரண்டு வயசிருக்கும்.”

“அந்த ஆளை என்ன சொல்லி அறிமுகப்படுத்தினார்?”

“உறவோ, அல்லது உறவாயிடப் போறவரோன்னு சொல்லி அறிமுகப்படுத்தினதா ஞாபகம்.”

“அந்த தீபக் ஏதாவது பேசினாரா?’



tamilpdffree.wordpress.com

வசந்த் நிமிர்ந்து உஷாரானான். அவனுக்குப் புரிய ஆரம்பித்தது. "அதிகம் பேசலை ஸார்." அப்பப்ப சிரிச்சுக்கிட்டிருந்ததா ஞாபகம்'.

"நீங்க கொடுத்த தகவலுக்கு தாங்க்ஸ் ஸார்" என்று டெலிபோனை வைத்துவிட்டு "வஸந்த்! இன்னொரு குழப்பம்!: என்றான்.

"என்னது? தீபக்கை வெங்கடேஸ்வரன் பண்ணைல பார்த்தாராமா?"

"ஆமாம். குமாரவியாசன் அறிமுகப்படுத்தி வெச்சாராம். அரசமரத்தடி மண்டபத்தில்!"

"என்னடாது? எல்லாரும் ஒண்ணுக்குள்ள ஒண்ணு உறவா? எல்லாரும் சேர்ந்து நம்மைப் பைத்தியம் அடிக்கிறார்களா?"

"தீபக்தானே ஆரம்பத்தில நம்மைக் கேட்டுக்கிட்டான் சொத்து விஷயமா ஏதோ தகறார் இருக்கு, ஒரு வீக் எண்ட் போய்ட்டுப் பார்த்திட்டு வந்துருங்கன்னு! அப்ப வியாசனை தெரிஞ்சதா அவன் சொல்லவே இல்லையா!"

"வியாசனைத் தெரியாதுன்னும் சொல்லலையே!'

"ஆனா வியாசன் கிட்ட நாம தீபக்கைப் பற்றி குறிப்பிட்டபோது அவர் தீபக்கைப் பத்தி எதுவும் கேட்கவே இல்லையே!"

"இப்ப நீங்க என்ன சொல்ல வரீங்கன்னு புரியவே இல்லையே!"

"எனக்கென்னவோ தீபக்கையும் முழுக்க நம்பக் கூடாதுன்னு தோணுது".

"ஏன்?"

"தீபக் நல்ல உயரம்"

"பாஸ்! இது என்ன விபரீதம்?"

"அவன் குமாரவியாசனைக் கொன்றிருக்கலாம்".

"எதுக்கு?"

"ரெண்டு பேரும் சேர்ந்து திட்டம் போட்டு ஏதோ ஒரு காரியம் செய்திருக்காங்க. கடைசியில் பணத்தைப் பிரிச்சுக்கறதில அவுங்க ரெண்டு பேருக்குள்ள அபிப்பிராய பேதம், சண்டை ஏற்பட்டுக் கோபத்தில தீபக் ஒரு கோடாலியை எடுத்து மடேல்னு" கணேஷ் நிறுத்திவிட்டுத் தலையை ஆட்டினான், "சே! எனக்கே அபத்தமா படறது".

வசந்த், "நான் ஒரு மனுஷனைத் தேடிக்கிட்டிக்கேன். இவன் செய்திருக்க முடியுமோ, இவனோ இவனோ...ன்னு. நம்ம ஸ்டோரில மனுஷங்க குறைவு பாரு! முக்கியமா சந்தேகிச்சவரே இறந்து போய்ட்டார். மிச்சம் நீ, நான், லீனா, பண்ணை நாய்! அதனாலே தான் ஏதாவது கொஞ்சம் சம்பந்தப்பட்டவங்கமேல கூட அனாவசிய சந்தேகம் ஏற்படறது. வெங்கடேஸ்வரன் உள்ள வந்த உடனே ஒருவேளை இவர் பண்ணியிருப்பாரோன்னு தான் முதல்ல தோணுது...."

"உங்களுக்குத் தேவை தூக்கம். ஒரு செர்னேஸ் தரட்டுமா?"

"வேண்டாம்"

tamilpdffree.wordpress.com

படுத்து உறங்குமுன் அந்த தீபக் விவகாரம் உறுத்தியது. நாளை விசாரிக்கையில் ஒரு முறை லீனாவுக்கு டெலிபோன் செய்து விடவேண்டும். ஜஸ்ட் இன் கேஸ்! இல்லை. இவன் வீட்டு விலாசம் கொடுத்திருக்கிறான். ஒரு நடை போய்ப் பார்த்து விட வேண்டும்.

கணே**ஷு**க்கு அந்தக் கேஸின் விளிம்பு தென்படுவதுபோல் இருந்தது. போலீஸ் சூப்ரண்ட் ஆபீசில் இனி தொடர்ந்து வாரக் கணக்கில் விசாரிப்பார்கள். அவர்கள் விடமாட்டார்கள். கணே**ஷு**க்கு இனி என்ன வேலை? சொத்து லீனாவுக்கு வந்து சேர்வதை மேற்பார்வை செய்யத்தானே அங்கு சென்றான்? குமாரவியாசனே போய்விட்டார். சொத்து மாற்றப்பத்திரங்கள் டாக்குமெண்ட்ஸ் எல்லாவற்றையும் சரிபார்த்தாகி விட்டது. லீனாவுக்குத்தான் தீர்மானமாக இனி அந்த எஸ்டேட். அதை வைத்துக்கொண்டு எப்படி பராமரிப்பாள். என்ன செய்யப் போகிறாள் என்பதை அவளுடன் ஆலோசித்துத் தீர்மானித்துத் தரவேண்டும். அது ஒன்றுதான் பாக்கி. அங்கே நடந்து வருகிற நிகழ்ச்சிகள். மரணங்கள் எல்லாவற்றையும் விசாரிக்க போலீஸ் இருக்கிறது. முடிவெடுப்பது அவ்வளவு சுலபமாகத் தெரியவில்லை. ஆனால் சொத்து அவள் கைக்கு வந்ததில் எதிர்ப்போ தடையோ இருக்கப் பிரமேயமில்லை. முற்றுப் பெறாத மர்மமாக இந்த விவகாரம் முடியலாம். முடிக்க வேண்டியது போலீசார். நானல்ல! எனக்கு மூளை குழம்புகிறது. என்னால் இனி முழுநேரமும் இதைச் சிந்திக்க முடியாது. நான் இங்கு நடந்த வினோதங்களுக்கு ஒரு சாட்சி. அவ்வளவுதான். ஏற்கெனவே பதினைந்து தினங்கள் அல்லாடியாகி விட்டது. எனக்கு என் தினசரி வக்கீல் தொழிலுக்குத் திரும்ப வேண்டும். ஊரில் உள்ள மர்மங்களை எல்லாம் என் முதுகில் ஏற்க முடியாது. கணேஷ்!.... உன் கையாலாகாத்தனத்துக்கு சால்ஜாப்பு சொல்லிக் கொள்கிறாயா? பாதியில் விட்டு விடப் போவதற்குக் காரணம் தேடுகிறாயா!"

"வஸந்த், அந்த மாத்திரை சொன்னியே அதைக் கொடு!"

காலை எழுந்தபோது கணே**ஷு**க்காக கட்சிக்காரர் எதிரா**ஜு**லு காத்திருந்தார். சுத்தமாக குளித்துவிட்டு நெற்றிக்கு **ஸ்ரீ**சூர்ணம் இட்டுக் கொண்டு கையில் சிறிய பெட்டியுடன் காத்திருந்தார்.

"என்ன எத்திரா**ஜு**லு சாரு!"

"'கேஸ் ஜெயிச்சுடுச்சுங்க கணேஷ்..."

"இந்தாங்க கணேஷ், நீங்க கேஸ் ஜெயிச்சுக் கொடுத்ததுக்கு பரிசு! என் மாப்பிள்ளை அமெரிக்காவிலே இருந்து அனுப்பிச்சிருக்காரு."

"என்னது?"

"சாக்லெட் பொட்டி"

"தாங்ஸ்" என்று வாங்கின வஸந்த். "பீஸ்ல கழிச்சுப்பீங்களா?" என்றான்.

"என்னங்க! உங்களுக்கு எவ்வளவு அதிகமா பீஸ்வேணும் சொல்லுங்க தர்றேன்! கொள்கைக்காகத்தானே போராடினேன். எனக்கு இல்லாத வீடா!"

"எத்திரா**ஜு** சாரு! உங்க மாப்பிள்ளை அமெரிக்காவில் இருந்து சில புஸ்தகங்கள், பிலிம்கள் கேட்டா அனுப்புவாரா?"

"ஓ! தாராளமா! எழுதிக் கொடுங்க!"

tamilpdffree.wordpress.com

“மாப்பிள்ளை பேரு என்ன?”

“கோவிந்தாராஜுலு.. மகேஷ் ஸாரி செண்டர்ல இருக்காரு!”

“அப்ப அனுப்ப மாட்டாரு!”

“ஏங்க!’

கணேஷ் சிரித்தான். “நீங்க போய்ட்டு வாங்க. இவனோட பேசாதீங்க!”

அவர் சென்றதும் வஸந்த் அந்த சாக்லெட் பெட்டியை அலமாரியில் எடுத்து வைத்தான். “அப்புறம் சாப்பிடலாம் பாஸ்,” என்றான். கணேஷ் ப்ரொபஸர் ராமச்சந்திராவின் வீட்டிற்கு டெலிபோன் செய்தான், அவர் குளித்து கொண்டிருப்பதாகவும் திரும்ப அவரே டெலிபோன் செய்வார் என்றும் பதில் கிடைத்தது.

“பாஸ் இன்னிக்குப் பத்து மணிக்குப் கோர்ட்டுக்கு நாம் போயே ஆகணும். இனிமே முழு மூச்சா இந்தக் கேஸில நாம கவனம் செலுத்த முடியாது.”

“வாஸ்தவம், ஆனா, அடிக்கடி அந்தச் சம்பவங்கள் நம்ம நினைப்பில குறுக்கிடும். போலீஸ்காரர்களும் நம்மைச் சுலபமா விட்டுற மாட்டாங்க. இன்னும் நிறைய ஸ்டேட்மெண்டுகள் கொடுக்க வேண்டி வரும். லீனாவை மறுபடி கொஸ்சின் பண்ணுவாங்க.”

“கண்டுபிடிப்பாங்கன்னு நினைக்கிறிங்களா?”

“நம்மை விட அவங்களுக்கு வசதி ஜாஸ்தி! ஃபிங்கர் ப்ரிண்ட்ஸ் ரிப்போர்ட்டுகள் வர வேண்டியிருக்கு. அவைகளில் என்ன என்ன ஆச்சரியங்கள் இருக்குதோ?”

“வாஸ்தவம்தான். பொட்டில பதிஞ்சிருக்கறது ஒரு மனுஷக் குரங்குடைய ரேகைகள்னு கண்டுபிடிச்சா கூட ஆச்சர்யப்படக் கூடாது. எதுவேணா நடக்கலாம்.”

டெலிபோன் மணி அடித்தது.

“ஹலோ கணேஷ்” ராமச்சந்திரா. என்னப்பா திடீர்னு?”

“குட்மார்னிங் புரொபஸர். உங்களை நான் பார்க்கணும்.”

“என்ன விஷயம்?”

“சில சந்தேகங்கள்.”

“எதிலே’

“உங்க சப்ஜெட்டில் பிஸிக்ஸ்”

“அதான பார்த்தேன்! “என்னது” எங்க சப்ஜெக்ட்டுக்குள்ளே நீ நுழைய ஆரம்பிச்சுட்டியோன்னு?....’

“இல்லை புரொபஸர். சில சாத்தியங்களைப் பற்றி உங்களைக் கேட்கணும். நான் ஒரு பாமரன்!”

tamilpdffree.wordpress.com

‘அவையடக்கமாக்கும்! உன் சந்தேகங்களை நான் தீர்த்து வைக்கிறதுக்கு ஒரு கண்டிஷன். என் சந்தேகம் ஒண்ணை நீ தீர்த்து வைக்கணும்!’?

“என்ன ஏதாவது கேஸா?”

“எனக்கு **ஜூ**னியர் ஒருத்தனை பிரமோட் பண்ணி எனக்கு மேல போஸ்ட் பண்ணியிருக்காங்க. ஒரு ரிட் போட்டா என்ன?’

“அதுக்கு உங்க ப்ரமோஷன் ரூல்ஸைப் பார்க்கணும்! பத்துமணிக்குள்ள வரவா”

“வா ப்ரெக் ஃபாஸ்ட்டுக்கே வாயேன்!’

‘வஸந்த் “நான் அடையாறு போகணும். காரை எடுத்துட்டுப் போறேன்.” என்றான்.

“தனியாகவா? நான் வேண்டாமா!”

‘நீதான் என் கட்சி இல்லையே!”

‘சரி வந்து தொலை! ஆனா அங்க வந்து ப்ளேபாய் ஜோக்கெல்லாம் அடிக்காதே! ப்ரோபஸருக்கு பதிமூணு வயசில ரெண்டு பெண்கள் இரட்டை!”

“அப்ப நான் வந்தே ஆகணும்,” என்றான்.

‘எதுக்கும் தீபக்குடைய அட்ரஸையும் டெலிபோன் நம்பரையும் எடுத்துக்க.’

கார் ஐ.ஐ.டி,யின் ஆரம்ப வாசலில் நுழைந்ததும் இது வேறு உலகம் போல இருந்தது. ஏறக்குறைய காட்டுப் பிரதேசம்.

புரொபஸரின் வீடு அமைதியான சூழ்நிலையில் இருந்தது. வெராந்தாவைக் கடந்து ஹாலில் உட்கார்ந்தார்கள். ஹாலில் ஹார்வர்டு பல்கலைக் கழக இலச்சினையுடன் ப்ரொபஸரின் டாக்டரேட் சட்டமிடப்பட்டிருந்தது. அமெரிக்காவில் அவர் ஆறு வருஷம் இருந்ததின் அடையாளங்கள் சுவர்களிலும் அலமாரியிலும் ஏன் மேஜை விளக்கில் கூடத் தென்பட்டன.

‘குட்மார்னிங் அங்கிள்!’

புரபொசரின் பெண்கள் இருவரும் உள்ளே வந்து நேர்த்தியாக உட்கார்ந்தனர். அமெரிக்காவில் வளர்ந்த போது சாப்பிட்ட வெண்ணெய், பால், தயிர் எல்லாம் பெண்களிடம் இப்போது பலன் அளித்திருக்கிறது. தக்க இடங்களில் புஷ்டியாக இருந்தார்கள். அதற்கேற்ப அவர்கள் அணிந்திருந்த பாவாடை சொக்காயும் வஸந்த்தைப் பரீட்சித்தன. இருவரும் ஒரே வார்ப்பு.

“உங்க பேர் என்ன?” என்றான் வஸந்த்.

“விமலா, நிமலா.”

“எனக்குக் கூட ஒரு ட்வின் பிரதர் இருந்தான். ஒருநாள் நான் செத்துப் போன போது அவனைப் புதைச்சுட்டாங்க!’

இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு அதிகமாகச் சிரித்தார்கள். உள்ளே வந்த ப்ரொபஸர் ராமச்சந்திரா இருபது வயது குறைவாக ஷர்ட் அணிந்திருந்தார். “ஹாய்

tamilpdffree.wordpress.com

கணேஷ்! தி க்ரேட்டஸ்ட் லாயர் இன் மெட்றாஸ்! எப்படி இருக்கே?....”என்று கை குலுக்கினார்.

“ஸார், என்னை மறந்துட்டீங்களே! தி க்ரேட்டஸ்ட் ஜூனியர்!” என்றான் வஸந்த்.

“வாங்க டிபன் சாப்பிடலாம்.”

அடுத்த அறையில் மேஜை மேல் மேல்நாட்டுப் பாணியில் பீங்கான் தட்டுகள் முள்கரண்டி ஸ்பூன் எல்லாம் வைத்திருக்க மூடியைத் திறந்ததும் இட்லி ஆவி பறந்தது.

வஸந்த், “மன்னிச்சுக்கங்க! எனக்கு இட்லியை சாம்பார்ல குளிப்பாட்டி விரல்ல சாப்பிட்டுத்தான் பழக்கம்!” என்றான்.

புரபொஸர், “என்ன சந்தேகம் கணேஷ்?” என்றார். பண்ணைக்குப் போயிருந்தோம். அங்க சில வினோதமான காட்சிகளை எல்லாம் பார்த்தோம். முக்கியமா உங்களை நான் கேட்க வேண்டியது ஒண்ணு....வெட்ட வெளியில, திரையில்லாம ஒரு முப்பரிமாண உருவத்தைக் காட்ட முடியுமா’...”

“வெட்ட வெளியிலா? திரை இல்லாம?...உருவமா? ஸ்டாட்டிக்கா? இல்லை, நகர்ற உருவமா?”

“நகர்றது பேசறது....ஒரு பெண் உருவம்....”

“எவ்வளவு பெரிய உருவம்...”

“லைஃப் சைஸுக்குக் கொஞ்சம் குறைச்சலா.”

“நீங்க பார்த்திங்களா?”

“ஆமாம். ராத்திரி வேளையில! பார்த்தோம்,”

புரொபஸர் யோசித்தார்... “இன்னும் கொஞ்சம் விவரமாச் சொல்லேன்.”

கணேஷ் தெளிவாக அந்தக் காட்சிகளை விவரித்தான்... வெண்பிசிர் வடிவம். அது நடந்தது. சிரித்தது அழுதது....

பேசியது.... வீறிட்டது... மறைந்தது... திரும்பத் தோன்றியது...

“எனக்கு உடனே பதில் சொல்ல முடியலை கணேஷ்!”

“என் கேள்வி! விஞ்ஞானப்படி இது எந்த விதத்திலாவது சாத்தியமா?”

“ம்! சாத்தியமா இருந்தா ஒரே ஒரு முறைதான் இருக்கு. ஹோலோ கிராஃபி!”

“அது என்ன?”

‘உனக்கு நான் இதற்கு தெளிவா பதில் சொல்றதுக்கு முன்னாடி என் கலீக் ராமபத்திரன் இருக்கார். அவரைக் கேட்டுட்டுச் சாயங்காலம் சொல்றேன். அவர் லேஸர்ல விளையாடிக்கிட்டிருக்கிறார். ஹோலோகிராஃபியைப் பத்தி அவருக்கு நிறைய தெரியும். ஈவினிங் எனக்கு டெலிபோன் செய்யேன்” என்றார்.

tamilpdfree.wordpress.com

“சரி சார்” டெலிபோன் என்றதும் கணேஷுக்கு ஞாபகம் வந்தது. ‘ஒரு சின்ன போன் அடிக்கணும்’ என்றான்.

“தாராளமா, ஹால்ல இருக்கு”

“வஸந்த், தீபக்குடைய நம்பரைக் கொஞ்சம் பாரு”

கணேஷ் ஹாலுக்கு வந்து தீபக் தந்திருந்த நம்பரைச் சுழற்றினான். சற்று நேரம் அடித்தது.

“‘ஹலோ விவேகாதந்தா ட்யுட்டோரியல்?”

கணேஷ் அந்தக் காகிதத்தை மறுபடி சரிபார்த்து, “865317 தானே அது” என்றான்.

“ஆமாம் விவேகாநந்தா ட்யுட்டோரியல்! யார் வேணும்?”

“அங்க தீபக்குன்னு ஒருத்தர்”

“அப்படி ஒருத்தரும் இல்லையே?”

“ஸாரி” கணேஷ் புரியாமல் டெலிபோனை வைத்தான். வஸந்த் வந்து “என்ன ஆள் அகப்பட்டானா?” என்றான்.

“தப்பு நம்பர் வஸந்த்”.

“எழுதிக் குடுக்கறப்போ தப்பு பண்ணிட்டானா? யார் எதுக்கும் போற விழியில”

“அந்த விலாசத்திற்குப் போய் பார்த்துறலாம்” என்றான்.

புரொபஸரிடம் விடை பெற்றுத் திரும்புகையில் தீபக் கொடுத்த அந்த விலாசத்தை விசாரித்து அங்கே போய்ச் சேர்ந்த போது அந்த இடத்தில் ஒரு துணிக்கடை இருந்தது.

tamilpdffree.wordpress.com

## 28

கணேஷ் திகைத்தான். இது என்ன புதுத் திருப்பம். இதன் அர்த்தம் என்ன? “புரியலை வஸந்த்.”

“எனக்கும் ஷை! பாஸ் எல்லாமே இப்ப தீபக்ங்கிறவன் செய்ய வேலையா? எதுக்காக நம்மகிட்ட தப்பா அட்ரஸ், டெலிபோன் நம்பர் எல்லாம் தரணும்?”

“லீனா அவன்கூடப்போயிருக்கா” என்றான் கணேஷ் கவலையுடன்.

“விவஸ்தை கெட்ட பொண்ணு. பலி ஆடு மாதிரி யார் கூப்பிட்டாலும் கூடப் போயிடறது.”

வஸந்த் சிரித்தான்,

“சிரிக்கும்படியா இதில் ஒரு விஷயமும் இல்லை?”

"ஒரு நாள் விட்டு ஒரு நாள் உங்க குற்றவாளிங்க மாறிக்கிட்டே போறாங்க. முதல்ல நம்ம கேவி ஸார். அவர் அகாலமாப் போய்ட்டார். அப்புறம் இந்த வெங்கடேஸ்வரன்னு நினைச்சிங்கல்ல? அந்த ஆளானா தீபக்கை ஆள்காட்டி விட்டார். இன்னி தேதிக்கு யாரு தீபக்கா? தலை சுத்துதே! பகுகுணா கட்சி மார்றதைவிட இது சிக்கலா இருக்குதே."

"யாரையும் இப்ப நான் சந்தேகப்படலை வஸந்த். முதல் காரியமா தீபக்கைக் கண்டுபிடிக்கலாம்."

"எப்படி?

"அது உன் வேலை. சாயங்காலத்துக்குள்ள தீபக்குடைய சரியான விலாசம் வேணும். நீ என்ன செய்வியோ எனக்குத் தெரியாது."

"பாஸ் ஹேவ் எ ஹார்ட். மெட்றாஸுடைய ஜனத்தொகை இன்னி தேதிக்கு எவ்வளவு தெரியுமா?"

"வஸந்த் பையா, உன்னால முடியாததா. நீ அனுமார்டா. உன் பலம் உனக்குத் தெரியாது."

"சரிதான் முயற்சி பண்றேன். கோர்ட்டு?"

"கோர்ட்டுக்கு நான் போயிட்டு வரேன். மத்தியானம் அந்த வெங்கடேஸ்வரன் வேற வருவார்,"

"பாஸ்! என் கட்சிதான் உயர்ந்த கட்சி."

"பேய்க் கட்சி! நான்ஸென்ஸ்!'

கணேஷுக்கு உறுத்தியது. அவசரமாக ஏதோ செய்ய வேண்டும் என்று உள்ளுணர்வு எச்சரித்தது. என்ன செய்ய வேண்டும்? யார் இந்த வினோத ஸினோரியோவின் மூலகர்த்தா? தீபக்? போலீஸ் உதவியை நாடலாமா? எப்படி என்ன ஆதாரத்தின் பேரில்? காணாமற் போனவர்களைப் பற்றி ஏழு மணி ரேடியோ அறிவிப்பா? அபத்தம்.

இருவரும் காரில் மௌனமாக இருந்தார்கள். கணேஷின் கை கால்கள் ஒரு வித ரிஃப்ளெக்ஸ் சக்தியில்தான் செயல்பட்டன. காரைச் செலுத்தும்போது மனசுக்குள் எக்ஸ்பிரஸ் எண்ணங்கள் விரைந்தன. லேஸர், ஹோலோகிராட்ஃபி வித்வ ஜன கோலாகலன் விட்டத்தில் அடிச் சுவடுகள். குத்தகை கேட்கும் வெங்கடேஸ்வரன், தீபக்கின் வசீகரமான புன்னகை கடவுளே இதுவரை ஒரு துப்பு இல்லை. ஒரு ஆணித்தரமான சந்தேகம். தடயம் கிடைக்கவில்லை. நிச்சயம் தோல்விதான். ஒன்றும் புரியவில்லை. ஆளை விடு. எனக்குத் தொழில் கோர்ட்டுக்குள் வாதாடுவது. இதற்குத்தான் நான் லாயக்கு. இந்த மாதிரியான அமானுஷ்யமான ஒன்றுக்கொன்று தொடர்பற்ற நிகழ்ச்சிகளுக்கல்ல.

"பாஸ்! நான் இறங்கிக்கறேன்." என்றான் வஸந்த், "நீங்க நேரா கோர்ட்டுக்குப் போயிருங்க. பீதாம்பர்தான் கேஸ். அட்ஜர்ன்மெண்ட்டுக்கு வரும். நீங்க சேம்பர்ல இருங்க. நான் கொஞ்சம் விசாரிச்சுட்டு ஒரு மணிக்குள்ள வந்துர்றேன்."

"என்னத்தை விசாரிப்பே?"

"அதான் சொன்னீங்களே தீபக், முயற்சி பண்ணிப் பார்க்கறேன்."

tamilpdffree.wordpress.com

கோர்ட்டில் அவன் கவனம் அடிக்கடி கலைந்தது. பீதாம்பர்தாஸ் வழக்கு அட்ஜர்ன் ஆகவில்லை.

கணேஷ் மேஜையில் உட்கார்ந்து தன் சிந்தனை முழுவதையும் ஆக்ரமித்திருந்த சந்தேகங்களை மறுபடி நிதானமாக ஒவ்வொன்றாகக் காகிதத்தில் எழுதத் துவங்கினான்.

'இதுவரை முடிவெடுத்தது எல்லாமே தப்பு. புதிய கோணத்தில் ஆராயவேண்டும்...

...புதிய குற்றவாளிகள் யார்?....

....லீனா?--

எழுதியதை உடனே அடித்தான்.

உயர்திணை? அஃறிணை?

லேஸர் என்றால் என்ன? ஹோலோகிராஃபி என்றால். நிறையப் படி கேள். ஒவ்வொன்றுக்கும் விஞ்ஞான சாத்தியம் இருக்கிறதா இல்லையென்றால்...

'க் டக்'

திறந்திருந்த கதவைத் தட்டி விட்டு ஒரு புதியவன் நுழைந்தான்.

'மிஸ்டர் கணேஷ். என் பெயர் ஸோலங்க்கி' என்றான் ஆங்கிலத்தில். அவன் பின்னே வெங்டேஸ்வரன் நுழைந்தார். "அங்க போய்க் கேட்டோம். இங்க வந்திருக்கிறதா சொன்னாங்க. இவர்தான் என் கிளையண்ட் பம்பாய்க்காரர்."

"உட்காருங்க."

இளைஞன் இருபத்தி ஐந்து வயதிருக்கலாம். இப்போதே தொந்தி சேகரித்து வைத்திருந்தான். தோற்றத்திலே பிசினஸ் கலந்திருந்தது. கணேஷை நேராகக் கூர்மையாகப் பார்த்தான். அவன் கண்கள் அடிக்கடி கடிகாரத்தைப் பார்த்து எனக்கு நேரமில்லை என்று அறிவிக்கும் சுபாவம். ஆங்கிலத்தில் குஜராத்தி உச்சரிப்பு.

"மிஸ்டர் கணேஷ்! எஸ்டேட்டின் தற்போதைய சொந்தக்காரரின் வக்கீல் நீங்கள் என்று தெரிந்துகொண்டேன் சந்தோஷம்."

"வெங்கடேஸ்வரன் நேற்று எல்லாம் சொன்னார்?"

"ரொம்ப நல்லது. எப்படியாவது குத்தகையை நீங்கள் எங்கள் பேரில் வாங்கித் தர வேண்டும். இல்லையெனில் பெருத்த நஷ்டமாகிவிடும். ஏகப்பட்ட ஏற்பாடுகள் செய்து விட்டேன்."

"பார்க்கலாம்"

"பார்க்கலாம் என்று சொல்லாதீர்கள். சரி என்று சொல்லுங்கள்."

'கஷ்டம். விஷயம் அவ்வளவு சுலபமில்லை மிஸ்டர் ஸோலங்கி. போலீஸ் வட்டாரத்திலிருந்து சில விஷயங்களைத் தீர்வு செய்த பின்னரே சொத்தை மேற்கொண்டு என்ன செய்வது என்று தீர்மானிக்க முடியும். ஒரு வாரம் பத்து நாளாகும் என எதிர்பார்க்கிறேன்."

tamilpdffree.wordpress.com

“சரி. மறுபடி வருகிறேன். இந்த மாதிரி ஆஃபர் உங்களுக்கு வேறு இடத்திலிருந்து வராது. அந்தப் பெண் பிள்ளையால் ஒன்றியாகப் பண்ணையை நடத்த முடியாது. நான் எடுத்துக் கொள்ளத் தயாராகக் காத்திருக்கிறேன். தயவு செய்து சாதகமான பதிலைத் தாருங்கள்” என்றான். அவன் பேசிய தோரணையில் தயவு செய்து இல்லை கெஞ்சுகிறானா? அதட்டுகிறானா? குத்தனைக்கு விடாவிட்டால் விபரீதம் நடக்கும் என அச்சுறுத்துவது போல் இருந்தது. வெங்கடேஸ்வரன் அவனிடம் சற்றுப் பயந்து நின்றுகொண்டிருந்தார்.

அவர்கள் சென்றதும் கணேஷ் டெலிபேன் செய்தான்.

“புரொபஸர் ராமச்சந்திரா? கணேஷ் ஹியர். காலைல சொன்னதை விசாரிச்சிங்களா?”

“அட்மிஷன்தானே!”

“இல்லை ஸார் வேற லேஸர் ஹோலோகிராஃபி!”

“ஓ! லாயர் கணேஷா! ராமபத்திரனைக் கேட்டேனே!’

“என்ன சொன்னார்” என்றான் ஆவலுடன்.

“விவரம் போதாதாம் கணேஷ், நாளை சாயங்காலம் நீங்க ஃப்ரீன்னா வீட்டுக்கு வாங்களேன் ராமபத்ரன் வரார்.”

“வர்ரேன் ஸார்” என்று டெலிபோனை வைத்து, “என்ன வசந்த்,” என்றான். உள்ளே நுழைந்த வஸந்த் வியர்த்திருந்தான். பானையை அலக்காகத் தூக்கி நீர் குடித்தான்.

“என்ன? போன காரியம் என்ன ஆச்சு?”

“கே.கே.நகர் மூணாவது கிராஸ்ல தீபக் வீடு இருக்கு!”

“அடப்பாவி! எப்படிடா கண்டுபிடிச்சே?”

“ரொம்ப சிம்பிள். நம்ப வாசல்லே இருக்கிற வெத்திலை பாக்குக் கடைக்காரன் இருக்கான் பாருங்க. அவன்கிட்ட ஒரு அக்ரிமெண்ட் வெச்சிருக்கேன். நம்ப ஆபீ**ஸு**க்கு வந்து நிக்கிற வண்டிகளை தேதி வாரியா டைப் வாரியா ஒரு நோட் புக்கில நம்பர் மட்டும் எழுதி வைச்சிருடான்னு....”

“கிரேட்!”

“தீபக் நம்பளை ஏமாத்திட்டதா நினைச்சான் இல்லை? அவன் ஸ்கூட்டர் நம்பரை எழுதி வைச்சிருந்தான். ஆர்.டி.ஓ. ஆபீஸ்ல எனக்குத் தெரிஞ்ச கிளார்க்....

“ஒருத்தி இருக்கா?”

“கதையை வளர்த்துவானேன்... விலாசம் கண்டுபிடிச்சுட்டேன். அங்க போய் விசாரிச்சுக் கூடப் பார்த்துட்டு வர்ரேன்!”

“வசந்த், லீனாவைப் பார்த்தியா?”

“படவா ராஸ்கல்! அவளை அழைக்சுக்கிட்டு கோல்டன் பீச் போயிருக்கானாம்”.

tamilpdffree.wordpress.com

“எதுக்காகப் பொய் அட்ரஸ் கொடுத்தானாம்!”

“தெரியலை பாஸ், ஆனா நான் ஒரு காகிதத்தில் எழுதி வெச்சுட்டு வந்திருக்கேன். அண்ணா வந்ததும் காட்டுன்னு”...

“நீ அட்ரஸ் தராட்டாலும் எங்களுக்குக் கண்டுபிடிக்கத் தெரியும்னுட்டு...”

“அவன் திரும்பி வருவானா வசந்த்?”

“அதெல்லாம் கவலைப்படாதீங்க’ எனக்கென்னவோ தீபக்கைச் சந்தேகப்படறது கொஞ்சம் ஃபார் ஃபெட்செட்னு தோணுது. சாயங்காலம் ஆபீசுக்கு வந்துருவான் பாருங்க.... அப்படியும் வர்ற வழியில் கொஞ்சம் லைப்ரரி போய்ட்டு வந்தேன் பாஸ். என் ஆராய்ச்சியையும் தொடங்கிட்டேன்!”

“நான் ப்ரொபஸர் ராமபத்திரனைப் பார்க்கணும். எந்த லைப்ரரி போயிருந்தே?”

“கன்னிமாரா! அதானே நமக்கு சுரங்கம்!”

“வசந்த். வா மறுபடி அங்கே போய் அரைமணி இருந்துட்டு அப்புறம் நம்ம ரூமுக்குப் போகலாம். எனக்கு லேஸரைப் பத்திக் கொஞ்சம் படிக்கணும், அப்புறம் ஹோலோ கிராஃபி....”

“எனக்கு இஜிப்ஷியன் புக் ஆஃப் தி டெட்பார்க்கணும்”

“கருட புராணத்தை விட்டுட்டியா?’ என்று சிரித்தான்.

நூல் நிலையத்தில் அடுக்கடுக்கான புத்தகங்களுக்கு இடையே ரெஃபரன்ஸ் செக்ஷனுக்குச் சென்று கணேஷ் சில ஆங்கிலக் கலைக்களஞ்சியங்களைத் தேடினான். வசந்த் ஏணி வைத்து உச்சாணியில் இருக்கும் சில பழைய புத்தகங்களைத் தேடினான்.

சின்னச் சின்னக் குறிப்புகளாக இருவரும் எடுத்துக் கொண்டு ஆபீஸ் அறைக்குத் திரும்பி வந்தார்கள்.

அவர்கள் தம் அறைக்குத் திரும்பியபோது ஆச்சரியம் காத்திருந்தது. தீபக்கும் லீனாவும் ஸ்கூட்டர் அருகில் நின்று கொண்டிருந்தார்கள்.

“அட! எப்ப வந்தீங்க”, என்றான் கணேஷ். அவன் குரலில் சந்தோஷம் இருந்தது.

“வந்து பத்து நிமிஷமாச்சு! எங்க போய்ட்டிங்க ரெண்டு பேரும்” என்றான் தீபக்.

“தீபக்! எதுக்காக நீங்க எங்ககிட்ட தப்பு அட்ரஸ் கொடுத்துட்டுப் போனிங்க?”

“ஒருநாளாவது மற்றப் பேர் தொந்தரவில்லாம லீனாவோட நிம்மதியா இருக்கலாமேன்னுட்டுத்தான், ஸாரி!

“கணேஷ்! வஸந்த்! உங்களுக்கு ஒரு குட் நியூஸ்! நானும் தீபக்கும் கல்யாணம் செஞ்சுக்கப் போறோம்! இல்லை தீபக்?”

“ஆமா ஸார்! லீனா இப்ப ஆதரவில்லாத தனியான பொண்ணு. சொத்து இவளுக்கு வர்றதோ வரலையா அதைப் பத்தி எனக்குக் கவலை இல்லை. இவளை நான் மனமார நேசிக்கிறேன். இன்னிக்கிப் பூரா அதைப் பத்தித்தான் பேசிக்கிட்டிருந்தோம்.”

“உன்னைக் கல்யாணம் செஞ்சுக்கறதை விட பெரிய பாக்கியம் வேற ஏதும் இருக்க முடியாதுன்னு தீபக் சொன்னார் ஸார்!”

“வாஸ்தவம்! பெரிய பாக்கியம்தான்!”

“வஸந்த், நீங்க நக்கலாப் பேசறீங்க! நான் சொத்துக்காக மட்டும்... ஐ மீன் சொத்துக்காக இவளை விரும்பலை... ஒரு பைசா இல்லாம வந்தாக் கூட நான் இவளை ஏத்துக்கத் தயார்.”

“கணேஷ், நீங்க என்ன சொல்றீங்க?’ என்றான் தீபக்.

“நான் என்ன சொல்றது. லீனா கொஞ்சம் ஃபிக்கிள் மைண்டட். மேலும் சில போலீஸ் குழப்பங்கள்ளாம் வேற இருக்கு. எல்லாத்தையும் நிதானிச்சு அப்புறம் தீர்மானிங்க.’

“தீர்மானிச்சாச்சு!” என்றாள் லீனா.

“சந்தோஷம்! சாக்லெட் சாப்பிடுங்க. வஸந்த், அந்த சாக்லெட் பெட்டியை எடு. காலைல நம்ப கட்சிக்காரர் அவர் மாப்பிள்ளை அமெரிக்காவில் இருந்து அனுப்பிச்சதை கொடுத்தார்.”

வஸந்த் மௌனமாக அதை அலமாரியிலிருந்து எடுத்தான்.

சாக்லெட் பெட்டியின் மேல் உறையைப் பிரிக்கும் முன் கணேஷ் அதை அகஸ்மாத்தாகப் பார்த்தன். அப்புறம் கூர்ந்து பார்த்தான்.

“வஸந்த், அந்த சாக்லெட் பெட்டியைக் கொஞ்சம் கொடு.’

“என்ன பாஸ்?’

பெட்டியின் பக்கவாட்டு ஓரத்தில் சீரான கோடுகள் அச்சிட்டிருந்தன...

tamilpdffree.wordpress.com

## 29

**சா**க்லெட் பாக்கெட்டில் அச்சாகி இருந்த கோடுகளுக்கும் குமாரவியாசனின் இரும்புப் பெட்டியிலிருந்த நோட்டுப் புத்தகத்தில் தென்பட்ட கோடுகளுக்கும் ஒற்றுமை இருந்தது போல் தெரிந்தது. விசாரிக்க வேண்டும். கணேஷ் உறையை மட்டும் கிழித்து வைத்துக் கொண்டு அமெரிக்க இனிப்பை வினியோகித்தான்.

தீபக், “கணேஷ்! நடந்தது எல்லாத்தையும் லீனா விவரமாச் சொன்னா. பயங்கரம். இனி நாங்க அங்க போய் தங்கறதா உத்தேசம் இல்லை. குத்தகைக்கு விட்டுறலாம்,’ என்றான்.

“அவசரப்படாதீங்க.”

“தீபக், நீங்க அந்தப் பண்ணைக்குப் போனிங்களா?” என்றான் கணேஷ் திடீரென்று.

அவன் சற்றும் தயக்கமின்றி, “போனேன். வியாசனை பார்த்தேன்,” என்றான்.

“எப்ப?”

“பதினஞ்சு இருபது நாள் இருக்கும்.”

“இதை நீங்க என்கிட்ட சொல்லவே இல்லியே!

“நீங்க கேக்கவே இல்லியே...குமாரவியாசன் கிட்ட லீனாவுடைய சொத்து விவகாரத்தைப் பத்திக் கேட்க அங்கே போனேன். அவர் கொஞ்சம் முறைப்பாப் பேசினார். தகறார் பண்ணுவார் போல இருந்தது. அதனாலதான் பேசாம ஒரு லாயர் மூலமா டீல் பண்ணலாம்னு உங்கிட்ட வந்தேன்.”

“வேற யாரையாவது சந்திச்சிங்களா அங்கே?”

“ஆமாம் வெங்கடேஸ்வரன்னு ஒருத்தரைப் பார்த்தேன். வியாசன் அறிமுகம் செஞ்சு வெச்சார். பண்ணை குத்தகை பற்றிப் பேச்சு வார்த்தைக்கு வந்திருக்கிறதாகச் சொன்னார்.”

கணேஷ் வஸந்தைப் பார்த்தான். அவன் நெற்றிப் புருவத்தை உயர்த்தினான்.

“வெங்கடேஸ்வரனுக்கே கொடுத்துறலாம்னு தோணுது. லீனா, நீ என்ன சொல்றே?

“நீங்க என்ன சொன்னாலும் சரி தீபக்!”

“நீங்க செஞ்ச உதவிக்கு நன்றி” என்றான் தீபக்.

“நாட் ஸோ ஃபாஸ்ட் மிஸ்டர் நன்றி போதாது. பில் என்ன ஆவது? பதினைஞ்சுநாள் பேட்டா? வாங்கின அடிகள்?”

“இரு வஸந்த். தீபக், போலீஸ் இன்னும் விசாரிச்சுக்கிட்டிருக்காங்க. அப்புறம் லீனாவை ஒரு டாக்டர் கிட்ட அழைச்சுக்கிட்டுப் போகணும்,”

“எதுக்கு?”

கணேஷ் லீனாவைப் பார்த்தான். “வஸந்த், நீ கொஞ்ச நேரம் லீனாவோட பேசிக்கிட்டிரு. தீபக், கொஞ்சம் வாசல் பக்கம் போங்க.”

தீபக் வெளியே சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தான்.

“என்ன சொல்ல வந்தீங்க?”

“தீபக் நீங்க லீனாவைக் கல்யாணம் செஞ்சிக்கறதாத் தீர்மானிச்சிருக்கீங்க. அதனால் சில விஷயங்களை உங்ககிட்ட சொல்ல வேண்டிய இருக்கு. பண்ணைக்கு நாங்க போன முதல் தினமே வியாசன் எங்க கிட்ட ஒண்ணு சொன்னார். இரண்டு வருஷத்துக்கு முந்தி லீனாவுக்குப் பிரமை பிடிச்சு, பித்துப் பிடிச்சு ஒரு வெறியில் ஒரு ஆளைக் கொன்னதா!”

“நான்சென்ஸ்! நீங்கள்ளாம் நம்பினிங்களா?

“முதல் கொலையில் தடயங்களைப் போலீஸ் தேடிக்கிட்டு இருக்கறப்ப லீனாவுடைய காது ஸ்டட்டும் கை வளையல்களும் உடலுக்கு அடியில் இருந்தது.”

“நீங்க என்ன சொல்ல வரிங்க?”

tamilpdffree.wordpress.com

“முழுக்கக் கேளுங்களேன். இரண்டாவது மரணம் குமாரவியாசன். அவரைக் கொலை செய்த ஆயுதம் லீனாவுடைய பெட்டியில் இருந்தது.”

“அதனால் லீனாதான் எல்லாத்தையும் செஞ்சிருப்பான்னு சொல்றீங்களா? அபத்தம்”

“அப்படிச் சொல்லலை. அவபேரில் சந்தேகத்தை ஏற்படுத்த ஒவ்வொரு முறையும் முயற்சி செய்திருக்கிறது தெரியுது.”

“யார்?”

“யார் தெரியலை. அது தெரியாத வரைக்கும் லீனா ஒரு முகம் தெரியாத ஆபத்தில இருக்கான்னுதான் நாம நினைச்சுக்கிட்டுக் கொஞ்சம் ஜாக்கிரதையா இருக்கணும்.”

“அப்ப டாக்டர் எதுக்கு?”

“அரச மரத்தடியில அந்த உருவத்தைப் பார்த்தபோது அங்க கேட்ட சில வாக்கியங்களைத் தான் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில சொல்லியிருக்கிறதா லேசா ஞாபகம் வருதுன்னு லீனா சொன்னாள். எனக்கு என்னவோ அவளை யாரோ எப்பவோ ஹிப்னடைஸ் பண்ண முயற்சி செஞ்சிருக்கலாம்னு தோணுது. அதை ஒரு சைக்கியாட்ரிஸ்ட்டால கண்டு பிடிக்க முடியும்னு தோணுது.”

தீபக் யோசித்தான். “சரி நான் அவளை அழைச்சிட்டு வர்றேன். டாக்டர் யாரு?”

“பாலகோபால்னு...ச் நான் அப்பாய்ண்ட்மெண்ட் வாங்கிட்டு உங்களுக்கு டெலிபோன் செய்யறேன். சரியான நம்பர் கொடுங்க.”

“ஸாரி! ஒரு நாளைக்குத் தொந்தரவு இல்லாம இருக்கலாம்னுட்டு....தப்பா நம்பர் கொடுத்தேன்.”

“பரவாயில்லை. எதுக்கும் ஒரு ஜாக்கிரதை. அவளைத் தனியா எங்கயும் அனுப்பாதிங்க. நைட் ஷோ போகாதீங்க... விளையாட்டா எதையும் செய்யாதீங்க.”

அவர்கள் போனவுடன் “தீபக் என்ன சொன்னான் பாஸ்?”

“ஹீ இஸ் க்ளீன். இதுவரை அவன் பொய் சொல்லலை. பாலகோபால்கிட்ட அவளைக் காட்டறதுக்கு ஒத்துக்கிட்டான். அவளை ஜாக்கிரதையாப் பார்த்துக்கச் சொன்னேன்...”

கணேஷ் தன் பைக்குள்ளிருந்து அந்தக் காகிதத்தை எடுத்துப் பார்த்தான்,. “கோடுகள்! அதே கோடுகள்!” என்றான்.

“பாஸ் அதை என்கிட்ட கொடுங்க! இது அமெரிக்கால வாங்கின சாக்லெட் பெட்டி, அமெரிக்கன் சென்டர்ல தருணான்னு என் கஸின் ஒருத்தி இருக்கா...”

“சரி சரி, உனக்கு நூறாயிரம் கஸின். இதை எடுத்துட்டு இந்தக் கோடுகளுக்கு என்ன அர்த்தம்னு கண்டுபிடி. வஸந்த்! ஆரம்பித்தில் பண்ணைல தீபக்கைப் பத்தி லீனா என்ன சொன்னா?”

“ஃப்ரெண்டுன்னு சொன்னா அப்புறம் பண்ணை நிர்வாகம் பற்றி எல்லாம் சொல்லித் தர்றதா இருக்கார். அவர் ஒரு எம்.பி.ஏ.ன்னு சொன்னா,”

“உனக்கு நல்ல ஞாபக சக்திடா. அந்த ஆள் நிஜமாவே ஒரு எம்.பி.ஏ.யான்னு பாரு....



tamilpdfree.wordpress.com

“டன்! அப்புறம்?”

“அப்புறம் உன் ஆராய்ச்சியைப் பார்த்துக்க. நாளைக்குச் சாயங்காலம் இந்தக் கேஸ்ல முக்கியமான தருணம் ராமபத்திரன்கிறவரைச் சந்திக்கப் போறேன். அந்த உருவ வெளிப்பாடெல்லாம் விஞ்ஞான பூர்வமா சாத்தியமான்னு தீர்மானமாத் தெரிஞ்சுடும்.”

“ஹோலோ கிராஃபி அண்ட் ஆல் தட் ஜாஸ்!”

“ஆமாம்.,

“சரி, குட்நைட். கொஞ்சம் தூங்கலாம்னு தோணுது.”

மறுதினம் காலை பத்து மணிக்கு கணேஷ் ராஜேந்திரனுக்கு போன் செய்தான். “ராஜேந்திரன்! கணேஷ் ஹியர்! மேற்கொண்டு ஏதாவது தெரிஞ்சுதா?”

“எதில?”

“குமாரவியாசன், நெப்பூர் பண்ணை சம்பவங்கள்.”

“ஓ, அதுவா....? அதைப் பத்தி மேல விசாரிக்க என் கலீக் ஜெயன் தற்போது பார்த்துக்கறார். அதுக்குள்ள ஒரு பொலிட்டிக்கல் மர்டர் வந்துருச்சு. எலெக்ஷன் டயமில்லை... சூடு வேறே1....நீங்க ஏதவாது தெரிஞ்சுக்கிட்டிங்களா3

“அதிகம் ப்ராக்ரஸ் இல்லை. வியாசனுடைய சில சில பிஸினஸ் தொடர்புகள் எல்லாம் கொஞ்சம் பார்த்தோம்...”

“நாங்க கூட– லெட்டர்ஸ் எல்லாம் பார்த்தோம். வெங்கடேஸ்வரன், தீபக்...அப்புறம் ஒரு பாம்பே பார்ட்டி... இவுங்கதானே?

“ஆமாம்,” என்றான் போலீஸ் துடிப்பை வியந்து.

“வெங்கடேஸ்வரனை விசாரிச்சோம்...ஏதோ லீஸ் பத்தி பயந்து பயந்து பேசினார்... தீபக் உங்க கிட்ட வந்ததா தகவல்.”

“சரிதான்... எதையும் விட்டு வைக்கலை நீங்க!”

“வி டு அவர் ஜாப்... இருந்தாலும் ஒண்ணுமேல ஒண்ணு வந்துகிட்டே இருக்கிறதினால்... ஆள் பத்தலை...நீங்க ஃப்ரியா இருக்கிறபோது வாங்க பேசுவோம்... ஒரு தியரி வெச்சிருக்கேன்... பண்ணையை சீல் பண்ணியிருக்கோம்!”

“வரேன் ராஜேந்திரன்!”

கணேஷ் யோசித்தான். மற்றொரு தியரி! மற்றொரு வியாக்கியானம்...இப்போது வேண்டாம். ஏற்கனவே குழப்பம். இன்றைக்கு ராமபத்திரன் மட்டும் போதும்...அதற்குமுன் டாக்டர் பாலகோபாலுக்கு டெலிபோன் செய்து ஒருமுறை லீனாவைக் காட்ட ஏற்பாடு செய்ய வேண்டும்.

ராமபத்ரனின் கைக்குலுக்கல் அழுத்தமாக இருந்தது “இவர்தான் கணேஷ்... சொன்னேனே...” என்றார் ப்ரொபஸர் ராமச்சந்திரா. “லேஸர்ல நிறையச் சந்தேகம் இருக்கு இவருக்கு... ப்ரில்லியண்ட் லாயர்... இவர் டாக்டர் ராமபத்திரன் அத்தாரிட்டி...

tamilpdfree.wordpress.com

இவருக்கு லேஸரைப் பத்தி தெரியாததை ஒரு சின்ன ஸ்டாம்பின் பின் பக்கத்தில் எழுதிடலாம்.”

“நைஸ் ஸீயிங் யூ டாக்டர்!” என்றான் கணேஷ், ராமபத்திரனின் கண் பார்வையில் கூர்மையும் கணேஷை நிறுத்தி நிதானமாகப் பார்க்கும் இச்சையும் தெரிந்தன. நல்ல வலுவான உடற்கட்டு. கழுத்தில் மெலிதான தங்கச் சங்கிலி... புஜங்களில் மொசு மொசு என்று ரோமம்.

“உங்களைப் பத்தி நிறைய கேள்விப் பட்டிருக்கேன் மிஸ்டர் கணேஷ்! நீங்க என்ன கேட்க விரும்பினீங்க?”

“நேத்திக்குத்தான் நான் ப்ரொபஸர்கிட்ட பேசிக்கிட்டிருந்தபோது நான் சமீபத்தில் ஒரு பண்ணையில் இரவில் பார்த்த காட்சிகளை விவரித்து அவைகளெல்லாம் விஞ்ஞானப்படி சாத்தியமான்னு கேட்டேன். அவர் ஹோலோகிராஃபி மூலம் அதெல்லாம் சாத்தியம்னு சொன்னார்...”

“இருங்க! நீங்க பார்த்த காட்சி என்ன?”

“ஒரு உருவம், பெண் உருவம்.”

“முப்பரிமாணம்?”

“ஆமாம், ஆமாம்...த்ரி டைமன்ஷன்தான்...”

“சலனம் இருந்ததா?”

“இருந்தது. மேலேயும் கீழேயும் நடக்கிறதும், அழறதும், வாயை அசைக்கிறதும் கூடத் தெரிஞ்சது. வெட்ட வெளியில் உருவம்.. திரை ஏதும் இல்லை.

“ஏதாவது ப்ரொஜக்ஷன் சாதனங்கள்...”

“தெரியலை.. இருந்தா மறைச்சு வெச்சிருக்கணும்...”

“தேடிப் பார்த்தீங்களா?

“பார்த்தோம், தென்படலை எனக்கென்னவோ போர்டபிளா ஏதாவது....”

“கொஞ்சம் இருங்க.. ஹோலோகிராஃபின்னா என்னன்னு உங்களுக்குத் தெரியுமா?”

“தெரியாது.. தெரிஞ்சுக்க விரும்பறேன்.”

“லா படிச்சவங்களுக்குப் புரிய வைக்கறது கஷ்டம்.”

“கொஞ்சம் முயற்சி பண்ணிப் பாருங்களேன்.”

ராமபத்திரன் நிமிர்ந்து ராமச்சந்திராவைப் பார்த்து ஒருமுறை போனால் போகிறது என்ற பாவனையில் தோள்களைக் குலுக்கிட்டு “ஒரு லேஸர் சாதனத்திலிருந்து கொஹிரண்ட் ஒளிக்கற்றையை முதல்ல ரெண்டாப் பிரிக்கணும். பிரிச்ச ஒளிக்கற்றையில் ஒண்ணு ஆப்ஜெக்ட் மேல... அதாவது அந்தப் பெண் சொன்னிங்களே, அவமேல பிரதிபலிச்சி ஒரு ஃபோட்டோ ப்ளேட்ல படணும். ரெண்டாவது ஒளிக்கற்றை நேரா அந்த ப்ளேட்ல படணும். அப்படி செய்யறபோது இரண்டு கற்றைகளும் சேர்ந்து ஒரு சிக்கலான இண்டர்ஃபெரன்ட்

tamilpdffree.wordpress.com

பாட்டர்ன் உருவாகுது...இப்ப அந்த போட்டோ-ப்ளேட்டை டெவலப் செய்யணும். அதுக்குப் பேர்தான் ஹோலோகிராம். இந்தமாதிரி டெவலப் பண்ண ப்ளேட்டை மறுபடி ஒரு லேஸர் ஒளிக்கற்றையினால் ஒளிரும்படி செய்தா அந்த ப்ளேட்டுக்கு முன்னாடி அந்த முப்பரிமாண உருவம் தெரியும். நீங்க பார்த்த உருவத்தில் வர்ணங்கள் தெரிஞ்சுதா?”

“இல்லை. எல்லாம் ஒருவித சாம்பல் நிறம்... மனித பரிமாணங்களுக்குக் கொஞ்சம் சின்னதுன்னு சொல்லலாம்... மற்றொரு விஷயம். அந்தக் கட்டிடத்து மின்சாரத்தின் மெயின் ஸ்விட்சை அணைச்சப்புறம்கூட அந்த பிம்பம் தெரிஞ்சுது...பாட்டரி ஏதாவது...”

“லெட் மி திங்க்....!” ராமபத்திரன் தன் புருவங்களுக்கிடையில் கிள்ளிக் கொண்டு யோசித்தார்.

“ம்ஹூம்.. நீங்க சொல்ற அளவுக்குப் பெரிசா ஹோலோகிராம் எவரும் செய்ததா எனக்குத் தெரியலை. அப்புறம் அந்த பிம்பம் நகர்றது பேசறதுன்னெல்லாம் சொல்றீங்க? அதுவும் எனக்குத் தெரிஞ்ச அளவுக்குச் சாத்தியமில்லை...”

“ராமபத்திரனுக்குத் தெரிஞ்ச அளவுன்னா... அதுக்கு மேல கேள்விகளே வேண்டாம் கணேஷ்” என்றார் ராமச்சந்திரா.

கணேஷ், “தாங்ஸ்,” என்றான் சற்று ஏமாற்றத்துடன்.

“ஏன் கணேஷ் ஒரு மாதிரி ஆய்ட்டீங்க?”

“விஞ்ஞானப்படி சாத்தியம்னு நிச்சயம் நம்பிக்கிட்டிருந்தேன் ஸார். என் சித்தாந்தம் பூரா பாழ் இப்ப!”

“ஸாரி!” என்று சிரித்தார் ராமபத்திரன்.

“பின்ன அந்த உருவம் என்னதான் ஸார்?” என்றான்.

“உங்க மனப்பிரமையாக்கூட இருக்கலாம்.”

“இல்லை. அஞ்சு பேர் பார்த்திருக்கோம். ஒரு போலீஸ் உயர் அதிகாரி உட்பட!”

“அப்ப பேய் பிசாசுன்னு சொல்றாங்களே!”

“டாக்டர் ராமபத்திரன், நீங்க ஒரு தேர்ந்த விஞ்ஞானி. உங்களைக் கேட்கிறேன். பேய் பிசாசு இருக்கா? நீங்க நம்பறீங்களா?”

“நான் பார்த்ததில்லை ஆனா அதனால நான் நம்பலைன்னு என்னால சொல்ல முடியாது. சொல்ல கூடாது. என்னுடைய அறிவுக்கும் சில எல்லைகள் இருக்கு. ரொம்பப் பேர் பேய் இருக்கிறதா சொல்றாங்க. பார்த்ததாச் சொல்றாங்க... அவ்வளவுதான் எனக்குத் தெரியும். எனக்குச் சொந்த அனுபவம் இல்லாததாலே அதைப் பற்றித் திட்டவட்டமா ஒண்ணும் சொல்ல முடியாத நிலையிலிருக்கேன்... எனிவே உங்ககிட்ட பேசிகிட்டிருந்ததில் சந்தோஷம். நான் ஹோலோகிராம் பற்றி சொன்னது ஏதாவது உங்களுக்குப் புரிஞ்சுதா?”

“இல்லை சார்.”

“நினைச்சேன். இதைவிட எளிமையா என்னால சொல்ல முடியாது.”

tamilpdffree.wordpress.com

கணேஷ் திரும்பத் தன் அறைக்கு வந்தபோது மாலை ஏழரை ஆகிவிட்டது. வஸந்த் இன்னும் வரவில்லை. பையன் காத்திருந்தான். அன்று வந்த கடிதங்கள் மேஜைமேல் இருந்தன. அவற்றை ஒவ்வொன்றாகப் பார்வையிட்டான்... பார் அஸோஸியேஷன் இன்கம்டாக்ஸ் டிபார்ட்மெண்ட்... ரோட்டரி கிளப்...

"வெந்து போவுது ஃபானைப் போடுரா!" என்றான்.

பையன் மின்விசிறியின் விசையைத் திருக சொத் என்று மேஜைமேல் ஏதோ விழுந்தது, கணேஷ் திடுக்கிட்டு அதை பார்த்தான்.

வெட்டுண்ட கை.

## 30

கணேஷ் அதிர்ந்து போய் அருவருப்புடன் அந்தக் கையை விசித்திரமாகப் பார்த்தான். மேலே பார்த்தான். மின் விசிறியை போட்டபோது விழுந்ததா? அல்லது?

செய்தித்தாள் ஒன்றை எடுத்து அதை–அந்த கையை–பேப்பர் விரல்களால் எடுத்தான். விறகுக் கட்டை போல முற்றிப் போன, நாள் பட்டுப்போன நீலம் பாரித்த கை. மெலிதான அது என்ன நெடி? அதைப் பேப்பரில் சுற்றினான்.

கணேஷ் யோசித்தான். என்ன முயற்சி இது, எதற்காக? யார்? எப்படி? எப்போது? ஜன்னல்கள் திறந்திருந்தன. சாத்தியம்... என்னைப் பயப்படுத்த முயற்சியா? யார் கை இது? சமீபத்தில் வெட்டப்பட்டதல்ல. பதப்படுத்தப்பட்டது. எங்கிருந்தாவது புதைகுழியிலிருந்து வந்ததா? எங்கே இந்த வஸந்த் பயல்? என்னை எதற்காகப் பயப்படுத்த வேண்டும். நான் விசாரிப்பது பற்றி யார் யார் அறிவார்! தீபக், லீனா, வெங்கடேஸ்வரன்... மறுபடி இவர்களைச் சுற்றியே வருகிறதே!

டெலிபோன்.

"ராஜேந்திரன், கணேஷ் ஹியர். ஒரு ரிக்வஸ்ட்"

சொல்லுங்க கணேஷ்."

"என் ரூம்ல ஒரு வினோத நிகழ்ச்சி மேலே இருந்து 'சொத்து'னு ஒரு கை விழுந்தது."

"கம் எகெய்ன்?"

"தனியா ஒரு வெட்டுண்ட கை ஸார்!"

"என்னய்யா இது. அகாதா கிறிஸ்டி நிறையப் படிக்கிறீர்களா? கையா?"

"ஆமாம், நீங்க ஒரு உதவி செய்யணும்."

"கைக்குச் சொந்தக்காரரைக் கண்டுபிடிக்கணுமா?"

tamilpdffree.wordpress.com

“வேண்டாம். உங்க ஃபாரன்சிக் லாப்ல கொடுத்து இந்தக் கை எங்கிருந்து வந்திருக்கக் கூடும், எவ்வளவு பழசு. இது எப்படி வெட்டப்பட்டதுன்னு கண்டுபிடிச்சுச் சொல்ல முடியுமா?”

“ம்ம்... முடியும்னு நினைக்கிறேன். ரத்தம் இருக்கா?”

“ம்**ஹூ**ம்.. சுத்தமா இருக்குது. ஒரு விதமான அரோமாட்டிக் ஸ்மெல் அடிக்குது.”

“கணேஷ்! என்னய்யா கேஸ் இது! ஜாக்கிரதையா இருங்க... உங்க இடத்தை ஒரு கான்ஸ்டபிள் போட்டுப் பாதுகாக்கச் சொல்லட்டுமா?

“வேண்டாம்! தேவை இருந்தா சொல்றேன். உங்களுக்கு மேற்கொண்டு ஏதாவது தெரிஞ்சுதா?”

“பண்ணைச் சரித்திரத்தைப் பார்த்துக்கிட்டிருக்கோம். விரல் ரேகைகளை அலசிக்கிட்டிருக்கோம். ரிக்கார்ட் பண்ணின சாட்சிகள் எல்லாம் மறு பரிசீலனை செய்துகிட்டிருக்கோம். கணேஷ் இந்தக் கேஸில் சம்பிரதாயமா நாம் நினைச்சுக்கிட்டிருக்கிறதிலிருந்து துப்புரவா விலகிப் போய் புதுசா ஒண்ணைப் புடிச்சாதான் விடை கிடைக்கும்னு என்னுடைய உள்ளுணர்வு சொல்லுது. அது கிடைக்கலைன்னா கேஸை க்ளோஸ் பண்ண வேண்டி வந்துடும்.”

டெலிபோனை வைத்தான்.

“என்ன வஸந்த், நாள் பூரா அம்பேல் ஆயிட்டே?

வஸந்த் காகிதங்கள் பீறிடும் ப்ரீஃப்கேஸுடன் உள்ளே வந்து “ஷ்...அப்பாடா என்ன உஷ்ணம்! இருட்டற வேளையில இப்படி வேர்க்குது. எங்கே பாபு?” என்று உட்கார்ந்தான். “இது என்ன பொட்டலம் டிபனா?

“பிரிச்சுப் பாரு.”

வஸந்த் அதை எடுத்தான். “என்னது? நீட்டமா இருக்கே? பேப்பர் மசாலாவா...” திறந்தான். “ஓ! கிருஷ்ணா? வாசுதேவா! பரந்தாமா, அனாதரட்சகா! என்ன சோதனை இது?” நெருப்பைத் தொட்டவன் போல மேஜை மேல் அதை வைத்துவிட்டான். “என்ன பாஸ், பயங்கரமோ பயங்கரம் இது... அய்யிய்யோ...ஈ...ச் கருவாடு மாதிரி காஞ்சுப் போன கையா எங்க கிடைச்சது உங்களுக்கு?”

“மேலேருந்து தொப்?”

வஸந்த் மேல்நோக்கினான். “கூரையா?

“இல்லை ஃபான்!

“இது என்ன நாத்தம்?”

“ஃபார்மலின்னு நான் நினைக்கிறேன்!

“மறுபடி விஞ்ஞானமா! பாஸ்...” வஸந்த்தின் விழிகள் அகன்றன... “எல்லாம் பொருந்துது. உங்க கட்சி தோத்துப்போச்சு! அட!”

“என்னடா உளறல்?”



tamilpdffree.wordpress.com

“இன்னிக்கு நான் தோண்டி எடுத்த சமாசாரங்களில் இந்தக் கை இருக்கு. இது விழுந்து ஆக வேண்டிய கை!”

“புரியற மாதிரி பேசு!”

“மத்தியானம் பூரா ஓல்டுமேன் கிருஷ்ணமூர்த்தியை குடாய்ஞ்சு அவர்கிட்ட இருக்கிற ஆதாரங்கள் அத்தனையும் பார்த்தேன்.”

“கிருஷ்ணமூர்த்தி! ஓ அவரா? ‘சில வினோதங்கள்?”

“ஆமாம்... புத்திரவதி யாரு? அவ என்ன செஞ்சா எப்படி வாழ்ந்தா? வியாசர்கள் பரம்பரை எப்படி எல்லாத்தையும் அவுத்துட்டேன். அதுக்கு முன்னால இதைக் கேளுங்க. ஆச்சரியப் படுவீங்க...”

வஸந்த் ஒரு காகிதத்தைத் தேர்ந்தெடுத்துப் படித்தான்.

“இஃதிப்படி இருக்க புத்திரவதியின் செயல்களில் குறுக்கிட்டு விசாரப்படுபவர்களுக்கு ஏகாந்திரமான கெடுதல்கள் ஏற்பட்ட வண்ணமிருக்கும். சால்வை பட்டாடைகள் எரிந்து போகும். மனித உடல் உறுப்புகள் கை கால் நகங்கள் ஸ்தனங்கள் போன்றவை விட்ட அட்டத்தினின்றும் வீழா வண்ணம் இருக்கும்... என்ன சொல்றீங்க!”

“இதை எங்கடா புடிச்சே?”

“கிருஷ்ணமூர்த்திகிட்ட பொடி பொடியாய் போற குப்பைக் காகிதங்களில் வியாச சரித்திரம் விரிஞ்சிருக்கு. முதல்ல இருந்து நடந்த ஒவ்வொரு சம்பவத்துக்கும் யார் தெரியுமா காரணம்? புத்திரவதி! வரிவரியா சீனேரியோ தயார். அந்தம்மா ஒரு தற்கொலைக் கே**ஸ**. லீனாவுக்கு நேர்வழியில் பாட்டி. அதனால்தான் பாருங்க. உருவ ஒற்றுமை... புத்திரவதி ஒரு ஸீனியர் வியாசனின் மனைவி. அந்தாள் அவளை விவரிக்க முடியாத கொடுமைப்படுத்தியிருக்கார்.”

“ஜஸ்ட் எ மினிட்! ஓடாதே! நீ என்ன கண்டுபிடிச்சே?

“நடந்தது ஒவ்வொண்ணுக்கும் பைசாச வியாக்கியானம் பச்சக்குனு பொருந்துது. இந்தக் கடைசி கை வரைக்கும்.”

“வஸந்த், நீ நிஜமாவே அப்படியெல்லாம் நம்பறியா?”

“நிச்சயம் பாஸ்; வேற வியாக்கியானமே கிடையாது. என்ன ஆச்சு உங்க ஹோலோ கிராஃபி?”

“ராமபத்திரன் அது சாத்தியமில்லைன்னு சொல்லிட்டார்,”

“பாத்திங்களா. என் கட்சியில சுலபமா சாத்தியம்; புத்திரவதியுடைய பிசாசு ரூபம் அது. பார்த்தமில்ல?”

கணேஷ் யோசித்தான். “நான் ஒவ்வொண்ணா கேக்கறேன். அதுக்கு உன் வியாக்கியானம் என்ன சொல்லு?”

“அப்படி வாங்க வழிக்கு.”

“முதல்ல குமாரவியாசன் நம்பகிட்ட சொன்ன சம்பவம்...”

tamilpdffree.wordpress.com

“லீனா ஒரு பண்ணைப் பையனை டாராக் கிழிச்சுட்டான்னு சொன்னதுதானே?”

“ஆமாம் அது நடந்துதா?”

“நடந்தது. ஆனா அதை செஞ்சது லீனா இல்லை புத்திரவதி!”

“அப்புறம் நாம பார்த்த உருவம்?”

“அஃப் கோர்ஸ் இறந்த புத்திரவதியின் பிசாசு ரூபம்தான். வேறென்ன? அரசமரத்திலதான் தூக்குப் போட்டுத் தொங்குச்சாம், கார்த்திகை மாசம். இறந்த அந்த சமயத்திலே இருந்து இரண்டு வருஷத்துக்கு ஒருமுறை. படிக்கிறேன் கேளுங்க. தவறாமல் பல தினங்கள் புத்திர்வதி அருவ ரூபத்தில் காற்றில் மிதப்பதைக் கண்டவர் பலர். கிருஷ்ணமூர்த்தின் குறிப்புகள் அப்ப எழுதி வெச்சது...எப்ப? முப்பதுகளிலே!”

கணேஷ் சிந்தனையில் ஆழ்ந்திருக்க வஸந்த் தொடர்ந்தான். “குமாரவியாசன் கபால மோட்சத்துக்கு வருவோம். படிக்கிறேன் கேளுங்க... ஆயுதங்கள் பிரயோகிப்பதும் அவ்வாயிதங்கள் மறைந்து போவதும் மறைந்து பிறிதோர் இடத்தில் தோன்றுவதும் தோன்றுவதும் நிகழும்... வியாசனைத் தீர்க்கக் கோடாலியை யூஸ் பண்ணியிருக்கு. அதை லீனாவுடைய பெட்டியிலே கிடைக்க வெச்சிருக்கு. எது? புத்திரவதி!”

“எதுக்காக இதெல்லாம் செய்யணுமாம்?”

“பழி! அந்தக் குடும்பத்தினர் அத்தனை பேரையும் பழி தீர்த்துக்க? மூத்த வியாசர் புத்திரவதியைச் சித்திரவதை செய்ததை பாரா பாராவா கிருஷ்ணமூர்த்தியின் குறிப்புகளில் விவரிச்சிருக்கு! பயங்கரம். வித்வஜன கோலாகலன்னு ஒரு ஆசாமி. ஜில்பா ஆசாமி! நாடகம் போடப் பண்ணைக்கு வந்தானாம் அவனுக்கும் புத்திரவதிக்கும் கள்ளத்தொடர்பு இருந்ததா அபாண்டமா பழிசொல்லி ஒருநாள் பூரா அவளை ஏரோப்ளேன் கட்டித் தொங்கவிட்டு அவ உடைகள் எல்லாம் உருள எல்லோரையும் வந்து ஊசியால குத்தச் சொல்லி அப்புறம் கண்ணகி வேலை கூடச் செய்தாராம்... ஒரு ப்ரெஸ்ட்டை... வேண்டாம். அதி பயங்கரமா இருக்குது பாஸ். நாலு நாள் சோறு தண்ணி காட்டாம அடிச்சு அஞ்சாவது நாள் அவளை அரசமரத்தில ஏத்தி தூக்கில தொங்கவிட்டுட்டாராம். அணு அணுவா உயிரைவிட்ட அந்த ஆத்மாவின் தாபம்தான் தொடர்ந்து பேயா சுத்திக்கிட்டிருக்கு... “மண் பூனை எலி பிடிக்கிறது” “உமது தாய் புத்திரவதி...” இப்டி எல்லாம் கன்னா பின்னான்னு பைத்தியம் பிடிச்சமாதிரி கதறிக்கிட்டே அழுதுக்கிட்டே செத்தாளாம். அந்தக் கொடுமையின் நிழல்தான் பண்ணையைச் சுத்துதுன்னு சொன்னார்...”

tamilpdffree.wordpress.com

கணேஷ் சிரித்தான்.

“என்ன பாஸ், இவ்வளவு சீரியஸா சொல்லிக்கிட்டு வரேன் சிரிக்கிறீங்க...”

“இல்லை வஸந்த்...! துப்புறவாத்தான் விசாரிச்சிருக்கே... நடந்தது எல்லாத்தையும் ஆவின்னு ஒப்புத்துக்கிட்டா தனித்தனியா எக்ஸப்ளெய்ன் பண்ணிக் காரணம் சொல்லிவிடலாம். அதுகூட தேவையில்லைதான். ஆவி உலகம்னு நம்பிட்டா எதுவுமே சாத்தியம்தான். ஆனா நிஜம்மா சொல்லு நீ இதையெல்லாம் நம்பறியா?”

“வேற என்ன இருக்கு. நம்பறதுக்கு. உங்க கட்சிதான் அப்பவே கழண்டுக்கிச்சே... லேஸர்னிங்க... அது என்ன? ஹோலோகிராம்னு சொன்னிங்க... ஆனா நீங்களே அது சாத்தியம் இல்லைன்னு சொல்லிட்டிங்க... ஆரம்பத்திலேயே உதைக்குதே?... நான் சொன்னதில் பாருங்க... எல்லாம் ஜோஸ்யம் மாதிரி. முன்கூட்டியே எழுதி வச்சிருக்கு...

“உன் கட்சியை இன்னும் நான் ஏத்துக்கலை. ஆனா நடந்தது ஒவ்வொண்ணுக்கும் பழைய ரிக்கார்டுகளில் குறிப்புகள் இருக்குங்கற ஆச்சரியமான விஷயத்தை மட்டும் முழுங்கத் தயாரா இருக்கேன்... வஸந்த்! சரி அப்படியே வெச்சுகிடுவம். எல்லாம் பேய்பிசாசு சமாசாரம். புத்திரவதின்னு ஒருத்தி இருந்தாள். அவ கொடுமைப்படுத்தப்பட்டு இறந்தா... பேயா உலாத்தரா... அந்த வினோத நிகழ்ச்சிகளுக்கெல்லாம் அவதான், அதுதான், காரணம்னு வெச்சுக்கலாம். அப்புறம்? அப்புறம் என்ன?”

“அப்புறம் ஒண்ணும் கிடையாது. முற்றும் கேஸ் தீர்ந்து போச்சு. வாங்க காபரே போகலாம் அருண் ஓட்டல்ல ஒரு பொண்ணு நம்ம தலைமேலேயே வெச்சுத் தேய்க்குதாம்...”

கணேஷ் லைப்ரரியிலிருந்து எடுத்து வந்திருந்த புத்தகத்தை எடுத்து.... அதன் பக்கங்களில் ஆழ்ந்தான். சற்று நேரம் நகத்தைக் கடித்தான் வஸந்த்.

“வஸந்த்! இதை பாரு: என்றான் கணேஷ் மிகுந்த ஆர்வத்துடன்.

## 31

கணேஷ் அந்தப் புத்தகத்தின் ஒருபக்கத்திலிருந்து படித்துக் காட்டினான்.

The cross technique has led to holograms where the subject can be seen moving his head, shifting his person are changing his facial expression: Suck motion is perceived by viewing different parts of the holograms in sequence either by having the viewing walk past the hologram or by rotating the hologram”.

“பாஸ்! இது அந்த டாக்டர் ராமபத்ரன் சொன்னதுக்கு நேர் எதிரா இருக்கே? இது என்ன புஸ்தகம்?”

“ஒயிட் லைட் ஹோலோ கிராம்னு ஒரு கட்டுரை. ஸைண்டிபிக் அமெரிக்கன் அக்டோபர் 7’ம் தேதி இதழிலிருந்து மேற்கோள் காட்டியிருக்காங்க. ராமபத்ரன் கிட்ட நான் அந்த பிம்பத்தை சரியா வர்ணிக்கலைன்னு தோணுது. அவரை மறுபடியும் காண்டாக்ட் பண்ணலாம். இதைக் காட்டலாம்.”

வாசலில் ஜீப் வந்து நின்று ஒரு மஃப்டி ஆசாமி வந்தார். “டி.ஸி. அனுப்பிச்சாங்க. ஏதோ கொடுக்கிறதா சொன்னிங்களாமே!”

கணேஷ் செய்தித்தாளில் சுற்றியிருந்த அந்த வெட்டுண்ட கரத்தை ஜாக்கிரதையாகக் கொடுத்தான்.

அவர் சென்றதும், “என்ன பாஸ்! கையை விட்டுட்டிங்க.”

“போலிஸ் லேப்ல பரிசோதனை செய்யச் சொல்லியிருக்கேன் ராஜேந்திரன்கிட்ட.”

“எதுக்கு?”

“ஏதாவது தெரியுதா பார்க்கலாமே. வஸந்த். நீ சொன்ன பேய்க்கதையைப் பத்திரமா வெச்சுக்க. போதும், கண்டுபிடிச்சாச்சு. பேயை நம்பினா நடந்தது எல்லாத்துக்கும்

tamilpdfree.wordpress.com

விளக்கம் இருக்குது – இப்ப என் கட்சிக்கு வா. முதல் காரணம். உன் கட்சியின்படி நடந்தது எல்லாத்துக்கும் காரணம் புத்திரவதிங்கிற ஒரு பெண் பேய். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவங்க மேலே வெறுப்பினாலே பழிவாங்கல்."

"ஆமாம்"

"என் கட்சியிலே காரணம் சொத்து.. அகண்ட சொத்து.. ஏறக்குறைய ஒரு கோடி ரூபாய் சொத்து..."

"குமாரவியாசனுக்குத்தான் பாஸ் அந்தக் காரணம் இருந்திருக்க முடியும். அவர்தான் டவண்டை ஆண்ட்டாரே! முக்கியமான சமயத்திலே காலை வாரிட்டாரே!"

"வியாசனுக்கு என்ன காரணம் இருந்ததோ அதே காரணம் வேறு யாருக்கு இருக்க முடியும்?"

வஸந்த் யோசித்தான். "சரியா சொல்லுங்க பாஸ்".

"உயில் என்ன சொல்றது?"

"சொத்தைப் பிரிக்கக் கூடாது. நேர் வாரிசுகளுக்கு போகணும். அப்படி நேர் வாரிசு இல்லைன்னா லெகஸி ரூட் மாறிடும்.

"நேர் வாரிசு லீனா. அவ இல்லைன்னா அடுத்தது?"

"குமாரவியாசன்"

"குமாரவியாசனும் இல்லைன்னா அடுத்தது?"

"என்ன சொல்றிங்க?"

"என் உரத்த சிந்தனை. எக்ஸ்னு ஒரு ஆளை வச்சுக்கலாம். அந்த எக்ஸ் யாரு தெரியாது. ஒரு காலி முகம். எக்**ஸு**ம் குமாரவியாசனும் ஆரம்பத்திலே சேர்ந்து ஒரு சதித்திட்டம் போடறாங்க அது என்ன? லீனாவைத் தீர்த்துடறது. நேரடியாக் கொல்ல முடியாது. உடனே வியாசன் க்ரூப் பேரில் சந்தேகம் வரும். அதனால மறைமுகமா செய்யணும். இப்ப அந்த கிருஷ்ணமூர்த்தியுடைய பேய்க்கதை அவங்களுக்கு உதவி செய்யுது..."

"சொல்லுங்க," என்று வஸந்த் சிரித்தான்.

"புத்திரவதிங்கிறவ சித்திரவதைப்பட்டது. அரச மரத்தில தொங்கினது எல்லாம் நிஜம். அல்பாயுசில செத்து போன அவளைச் சுற்றிக் கர்ண பரம்பரையா ஒரு கதை அந்த காலத்தில உருவாகியிருக்கிறது. இருட்டில எவனோ எதையோ பார்த்துட்டு ஏதோ ஒரு சலசலப்பைக் கேட்டுட்டு... தொங்கினவ பேயா வந்துட்டான்னு ஒரு லெஜண்ட் உற்பத்தி ஆகியிருக்கு. அதைக் கண், காது, மூக்கு வெச்சு கிருஷ்ணமூர்த்தி புஸ்தகம் எழுதிட்டார். இந்த நாற்பது வருஷத்துக்கு முந்தின கதை. இப்ப நம்ம எக்**ஸு**க்கும் வியாசனுக்கும் அவங்க திட்டத்தைத் தயாரிக்கிறதிலே கைகொடுத்திருக்கு..."

"இண்டரஸ்டிங்! சொல்லுங்க!"

"விஞ்ஞான சாதனங்களை வெச்சுக்கிட்டு அந்தப் பேய் சம்பவங்களைப் படம் காட்டறாங்க. பேய் உலாத்தறதைச் சுற்று வட்டாரத்தில் நம்பவெச்சு கடைசியிலே

tamilpdffree.wordpress.com

லீனாவை அந்தப் பேய் அடிச்சிடுச்சுன்னு காரணம் காட்டித் தீர்த்துக் கட்டற கட்டம் வர்றதுக்குள்ள நாம் அங்க போயிட்டோம்"

"சரி நாம வந்தப்புறம் என்ன ஆச்சு!"

"நமக்காக, நம்மையும் நம்ப வைக்க அவங்களுக்கு எக்ஸ்ட்ரா ஷோக்கள் எல்லாம் போட வேண்டிருந்தது. அவங்க திட்டம் கொஞ்சம் டிலே ஆயிடுச்சு?"

"இதுவரைக்கும் பரவாயில்லை சொல்லுங்க."

இதற்கிடையிலே இந்தத் தந்திரக் காட்சிகளை எல்லாம் அமைக்கிறதிலே அவங்களுக்கு ஒத்துழைச்ச ஒரு எலக்ட்ரானிக்ஸ் டெக்னீஷியன். அவன் பேர் என்ன சந்திரசேகரனா, மூர்த்தியா, அவன் முறைச்சிக்கிட்டான். ஏதோ தகறார் வந்திருக்கணும். எல்லா ரகசியங்களையும் வெளியே விட்டுறப் போறானேன்னு அவனைக் கொன்னுட்டாங்க. கொன்றது யார்? இருக்கவே இருக்கு புத்திரவதியின் பேய் உருவம் பழி போட...சுலபமா வதந்தி பரப்பிட்டாங்க."

"இங்க உதைக்குது பாஸ். பாடி காணாமப் போயிடுச்சே!"

"யோசிச்சுப் பாரு வஸந்த். அந்த உடலை ஒப்பனா வான்ல எடுத்துட்டுப் போயிருக்காங்க. லெவல் கிராஸிங்ல நின்னிருக்கு. இருட்டு. அப்ப பின்புறமா அந்த உடலை நீக்கியிருக்க முடியாதா...? நீக்கித் திரும்பப் பண்ணைக்குக் கொண்டு வந்தோ அல்லது புறம்போக்கிலேயோ புதைச்சு இருக்க முடியாதா?"

"அப்ப ஒரு பெரிய கோஷ்டியே வேலை செஞ்சிருக்குதுன்னு சொல்லணும்..."

"அப்படித்தான் நான் நினைக்கிறேன்... நீ சொன்ன பேய்க் கதைக்கு, பேய் பிசாசு சம்பந்தப்படாத சாத்தியக் கூறுகளைத்தான் நான் சொல்லிக்கிட்டு வர்றேன்! பாடியை கவர்றதோ, புதைக்கறதோ சாத்தியம். அதே போல பெரிய கண்ணனையோ எவனையோ எரிச்சு வர வழியிலே பிசாசு ஒரு உடலை தூக்கிப் போனதைக் கண்ணால பார்த்தேன்னு வதந்தியைக் கிளப்பி விடறதும் சாத்தியம்தான். இல்லையா?"

"சாத்தியம் பாஸ்! ஆனா இந்த ரீதியில நீங்க விளக்கம் சொல்ல வேண்டிய சமாசாரங்கள் எவ்வளவோ இருக்கே?"

"என்ன என்ன...? ஒவ்வொண்ணா சொல்லிக்கிட்டே வா. நீ உன் கட்சியைச் சொல்லு. நான் என் கட்சியைச் சொல்றேன்."

"முதல்லே லீனா செய்த கொலை! என் கட்சிப்படி புத்திரவதி லீனா மேலே படர்ந்து செய்த மூர்க்கம் அது!"

"என் கட்சிப்படி அது குமாரவியாசன் நம்மைத் தயார்படுத்தச் சொன்ன கட்டுக் கதை... அந்தப் பையன் பண்ணையை விட்டு ஓடிக் கூடப்போயிருக்கலாம்."

"அரச மரத்தில பார்த்த பிசாசு ரூபம் – புத்திரவதி!"

"நாம் சொல்றது ஹோலோகிராம்! அதற்கு உண்டான சாதனங்களை மண்டபத்திலேயோ மர மறைவிலோ ஒளிச்சு வைச்சு ஏற்படுத்தின எலக்ட்ரானிக் பிம்பம்!"

tamilpdfree.wordpress.com

“அந்த உருவம் லீனா மாதிரி இருந்தது... புத்திரவதிக்கும் லீனாவுக்கும் வாரிசு என்கிற ரீதியிலே முக ஒற்றுமை இருக்கிறது என் கதையில சாத்தியம். நீங்க எப்படிச் சொல்வீங்க!”

“லீனா இரண்டு மூணு தடவை என்கிட்ட சொல்லியிருக்கா... அந்தப் “பிசாசு” சொன்ன வாக்கியங்களை எப்பவோ ஏதோ ஒரு சந்தர்ப்பத்திலோ தானும் சொன்னதா... அதிலே இருந்து எனக்குத் தோணுது... அவளை எப்பவாவது ஹிப்னாடிஸத் தூக்கத்திலே ஆழ்த்தி ஸஜஷன் மூலமா பேச வைச்சு ஹோலோகிராம் முறையிலே படம் எடுத்திருக்காங்க. அப்படி எடுத்த ஹோலோகிராம்களைத்தான் நமக்குப் ப்ராஜெக்ட் பண்ணிக் காட்டி இருக்காங்க. ஹோலோகிராம் பிம்பங்கிறது என்ன? வெட்ட வெளியிலே முப்பரிமாண உருவங்களைக் காட்டறது. அதிலே சலன பிம்பங்கள் கூட சாத்தியம்னு இப்பத்தான் படிச்சோம்...”

“டாக்டர் ராமபத்ரன் சாத்தியமில்லைன்னு சொன்னாரே!”

“அதை அப்புறம் விசாரிக்கலாம். அவர்கிட்ட இந்த ஆர்ட்டிக்கிளை காட்டப் போறேன்.. லீனா அந்த வசனங்களை எப்பவோ சொன்னேன்னு சொன்னது எனக்கு மிக முக்கியமாப்படறது. அதுக்குத்தான் அவளை பாலகோபால் கிட்ட அழைச்சுட்டுப் போகலாம்னு பார்த்தா...”

“கல்யாணம் பண்ணிக்கிறேன்னு கழண்டுக்கிட்டாள். எல்லாத்துக்கும் விளக்கம் வெச்சிருக்கிங்க போலிருக்கே!”

“நீ ஒவ்வொண்ணா வா வாத்யாரே!”

“திடீர் திடீர்னு விளக்கு அணைச்சது? பேச்சுக் குரல் கேட்டது?”

“டேப் ரிக்கார்டர், மறைமுகமான ஸ்பீக்கர்கள், ஸ்விட்சுகள் இவைகளால் சாத்தியமில்லையா? ஒருமுறை லீனா நம்ம அறைக்கு வந்தபோது பாத்ரூம்ல இருந்து கூப்பிட்ட வாக்கியம், “கணேஷ் இங்க வாங்க”ன்னே என்னவோ, அந்த வாக்கியம் அப்படியே மறுபடி உபயோகப்படுத்தப்பட்டது...”

“மற்றொரு விஷயம் பாஸ்! மெயின் ஃப்யூஸ் போனப்புறம் கூட அந்த உருவம் தெரிஞ்சுதே?”

“பாட்ரி வேலையா இருக்கலாம். அல்லது அந்த வீட்டில ரெண்டு எலக்ட்ரிகல் சர்க்யூட் இருக்கலாம்...”

“நீங்க அந்தப் பிசாசுகிட்டப் போனபோது கன்னத்திலே அறை வாங்கினீங்களே மறந்துட்டீங்களா?”

“இல்லை வஸந்த், அதை நான் ரொம்ப யோசித்துப் பார்த்தேன். அந்த மரத்திலே இருந்து கரண்ட் கம்பி ஒண்ணைத் தொங்க விட்டிருக்கலாம்னு தோணிச்சு. அது என் கன்னத்திலே பட்டபோது எனக்கு கிடைச்சு மின்சார அதிர்ச்சியை நான் அந்த சூழ்நிலைலே பேய் அடிச்சது என்று நினைச்சுக்கிட்டிருக்கலாம்!”

“இது எல்லாத்துக்கும் நிரூபணம் தேவை பாஸ்!”

“அதை அப்புறம் பார்க்கலாம். நீ மேலே கேளு!”

tamilpdffree.wordpress.com

“அப்புறம் அந்த மெக்கானிக்தான் குண்ட்ஸா ஏதோ சொன்னீங்க. எதிர்த்துக்கிட்டான் தீர்ந்துட்டாங்க,.. சாமர்த்தியமா புதைக்கப்பட்டான்னு.. அப்ப நான் அடிப்பட்டது...”

“நீ அந்த பாத்ரூமுக்குத் தனியாப் போனபோது என் கூட வியாசன் இருந்தார். அதனால உன்னை அடிச்சுப் போட்டது அந்த எக்ஸ்தான். ஓங்கி அடிச்சு இழுத்துட்டுப் போய்த் தோட்டத்திலே போட்டிருக்காங்க.”

“குமாரவியாசனைக் கொன்னதும்?”

“அந்த எக்ஸ்தான். கூட்டாளிங்களுக்குள்ள சண்டை வந்திருக்கணும், விஷயம் தீவிரமாய்ப் போய் அனாவசியமா ஒரு கொலையும் விழுந்திருச்சு. போலீஸ்காரங்க வேற வந்துட்டாங்க. ஒரிஜினல் பிளானை நிறைவேற்ற முடியலை. சண்டை வந்திருக்கும். குமாரவியாசன் தனியாய் போய்டலாம்னு தலை மறைவாய்டலாம்னு தீர்மானிச்சு அவசரமா எனக்கு ஒரு குறிப்பு எழுதி வைச்சுட்டு கிளம்பியிருக்கார். அதுக்குள்ள அந்த எக்ஸ்க்கு மூக்கிலே வேர்த்து பின் பக்கமா வந்து மண்டையில் ஒரே போடு கோடாலியால... அப்புறம் அந்தக் கோடாலியை லீனாவுடைய பெட்டியில் ஒளிச்சு வெச்சுட்டு...

“அந்த ஒரே ஒரு நூறு ரூபா நோட்டு?”

“இரும்புப் பெட்டியிலே பணம் இருந்திருக்கு. பெரும்பாலும் வெங்கடேஸ்வரன்கிட்டே வாங்கின அட்வான்ஸ் பணமா இருக்கலாம். அதை அவசரமா எடுத்துக்கிட்டு வியாசன் கிளம்பறபோதுதான் சம்பவம் நிகழ்ந்திருக்கும். பணத்தை அந்த எக்ஸ் கவர்ந்திருக்கலாம்,”

“இப்ப மாட்டிக்கப் போறீங்க! அந்தக் கோடு கோடா இருந்தக் காகிதங்கள்.”

“முதல்ல அந்தக் கோடுகள். லைப்பாரியிலே லேசர் பத்தி புஸ்தகம் ஒண்ணு பார்த்து எடுத்துக்கிட்டு வந்தேன். அதிலே லேசர் ஸ்கான் பற்றிப் போட்டிருந்தான். அந்தச் சாக்லெட் பெட்டியிலே அதே மாதிரி கோடுகளைப் பார்த்தமில்லையா? அது என்ன தெரியுமா? யுனிவர்ஸல் ப்ராடக்ட் கோடுன்னு பேராம். அமெரிக்காவில் டிபார்ட்மெண்ட் ஸ்டோர்ல எல்லாம் இந்த மாதிரி லேசர் ஸ்கானர் இருக்கும். இந்தக் கோடுகளைச் சங்கேத ரூபத்துல வாசித்து விலை கண்டுபிடிச்சு தானாகவே காஷ் ரிஜிஸ்டரில் பில் தயாரிக்குமாம். அந்த மாதிரி லேஸர் ஸ்கான் சாதனம் இவங்களும் அந்தப் பண்ணையிலே உபயோகப்படுத்தியிருக்கலாம். எதுக்கு? ரகசிய முறையில இரும்புப் பெட்டி ரகசிய அறை இதைத் திறக்கிறதுக்காக இருக்கலாம்... பார்த்தா அம்பலமாகும் எல்லாம்...

வஸந்த் வியந்து, “பாஸ்! ப்ரில்லியண்ட்! என்னா மூளை? கம்ப்யூட்டரை முழுங்கிட்டிங்களா?”

“வஸந்த், அதெல்லாம் நிச்சயம் நடந்துன்னு நான் சொல்ல வரலை. எனக்கென்னவோ இந்தப் பேய் பிசாசை ஒத்துக்க முடியலை. நடந்தது ஒவ்வொண்ணுக்கும் சயன்ஸ் அல்லது டெக்னாலஜி பூர்வமா விளக்கம் இருக்கு.... எக்ஸ்னு ஒரு மாஸ்டர் மைண்ட் பண்ற ஆசாமியை உருவாக்கிட்டா...”

“புரியுது. இப்ப யார் இந்த எக்ஸ்?”

“நீதான் கண்டுபிடியேன்! எல்லாத்தையும் நானே சொல்லணுமா?”

“யார் தெரியுமா?

tamilpdffree.wordpress.com

“தெரியாது.”

“ஒரு விஷயம் விட்டுப்போயிருக்கே! இப்ப சொத்துனு விழுந்ததே கை?”

“அதிலேதான் மிஸ்டர் எக்ஸ் நம்மகிட்டே மாட்டிக்கப் போறான்னு நினைக்கிறேன்,” என்றான் கணேஷ்.

## 32

**அ**ந்த நீண்ட இரவின் உரையாடலுக்குப் பின் ஒரு வாரத்திற்குக் கணேஷும் வஸந்த்தும் கோர்ட்டு சமாசாரங்களில் பிசியாக இருந்தார்கள். இடையிடையே கணேஷுக்கு அந்த விநோத நிகழ்ச்சிகளும் காட்சிகளும் ஞாபகத்தில் குறுக்கிட்டாலும் அந்த ஒரு லாரம் குறிப்பிடும்படியாக எதுவும் நிகழவில்லை. நடுவில் ஒரு தினம் மாலை தீபக்கும் லீனாவும் ஸ்கூட்டரில்–

“ஹாய் வஸந்த்? ஹாய் கணேஷ் நல்லாயிருக்கிங்களா?”

“கல்யாணம் ஆயிடுச்சா? காந்தர்வ விவாகமா?”

“இல்லை இன்னும் இல்லை, நீங்க இரண்டுபேரும் கட்டாயம் வரணும்” என்றாள் லீனா.

“கங்கராஜுலேஷன்ஸ் தீபக். ஆனா நான் கேட்டதை நீங்க இன்னும் நிறைவேற்றலை” என்றான் கணேஷ்.

“என்ன?”

“லீனாவை டாக்டர் பாலகோபால் கிட்ட ஒரு தரம் காண்பிக்கணும்னு சொன்னேனே.”

“அதுக்கெல்லாம் இப்ப என்ன அவசியம் கணேஷ்? நடந்ததை மறந்துற வேண்டியதானே; போலீஸ்கிட்ட போய்ப் பண்ணையை ரிலீஸ் வாங்கிக்கிட்டோம்... குத்தகைக்கு விட்டுர்றதா டாக்குமெண்ட் எல்லாம் கையெழுத்துப் போட்டாச்சு!”

“குத்தகைக்கு விட்டாச்சா? சரிதான்!”

“அந்த வெங்கடேஸ்வரன் ரொம்பத் தொந்தரவு செய்தார். டெர்ம்ஸும் அட்ராக்டிவ்வா இருந்தது. தீர்மானிச்சுட்டேன். இனிமே உங்களுக்குக் கொடுக்க வேண்டிய ஃபீஸ் பணம்தான் பாக்கி, எத்தனை வேணும் சொல்லுங்க. பண்ணையிலே நிறைய பணம் இருக்கு!”

“சந்தர்ப்பம் வர்றபோது சொல்றேன்”

“அப்ப கல்யாணத்துக்கு கட்டாயம் வந்துருங்க!”

டெலிபோன் மணி அடித்தது. ராஜேந்திரன் பேசினார்.

tamilpdffree.wordpress.com

“கொஞ்சம் ஆபீஸ் பக்கம் வர்றீங்களா! ஒரு சின்ன விஷயம். அந்தக் கையை ட்ரேஸ் பண்ணிட்டம்.”

“அப்படியா. க்ரேட். உடனே வர்றேன்! சின்ன விஷயம் இல்லை சார். பெரிய விஷயம்!”

“வாங்க.”

“என்ன பாஸ்?”

“அந்த வெட்டுண்ட கையை போலீஸ்ல ட்ரேஸ் பண்ணிட்டாங்களாம்.”

“சரிதான் இது என்ன கேஸ்! நம்மை விடாது போல் இருக்கே. எல்லாம் தீர்ந்து போச்சுன்னு நினைச்சேன்!”

“இனிமேதான் ஆரம்பம்.. வா!”

பாதிக் கதவைத் திறந்து இருவரும் உள்ளே சென்றார்கள். மூன்று டெலிபோன்களில் ஒன்றில் பேசிக் கொண்டிருந்த ராஜேந்திரன் முறைப்பான யூனிஃபார்மில் இருந்தார். உட்காரும்படியாகச் சைகை செய்தார்.

“எஸ் ஸார் எஸ் ஸார்” என்று அவர் அடிக்கடி சொல்வதில் இருந்து கமிஷனருடன் பேசுகிறார் என்று யூகித்தான். டெலிபோனை வைத்ததும் “ஒரு நிமிஷம்...” என்று மற்றொரு டெலிபோனில் “வான் ஆளைப் பிடிச்சிட்டிங்களா?” என்று கேட்டுவிட்டு சொல்லுங்க கணேஷ்!” என்றார்.

“நீங்கதானே ஸார் சொல்லணும்?”

“அந்தக் கை அனுப்பிச்சிங்களே! அது மெடிக்கல் காலேஜ் அனாட்டமி லாப்ல இருந்து வந்திருக்கு”

“எந்த மெடிக்கல் காலேஜ்?”

“அந்த விவரம் இப்போதைக்கு உங்களுக்கு வேண்டாம். நகரத்தில் இருக்கிற மூணு காலேஜுகளில் ஒண்ணு”

“அனாட்டமி லாப்பா?”

“ஆமாம்! பொதுவா மெடிக்கல் ஸ்டுடண்ட்ஸ்ங்க இரண்டாவது வருஷம் டிஸெக்ஷன் பண்றதுக்குக் கை காலுன்னு தனித்தனியாப் பதம் பண்ணி வெச்சிருப்பாங்க பாருங்க. அந்த மாதிரி ஸ்பெஸிமன்களில் ஒண்ணு அது!”

“எப்படி கண்டுபிடிச்சிங்க?”

“போலீசை என்னன்னு நினைச்சுட்டிங்க? மெதுவாவே தேர் நகர்றாப்பலதான் வேலை செய்வோம். ஆனா முடிவிலே கண்டுபிடிச்சுருவோம்! லாப் அட்டெண்டர்களில் ஒருத்தன் கொஞ்சம் திருட்டு முழி முழிச்சான். தனியா விசாரிச்சோம். நான்தான் ஸார் கொடுத்தேன்னு ஒப்பித்துக்கிட்டான்.”

“யார்கிட்டே?” என்றான் கணேஷ் ஆர்வத்துடன்.

tamilpdffree.wordpress.com

“யாரோ ஒருத்தர். பேர் தெரியலை. அவன்கிட்ட வந்து இந்த மாதிரி கை கால் ஏதாவது உடலுறுப்பு வேணும். ஒரு பரிசோதனைக்கு’ன்னு கேட்டாராம் பணம் கொடுத்தாராம்.”

“அந்த ஆளுடைய அடையாளம் ஏதாவது தெரிஞ்சுதா.?”

“நடுத்தர வயசா கொஞ்சம் உயரமா கண்ணாடி போட்டுக்கிட்டு இருந்தாராம்.”

கணேஷ் யோசித்தான்.

“என்ன சார் யோசிக்கிறீங்க! சம்பந்தப்பட்டவங்க போட்டோக்கள் எல்லாத்தையும் காட்டிட்டேன், அவுங்க யாரும் இல்லை.”

“யார் யாரு?”

“அதான் அந்த தீபக், வெங்கடேஸ்வரன், அந்த சேட்டு, ஏன் குமாரவியாசன் போட்டோவைக்கூட காண்பிச்சுக் கேட்டேன்..” என்று சிரித்தார்.

“ரொம்பத் தரோவாத்தான் இருக்கிங்க..”

“அவுங்க யாரும் இல்லையாம். கொஞ்சம் சிவந்த ஆளு கண்ணாடி போட்ட ஆளுங்கறான். இருந்தாலும்... இந்தக் கை உங்க மேஜைமேல் விழுந்ததுக்கு என்ன காரணம்னு நீங்க நினைக்கிறீங்க?”

“என்னைப் பயமுறுத்த முயற்சி! நான் இந்தக் கேசைத் தொடர்ந்து விசாரிச்சிக்கிட்டிருக்கிறது அவர்களுக்குப் பிடிக்கலை.”

“ராஜேந்திரன், நானும் வஸந்தும் ரெண்டு கட்சியாப் பிரிச்சுக்கிட்டோம்...வஸந்த் பழைய குப்பையெல்லாம் கிளறி ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பதுகளில் இருந்து தூசிதட்டித் தனியா ஒரு சரித்திரம் படைச்சிருக்கான்.”

“அதன்படி நடந்தது அத்தனைக்கும் இந்த கடைசி இதோ இந்தக் கை வரைக்கும் முன்னாலேயே எழுதி வெச்ச குறிப்புகள் இருக்கு. எழுதி வெச்சபடி டாண் டாண்ணு ஒவ்வொண்ணும் நடக்குது சார்!”

“அட! அதுக்குக் கணேஷ் என்ன சொல்றீங்க?”

“குறிப்பு எழுதி வெச்சுருக்கிறது என்னவோ வாஸ்தவம்தான். ஆனா எழுதிவெச்ச குறிப்புகளின்படி சம்பவங்கள் இயல்பா நடக்குதுங்கறதை நான் ஒத்துக்கலை. ஆனா நடத்தி வைக்கப்படறது.”

“கொஞ்சம் விவரமாச் சொல்லுங்க.”

“கிருஷ்ணமூர்த்தின்னு, அந்தக் காலத்து ஆசாமி கர்ண பரம்பரையான செய்திகளை வெச்சுக்கிட்டுத் தன்னுடைய சொந்தக் கற்பனைகள், தான் பார்த்ததா நம்பின காட்சிகள் எல்லாத்தையும் வெச்சுக்கிட்டு ஒரு லேஜண்டை உண்டாக்கி, சில வினோதங்கள்னு ஒரு புஸ்தகமா எழுதி வைச்சிட்டார். இந்தப் புஸ்தகத்தில் குறிப்பிட்டிருந்த சம்பவங்கள்தான் ப்ளுபிரிண்ட். அதன்படி ஒவ்வொண்ணையும் ஒரு கோஷ்டி நடத்திக் காட்டுது எப்படி? விஞ்ஞான பூர்வமா! விஞ்ஞான முறைப்படி!”

“இண்டரஸ்டிங்!”

tamilpdffree.wordpress.com

“அதனால்தான் ரெண்டு கட்சி வந்தது. விஞ்ஞான கட்சி, பைசாசக் கட்சி!”

“இதுல எது நிஜம்னு கண்டுபிடிக்க இதுவரைக்கும் ஆணித்தரமா ஒரு க்ளுவும் கிடைக்கல பாஸ்!”

“ரெண்டு கட்சிலேயும் மோட்டிவ் இருக்குதா?”

“என் கட்சில மோட்டிவ் பழி வாங்கறது... புத்திரவதிங்கற அல்பாயுசு தனக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்காக...

“கணேஷ்”

“என் கட்சியில் மோட்டிவ் கொஞ்சம் உறுத்தது: லீனாவைக் கொல்றது மோட்டிவ்வா இருக்கலாம்”

“அவளைக் கொல்றதினால் யாருக்கு பயன்?”

“குமாரவியாசன் என்கிற ஒருத்தருக்குத்தான் இருந்தது அவர் போய்ட்டார்! அதனால் அவருக்குக் கூட்டாளியா எக்**ஸ**ன்னு ஒரு ஆசாமியைத் தீர்மானிச்சுட்டேன். இரண்டு பேருக்கும் ஏற்பட்ட போட்டியில் அல்லது பரஸ்பர அவநம்பிக்கையில் குமாரவியாசனை அந்த ஆசாமி தீர்த்து விட்டார்ங்கறது நல்லாப் பொருந்துது. அந்த எக்ஸைத்தான் இப்ப தேடிக்கிட்டிருந்தோம்

“அந்த எக்**ஸு**க்கு என்ன மோட்டிவ்ங்கறீங்க!

“அது சரியாத் தெரியலை. அதுவும் ஒரு எக்ஸ்தான்!”

“கணேஷ் இப்ப ஒண்ணு செய்யலாம் என்றார்” ராஜேந்திரன்.

சற்று யோசனைக்குப் பிறகு, “அந்தப் பண்ணைல உங்களுக்கு இன்னும் பார்க்க வேண்டியது ஏதாவது இருக்கா? நீங்க நல்லாத்தானே பார்த்திருக்கீங்க!”

“எல்லா இடத்தையும் துருவித் துருவித்தான் பார்த்தோம்... இருந்தாலும் நாங்க பார்க்காம விட்டது ஏதாவது இருக்கலாம்னு நீங்க நினைக்கிறீங்களா?...”

“பாஸ், ஒரு சின்ன சஜஷன்...”

“என்ன?”

“நீங்க சொல்ற மாதிரி எல்லாமே விஞ்ஞானமா இருந்தா அந்த விஞ்ஞான சாதனங்கள் எல்லாம் ஒரு மறைமுகமான இடத்தில் இருந்தே ஆகணும் இல்லையா?... அதாவது ஒரு ப்ரொஜக்ஷன் ரூம்! அல்லது கண்ட்ரோல் ரூம் மாதிரி...”

“அப்படி ஏதும் கிடைக்கலையே! நாங்கதான் தலைகீழாகக் கவுத்துப் பார்த்துட்டோமே!”

“அந்த ரூம் ஒரு மாதிரி அண்டர்கிரவுண்ட் ரூமா இருந்தா.. அதை ஒருத்தரும் பார்க்கலை இல்லையா? என்ன சொல்றீங்க?”

“கணேஷ் நீங்க ஒண்ணு செய்யுங்களேன். நீங்க ரெண்டு பேரும் மறுபடியும் ஒருமுறை அங்கே போய்ப் பார்த்துட்டு வாங்களேன். தோண்டி வேணுமானா பார்த்துருங்க! உங்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து தரச்சொல்றேன்...”

tamilpdffree.wordpress.com

கணே**ஷு**ம் வஸந்தும் அடுத்த ஞாயிறன்று காலை புறப்பட்டார்கள்.

“எனக்கென்னவோ இந்த ட்ரிப்பில் ஏதும் புலப்படும்னு தோணலை பாஸ். பெட்ரோல் வேஸ்ட்” என்றான் வஸந்த்.

பண்ணையை வந்தடைந்தபோது நடுப்பகலாயிருந்தது. காரை நிறுத்தி கணேஷ் முதலில் இறங்கினான். எதிரே பார்த்தான்.

“வஸந்த் பார்!”

“என்ன பாஸ்?”

“எல்லாம் போச்சு!”

எதிரே பண்ணை தரைமட்டமாக இருந்தது.

## 33

இருவரும் நின்று கொண்டிருந்த ஸ்தலத்திலிருந்து எதிரே ஒரு அறிவிப்பு பலகை புதிதாக சொருகியிருந்தது.

SITE FOR KLS ELECTRONICS
SOLANKI GROUP OF INDUSTRIES
BOMBAY

புல்டோசர்கள் தூரத்தில் ஆர்வாரித்துக் கொண்டிருந்தன. லாரிகள் மண்ணடித்துக் கொண்டிருக்க ஆட்கள் கல் அடுக்கிக் கொண்டிருந்தார்கள். பண்ணை எல்லாம் தரை மட்டம் கணே**ஷு**ம் வஸந்தும் வியந்தார்கள்.

“போலீஸ்காரங்களை கேக்காம நீங்க எப்படி இடிக்கலாம்?” என்றான் வஸந்த்.

“யாரு சொன்னது? இன்ஸ்பெக்டரைக் கூப்பிட்டு வெச்சுக்கிட்டு நீங்க பார்க்கிற தல்லாம் பார்த்துக்கங்க... எது வேணுமோ எடுத்துக்கங்க. மூணு நாள் டயம் தரேன்னு சொல்லிட்டார் முதலாளி. அப்புறம் முதமுத இடிக்கிறப்ப அவுங்களும்தான் கூட இருந்தாங்கல்ல!”

“இந்த மண்டபத்தை இடிக்கிறப்ப ஏதாவது அகப்பட்டுதா?”

“புரியற மாதிரி வாங்க”

“அந்தக் கல்லு மண்டபம் இருந்தது பாருங்க. ஜொனைக்குப் பக்கத்திலே...”

“ஆமாம்”

“அதைத்தான் துடைச்சு வெச்சுட்டிங்க. கில்லாடி நீங்க. அதுக்கு அடியில ஏதாவது பொந்து மாதிரி சந்து மாதிரி ரூம்மாதிரி இருந்துச்சா?”

tamilpdffree.wordpress.com

“இல்லிங்களே பார்க்கலிங்களே”

கணேஷ் “நீங்க எப்படி இடிச்சிங்க அதை?” என்றான்.

“அது என்னங்க சுலபம். புல்டோஸரை விட்டு ஒர்றே ஓட்டு. கிழவன் பல்லு மாதிரி உதிந்துருச்சு! அப்படியே கல்லுங்களை அப்புறப் படுத்திட்டு லெவல் பண்ணிட்டோம்”

“தோண்டலையா?

“எதுக்குத் தோண்டனும்! சமனப்படுத்திட்டோம். எப்படி கரெக்டா இருக்குது பாருங்க!”

“அப்ப சரி! என்று கார் செல்ல கணேஷ் “சே” என்று உரத்தகுரலில் அலுத்துக் கொண்டான்.

“ஏன் பாஸ்”

“எல்லாம் தரைமட்டமாயிடுச்சு?” எதிரே அந்த வெளியை நோக்கினான் “மண்ணில மறைஞ்சுடுச்சு... பூமிக்கு அடியில புதைஞ்சுடுச்சு!”

“அதாவது...இருந்தா...”

“இருக்கு வஸந்த்! அங்க இருக்கு! எங்கயோ இருக்கு. எல்லாமே இருக்கு. பூமிக்கடியில ஒரு ரகசிய அறை. மறைமுகமான கேபிள் இணைப்பு சாதனங்கள் ஒயர்கள்...ஸ்பீக்கர்கள்...”

எதிரே வெட்டவெளி.

“அப்ப அந்த முன்னூத்து சொச்சம் ஹெக்டேரில் தோண்டித் தேடணும்னு புதுசா ஆரம்பிக்கப் போறிங்களா?”

“இல்லை”

“உங்கக் கட்சி துப்புரவாச் செத்துப் போச்சு”

கணேஷ் மெதுவாக நடந்தான். அங்கங்கே இருந்த சின்னச் சின்ன மண் குவியல்களை காலால் நிரடினான்.

“பாம்புத் தேளு இருக்கப் போறது ஜாக்கிரதை”

“நீ ஏன் கவலைப்படறே நான் கடிபட்டுச் சாகறேன்”

“பாஸ் வெறுப்பிலே இருக்கறாப்பலே இருக்கு”

கணேஷ் அந்தக் குப்பையில் இருந்து ஒரு அடி நீளத்திற்கு ஒயர் ஒன்றை உருவினான். அதைக் கவனித்துப் பார்த்தான்.

விஞ்ஞானம் கடைசியில் இந்தக் கதிக்கு வந்துருச்சு! ஒரு அடி பி.வி.ஸி. ஒயர்!

கணேஷ் எரிச்சலுடன் அதை அவன்மேல் எறிந்தான்.

tamilpdffree.wordpress.com

மாலை மூன்று மணிக்குள் இருவரும் சென்னை திரும்பி விட்டார்கள். காரைத் தம்புக்செட்டி ஆபீசில் நிறுத்தினான்.

“இனிமே என்ன பாஸ்! கதை முடிஞ்சு போச்சு! விஞ்ஞானமா இருக்கும்னு ரொம்ப மெனக்கட்டிங்க! ப்ரூஃப் தரை மட்டம் ஆயிடுச்சு. நம்ம கட்சிக்கு ப்ரூஃப் தேவையில்லை. எல்லாம் எழுதி வெச்சிருக்கு!”

கணேஷ், “ஒரே ஒரு ஒயர்!” என்றான்.

“எந்தக் கட்சி எக்கேடு கெட்டுப் போனா இனி நமக்கென்ன? ஏற்கனவே கட்சிக்காரங்க கூச்சல் போடறாங்க! என்ன வக்கில் தம்பி வாய்தாவை எல்லாம் விட்டுட்டு ஊர் ஊரா டூர் போயிறாருன்னு!”

“ரெண்டு கொலை நடந்திருக்கு வஸந்த்!”

“அதைப்பத்தி போலீஸ்னா கவலைப்படனும். கண்டு பிடிச்சா நமக்குத் தகவல் சொல்லட்டும்”

“வஸந்த். இன்னும் ஒரே ஒரு விஷயம் ஒரு தகவல்! இதுதான் லாஸ்ட்! அதுக்கப்புறம் இந்தக் கேஸ் பக்கம் தலை வெச்சுப் படுக்க வேண்டாம்...”

“நாசமாப் போச்சு! என்ன?”

“மைட லைட் ஹோலோ கிராபின்னு ஒரு புஸ்தகம் பார்த்தேனில்லை. அதை மறுபடி எனக்கு ஒருமுறை பார்க்கணும்!”

“அய்யோ அய்யோ! ஹோலோகிராஃபியை இன்னும் கட்டிக்கிட்டு அழறீங்க!”

“ஒரே ஒரு குறிப்பு வஸந்த். வெரி லாஸ்ட்!”

“சரி சரி. புஸ்தகத்தை திருப்பிக் கொடுத்துட்டீங்களா?”

“ஆமாம்”

“சரி. மறுபடி எடுத்துக்கிட்டு வரேன். விட மாட்டீங்க! அதுக்கு முன்னால ஒரு சின்னக்காரியம் இருக்கு?”

“என்ன?”

“இன்னிக்கு தேதி 24. நாளைக்கு ஒரு கல்யாணம் இருக்கு! தீபக் லீனா!”

“ஓ! மறந்தே போய்ட்டேன்!”

“இதில ஒரு கையெழுத்துப் போட்டுர்றீங்களா?” என்றார் பதிவு அதிகாரி.

தீபக் கையெழுத்திட, “லீனா நீங்க!”

“மாலை மாத்திக்கிறதாயிருந்தா மாலை மாத்திக்கலாம். இல்லை மோதிரமா?”

“தீபக், கங்கராஜுவலேஷன்ஸ், ஆல் தி பெஸ்ட்” அவர்கள் அந்த அறையிலிருந்து விலக கணேஷ், “லீனாவை ஜாக்கிரதையாகப் பார்த்துக்குங்க தீபக்!” என்றான்.

tamilpdffree.wordpress.com

“கவலைப்படாதீங்க. கண்ணை இமை காக்கறாப்பல காப்பாத்தறேன்.”

“அவ இன்னும் ஆபத்தில் இருக்கான்னுதான் நீங்க நினைச்சுக்கணும் தீபக்!”

“டோண்ட் ஒர்ரி!”

“அப்புறம் என்ன பிளான்!”

“இன்னிக்கே ஃப்ளைட்ல கோயம்புத்தூர் போறோம். அங்கேயிருந்து ஊட்டி...”

மறுதினம் மாலை கணேஷ், அறையில் தனியாக உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருந்தான். எல்லாமே நடக்கவே இல்லையா? என்ன.... அந்தப் பண்ணை தரைமட்டமாகி விட்டது. முக்கிய நடிகர்கள் ஊட்டிக்குப் புறப்பட்டு விட்டார்கள். போலீஸ் மடங்கி விட்டது. மேடை காலியாகி அரங்கம் காலியாகி கணேஷ் ஒருத்தன் மட்டும்தான் இன்னமும் வெற்றுப்பார்வை பார்த்துக் கொண்டிருக்கிறான்... என்ன ஒரு வினோத நாடகம்! வஸந்த் சொல்லுவது போல் இவ்வளவுதானா? இனிமேல் ஒன்றும் கிடையாதா? ஒரு வேளை பேய்க்கட்சிதான் நிஜம் போலிருக்கிறது. அதைக்குறை கூற சந்தேகிக்க என்னிடம் என்ன நிரூபணம் இருக்கிறது? நான் சொல்வது எல்லாமே வெறும் சாத்தியக்கூறுகள் தானே! இப்படி நடந்திருக்கலாம். நடக்காமலும் இருந்திருக்கலாம். நடந்திருக்கலாம் என்று ஆணித்தரமாக ஸ்தாபிக்க என்னிடம் ஒன்றுமே இல்லையே?

அந்த கை! ஆம் அதை யாரோ ஒரு ஆசாமி அந்த அட்டண்டரிடம் வாங்கினான். அந்த யாரோ ஒரு ஆசாமி ஒரு வேளை புத்திரவதியால் செலுத்தப்பட்டவனோ. சே! என் குழப்பம்.

வெளியே சற்று அவசரமாக கதவு சாத்தப்படும் சப்தம் கேட்டது. வஸந்த் அத்தனை வேகமாக சாத்தமாட்டான் இது வஸந்த் அல்ல. பின் யார்?

வஸந்த்தான்!

என்ன இத்தனை அவசரம்!!

“பாஸ் பாஸ் ஒரு முக்கியமான விஷயம். ஒரு ரியல் பிரேக். நீங்க கில்லாடி பாஸ் பெரிய ஆளு!”

“என்ன, சொல்லித் தொலையேன்.”

“அந்தப் புஸ்தகம்”

“எந்த புஸ்தகம்? முதலில் உக்காரு.”

வஸந்த் நாற்காலி விளிம்பில் உட்கார்ந்து “நீங்க கேட்ட புஸ்தகம் கன்னிமாராவில் கிடைக்கலை. அமெரிக்கன் சென்டர்ல என் ஃப்ரெண்டு கிட்ட சொல்லி வெச்சிருந்தேன். இன்னிக்கு போய் வாங்கிட்டு வந்தேன். வண்டியை சர்வீஸில் கொடுத்திருந்தேன். வெய்ட் பண்ணிட்டு இருக்கிறபோது அதைப் படிச்சேன்; அதே சப் ஜெக்டிலே வேறு ஒரு புஸ்தகம். இது ஒரு எழவும் புரியலை. பலபேர் எழுதின விஞ்ஞான கட்டுரைகளோட தொகுப்பு.

“வஸந்த்!”

“இருங்க. சரிதாண்டான்னு யாரார் எழுதியிருக்கான்னு பார்த்தேன். டாக்டர் ராமபத்திரனுடைய ஆர்ட்டிக்கிளும் இருந்தது. புஸ்தகத்தில் கடைசியில் எழுதினவங்க



tamilpdffree.wordpress.com

ஒவ்வொருத்தருடைய வாழ்க்கைக் குறிப்பும் இருந்தது. ராமபத்திரனுடைய வாழ்க்கைக் குறிப்பும் இருக்கு. படிச்சேன். சஸ்பென்ஸ்"

"என்னடா?"

"ராமபத்திரனுடைய முழுப் பெயர் அதில் குடுத்தருக்கு என்ன தெரியுமா? பிப்ரப்பீ!"

"ஏய்"

"ராமபத்திவியாசன்"

## 34

கணேஷ் மிக அரிதாகத்தான் சீட்டியடிப்பான், இப்போது அடித்தான். "ராமபத்ரவியாசன்!" என்றான்.

"சே! இதை நான் முன்னாலேயே ஊகிச்சிருக்க முடியும் வசந்த்!"

"ம்ஹூம், முடியவே முடியாது. எவனாலேயும் முடியாது! 'The butler did it'ங்கற மாதிரி ஆயிடுச்சு!"

"அப்படி இல்லைடா. ராமபத்தரன்தான்னு நம்மால தனிப்பட்டு சந்தேகிச்சிருக்க முடியாது. ஒப்புத்துக்கறேன்!"

"அதைக் கண்டுபிடிச்சதிலே நமக்கு ஒத்தாசை செஞ்சது என்ன தெரியுமா? அதிர்ஷ்டம், குருட்டு அதிர்ஷடம்!"

"அக்ரீட்! ஆனால் மூல காரணம் மற்றொரு வியாசன்ங்கிற முடிவுக்கு நாம நிச்சயம் வந்திருக்க முடியும். யோசிச்சுப் பார்த்திருந்தா ராமபத்திரனை வேற ரூட்ல வந்து பிடிச்சிருப்போம். குமார வியாசனுக்கு உதவி செய்யறது ஒரு எக்ஸ்னு வெச்சுக்கிட்டம் இல்லையா? அது சரிதான். அந்த எக்ஸ் குமாரவியாசனுடன் சண்டை போட்டுக்கிட்டதனாலே அவரைக் கொன்னுட்டான்னு நாம யூகிச்சது தப்பு"

"அங்கே மோட்டிவ் உதைச்சிருக்கு".

"எக்ஸாக்ட்லி. காரணம் இன்னும் கொஞ்சம் அழுத்தமானது. பார்ட்னர்ஷிப் தகராறு இல்லை. பேராசை! சொத்து. லீனா முதல் வாரிசு. அவளுக்கு வரலைன்னா குமாரவியாசனுக்குப் போகும். அவரும் இல்லைன்னா சொத்து யாருக்குப் போகுங்கிறதை நாம கொஞ்சம் தோண்டிப் பார்த்து விசாரிச்சிருந்தா ராமபத்ரவியாசனுக்கு நிச்சயம் வந்திருப்போம். பாதை திரும்பிட்டம்!"

"எனக்கு லீனாவுடைய கொள்ளுத் தாத்தாவில இருந்து தொடங்கி ஃபேமிலி ட்ரீயை கம்ப்ளீட்டா ட்ரேஸ் பண்ணலாம்னுட்டு ஒரு சின்ன உத்தேசம் இருந்தது பாஸ்!"

"அதை இப்ப சொல்லு! செய்யலியே! செய்திருந்தா அடுத்த வாரிசு ராமபத்ரன்னு கண்டுபிடிச்சிருக்கலாம்!"

tamilpdffree.wordpress.com

“அதான் அவர் அந்த லேஸர் பிம்பங்கள்ளாம் விஞ்ஞானப்படி சாத்தியமே இல்லைன்னு அடிச்சு சொல்லிட்டார்”

“நாம விசாரிக்கிறம்னதும் உஷாராய்ட்டார்”

“அப்ப கிருஷ்ணமூர்த்தி புஸ்தகத்திலே எழுதியிருந்திருந்தது எல்லாம்?”

“கதைதான்! ஆனா ராமபத்திரனும் குமாரவியாசனும் நடத்திய ஹோலோகிராம் நாடகத்துக்கு மூலக்கதை அதுதான்...”

“உங்களுக்கு எப்ப முதல்லே சந்தேகம் தோணிச்சு?”

“ஒரு நாள் பண்ணைல நீ இல்லாதபோது ராத்திரி ஒரு ஆளை வெச்சு என்னைக் கழுத்தை நெறிக்க ஒரு பாதி முயற்சி நடந்தது பாரு. நான் கூட உனக்கு டெலிபோன் செய்தேனே?”

“ஞாபகம் இருக்கு. உடனே வான்னு பதறினீங்க”

“அந்தச் சந்தர்ப்பத்திலே அவங்க என்னை சுலபமா கொன்னிருக்கலாம். கொல்லலை, ஒரு உலுக்கு உலுக்கிட்டு ஓடிப்போயிட்டாங்க. என்னைக் கொல்றது அவங்க உத்தேசமில்லை. பயப்படுத்தறதுதான். அப்பவே நான் தீர்மானிச்சுட்டேன். அது பேயில்லை. யாரோ ஒரு அடியாள்னு...

பேய்க் கதையை நம்ப வெச்சு லீனாவைத் தீர்க்கறதுதான் அவங்க குறிக்கோள். முதல்ல போலீஸ் சந்தேகம் விழும். அதனாலதான் இவ்வளவு எலாபரேட்டாப் பேய்த் திட்டம்! லீனாவைத் தீர்த்துட்டுச் சொத்தை ரெண்டு பேரும் அனுபவிக்கிறதுன்னுதான் ஆரம்பிச்சிருக்காங்க... இடையில ராமபத்ரனுக்கு புதுசா ஒரு யோசனை தோணியிருக்கணும்... எதுக்குக் குமாரவியாசனுடன் பங்கு? ரெண்டு பேரையும் இதே முறையிலே தீர்த்துட்டா சொத்து பூரா தனக்கே வந்துருமேன்னு... திட்டத்தை ரிவைஸ் பண்ணிட்டார்... கொஞ்சம் ரிவர்ஸும் ஆயிடுச்சு. முதல் பலி வியாசன்!”

“பொருந்தாது பாஸ்? அப்ப இரண்டாவது பலி பாக்கி இருக்குங்கறீங்க?”

“ஆமாம், ராமபத்திரன் லீனாவுக்காக நிச்சயம் வருவார்!”

“தேனிலவுக்குப் போயிருக்கா!”

“உடனே ராஜேந்திரன்!” என்றான். வசந்த் டெலிபோனுக்குச் சென்று செயல்பட்டான்.

“டி.ஸி ராஜேந்திரனோட கொஞ்சம் பேசணுங்க... வணக்கங்க! சௌக்கியங்களா?”

“பெண் குரலா?” என்றான் கணேஷ்.

“என்னங்க...அப்படியா...? சார் வந்தா லாயர் கணேஷ் அர்ஜெண்டா பேசணும்னு சொன்னார்னு சொல்றீங்களா?”

டெலிபோனை வைத்து, “சார் வெளியூர் போயிருக்காராம்! ரெண்டு நாளாகுமாம்! என்ன செய்யலாம்?”

“ராமபத்திரனை ஒருமுறை போய்ப் பார்த்துறலாம்!”

“நமக்கு விஷயம் தெரிஞ்சதாக் காட்டிக்க வேண்டாம்”

tamilpdffree.wordpress.com

“வேண்டாம்”

“லேஸர்ல சந்தேகம் கேக்கற மாதிரி போகலாம்”

“ராமபத்திரன் வீடு எங்கேன்னு கண்டுபிடிக்கிறியா?”

“டன் பாஸ்! ப்ரொபசர் ராமபத்ரவியாசன்! வர்றோம்! குறக்களியைப் பிடிக்கிறதுக்கு வர்றோம்.”

**வே**ளச்சேரி ரோடில் ரெயில்வே லையனுக்கு இந்தப் பக்கத்தில் புதிய குடியிருப்புகளில் ஒரு நவீன வீட்டின் வாசலில் டாக்டர் வி. ராமபத்திரன் என்ற பெயர்ப் பலகைக்கு அருகில் இருந்த பட்டனை அழுத்தினான்.

“வி ஃபார் வியாசன்!” என்றான் வஸந்த்.

உள்ளே வெகுநேரம் மணி முணுமுணுத்தபின் ஒரு சந்தேகக் கதவு திறந்து ஒரு வேலைக்கார முகம் எட்டிப் பார்த்தது...

“அய்யா இல்லையா?”

“இல்லீங்களே! வெளியே போயிருக்காரே!”

“எப்ப வருவார்?”

“தெரியாதுங்களே;”

“எங்க போயிருக்கார்?”

“தெரியாதுங்களே! நேத்தே போய்ட்டார்!”

“ராத்திரி திரும்பி வரலை?”

“இல்லைங்களே! நீங்க யாரு?”

“அவருக்குச் சொந்தக்காரங்க!”

“அப்படி யாரும் வர்றதாச் சொல்லலையே!”

“சொல்லியிருக்க மாட்டார். நாங்க வரும் தகவல் அவருக்குத் தெரியாது. பெரியசாமிதானே நீ?”

“இல்லீங்க துரைராஜ்!”

“ஆ! துரைராஜ். உன்னைப் பத்தித்தான் அய்யா சொன்னார். ரொம்ப நம்பிக்கையான ஆளுன்னுட்டு”

“வாங்க, உள்ளே வாங்க! உக்காருங்க!”

உள்ளே சென்றார்கள். சிறிய ஹால்தான். அதன் ஓரத்தில் மேசை, மேசை விளக்கு, ஏராளமான காகிதங்கள், புத்தகங்கள். ஆஷ்டிரே நிறைய சிகரெட் துண்டங்கள்.

tamilpdffree.wordpress.com

“மேஜையில ஒண்ணையும் தொடக் கூடாதுன்னு அய்யா சொல்லியிருக்காருங்க”

நடுவிலே ஒரு ரெக்ஸின் அமைத்த ஸோஃபா. அலமாரியில் மேன்மேலும் புத்தகங்கள். செய்தித்தாள்கள்.

கணேஷ் அவைகளில் ஒரு அவசரமான கலைப்பு இருப்பதைக் கவனித்தான். “வஸந்த், கெட் ரிட் ஆஃப் ஹிம்,” என்றான்.

“துரை! ஃப்ளாஸ்க் இருக்கா?”

“இருக்குங்க!”

“ஓடிப் போய் மூணு டீ வாங்கிட்டு வந்துரு. இந்தா காசு. அப்படியே ஒரு பாக்கெட் ஃபில்டர் வில்ஸ் வாங்கி வந்துரு. லேசில கிடைக்காது. நாலு அஞ்சு கடையில விசாரிச்சுப் பாரு. ப்ளாக்கில விப்பான்!”

“சரிங்க!” அவன் ஃப்ளாஸ்க்கை எடுத்துக் கொண்டு ஓடினான்.

“மெள்ள வா. அவசரமில்லை!”

கணேஷ் புன்னகைத்தான். “தகராறு பண்ணா ஸோலார் ஃப்ளெக்ஸஸ்ல ஒரு அடி கொடுத்திருப்பேன்! பாஸ் சீக்கிரம்!”

கணேஷ் அந்தப் புத்தகங்களில் அவசரமாகப் புரட்டினான். மேசை இழுப்பைத் திறந்தான். வஸந்த் அலமாரியைக் குடைந்தான்.

ஆட்டோ ஸெமிகண்டக்டர்ஸ், ஹிந்த ஸக்ஸஷன் ஆக்ட், சனிக்கிழமையுடன் கிழிக்கப்படாத காலண்டர்....

“தேர் இட் இஸ்!” என்றான் கணேஷ்.

“என்ன பாஸ்?”

“சில வினோதங்கள், கிருஷ்ணமூர்த்தியின் புஸ்தகம்!”

“அப்புறம் பாஸ், இதைப் பாருங்க!”

“என்ன?”

“தீபக் வெட்ஸ் லீனா! கல்யாணக் கடுதாசி!”

“ஆசாமி எங்க போயிருக்கான் வஸந்த்? எப்படி கண்டுபிடிக்கிறது...”

“நியூஸ் பேப்பர் கலைஞ்சிருக்கு பாருங்க! ஒரு நிமிஷம் நான் நினைக்கிறது சரிதானான்னு பார்க்கணும்!”

வஸந்த் அந்தச் செய்தித்தாள்களை அவசரமாகப் புரட்டினான்.

“மண்டே! வேர் இஸ் மண்டே! திங்கள் கிழமை பேப்பர் மிஸ்ஸிங்!”

“அது இங்கே இருக்கு!”

tamilpdffree.wordpress.com

“பிரிங்க!”

ரெயில் பஸ் விமானங்கள் வரும் போகும் நேரங்களை அச்சிட்டிருந்த அந்தப் பக்கத்தில் கோயமுத்தூர் விமான நேரத்தைச் குறிக்கும் வரி அடிக்கோடிடப்பட்டிருந்தது.

“ப்ரிலியண்ட்! கோயமுத்தூர்!”

“அங்க இருந்து ஊட்டி!”

“ஓ மை காட்! இந்நேரம் போய்ச் சேர்ந்திருப்பான் பாஸ்– லீனாவைத் தீர்க்கறதுக்கு! இப்ப என்ன செய்யறது?”

“ப்ளேன் போயிடுச்சு. ராத்திரி ரெயிலுக்கு காத்திருக்க முடியாது. எடு காரை! அஞ்சு மணி நேரத்தில் போக முடியுமா?”

“கஷ்டம் பாஸ்! ஆறு ஆறரை மணி நேரமாயிடும்!”

“பேசாதே! ஏற்கனவே ஒரு நிமிஷம் வேஸ்ட் ஆய்டுத்து!”

**வே**கம் என்று வரும்போது வஸந்தை மிஞ்ச ஆளில்லை. சமீபத்தில் ட்யூன் செய்யப்பட்ட ஃபியட் சொன்னபடி கேட்டது. ஆக்ஸிலேட்டர் ஏறக்குறைய அதன் எல்லையைத் தொட்டுவிட 90, 100 என்று கிலோ மீட்டர்களைச் சாப்பிட்டான்.

“பயமா இருக்கா பாஸ்?”

“ஆமாம்”

“கண்ணை முடிக்குங்க!”

“வேகத்தினால் பயம் இல்லை வஸந்த், லீனாவுக்காக!”

“கவலைப்படாதீங்க. காப்பாத்திடப் போறோம்னு சகோதரப்பட்சி சொல்லுது”

“ராமபத்திரன்தான் அந்தக் கையை அனாட்டமி லாப்ஸ் வாங்கி வந்து நைஸா நம் ரூம்ல நுழைஞ்சு ஃபான்ல அதை வெச்சுட்டுப் போயிருக்கணும்...”

“சாத்தியம்! நம்ம ரூம்தான் திறந்த வீடாச்சே. பாபுவை விசாரிக்கணும். கமான் பாக்கியலஷ்மி இன்னும் கொஞ்சம் முயற்சி பண்ணடி!”

“பாக்யலஷ்மி யாரு?”

“நம்ம காரு!”

100, 110, 155...,”ய்ய்ய்!” என்ற யுத்தக்குரல் எழுப்பினான் வஸந்த்.

“**மி**ஸ்டர் அண்ட் மிஸஸ் தீபக்! கொஞ்சம் இருங்க” என்று, ஒரு ஏக்கரா ரிஜிஸ்தரை எச்சில் தொட்டுப் பிரித்தான் ரிஸப்ஷன்.

“எப்ப செக் இன் பண்ணாங்க?”

“ரெண்டு மூணு நாள் இருக்கும். ஹனிமூன் ஜோடி!”

tamilpdfree.wordpress.com

"ஹோட்டல் பூரா ஹனிமூன் ஜோடிதான் ஸார்!"

"சொல்லாதீங்க, குளுருதா!"

"இல்லீங்க! க்ளார்க்ஸ்ல வேணா கேட்டுப் பாருங்க!" ஏமாற்றத்துடன் வெளியே வந்தார்கள்.

"ஒவ்வொரு ஹோட்டலா கேட்டுகிட்டே போகலாம் பாஸ்! அதைவிட வேற வழி இருக்கிறதா தெரியலை..."

"வீ ஆர் லூஸிங் டைம்! வஸந்த். லெட்ஸ் டேக் எ சான்ஸ். இப்படியே ஏரிக் கரையோரமாகவே ஓட்டிக்கிட்டுப் போகலாம்"

"தேர் ஹி இஸ்! வஸந்த், நிறுத்து!"

கரையோரத்தில் தீபக் தனியாக நின்று கொண்டிருந்தான். இறங்கி இரண்டு பேரும் அவனை நோக்கி ஓடினார்கள். "தீபக்! ஏய் தீபக்!"

திரும்பினான். காமிரா மாலை, கையில் லீனாவின் ஹாண்ட் பாக், மற்றொரு கையில் ஐஸ்க்ரீம். கக்கத்தில் புஸ்தகம். "ஹாய்! வாட் எ சர்ப்ரைஸ்! இங்க கூட விடமாட்டீங்க போலிருக்கு! எங்க வந்தீங்க?"

"தீபக்! தீபக்! லீனா எங்கே!"

"போட்டிங் போயிருக்கா! வர்ற நேரம்தான்! என்ன கணேஷ், திடுதிப்புனு வந்து குதிக்கிறீங்க?"

"தனியாவா போயிருக்கா?"

"இல்லை. ப்ரொபஸரோட! ராமபத்திரன்னு அகஸ்மாத்தா அவரை சந்திச்சோம். ரொம்ப நல்ல மனுஷன்! போட்டிங் போகணும்னா. எனக்கு மூணு நாலு தடவை போய் அலுத்துப் போச்சு. லீனாவை அழைச்சுட்டுப் போறேன்னார். ஓகேன்னு சொல்லிட்டேன். காத்துக்கிட்டிருக்கேன். திரும்பி வர்ற நேரம்தான் இருட்டிடப் போறதில்லை!"

"ஓ காட்! வஸந்த். வி ஆர் லேட்" என்று கணேஷ் கீழே உட்கார்ந்தான்.

தீபக் இருவரையும் மாறி மாறிப்பார்த்து "என்ன சொல்றீங்க? புரியலை" என்றான்.

"காரியத்தைக் கெடுத்துட்டீங்க. உங்களண்டை லீனாவை ஜாக்கிரதையாப் பார்த்துக்கச் சொன்னேனில்லை? கெடுத்துக் குட்டிச்சுவராக்கிட்டீங்க" என்றான் கணேஷ் கோபத்துடன்.

"நேரா அந்த ஆள்கிட்ட ஒப்படைச்சுட்டுக் கரைல உலாத்திக்கிட்டு வேடிக்கை பார்க்கறார் அய்யா!"

"அவர் யார் கணேஷ்?"

"அதுக்கெல்லாம் நேரமில்லை. அவங்க போன படகு என்ன கலர் ஞாபகம் இருக்கா?"

"சிவப்பு ரத்தச் சிவப்பு..."

"வா வஸந்த்! தீபக் கூட வாங்க!"

கணேஷ் சரசர என்று ஏரி விளிம்புக்குச் சரிய அவர்கள் அவனை பின்பற்றினார்கள். வண்ணக் கதம்பமாகப் படகுகள் இளைப்பாறிக் கொண்டிருந்த கறை அங்கே விசைப்படகைத் தொழுவத்தில் கட்டிக் கொண்டிருந்தவரை அணுகி அர்ஜெண்ட்டா படகு வேணும் பிரதர்!"

"இருட்டப் போவுதுங்க டயமாயிடுச்சுங்க நான் வீட்டுக்குப் போகணும்."

"இது என்ன?"

"நூறு ரூபாய்ங்க"

"எடுப்பா படகை..."

அவன் துடிப்புடன் படகில் வால் பக்கம் சென்று அவுட்போர்டு மோட்டாரைக் கிளப்பத் துவங்கினான்.

"வஸந்த் சீக்கிரம் கமான்"

படகு ஒரு முறை உயிர் பெற்று இருமி விட்டு நின்றது. "ஓவர் ஆல் செஞ்சதிலேருந்து ட்ரபிள் கொடுக்குது களுதை"

"சீக்கிரம்யா சீக்கிரம்! அப்புறம் திட்டலாம் படகை."

ஊம் அவசரப்பட்டு என்ன பிரயோசனம்? இது நேரம் எல்லாம் முடிந்திருக்கும்.

படகு உயிர் பெற்றுத் தொடர்ந்து படபடத்து. கணேஷ், வஸந்த், தீபக் மூன்றுபேரும் அதில் பாய ஆடி ஆடி ஆடியது.

சுற்றிலும் இருந்த மற்றப் படகுகளின் ஊடே அந்த விசைப்படகு மெல்லப் புறப்பட–

"எந்தப் பக்கங்க:"

"சொல்ல முடியாதுப்பா. ஏரி முழுக்க சிவப்பா ஒரு படகைத் தேடியாகணும்"

"சரிங்க, முதல்ல காத்தோட போறேன். கரையோரமாவே போகலாமா?"

"இல்லைய்யா கொஞ்சம் நடுவாந்தரமாவே போய்கிட்டு இரு"

படப்படப்பட என்று அவர்கள் இதயமும் படகின் விசையும் அடித்துக் கொள்ள கரு நீலப் பரப்பில் வெண் சிறகு வரைந்து கொண்டு சென்றார்கள்.

"அந்த ஆள் யார் கணேஷ்?"

"லீனாவைக் கொல்ல வந்தவர்" என்றான் சுருக்கமாக.

"என்ன சொல்றீங்க? அவர் பெரிய புரொபஸர். அமெரிக்காவெல்லாம் போயிருக்கிறதா சொன்னார். பேசிப் பழகறதுக்கு ஜெண்டில்மேனா இருந்தார்"

"ப்ரொபஸர் ராமபத்ரன்"

tamilpdffree.wordpress.com

“ராமபத்ர வியாசன்... பிரதர் இவ்வளவுதான் வேகம் போகுமா படகு? என்ன எண்ணெய் போடுறீங்க கிருஷ்ணாயிலா?”

“நீங்கதான் தேடணும்னீங்க!”

“சிவப்பா படகு எங்கயாவது தெரியுதான்னு கண்ணை விரிச்சிப் பாருங்க. இருட்டு வேற கப்பிக்கிட்டு இருக்கு.”

“ராமபத்ர வியாசனா!”

“ஆமாம். குமாரவியாசன், லீனா இவங்களுக்கு இல்லன்னா அந்தச் சொத்துக்கு அடுத்த வாரிசு. லீனாவை அனுப்பிச்சுட்டு டாட்டா காட்டியிருக்கீங்க.”

“அய்யோ! நான் என்ன பண்றது?”

“தபக்குனு குதிச்சு எங்களோட வாங்க!”

அந்த ஏரிப் பரப்பு முழுவதும் கருநீல ஸில்க்போல் அசைய, “லீனா! லீனா!” என்று தீபக் கத்தினான்.

“சான்ஸே இல்லை கூவாதிங்க!”

“ஸ்டுபிட்! வெரி ஸ்டுபிட்!”

“அதோ!”

“தூரத்தில் ஒரு சின்ன சிவப்புத் தீற்றல். போட் மாதிரித்தான் தெரியுது. பிரதர், சீக்கிரம் போங்க.”

மெதுவாக அதை அணுக அணுக கணேஷின் பதற்றம் அதிகரித்தது. காணப் போகும் காட்சியின் எதிர்ப்பார்ப்பும் அதே சமயம் தயக்கமும்... சிவப்புப் படகு... ரத்தப் படகு. நட்ட நடு ஏரி... ஏறக்குறைய இரவு நேரம். எப்படிக் கொன்றிருப்பான்? துப்பாக்கியாலா? இருக்காது. கத்தி உபயோகித்தா? இல்லை. தடம் தெரிவிக்கும். எந்த முறையையும் பயன்படுத்தியிருக்க மாட்டான். கழுத்தை நெறித்துக் கவிழ்த்திருக்கலாம்.

அந்தப் படகை அணுக அணுக அதன் பெயர் தெரிந்தது–மரியா....

“லீனா! லீனா!” என்று தீபக் உரத்த குரலில் கூப்பிட, படகு காலியாக இருந்தது. ஒன்றுமே தெரியாது போலக் காற்றில் மிக லேசாக அசைந்து கொண்டிருந்தது

இரண்டு பேரையும் காணோம்.

விசைப் படகு அதன் அருகில் நிறுத்தப்பட, கணேஷ் படகு தாவினான். படகுக்குள் ஒரு வெய்யில் கண்ணாடி கிடந்தது. அதை எடுத்து, “தீபக், இது யார்து?” என்றான்.

“லீனாதுதான்!”

படகின் விளிம்பில் ஒரு வெண்மையான துணி. பாதி படிந்தும் பாதி நனைந்தும்...”

“அவ ஸாரி! மை காட் என்ன ஆயிடுச்சு அவளுக்கு?”

tamilpdffree.wordpress.com

“பாஸ், குதிக்கட்டுமா?”

“கொஞ்சம் இரு வஸந்த்? அவசரப்படாதே.” கணேஷ் சுற்றிலும் பார்த்தான். இடம் வலம் இரு பக்கமும் ஏரிப் பரப்பு. எதிரே அந்த ஏரியில் அணைக்கப்பட்டு திட்டாக ஒரு பச்சைத் தீவும், தீவில் மரங்களின் ரகசியத்தில் ஒரு வீடும் தெரிந்தன!

“ஏன்யா எவ்வளவு ஆழம் இருக்கும் இங்கே?”

“அது இருக்குங்க முப்பதடி!”

“வஸந்த், நேரா அங்கேதான் நீந்திப் போயிருப்பான்”

தண்ணீரைப் பார்த்தான். நீல ரகசியத்தில் அமைதியாக இருந்தது. உடல் மேலே வர இன்னும் நேரமாகும்.

“அங்கதான் இருப்பான்! வேறு எங்கேயும் போயிருக்க முடியாது. ஏறக்குறைய அந்தத் தீவைச் சுற்றி வந்திருக்கோம். எதிர்த்தாப்பல ஒரு படகும் தென்படலை. கணேஷ் மறுபடி. விசைப் படகில் பாய்ந்து, “நோ, அந்தக் கரைக்குப் போங்க. க்விக்” என்றான்.

“ஆசாமி கரை சேர்ந்து ஓடியிருப்பான் பாஸ்!”

“இல்லை வஸந்த். எனக்கென்னவோ அப்படித் தோணலை...

படகு அந்தத் தீவின் கரையைத் தொட்டதுமே வஸந்த் பாய்ந்து இறங்கினான்.

“என்னங்க... அப்ப நான் போயிறலாமுங்களா!” என்றான் படகோட்டி.

“இருப்பா. நீயும் எங்கக் கூட வா. ஆள் தேவையா இருக்குது. பாஸ். இங்க பாருங்க காலடிச் சுவடுகள்!”

அந்த ஈர மண்ணில் கால் பதிந்திருந்தது தெரிந்தது. இந்த வழியாத்தான் வந்திருக்கணும். இந்த மரங்களுக்கிடையிலயோ அல்லது அந்த வீட்டிலயோ ஒளிஞ்சிட்டிருக்கணும். “ஏன்யா அந்த வீடு யார்து தெரியுமா?”

“அது பழைய வீடுங்க. ரொம்ப நாளாப் பூட்டியிருக்குது. இப்பத்தான் சர்க்கார் அதை ஓட்டலா மாத்தப் போறதாப் பேசிக்கிறாங்க!”

“அந்தத் திட்டு முழுக்கச் சுற்றிவரத் தண்ணிதானே?”

“ஆமாங்க. ரங்கன் திட்டுன்னு பேரு!”

“பாஸ்! இந்த வீடு கூட அசப்பில நம்ம பண்ணை வீடு மாதிரி இருக்குதில்லை? முதல்ல எங்க தேடறது?”

“வீட்டைச் சுற்றி முதல்ல பார்க்கலாம். அங்க இல்லைன்னா உள்ள போகலாம். அங்கியும் இல்லைன்னா சுற்று வட்டாரத்தில் தேடலாம்.”

“ராமபத்ரன் கைல ஆயுதம் ஏதாவது வெச்சிருந்தா?”

“எதுக்கும் நீ ஒரு பத்தடி தள்ளியே வா.”

tamilpdffree.wordpress.com

“தீபக்! இப்ப ஏதும் சப்தம் போடாதீங்க. பைய வாங்க,”

“என்னங்க, திருடன்களா? நீங்க போலீஸா” என்றான் படகோட்டி.

“ரெண்டுமே இல்லை. சாவகாசமா சொல்றோம். பேசாம எங்க பின்னால வாங்க!”

கிட்டப் போனால் பங்களா பெரிசுக்கு இருந்தது. அந்த வீடு ஒரு காலத்தில் சிறப்பாக இருந்திருக்க வேண்டும். உயர்ந்த தூண்கள் அமைந்த வராந்தாவை நோக்கி அகலமான படிக்கட்டுகள் சென்றன. உச்சியில் அரை வட்டக் கண்ணாடிகளில் கலர் கலராகச் சூர்யோதய வடிவில் ஜன்னல்கள், காலம் வீட்டைச் சேதப்படுத்தியிருந்தது. பல இடங்களில் காரை உதிர்ந்து காட்டுச் செடிகள் சுதந்திரம் பெற்று, சாயங்கால இரவுப் பின்னணியில் கரு மஞ்சள் நிறப் பிசாசு போல், மௌன மரணம்போல் நின்று கொண்டிருந்தன.

“நானும் கூட வரணுமா ஸார்?” என்று பயக் குரல் கேட்டது.

“நீங்க இங்கேயே நில்லுங்க. யாரையாவது பார்த்தா சப்தம் போடுங்க. ஓடிப் போயிடாதீங்க. வஸந்த்! தீபக்! வாங்க.”

அழையாதவர்களின் சுவர்க்கிறுக்கல்கள் உயர்ந்த கம்பிகளைச் சேதப்படுத்தியிருந்தன. ஏராளமான குப்பை, செத்த இல்லைகள், சிகரெட் பீடித்துண்டுகள், காகிதங்கள்...மண்.

கணேஷ் எச்சரிக்கையாக அந்தக் காரிடாரைச் சுற்றி வந்தான். இலை அசங்காத மௌனத்தில் மின்சாரம் கலந்திருந்தது. நடக்கும் சப்தம் கூட உறுத்தியது. மூலை திரும்புமுன் “ஸ்க்” என்று சப்தம் கேட்டது. கணேஷ் சைகை மூலம் மற்றவர்களை நிறுத்தி மெல்ல மிக மெல்ல அந்தத் திருப்பத்தை அணுகி எட்டிப் பார்த்துத் திடுக்கிட்டான்.

லீனா!

தன் பாவாடை நுனியைப் பிழிந்து கொண்டிருந்தாள். சர்வமும் நனைந்து, தலைமயிர் திரி திரியாகி நீர் கொட்டிக்கொண்டிருக்க.

“லீனா! என்ன ஆச்சு?”

திடுக்கிட்டு, “யாரது?” என்று திரும்பினாள்.

“நான்தான் கணேஷ்! எல்லாரும் இங்கே வந்திருக்கோம்! பயப்படாதே!”

“ஓ! கணேஷ்!” லீனா அழுது கொண்டே ஓடி வந்தாள்.

தீபக் அதற்குள் வந்து அவளை வாங்கிக் கொண்டு அணைத்துக் கொண்டு, “பயப்படாதே டார்லிங்! வந்துட்டோம்!”

“லீனா! என்ன நடந்தது சொல்லு? எங்கே அந்த ஆளு? உன் கூடப் படகில் வந்தவர்?”

“அவர்...அவர்... தண்ணில தண்ணில...”

“என்ன செஞ்சார்!”

லீனா அடிக்கடி விசித்துக் கொண்டு மெல்லச் சொன்னாள். “படகில போய்க்கிட்டே இருந்தமா. திடீர்ன்னு ஒரேயடியா ஆட ஆரம்பிச்சுடுச்சு. நான் வேடிக்கை பார்த்துகிட்டே

tamilpdfree.wordpress.com

இருந்தேன் கணேஷ். என்ன இப்படி ஆடுதுன்னு திரும்பிப் பார்த்தா இந்த ப்ரொபஸர் நின்னுகிட்டுத் தடுமார்றார். என் மேல அப்படியே விழுந்துட்டார். படகைச் சமாளிக்க முடியாம ஒரேயடியா ஆடுது. நான் அவரைப் பிடிக்க, அவர் என்னைப் பிடிக்க, ரெண்டு பேருமே தண்ணில விழுந்துட்டோம். அப்புறம் என்ன ஆச்சு, ப்ரொபஸர் என்னை விடாம உடும்புப் புடியா புடிச்சுக்கிட்டார். ஒரே ஆழம். நானோ தத்தளிக்கிறேன். நீந்தலாம்னா இவர் விடமாட்டேங்கறார். இறுக்கிப் புடிச்சுக்கிட்டிருந்தார் என்னை. பாவம், பயந்துட்டார் போல இருக்கு. அப்பதான் கணேஷ், எனக்கு எங்கேருந்துதான் இத்தனை பலம் வந்ததோ? அப்படியே பிசாசு மாதிரி அவரை உலுக்கி உதறி நகத்தால கிழிச்சு முதல்ல அவர் பிடியில இருந்து என்னைப் பிரிச்சுக்கிட்டேன். அவருக்கு நீந்தத் தெரியாது போலிருக்கு. மூக்கு வாயெல்லாம் தண்ணி, உள்ளே போயிட்டார். நான் படபடன்னு நீந்திக் கரை சேர்ந்துட்டேன். அவர் பாவம் கணேஷ்! தண்ணிக்கு அடியில போயே போய்ட்டார்!”

“லீனா, அவர்தான் உன்னைத் தள்ளினாரா முதல்ல?”

“அப்படிச் சொல்ல முடியலை. அதனால பாலன்ஸ் தப்பிப் போச்சுன்னுதான் சொல்லணும். சரியாத் தெரியலை. ஆனா படகு முழுகலை. அங்கேயே இருக்கு. கரைக்கு வந்து ப்ரொபஸர் ப்ரொபஸர்னு கூப்பிட்டுப் பார்த்தேன். பதிலே இல்லை. அய்யோ பாவம்!”

கணேஷ் திரும்பி வஸந்தைப் பார்த்தான்.

“சரி, சரி! ரொம்பத்தான் நனைஞ்சிருக்கீங்கன்னு தெரியுது தெளிவா. தீபக்! சும்மா பார்த்துக்கிட்டு இருந்ததுக்கு கேவலம் சட்டையாவது கழட்டிக் கொடுங்க!” என்றான் வஸந்த்.

கணேஷ் வஸத்திடம் தனியாக வந்தான். “என்ன பாஸ் சொல்றீங்க?”

“ராமபத்ர வியாசன் இவளைத் தண்ணில மூழ்கடிச்சுச் சாகடிக்கத்தான் பார்த்திருக்கார். எக்கச்சக்கமா விழுந்திருக்காங்க. ஆச்சரியகரமாத் தப்பிச்சிருக்கா!”

தீபக்கின் சட்டையை அணிந்து கொண்டு அவனை பனியனுடன் அணைத்துக் கொண்டு மூக்கை உறிஞ்சிக் கொண்டே வந்தாள் லீனா!

“பாவம், ப்ரொபஸர் என்ன ஆயிருப்பார்னு கவலையா இருக்கு கணேஷ்!”

“முதல்ல வா! ஓட்டலுக்குத் திரும்பிப் போய்ட்டு ப்ரொபஸரைத் தேடறதுக்கு ஏற்பாடு செய்யலாம். இருட்டிப் போச்சு பாரு…”

விசைப் படகில் நால்வரும் திரும்பும்போது தூரத்தில் எதிர்க்கரை விளக்குகள் நீரில் நடனமிட, லீனாவின் அவுட்லைன் மட்டும் தெரிய அவள் அடிக்கடி மூக்கை உறிஞ்சுவது கேட்க, கணேஷ் வியந்தான்! ‘பெண்ணே, நீ யார்?’

**இ**ரவு எட்டு மணி சுமாருக்கு அந்த நவீன ஓட்டலின் லவுஞ்சில் கணேஷ், வஸந்த், தீபக், லீனா நால்வரும் உட்கார்ந்திருந்தார்கள். லீனா சால்வை போர்த்திக் கொண்டு கடும் சூடாக காப்பி சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

“போலீஸ் வந்ததும் நடந்ததை விவரமாச் சொல்லிடு லீனா!”

“சரி கணேஷ். இது ஒரு ஆக்ஸிடெண்ட் மாதிரித்தானே?”

tamilpdffree.wordpress.com

“ஆர் யூ ஷ்யூர் லீனா? ப்ரொபஸர் உன் கழுத்தில கிழுத்துல கை வச்சு...

“அந்தக் குழப்பத்தில என்ன நடந்ததுன்னு சரியாவே தெரியலை வஸந்த். போலீஸ் என்ன அரெஸ்ட் பண்ணுவாங்களா?”

“ம்ஹூம்! நிறைய கேள்வி கேப்பாங்க. தயாராகப் பதில் சொல்லு, என்ன?”

“சரி...” லீனா கண்களில் துக்கத்துடன், “ப்ரொபஸர் இன்னேரம் இறந்திருப்பார். பாவம் நல்லாப் பழகினார். இனிமையாப் பேசினார். விதியைப் பார்த்தீங்களா? பாடி கிடைச்சுருமா?” என்றாள்.

“அது எங்க போறது? காலங் கார்த்தாலே தெப்பம் மாதிரி மிதந்து வரும்!”

லீனா எழுந்து கண்ணாடி ஜன்னல்களின் அருகே போய் நின்றாள். சாத்தியிருந்த ஜன்னலின் நிழலில் மற்றொரு லீனா தெரிந்தாள். தீபக் அவள் அருகில் சென்று ஆறுதல் வார்த்தை சொல்வது தெரிந்தது.

“என்ன பாஸ் சொல்றீங்க?”

“நான் சொன்னபடி நடந்திருச்சு பாரு! ராமபத்ரவியாசன் விஞ்ஞானி. மூன்றாவது வாரிசு. தந்திரக் காட்சிகளை ஏற்படுத்தி சொத்துக்குப் போட்டிக்கார வாரிசுகள் ரெண்டு பேரையும் கொல்லத் திட்டம் போட்டுத் திறமையாகச் செயல்படுத்த முற்பட்டார். லீனா கேஸ்ல ஒரு தப்புக் கணக்குப் பண்ணிட்டார். பொண்ணுதானே, மெல்லிசா இருப்பா. சட்டுனு தண்ணிக்குள்ள முக்கிச் சாக அடிச்சுறலாம்னு நம்பி அழைச்சுட்டுப் போயிருக்கார். படகு ஆட்டத்தினால பாலன்ஸ் தவறிப் போய் ரெண்டு பேரும் தண்ணிக்குள்ள விழுந்து கதை மாறிடுச்சு. பொயட்டிக் ஜஸ்டிஸ் பாரு வஸந்த். அவர் செஞ்ச கொலைக்குத் தண்ணில தண்டனை கிடைச்சுடுச்சு”

வஸந்த் நிதானமாக, “அப்ப எல்லாமே ஸயன்ஸ்தாங்கறீங்க?”

“பின்ன? ஏன் உனக்கு இன்னும் சந்தேகம் இருக்கா?”

“இருக்கு பாஸ் இருக்கு! ராமபத்திரவியாசன் மற்றொரு வியாசன்? எல்லா வியாசர்களையும் பழி வாங்கறது புத்திரவதியோட குறிக்கோள்”

“டேய் டேய்! மறுபடி ஆரம்பிக்காதேடா!”

“எப்படி லீனாவுக்குத் திடீர்னு அமானுஷ்ய பலம் வந்தது? அவ மேல் புத்திரவதி வந்ததாலேதானே?

“அடப் போடா, உயிருக்கு ஆபத்துங்கறபோது எல்லாருக்குமே அந்த பலம் வரும். உங்கட்சி எப்பவோ செத்துப் போச்சு!”

“இல்லை பாஸ், கிருஷ்ணமூர்த்தியுடைய ‘சில வினோதங்கள்’ என்ற புஸ்தகத்தில் இந்தச் சம்பவமும் எழுதியிருக்கே. இதுக்கு என்ன சொல்றீங்க?”

“என்னது?”

“ஆமாம் பாஸ். எனக்கு அந்த வரி நல்லா ஞாபகம் இருக்கு. “யதாப்பிரகாரம் கிரகசாரம் பற்றிக் கொள்ள ஒரு வியாசனை, புத்திரவதி ஒரு பெண் வாரிசின் மேற் படர்ந்து நீரில்

tamilpdffree.wordpress.com

மூழ்கடித்து அவனைச் சாகடிப்பாள். இப்படியே எழுதியிருக்கு... இப்ப சொல்லுங்க பாஸ். நடந்தது எல்லாம் விஞ்ஞானமா பைசாசமா?"

"உன் தலை. முதல்ல அந்தப் புத்தகத்தைக் தூக்கி எறி"

தூரத்தில் லீனா அவர்கள் இருவரையும் பார்த்து வசீகரமாகச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

*(முற்றும்)*

tamilpdffree.wordpress.com